www.padippakam.com

Registered as a News Paper in Sri Lanka

JUDE

பக்கம் 20

ரூபா 11/00

දිනමුරසු වාරමලර්

மார்ச்.02–08,1997

வாரமலர்

# தினமுரசு

THINAMURASU SRI LANKA'S NATIONAL TAMIL WEEKLY முரசு 194

# தரைப் பாதையும் தள முற்றுகையும்

## புலிகளின் எச்சரிக்கை

## விரியும் வியூகம்



## மீனாவுக்கு தூதுவிட்ட ஹீரோ

## சினிமாவும் பெண்களும்

www.padippakam.com

# முரசம்

## சமூக ஒற்றுமைக்கு சவப்பெட்டி

அன்புள்ள உங்களுக்கு
வணக்கம்.

'குட்டையைக் குழப்பினால்தான்
மீன் பிடிக்க முடியும்!'
'ஊர் ரெண்டுபட்டால் தான்
கூத்தாடிக்குக் கொண்டாட்டம்
ஏற்படமுடியும்!'

இதெல்லாம் நமக்குத் தெரியாத
விஷயங்கள் அல்லத்தான்!
ஆனால் விஷயம் தெரிந்தால்
மட்டும் போதுமா என்ன?
விஷம் பரவ
அனுமதித்துக்கொண்டிருக்கிறோமே!

சமீபத்தில் கிழக்கில்
ஓட்டமாவடியில் நடைபெற்ற
சம்பவங்கள் அனைத்தும்
சமூக ஒற்றுமைக்கு
சவப்பெட்டி தயாரிக்க
அடிக்கப்பட்ட ஆணிகள்தான்!

நடப்பது கொடும் போர்!
போரில் ஈடுபடும் தரப்புகள்
ஒருவரை ஒருவர் வெல்ல நினைப்பதும்
வீழ்த்த நினைப்பதும்
சகஜமான சமர்க் காட்சிகள்!

மரிப்பவர் எந்த இனத்தவர்
என்று பார்ப்பது மனிதாபிமானமல்ல;
மனித உயிர்கள் விரயமாகும்
போர் நிறுத்தப்படவேண்டும்
என்பதுதான் நியாயமானது!

ஆனால் அது நம் கையிலில்லை.
மக்கள் விரும்புவதெல்லாம்
இங்கு நடப்பதுவுமில்லை!

போர்க்கள மரணங்கள்
ஒருபுறம் இருக்க,
போரில் ஈடுபடாத
சாதாரண மக்களும்
பலியாகிக் கொண்டிருப்பதுதான்
மாபெரும் அவலமாக இருக்கிறது!

ஆனால் ஓட்டமாவடியில்
விளைந்த விபரீதங்கள்
மனிதாபிமானம் சார்ந்தவையாகவோ
அல்லது நியாயமான
உணர்வுகளின் பிரதிபலிப்பாகவோ
அமையவில்லை!

சமூக மோதலை
விரும்பி வரவேற்று
தூண்டிவிடும் முனைப்புத்தான்
அங்கே முகம் காட்டியுள்ளது!

முன்னர் மருதமுனையிலும்
இவ்வாறான சம்பவம்
அவலமாக அரங்கேறியது!

இரு சமூகங்களுக்குள்ளும்
இருக்கின்ற பெரியவர்கள்,
சம்பவங்களின் பின்னணியை
நடுநிலை நின்று நோக்குவோர்
மருதமுனை விபரீதங்களை
தயங்காமல் கண்டித்திருந்தனர்!

அந்த வடு மறைவதற்குள்
மற்றுமொரு பதட்டம்
ஓட்டமாவடியில் உருவாக்கப்பட்டது!

கொலைகாரத் தாக்குதல்கள்,
கடை எரிப்புக்கள்,
ஷெல் வீச்சுக்கள்,
கைக்குண்டு வெடிப்புக்கள்
என்று தொடர் விபரீதங்கள்!

இதற்கெல்லாம் யார் காரணம்?
என்பதை அறியவேண்டுமானால்,
இவற்றால் யாருக்கு லாபம்?
என்பதை ஆராய்ந்தறியவேண்டும்!

மக்கள் புத்திசாலிகள்!
பிரித்தாளும் தந்திரம்
மிக மிகப் பழமையானது!
அதனை யார் கையாண்டாலும்
இப்போது மக்களால்
இனம் கண்டறியமுடியும்!
ஏன்? எதற்கு?
என்பதையும் உணர முடியும்!

எனினும்,
யார் தூண்டிவிட்டாலும்
துள்ளியெழுந்து கொள்ளிவைக்கும்
சக்திகள் இருக்கவே செய்கிறார்கள்!
சகல இனங்கள் மத்தியிலும்
இருக்கவே இருக்கிறார்கள்!

எரிகிற வீட்டில் பிடுங்குவதே
அவர்களுக்கு இலாபம்!
அவ்வாறான சக்திகள்
எந்த இனத்தவர், எந்த சமூகத்தவர்
என்று பேதம் பார்த்து
குறிப்பிட்ட இனம்மீதோ
சமூகம் மீதோ
விரோதம் கொள்ளக்கூடாது!

கிழக்கின் சமூக ஒற்றுமை-
நீளும் சதிவலைகளில் சிக்கி
சின்னாபின்னமாகிவிடாமல்
பாதுகாக்க வேண்டிய பொறுப்பு-
இரு சமூகங்கள் மத்தியிலுமுள்ள
பொறுப்பானவர்களின் கடமையாகும்!
ஓட்டமாவடி சம்பவங்களின்
சூத்திரதாரிகளை
இனம் கண்டு அடையாளம் காட்டுவதும்
அவர்களின் கடமைதான்!

❑❑

மீண்டும் மறுமடலில்
வந்து கலக்கும்வரை

என்றென்றும் அன்புடன்,
ஆசிரியர்

# ஆன்மீகம்



## சத்துருக்களை சிநேகியுங்கள்

மன்னித்தல் சமாதானத்தின் மூலாதாரம். மனத்தில் அமைதி நிலவவேண்டுமாயின் சமாதானம் நிலவ வேண்டும். மன அமைதியும் சமாதானமுமே மனிதனின் மகத்தான வாழ்வுக்கு வழிவகுக்கும். எனவே மன்னித்தல் மகத்தான ஒரு சக்தி.

அவர்கள் இயேசுவை சிலுவையில் அறைந்தார்கள். இயேசுவானவர்: "பிதாவே இவர்களை மன்னியும், தாங்கள் செய்கிறது இன்னதென்று அறியாதிருக்கிறார்களே!" என்றார். (லூக்கா.23:34)

'இன்னா செய்தாரை ஒறுத்தல் அவர் நாண நன்னயம் செய்து விடல்' என்பது பொதுமறை. ஆனால் தன்னை சிலுவையில் அறைந்து கொல்பவர்களையே மன்னிக்க வேண்டுவது தெய்வீகமானது. எனில்-

'பிழைகள் செய்வது மனிதகுணம். ஆனால் மன்னிப்பது தெய்வீகம்.' இது பொதுவான ஓர் உலக உண்மை. இது கிறிஸ்த்தவ உண்மையின் ஒரு வெளிப்பாடு. ஏனெனில்-

"உங்கள் சத்துருக்களைச் சிநேகியுங்கள். உங்களைப் பகைக்கிறவர்களுக்கு நன்மை செய்யுங்கள்; உங்களை சபிக்கிறவர்களை ஆசிர்வதியுங்கள். உங்களை நிந்திக்கிறவர்களுக்காக ஜெபம் பண்ணுங்கள்!" (லூக்கா: 6:27-28)

மனிதர்களால் எப்படி முடியும் என்று எண்ணாதீர்கள். மனிதனால் முடிந்ததைத்தான் வேதாகமம் செய்யச் சொல்லுகிறது. மேலே கூறப்பட்டவைகளை ஒவ்வொருவரும் செய்தால்.... கொஞ்சம் சிந்தித்துப்பாருங்கள்-செயற்படுங்கள்!

ஏ.பி.வி.கோமஸ்.

## தருமம் செய்வதில் போட்டியிட்ட ஸஹாபாக்கள்

ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்கள் கூறுகிறார்கள்:

ஒரு தடவை நபி (ஸல்) அவர்கள் தருமம் செய்யுமாறு ஸஹாபாக்களிடம் கூறினார்கள். அச்சமயத்தில் எதிர்பாராத விதமாக என்னிடம் கொஞ்சம் பொருளிருந்தது. நான் தருமம் செய்வதில் எப்பொழுதும் அபூபக்கர் சித்தீக் (ரலி) அவர்களை மிகைத்ததே கிடையாது. இன்று என்னிடம் சிறிது பொருள் இருப்பதால் இன்று அவர்களை மிகைத்துவிட வேண்டுமென எண்ணிக்கொண்டு மிக மகிழ்ச்சியுடன் வீட்டுக்குச் சென்று அங்கிருந்த பொருட்களில் பாதியைக் கொண்டு வந்து நபி (ஸல்) அவர்களிடம் கொடுத்த போது "குடும்பத்தினருக்கு என்ன வைத்துவிட்டு வந்தீர்கள்?" எனக் கேட்டார்கள். "அவர்களுக்கும் கொஞ்சம் வைத்துவிட்டு வந்திருக்கிறேன்" என்று கூற "எவ்வளவுதான் வைத்துவிட்டு வந்திருக்கிறீர்கள்?" என்று வினவினார்கள். "பாதியை விட்டுவந்திருக்கிறேன்" என்று கூறினேன்.

பின் அபூபக்கர் சித்தீக் (ரலி) அவர்கள் கொஞ்சம் பொருட்களைக் கொண்டு வந்து கொடுத்தார்கள். "வீட்டினருக்கு என்ன வைத்துவிட்டு வந்திருக்கிறீர்கள்?" என்று நபி (ஸல்) அவர்கள் கேட்டபோது, "அவர்களுக்காக அல்லாஹ்வையும் அவன் தூதரையும் விட்டு வந்திருக்கிறேன்" என்று கூறினார்கள் (அதாவது அல்லாஹ்வுடைய, அவன் தூதருடைய திருநாமங்களின் பரக்கத்தையும் அவர்களுடைய திருப்பொருத்தத்தையும் வீட்டில் வைத்து விட்டு வந்திருக்கிறேன் என்பது பொருளாகும்) இச் சம்பவத்தைக் கண்ட உமர் (ரலி) அவர்கள் "அபூபக்கர் சித்தீக் (ரலி) அவர்களை ஒருபோதும் நான் மிகைத்திட முடியாது." என்று கூறினார்கள்.

நற்காரியங்கள் செய்வதில் பிறரை விட முன்னேற முயல்வது விரும்பத்தக்க அழகிய செயலாகும். இதனை அல் குர்ஆனிலும் ஆர்வமூட்டிக் கூறப்பட்டுள்ளது.

பாத்திமா சிபானி பரீட், அக்குறணை.

## கவிதைப் போட்டி இல.191



### பரிசுக்குரிய கவிதை

**யார் செய்த சதி?**

எங்கள் வீட்டை
எரித்தது போர்- பாவம்
உங்கள் கூட்டை
இடித்தது யார்?

ச.மகாலிங்கம்-
வெலிமடை குருப், வெலிமடை.

**இடம் உள்ளவரை இடம்பிடித்துள்ள வியக்கவைத்த கவிதைகள்:**

**தேடல்**

வேற்றுமையில் வளர்ந்த பயிர்,
ஒற்றுமையில் எதை
தேடுகிறது?

எஸ்.சன்குமார்-வட்டகொட.

**தாமதம் ஏன்?**

எட்டாதோ எங்களுக்கு
என்றிருந்த சமாதானம்
கிட்டவந்து உந்தன்
காலடியில் காத்திருக்க,
பற்றிப் பிடிப்பதற்கு
பயந்து நீ நின்றாயோ?
எட்டி இன்னும் சில அடிகள்
எடுத்து வைக்க ஏன் தயக்கம்?

சி.மு.சுந்தரேசன்-மஸ்கெலியா.

**அழகிய கற்பனை**

தீர்வுக் குழந்தை போல்
ஒன்று வர
சமாதானப் புறாக்கள்
சூழ்ந்துவர
கற்பனைதான் மிஞ்சுமோ?

ஜெஸ்மின் தாஜ்- நாங்கல்ல.

**அறியாதார்**

பிஞ்சு உள்ளம்
சமாதானச் சின்னம் அறியும்;
பஞ்சு(த்) தலைகள் மட்டும்
பாழும் போரில் சீரழிவது ஏன்?

எம்.என்.எம். நவ்ரஜி- அக்குறணை.

**"செல்" கொண்டு போனதோ?**

எல்லாப் புறாக்களிலும்
வெள்ளைப் புறா அதனை
நெல் தூவித் தேடினேன்-அதை
"செல்" கொண்டு போனதோ?

ரீ.சக்திக்குமார்-மட்டக்களப்பு.

**தேசிய கீதம்**

புறா புறா ஓடி வா!
பிடிபடாமல் ஓடி வா!
நாட்டைச் சுற்றி ஓடி வா!
சமாதானம் கொண்டு வா!

ஆ.ஜெகதீஸ்வரன்-புசல்லாவ.

**அமைதி நாடி**

கண்ணிளை மூடிக்கொண்டு
வெண் புறா தன்னைத்தேடும்
மண்ணிலேன் நான் பிறந்தேன்?
திண்ணமாயதைப் பிடிப்பேன்:
விண்ணிலே பறக்க வைப்பேன்!
கண்ணிலும் மேலான அமைதி நாடி!


கா.சிவலிங்கம்- நொச்சிமுனை, மட்டக்களப்பு.

**சமாதானப் புறா**

ஆயிரம் புறாக்களை நான்
அடைகாக்க வைத்துவிட்டேன்!
சமாதானப் புறா கிடைக்க
சாத்தியமே இல்லையப்பா!

சதா கணபதி- அதிகாரவத்தை,
உடபுஸ்ஸலாவ.

## கவிதைப் போட்டி இல.194



கவனியுங்கள்! எண்ணத்தில் தோன்றும் கவிதைகளை வார்த்தைகளின் எண்ணிக்கை அதிகமில்லாமல், தபாலட்டையில் மட்டும் பதிவு செய்து அனுப்பி வையுங்கள். அனுப்பப்படவேண்டிய கடைசித் திகதி:- 08.03.1997

முகவரி: கவிதைப் போட்டி இல.194
தினமுரசு வாரமலர், த.பெ. இல—1772, கொழும்பு.

# வாசக(ர்) சாலை

என் அன்பின் முரசே!

பீட்டர் கெனமனின் மறைவுக்கு விழுந்தடித்து அறிக்கைகள் விடுத்த சில தமிழ் கட்சிகளுக்கு நீ கொடுத்த சாட்டை மிக மிகப் பிரமாதம். இதேபோல் பொருத்தமான நேரங்களில் நீ சாட்டை கொடுக்க வேண்டும்.

க. சுதர்சன், செங்கலடி.

❀ ❀ ❀

டியர் முரசே!

பூலானின் புரட்சி திகைப்பூட்டுகிறது!
தூக்கு மேடையோ வியப்பூட்டுகிறது!
தேன்கிண்ணம் சிறப்பூட்டுகிறது!
கந்தரின் கற்பனை சிரிப்பூட்டுகிறது.
மொத்தத்தில் உன்வரவு விறுவிறுப்பூட்டுகிறது!

வாழ்த்துக்கள், வாழ்த்துக்கள், வாழ்த்துக்கள்.

செல்வி ஸ்வர்ணா நல்லதம்பி, நமுனுகல.

❀ ❀ ❀

கர்நாடக மாநில மருத்துவக் கல்லூரியில் நடைபெற்ற 'ராகிங்' எனும் கொடூரம் எம்மனைவரின் இரத்தத்தையே உறையச் செய்தது. இந்த 'ராகிங்' எத்தனையோ பேரின் கல்விக்கு ஆப்பு வைக்கின்றது. ஒளிமயமான எதிர்காலத்தை தம் இலட்சியமாகக் கொண்டு, உயர் படிப்பைத் தொடரப் போகின்றவர்களின் வாழ்வு இருள்மயமாய் அமைந்து விடுகின்றது.

திருமதி திலகரத்தினம், அவிசாவளை.

❀ ❀ ❀

நீ சுமந்து வரும் அத்தனை அம்சங்களும் அருமையிலும் அருமை. அதிலும் 'அனிதா இளம் மனைவி' தொடர்கதை, 'கொள்ளை ராணி பூலான்தேவி', 'காதிலை பூ கந்தசாமி', 'இலக்கிய நயம்' அத்தனையும் மிகவும் சிறப்பாக இருக்கின்றன.

செல்வி ஸரீமா ஸனூன், மக்கொன.

❀ ❀ ❀

எனதருமை தினமுரசே!

நீ தரும் அத்தனை அம்சங்களும் படு சூப்பர். 'அல்பிரட் துரையப்பா முதல் காமினிவரை' மிக நன்றாய் அமைந்து உள்ளது. 'பூலான் தொடர்', 'தூக்குமேடைக் குறிப்பு', 'இராமாயணம்', யாழ் நிலவரங்கள் போன்றவை சிறப்பான அம்சங்களாய் அமைந்துள்ளன. மேலும் உன் பணி தொடர எங்கள் இருவர் வாழ்த்துக்கள்.

எஸ். சத்தியா, வித்தியா, மன்னம்பிட்டி.

'ஒப்பரேஷன் எலக்ஷன் றூட்' என்று 'எடிபல'வுக்கு முரசு சூட்டிய பெயர் நல்ல பொருத்தம். உண்மை எப்போதும் கசப்பாகத்தான் இருக்கும் என்பார்கள். ஆனால் முரசின் அரசியல் விமர்சனங்கள் யாருக்கு கசப்பாக இருந்தாலும் வாசகர் நமக்குத் தித்திப்புத்தான்.

உ. திருஞானம், ஆரையம்பதி, மட்டக்களப்பு.

❀ ❀ ❀

வெளியே தெரியாதிருந்த பொன்னாலை சம்பவத்தை முரசு மட்டுமே செய்தியாக வெளியிட்டு அறியத்தந்தது. முரசுக்குப் பாராட்டுக்கள். தொடரும் இவ்வாறான சம்பவங்களை கட்டுப்படுத்துவது யார்? கவனம் எடுத்து நோக்குவது யார்? 'விதியே விதியே தமிழ்ச்சாதியை என்ன செய்ய நினைத்துவிட்டாய்?' என்று வருந்த மட்டுமே முடிகிறது.

திருமதி சிவா மல்லிகா, கொழும்பு-07.

❀ ❀ ❀

ஓட்டமாவடி சம்பவம் தொடர்பாக 'முரசு' உரிய நேரத்தில் வெளியிட்ட செய்தி பாராட்டப்பட வேண்டியதாகும். இவ்வாறான சந்தர்ப்பங்களில்தான் பத்திரிகைகளின் பொறுப்புணர்வு வெளிப்பட வேண்டும்.

சி.என். கலீல், ஓட்டமாவடி.

இரசிகனின் 'இலக்கிய நயம்', 'பூலான் தேவி', 'சிந்தியாவின் பதில்'கள், 'அனிதா இளம் மனைவி', 'சிறு கதைகள்', 'அற்புதனின் அரசியல் தொடர்', என்பவைகள் குறிப்பிட்டுச் சொல்லக்கூடிய முத்துக்களாகும். மொத்தத்தில் நீயொரு "முத்துச் சரமே".

ஏ.சீ.எம். மஷூட், தெஹிகஸ்தலாவை, பலாங்கொடை.

❀ ❀ ❀

அன்பிற்கினிய முரசே!

வாரா வாரம் உன் வரவை வழிமேல் விழிவைத்துக் காத்திருப்பேன். வலிமையூட்டும் பூலான்கதை, வகையான கவிதை, சிறுகதைகளுடன், வனிதை என்னைக் கவர்ந்துவிட்ட, வாரமுரசே நீ வாழ்க! வளர்க!

அழகையா ஜெயந்தி, ம் பிரிவு, மண்டூர்.

❀ ❀ ❀



அபிமான முரசே!

தகவல் பெட்டி அம்சம், அறியாத புதுவித அம்சங்களை அறியத் தந்து பிரமிக்க வைக்கின்றன. தேன்சுவையுடன் சொல் நயத்துடன், ரசிகன் தரும் 'இலக்கிய நயம்' இனிமை சேர்க்கிறது. இராஜகுமாரன் தரும், 'இராமாயணத் தொடர்' படிக்கும்போது இன்பம் சேர்க்கின்றது. தினமுரசு என்பதைவிட தேன்முரசு என்பதே பொருத்தமான பெயர் முரசே! மொத்தத்தில் நீ தேன்முரசுதான்.

செல்வன் மயில்வாகனம் மங்கேஸ்வரன்,
மட்/முறக்கொண்டான்சேனை.

❀ ❀ ❀

இந்திய அமைதிப் படை இலங்கையில் இருந்து அமைதி காத்தது என்றிருந்தவர்களுக்கு அமைதியைக் கெடுத்துக் கொன்று குவித்தது. இந்த உண்மையை எடுத்துக் கூறிய அற்புதனுக்கு எனது பாராட்டுக்கள்.

ஏ.எல். அமீர் ஹுஸைன், கல்முனை-3.

❀ ❀ ❀

தமிழர்கள் மீது கட்டவிழ்த்து விடப்பட்ட காடைத்தனங்களையும் அதற்கு இந்தியா துணை போன(வ)தையும், அற்புதமாகவும் அதிரடியாகவும் அற்புதன் எடுத்துக் கூறும் அரசியல் தொடர் அனைவரையும் மெய்சிலிர்க்கவைக்கிறது. அதிரடி அய்யாத் துரையண்ணனின் அலசல், அசத்தல்-தூளோதூள்.

சன்முகம், மனோகரன்,
கல்கந்தை எஸ்டேட், அப்புத்தளை.

**மடல் அனுப்பியவர்களில் இடம் உள்ளவரை பெயர் பதிவுசெய்யப்பட முடிந்தவர்கள்:**

* பூ. சாந்தமலர், முதலைக்குடா.
* அ. லோஜி, கோட்டைக்கல்லாறு-01.
* கு. சிவஅருள்ராஜா, நீர்கொழும்பு.
* எஸ். பரிமளா, அப்புகாமம், பல்லக்கெட்டுவ.
* எஸ். வேணுகரன், பெரிய நீலாவணை.
* வி. அரவிந்தன், ஆரையம்பதி-2.
* மு.க. பர்வீன், மருதமுனை-05.
* இ. சுந்தரேசன், புத்தளம்.
* அப்துல் முனாஃப், கொட்டாரமுல்லை.
* நா. ஜெயகணேஷ், பொகவந்தலாவ.
* எம். செல்வகுமார், மூதூர்.
* ஜெ. ஜெயரூபன், கொழும்பு-06.
* ஜவாத், புத்தளம்.
* மா. மகேஸ்வரன், தன்னாமுனை.
* பே. கிறிஸ்ரி அன்ரனி, கொழும்பு-06.
* வி. ரவி, வெல்லம்பிட்டிய.
* பாத்திமா ரிப்கா பாரிஸ், நுவரெலியா.
* பி. ஆர். அசோக்குமார், டிக்கோயா.
* ந. சிவாஜினி, மண்டூர்.
* கி. றெஜிச்சந்திரன், வத்தளை.
* வ. சுரேஸ்கண்ணா, இருதயபுரம்.
* எஸ். யுவராணி, பிட்டக்கந்தை.
* ச. றொபட், மட்டக்களப்பு.
* கே. பாயிஸா, மாதிப்பொளை.
* ச. ரவீந்திரன், கனடா.
* அ. விஜயலெட்சுமி, மண்டூர்-01.
* ஆ. ஜெகதீஸ்வரன், புசல்லாவ.
* சி. கணேசமூர்த்தி, ஆரையம்பதி-02.
* யூ. முஸ்தாக் அஹமட், நிந்தவூர்-19.
* எஸ். வசந்தி, திருமலை.



படிப்பகம்

www.padippakam.com

# பத்துப்பேர்கொண்ட விசேஷப் படைப் பிரிவுகள்!
# யாழ் குடாநாட்டில் புலிகள் ஊடுருவல்
## அரச அதிகாரிகள்–தமிழ்க் கட்சி உறுப்பினர்கள் குறியில்!

**யாழ் குடாநாட்டில் அதிரடி நடவடிக்கைகளில் ஈடுபட பத்துப்போர் கொண்ட விசேஷப் படைப்பிரிவுகள் பிரபாகரனால் அனுப்பிவைக்கப்பட்டுள்ளன. பத்துப்பேர் கொண்ட ஒவ்வொரு பிரிவும் ஒரு 'யூனிட்' என்று அழைக்கப்படும்.**

ஒவ்வொரு யூனிட்டிலும் உள்ள பத்துப் பேரில் ஒருவர் உளவுப் பிரிவைச் சேர்ந்தவர்; மூன்றுபேர் கரும்புலிகள்; ஆறுபேர் பிஸ்டல் குறூப்.

யாழ் குடாநாட்டில் ஊழல் நடவடிக்கைகளில் ஈடுபடும் அரச அதிகாரிகள், யாழ்ப்பாணத்தில் செயற்படும் தமிழ்க் கட்சி உறுப்பினர்கள், படை உயரதிகாரிகள் ஆகியோரைத் தீர்த்துக்கட்டுவதே இவர்களது பிரதான பணியாக இருக்குமாம்.

படையினர்மீது தாக்குதல் நடத்துவது இந்த யூனிட்டுக்களில் உள்ளவர்களின் பணியாக இருக்காது.

ஊழல் செய்யும் அதிகாரிகளின் நடமாட்டம், மற்றும் விபரங்களை ஒவ்வொரு யூனிட்டிலுமுள்ள உளவுப்பிரிவு உறுப்பினர் திரட்டிக் கொடுப்பார். அத் தகவலை வைத்து குறிப்பிட்ட நபரை ஒழித்துக் கட்டும் நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

### கரும்புலிகள்

படை உயரதிகாரிகள் மீதான தாக்குதல்களுக்கு கரும்புலிகள் ஈடுபடுத்தப்படுவர் என்று கூறப்படுகிறது.

யாழ் குடாநாட்டில் ஊழல் தலைவிரித்தாடுகிறது. முக்கிய சிவில் அதிகாரிகளே ஊழல் செய்வதில் முன்னணியில் உள்ளனர்.

ஊழல் செய்வது மூலம் மக்களை ஏமாற்றிவரும் அதிகாரிகள்–குறிப்பாக தமிழ் அதிகாரிகள் தொடர்பாக புலிகளின் தலைமைப்பீடம் கடும் கோபம் கொண்டிருப்பதாக தகவல்கள் வெளியாகியுள்ளன. அவ்வாறான ஊழல் பேர்வழிகள்மீதான நடவடிக்கைகளுக்கு மக்களிடமும் வரவேற்பு இருக்கும் என்று புலிகள் நம்புவதாகத் தெரிகிறது.

இதேவேளை யாழ் குடாநாட்டில் தமது அலுவலகங்களைத் திறந்துள்ள தமிழ்க் கட்சிகளின் உறுப்பினர்கள்மீதும் குறிவைக்குமாறு புலிகள் இயக்க அரசியல் பிரிவுப் பொறுப்பாளர் தமிழ்ச் செல்வன் உத்தர விட்டுள்ளார் என்று மற்றொரு தகவல் தெரிவிக்கிறது.

யாழ் குடாநாட்டில் சமீப நாட்களாகப் புலிகள் இயக்க உறுப்பினர்களின் நடமாட்டம் அதிகமாகி வருகிறது. தென்மராட்சிப் பகுதியில் புலிகள் இயக்க உறுப்பினர்கள் பெருமளவில் ஒன்றுதிரண்டு காணப்பட்டனர் என்று அங்கிருந்து கிடைத்த தகவல் ஒன்று உறுதிப்படுத்தியுள்ளது.

இதேவேளை கடந்த வாரம் யாழ்ப்பாண நகரில் சுண்டிக்குளிப் பகுதியிலும், கோண்டாவில் பக்கமும் கைக்குண்டுச் சத்தங்கள் கேட்டதாகச் செய்திகள் தெரிவிக்கின்றன.

### தேடுதல்

பாதுகாப்புப் படையினரும் யாழ் குடாநாட்டின் பல பகுதிகளில் திடீர் சுற்றிவளைப்பு தேடுல் நடவடிக்கைகளில் ஈடுபட்டு வருகின்றனர்.

சமீபத்தில் கொக்குவில் பகுதியில் பாரிய தேடுதல் நடவடிக்கை ஒன்று மேற்கொள்ளப்பட்டது. பொதுமக்கள் அனைவரும் ஒரு பொது இடத்துக்கு அழைக்கப்பட்டு முகமூடிகள் உதவியுடன் சோதனைகள் மேற்கொள்ளப்பட்டன.

தேடுதல் நடைபெறும் பகுதிகளில் வேட்டுச் சத்தங்கள் கேட்பதும் அதனால் மக்கள் பீதியுறும் சம்பவங்களும் நடக்கின்றன.

நவாலியில் நடைபெற்ற சுற்றிவளைப்பு தேடுதல் ஒன்றின்போது படையினருக்கும் புலிகளுக்கும் இடையே சண்டை ஏற்பட்டது. அதன் பின்னர் அங்கிருந்து இரண்டு சடலங்கள் பொலிசாரால் யாழ் மருத்துவமனையில் ஒப்படைக்கப்பட்டன. சடலங்களின் மீது துப்பாக்கிச் சூட்டுக் காயங்கள் காணப்பட்டன.

### சடலங்கள்

வீதிகளில் சடலங்கள் காணப்படுவதும் தொடர்ந்தவண்ணம் உள்ளன. 15.02.97 அன்று சண்டிலிப்பாய்–சங்கானை பிரதான வீதியில் மனோன்மணி அம்மன் கோவிலடியில் ஒரு ஆண்பிணம் கிடந்தது. துப்பாக்கிச் சூட்டுக் காயங்கள் காணப்பட்டன.

20.02.97 அன்று சாவகச்சேரிப் பகுதியில் துப்பாக்கிச் சூட்டுக் காயங்களுடன் காணப்பட்ட இரு இளைஞர்களின் சடலங்கள் பொலிசாரால் கண்டெடுக்கப்பட்டன.

# உளவு விமானம் ஏமாந்தது
## திருமலையில் புலிகள் திசை திருப்பல்!

சிறிலங்கா விமானப்படை இஸ்ரேலிடமிருந்து– விமானியோ பயணியோ இல்லாமல் பறந்து வேவு பார்க்கும் விமானங்களை வாங்கியிருந்தது. இந்த விமானங்களில் ஒன்று அண்மையில் வட பிராந்தியத்தில் பறந்து கொண்டிருந்தபோது திடீரென மறைந்து போய்விட்டது தெரிந்ததே.

இந்தரக விமானம் ஒன்று அண்மையில் திருகோணமலைக்கு வடக்கே பறந்து சென்று கொண்டிருந்தது. வானிலிருந்து இவ் விமானம் தான் காணும் காட்சிகளைப் படம் பிடித்து கட்டுப்பாட்டறைக்கு அனுப்பி வைத்துக் கொண்டிருக்கும்.

அவ்வாறு இவ்விமானம் அனுப்பிய படங்களுள் ஒன்றில், தரையில் 120 எம் எம் ஆட்டிலெறி பீரங்கி ஒன்று காணப்பட்டது.

இப்பீரங்கி எல்.ரி.ரி.ஈ.யினரால் அந்த இடத்தில் வைக்கப்பட்டிருக்க வேண்டும் என்று கருதிய விமானப்படையினர் உஷாராயினர். விமானப்படை குண்டு வீச்சு விமானங்கள் அந்தப் பீரங்கியைக் குண்டு வீசித் தொலைத்துக்கட்ட எண்ணி விண்ணில் தாவின. குறிப்பிட்ட இடத்தை சுற்றிச் சுற்றி வட்டமிட்ட போதும், ஆளில்லா விமானம் கண்டு பிடித்த பீரங்கியைக் காணமுடியவில்லை.

பீரங்கியைப் போன்று போலி உருவத்தைச் செய்து குறிப்பிட்ட இடத்தில் வைத்து விமானப் படையினரை ஏமாற்றுவதற்காகவே இந்த வேலையைப் புலிகள் செய்து வைத்துள்ளனர் என்று பின்னர்தான் தெரிய வந்துள்ளது.

### இடம்பெயர்ந்தோர் 25 ஆயிரம் பேர்

பெப்ரவரி 04ம் திகதி ஆரம்பிக்கப்பட்ட 'எடிபல' இராணுவ நடவடிக்கையையடுத்து சுமார் 25 ஆயிரம் பேர் அகதி முகாம்களில் தஞ்சமடைந்துள்ளார்கள். இவர்களுக்கு படங்கினால் சிறு சிறு குடில்கள் அமைத்துக் கொடுக்கப்பட்டுள்ளன.

திடீரெனப் பெய்த பெருமழையினால் உணவைச் சமைத்து உண்ணக்கூட முடியாமல் போனதாம். இதைவிட ஆசிரியர்கள், அரச ஊழியர்கள் தமது மாதாந்தக் கொடுப்பனவைப் பெற முடியாமல் தவித்துப் போயுள்ளனர். இட நெருக்கடி மற்றும் உணவு- மருந்துப் பொருட்களுக்கும் பெரும் தட்டுப்பாடும் நிலவுகிறது.

புலிகளின் கட்டுப்பாட்டுப் பகுதியிலிருந்து வவுனியா வரும் அகதிகள் 'புலிகளின் தடுப்பு முகாமில்' ஒருநாள் முழுக்க தங்கவைக்கப்பட்டு விசாரணையின் பின்பே செல்ல அனுமதிக்கப்படுகிறார்கள் எனவும் தகவல்கள் தெரிவிக்கின்றன.

# "புலிகள் மீது பழிபோடும் முயற்சி"
## கிழக்கில் புலிகள் பிரசுரம் விநியோகம்

கிழக்கில் சமீபத்தில் நடைபெற்ற சம்பவங்கள் தொடர்பாக புலிகள் அமைப்பினர் ஒரு பிரசுரம் வெளியிட்டுள்ளனர். அதில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:

"இன மத பேதங்களுக்கு அப்பாற்பட்ட சுதந்திர தேசம் நோக்கிய எமது விடுதலைப் போராட்டமானது பல்வேறுபட்ட எதிர்ப்புக்களுக்கு மத்தியில் எதிர்நீச்சலடித்து வெகு வேகமாக வளர்ச்சியடைந்து வருகின்றது. தமிழ் மொழியைத் தாய் மொழியாகக் கொண்ட தமிழ்- முஸ்லிம் இனங்களின் ஒற்றுமையையும், அன்னியோன்யத்தையும் அறிந்து கொண்ட பேரினவாத சக்திகள் இவ்விரு இனங்களுக்கிடையில் பிளவை ஏற்படுத்தி எமது விடுதலைப் போராட்டத்தை திசை திருப்பப் பார்க்கின்றன.

எமது தாயக மண்ணை ஆக்கிரமித்து, இரு இனங்களின் மத்தியில் முகாம் அமைத்திருக்கும் படையினர் மக்கள் செறிந்து வாழும் குடியிருப்புக்களை நோக்கி கண்மூடித்தனமான முறையில் எறிகணைகளை ஏவி அப்பாவி மக்களை பலிகொள்ளும் நடவடிக்கையில் ஈடுபட்டுள்ளனர். ஆனால் புலிகளின் மீது பழியைப் போட்டு தமிழ், முஸ்லிம் மக்கள் மத்தியில் இன மோதலை ஏற்படுத்தி அப்பாவி முஸ்லிம் இளைஞர்களை தமது படையில் சேர்த்து இரு இனங்களுக்குமிடையில் முரண்பாடுகளைத் தோற்றுவிக்க முனைகின்றனர்.

எனவே எமதன்புமிகு தமிழ், முஸ்லிம் மக்களே! இவைகளைக் கருத்திற் கொண்டு ஒவ்வொரு தமிழ், முஸ்லிம் மகனும் சிந்தித்து ஆக்கபூர்வமான முறையில் முடிவெடுக்க வேண்டியது இன்றைய தேவையாகும்.

இன்று, இரு இனங்களும் நிதானமாகச் செயற்படாது போனால், இளஞ்சந்ததியினர் இதைவிடவும் கொடூரமானதோர் இன வெறிப் புயலைச் சந்திக்க வேண்டிவரும், என்பதை தமிழ்- முஸ்லிம் மக்கள் மறக்கலாகாது. பேதங்களை மறந்து ஒற்றுமையாய் வாழ நினைக்கும் சமூகங்களை எந்தவொரு சக்தியாலும் பிரிக்கவோ அழிக்கவோ முடியாது என்ற உண்மையை இரு இனங்களும் உணர்தல் வேண்டும்." இவ்வாறு புலிகள் விடுத்துள்ள பிரசுரத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

படையினர் தொடர்பான புலிகளின் குற்றச்சாட்டில் எவ்வித உண்மையும் கிடையாது என்று கிழக்கு மாகாண படை வட்டாரங்கள் மறுத்துள்ளன. "கிழக்கில் முஸ்லிம் மக்கள்மீது புலிகள் கடந்த காலத்தில் வன்முறைகளை கட்டவிழ்த்து விட்டனர் என்பதை யாரும் மறந்திருக்கமாட்டார்கள்" என்று படை அதிகாரி ஒருவர் தெரிவித்திருக்கிறார்.

# மன்னாரில் ஐந்து புலிகள் பலி!
## இருவர்–காலி–மாத்தளை வாலிபர்கள்

மன்னார் உயிலங்குளத்தில் படையினர் மீது 20.02.97 அன்று தாக்குதல் ஒன்றை நடத்தியதாகப் புலிகள் தெரிவித்துள்ளனர்.

படையினர் தரப்பில் ஏற்பட்ட சேதம் பற்றி தமக்குத் தெரியவில்லை என்று குறிப்பிட்டுள்ள புலிகள், தமது தரப்பில் ஐந்துபேர் பலியானதாக அறிவித்துள்ளனர்.

மாத்தளையைச் சேர்ந்த இளைஞர் ஒருவரும் புலிகள் இயக்கத்தில் இணைந்து கப்டன் தரத்தில் இருந்துள்ளார். மன்னார் மோதலில் அவரும் பலியாகியுள்ளார். அவரது பெயர்: கறுப்பையா பிரேம்ராஜ். இயக்கப் பெயர்: கப்டன் மாணிக்கம். காலியைச் சேர்ந்த வாலிபரின் பெயர் பொன்னுச்சாமி விஜயகுமார். இயக்கப் பெயர்: 2ம் லெப்டினன்ட் அறிவழகன்.

பலியான ஏனையோர் விபரம்: லெப்டினன்ட் புவியரசன் (மாணிக்கம் வரதராஜா– யாழ்ப்பாணம்), லெப்டினன்ட் காண்சிகன் (செல்வராசா சிவதயான்– பூநகரி), 2ம் லெப்டினன்ட் தமிழகன் (சண்முகம் ரமேஷ், சுன்னாகம்.) இவர்கள் அனைவரும் புலிகள் இயக்க விசேஷ அதிரடிப்படையைச் சேர்ந்தவர்கள்.

# குடாநாட்டில் திடீர்த் தாக்குதல்கள்

யாழ் குடாநாட்டில் வதிரியில் இரும்பு மதவடியிலும், ஆனைக்கோட்டையில் உயரப் புலம் பகுதியிலும் தாக்குதல் சம்பவங்கள் இடம்பெற்றுள்ளன என்று தெரிவிக்கப்படுகின்றது.

கடந்த 17ம் திகதி திங்கட்கிழமை மாலுசந்தி உடுப்பிட்டி வீதியால் மோட்டார் சைக்கிளில் (ஃபீல்ட் பைக்) சென்று கொண்டிருந்த இரு படையினர் மீது வதிரி இரும்பு மதவடியில் வைத்துத் தாம் கைக்குண்டுத் தாக்குதல் நடத்தியதாகவும், தாக்குதலில் மோட்டார் சைக்கிளில் வந்த இரு படையினரும் கொல்லப்பட்டனர் என்றும் புலிகள் தெரிவித்தனர்.

படையினரின் மோட்டார் சைக்கிள் எரிக்கப்பட்டதாவும், பின்வரும் ஆயுதங்கள் கைப்பற்றப்பட்டதாகவும் புலிகள் தரப்பில் அறிவிக்கப்பட்டுள்ளது.

ரி-56-ஒன்று, ரி-56 பட் மொடல்-ஒன்று, நடுத்தர ரவைகள்- 60, மகசீன்- 2.

இந்தச் சம்பவத்தில் புலிகள் தரப்பில் இழப்பு எதுவுமில்லை என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

ஆனைக்கோட்டை உயரப்புலம் பகுதியிலும் 18ம் திகதி செவ்வாய்க்கிழமை தாக்குதல் சம்பவம் ஒன்று இடம்பெற்றுள்ளது.

இச்சம்பவத்தில் மூன்று படையினர் பலியானதாகத் தெரிவிக்கப்பட்டபோதிலும் அது ஊர்ஜிதம் செய்யப்படவில்லை.

17ம் திகதி திங்கட்கிழமை நவாலி வேலக்கைப் பிள்ளையார் கோவில் பகுதியிலும் தாக்குதல் சம்பவம் ஒன்று இடம்பெற்றதாகக் கூறப்படுகின்றது. எனினும் இச்சம்பவமும் ஊர்ஜிதம் செய்யப்படவில்லை.

# பத்திரிகை ஆசிரியருக்கு எச்சரிக்கை!

யாழ்ப்பாணத்தில் இருந்து வெளியாகும் 'உதயன்' பத்திரிகை ஆசிரியர் புலிகள் இயக்கத்தினரால் எச்சரிக்கப்பட்டுள்ளார்.

யாழ் குடாநாட்டில் இராணுவக்கட்டுப்பாட்டுக்கு வெளியே உள்ள பகுதிக்கு வருமாறு அவர் அழைக்கப்பட்டார். புலிகள் இயக்க யாழ் மாவட்ட இராணுவப் பிரிவைச் சேர்ந்த பொறுப்பாளர் ஒருவரும், புலிகள் இயக்க உளவுப் பிரிவைச் சேர்ந்த ஒருவரும் அவரைச் சந்தித்தனர்.

"ஏனைய இயக்கச் செய்திகளுக்கு முக்கியத்துவம் கொடுக்கக்கூடாது" என்று அவரிடம் கூறப்பட்டிருக்கிறது. பத்திரிகையை ஒழுங்காக நடத்த முடியாவிட்டால் அதனை மூடிவிடுமாறும் தெரிவிக்கப்பட்டதாம். இதனையடுத்து சில நாட்கள் 'உதயன்' பத்திரிகையில் ஏனைய இயக்கச் செய்திகள் இடம் பெறவில்லை. தற்போது மீண்டும் இடம்பெற்று வருகின்றன.

முன்னர் படையினராலும் 'உதயன்' பத்திரிகை ஆசிரியர் நேரில் அழைக்கப்பட்டு, செய்திகளை எவ்வாறு வெளியிட வேண்டும் என்று அறிவுறுத்தப்பட்டது குறிப்பிடத்தக்கது.

# யாழில் பத்துப்பேர் விடுதலை
## ஈ.பி.டி.பி. விடுத்த கோரிக்கை!

யாழ்ப்பாணத்தில் படையினரால் கைது செய்யப்பட்ட பத்துப் பேர் விடுவிக்கப்பட்டுள்ளனர். ஈ.பி.டி.பி.யினர் படை உயரதிகாரிகளுடன் நடத்திய பேச்சுவார்த்தையை அடுத்தே இவர்கள் விடுவிக்கப்பட்டனர்.

ஜேசுராஜா இம்மானுவேல் (வயது 20), ஈ.பொ.ரெக்ஷியன் கெனரி (வயது 24), கிருஷ்ணபிள்ளை உதயகுமார் (வயது 19), செல்லன் ரவிக்குமார் (வயது-14), குணரட்ணம் செல்லத்துரை (வயது 70), இரத்தினசபாபதி குணசீலன் (வயது 21), அம்பலவாணர் கதிர்காமநாதர் (வயது 16), கனகசபை கவீந்திரராசா (வயது 38), மாணிக்கவாசகர் கணேஸ் (வயது 21), பாலசிங்கம் ஸ்டாலின் (வயது 21) ஆகியோரே விடுவிக்கப்பட்டவர்களாவர்.

"சந்தேகத்தின் பேரில் கைது செய்யப்பட்ட இளைஞர்கள், யுவதிகள் அப்பாவிகள் என்று தெளிவாகத் தெரியும் பட்சத்தில் அவர்களின் விடுதலைக்குப் பாடுபட்டு வருகிறோம். படை அதிகாரிகளும் நம் கோரிக்கைக்கு செவிசாய்த்து வருகின்றனர்.

போரிடுவதோ, போரில் ஈடுபடும் தரப்புக்களுடன் இணைந்து நிற்பதோ எமது வேலையல்ல. போரின் மத்தியில் அவதிப்படும் மக்களுக்கு உதவுவதே எமது அரசியல் பணியாகும். அதனையே நாம் செய்து வருகிறோம்" என்று யாழ்ப்பாணத்தில் ஈ.பி.டி.பி. விடுத்துள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

### முன்னாள் உறுப்பினருக்கு தண்டனை

யாழ் குடாநாட்டை படையினர் கைப்பற்றிய பின்னர் புலிகள் இயக்க முன்னாள் உறுப்பினர்கள் சிலரும் படையினருக்கு உதவிவந்தனர். இத் தகவலை முரசு முன்னர் வெளியிட்டது நினைவிருக்கலாம்.

15.02.97 அன்று தமது முன்னாள் உறுப்பினர் ஒருவருக்கு புலிகள் இயக்கத்தினர் மரணதண்டனை விதித்துள்ளனர்.

வல்வெடித்துறையைச் சேர்ந்த 24 வயதான பாபு என்பவருக்கே புலிகள் அவ்வாறு மரணதண்டனை விதித்துள்ளனர்.

அந்த மரண தண்டனை தொடர்பாக புலிகள் தெரிவித்துள்ளதாவது: "எமது இயக்கத்தில் இருந்து விலகிய பாபு என்பவர் எமது உறுப்பினர்களைக் காட்டிக்கொடுக்கும் செயல்களில் ஈடுபட்டு வந்தார். சுற்றிவளைப்பு, கைது செய்தல் ஆகிய இராணுவச் செயற்பாடுகளுக்கு துணை போனார்," என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

# மன்னார் கடலில் கோர விபத்து!
## நிறைபோதையில் படகோட்டி

மன்னார் கடலில் 18.02.97 அன்று ஏற்பட்ட படகுவிபத்தில் 130 பொதுமக்கள் பலியானது தெரிந்ததே. இச்சம்பவத்தில் பலியானவர்களில் அநேகமானோர் பெண்களும் குழந்தைகளுமாவர்.

படகு விபத்து நடந்த செய்தி அறிந்து விரைந்த கடற்புலிகளின் படகுகள் 20 பேரை உயிரோடு மீட்டன. 85 பேரின் சடலங்களும் உடனடியாக மீட்கப்பட்டன. படகோட்டி போதையில் இருந்ததும், 150 பேரை ஏற்றிச் சென்றதால் ஏற்பட்ட நெருக்கடியுமே படகு விபத்தானதுக்குக் காரணம் என்று அறியப் பட்டுள்ளது.

22.02.97 அன்று வன்னிப் பகுதியெங்கும் புலிகள் இயக்கத்தினர் 'தேசிய துக்கதினம்' அனுஷ்டித்தனர். வர்த்தக நிறுவனங்கள், காரியாலயங்கள் மூடப்பட்டிருந்தன. கறுப்புக் கொடிகளும் பறக்கவிடப்பட்டன.

கடலில் ஏற்பட்ட மரணங்கள் தொடர்பாக புலிகள் இயக்க தலைமைப்பீடத்தால் அறிக்கை ஒன்றும் வெளியிடப்பட்டது. இவ்வாறான மரணங்களுக்கு இலங்கை அரசின் நடவடிக்கைகளே காரணம். இராணுவ நடவடிக்கைகள் காரணமாக உயிர் தப்பி ஓடிய மக்கள்தான் பலியாகி இருக்கிறார்கள் என்று அந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# புலிகள் இயக்கப் பொறுப்பாளர் திருமணம்

புலிகள் இயக்கத்தின் கிழக்கு மாகாண அரசியல்துறைப் பொறுப்பாளர் க.துரை கடந்த மாதம் புலிகள் இயக்கத்தில் உறுப்பினராகவுள்ள பெண் ஒருவரைத் திருமணம் செய்து கொண்டுள்ளார்.

புலிகளின் ஆளுகைக்குட்பட்ட படுவான் கரைப் பகுதியிலேயே இத் திருமணம் நடந்தேறியுள்ளது. ஐந்து வருடகாலம் இயக்கத்தில் இருந்தவர்கள் திருமணம் செய்ய முடியும் என்பது புலிகள் இயக்கத்தில் உள்ள விதியாகும்.

மணப்பெண்ணையும், மணமகனையும் வரவேற்கும் நிகழ்ச்சி மட்டக்களப்பு-அம்பிளாந்துறையில் வெகுசிறப்பாக இடம் பெற்றது. மணமக்களின் உறவினர்களும் மற்றும் பொதுமக்களும் புதுமணத் தம்பதிகளுக்கு வாழ்த்துக்கூறி பரிசுப் பொருட்களையும் வழங்கினார்கள்.

திருமண நிகழ்ச்சிகளில் கலந்து கொண்ட திரு. துரை, அன்றைய தினம் இயக்கத்தின் அலுவல்களையும் நிறைவேற்றுவதில் மும்முரமாக ஈடுபட்டிருந்தார்.

இதனிடையே சமீப சில காலங்களுக்கு முன்னர் வாகரைப் பகுதியின் உள்ளூர்ப் பொறுப்பாளராக இருந்த கலைவாணன் எனும் புலிகள் இயக்கப் போராளி ஒருவர், அப்பகுதியில் கடமையாற்றும் ஆசிரியை ஒருவருடன் நேசமாக நட்புக் கொண்டிருந்ததாகவும், இத்தகவல் பின்னர் வெளியாகி புலிகள் இயக்கத்தின் உள்ளூர்த் தலைமைகளுக்கு எட்டியதால் மனமுடைந்த நிலையில் காணப்பட்ட அவர் பின்னர் தற்கொலை செய்து கொண்டதாகவும் கூறப்படுகிறது.

# பயணிகளின் வாகனங்களில் படையினர்
## அச்சத்தோடு தொடரும் பயணங்கள்

கிழக்கு மாகாண மக்களுக்கு ஏற்கனவே பெருமளவுக்கு போக்குவரத்துச் சீர்கேடுகள் இருந்துவரும் இவ்வேளையில் பயணிகளின் கஷ்டங்களை அதிகரிப்பதில் படைத்தரப்பினரும் ஈடுபட்டு வருகின்றனர்.

பயணிகளின் தேவைக்கு ஏற்றவாறு பஸ்கள் போதாமை, பொதுப் போக்குவரத்து பஸ்களைப் படையினர் எடுத்துச் செல்லுதல், யுத்தச் சூழலால் நேரக்கட்டுப்பாடு, அவ்வப்போது சமூகங்களுக்கிடையில் தூண்டிவிடப்படும் மோதல்கள் என்பவற்றுக்கிடையில் சிக்கிப் பயணிகள் தவிக்க வேண்டியுள்ளது.

பயணிகளின் பஸ்களைப் படையினர் எடுத்துச் செல்வதோடு பொதுமக்கள் அலுவல்களுக்காகப் பயணம் செய்யும் சன நெருக்கடிமிக்க வேளையில் பஸ்களில் படையினரும், பொலிசாரும் பயணிகளுடன் சேர்ந்து கூட்டம் கூட்டமாக ஏறிக்கொண்டு வருகின்றனர். இதனால் பயணிகளின் பாடு பரிதாபமாகி விடுகிறது.

மட்டக்களப்பிலிருந்து கொழும்பு போன்ற தூரப்பயணங்களில் ஈடுபடும் பஸ்களைக்கூட படையினர் இடைவழியில் இடைமறித்து தமது தேவைகளுக்கு எடுத்துச் சென்று விடுகின்றனர். இத்தகைய சம்பவங்களால் உயிரைப் பணயம் வைத்துப் பயணத்தைத் தொடரவேண்டியுள்ளது.

பொதுமக்கள் பயணம் செய்யும் பஸ்களில் படையினர் ஏறிச் செல்வதால் பல விபரீதங்கள் அடிக்கடி நடந்துள்ளன. இவ்வித பயணங்களின்போது படையினருக்கும், புலிகளுக்குமிடையில் ஏற்படும் மோதல்களில் பல பொதுமக்கள் பலியாகிவருவது இங்கு குறிப்பிடத்தக்கது.

படையினரின் போக்குவரத்துக்கென ஒரு தொகுதிவாகனங்கள் இருக்கும்போது பொது மக்களுடன் சேர்ந்து பயணம் செய்து அப்பாவிகளைப் பலிக்கடாவாக்கும் சம்பவங்கள் மேலும் தொடராமலிருக்க உடனடி நடவடிக்கை எடுக்குமாறு பொதுமக்கள் சகல தரப்பினருக்கும் வேண்டுகோள் விடுக்கிறார்கள்.

# சோதனையில்லாத சோதனை

கெடுபிடிகளுக்கும் நெருக்கடிகளுக்கும் மத்தியில் தொடர்கதையாகிய போக்குவரத்துக் கஷ்டங்கள் தமிழ்ப் பிரதேசங்களில் நாளுக்கு நாள் மிக மோசமாக அதிகரித்து வருகின்றன. இதனால் சோதனைமேல் சோதனையாக பயணத் தொல்லைகளை அனுபவிக்க வேண்டி யுள்ளது.

மட்டக்களப்பு– குருக்கள்மடத்தைத் தாண்டிப் போக்குவரத்துச் செய்யும் பயணிகள் அங்குள்ள விசேட அதிரடிப்படை முகாமின் முன்னால் வாகனத்தைவிட்டு இறங்கி நடந்து செல்லுமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள். தகிக்கும் வெய்யிலில் பயணிகள் நீண்ட தூரம் நடந்து சென்று முகாமின் மறுபக்கத்திற்குப் போய் வாகனத்தில் ஏறவேண்டும். ஆனால் இங்கு வாகனமோ பயணிகளோ சோதிக்கப்படுவதில்லை. எதுவித சோதனையும் செய்யாமல் பயணிகளை கொதிக்கும் வெய்யிலில் இறங்கி நடந்து செல்லவைப்பதன் அவசியம் என்ன? என்று பலராலும் விசனம் தெரிவிக்கப் படுகிறது.



படிப்பகம்

www.padippakam.com

## "குண்டுகள் குறி தவறி விழுகின்றன"

### கண்டியில் அமைச்சர் அஷ்ரப் தெரிவிப்பு

(கண்டி நிருபர்)

"தமிழ்பேசும் மக்கள் சிங்கள மொழியைக் கற்கும் அளவுக்கு சிங்கள மக்கள் தமிழ் மொழியைக் கற்க முன்வருகிறார்கள் இல்லை. ஆனால் தமிழர்கள் மும் மொழிகளையும் கற்கின்ற அதே வேளையில் முஸ்லிம்கள் நான்கு மொழிகளையும் கற்றிருக்கின்றனர். இந்நிலையில் சிங்களவரே இந்நாட்டில் மொழி தொடர்பாக பிரச்சனைக்கு ஆளாவதில் முன்னிற்கின்றனர்."

கண்டி உடுதெனிய முஸ்லிம்மகா வித்தியால புதிய கட்டிடத் திறப்புவிழாவில் பிரதம அதிதியாகக் கலந்து கொண்டு பேசுகையில் அமைச்சர் எம்.எச்.எம். அஷ்ரப் மேற்கண்டவாறு கூறினார். பாராளுமன்றக் குழுக்களின் பிரதித் தலைவர் ஜனாப் றவூப் ஹக்கீம் எம்.பி. உட்பட முஸ்லிம் காங்கிரஸ் பிரதிநிதிகளும் முன்னாள் எம்.பி. மகிந்த அபயகோன் உட்பட பௌத்த குருமார், சிங்களவர் பலரும் இக் கூட்டத்தில் கலந்து கொண்டனர். அமைச்சர் தமது உரையை கூடுதலாக சிங்கள மொழியிலேயே வழங்கினார்.

அவர் அங்கு மேலும் கூறியதாவது: "இன்று நாட்டில் கல்வி ஒரு பக்கம் இயங்குகின்றது. சமூகம் மறுபக்கம் செல்கின்றது. பிள்ளைகள் பெற்றோரை மதிக்கிறார்கள் இல்லை. பிரபாகரனின் தலையில் போடும் பாரிய குண்டுகள் குறி தவறி காட்டில் விழுகின்றன.

ஒரு குண்டை வாங்க 300 மில்லியன் செலவாகின்றது. இரண்டு குண்டுகளுக்கு செலவிடும் பணத்தைக் கொண்டு பல பாடசாலைக் கட்டிடங்களை நிர்மாணிக்கலாம். எத்தனை விமானங்களை நாடு இழந்துவிட்டது? நாட்டில் இப்பொழுது நடப்பதைப்பார்த்து நாம் என்ன விளையாடுகிறோம் என்பதை அறிய இயலும்.

ஒரு எம்.பி. மற்றொரு எம்.பியை சுட்டுத் தள்ளுகிறார். இவற்றை நோக்கும் பொழுது இந்நாட்டு மக்களுக்கு எதிர்காலம் உண்டா என எண்ணத் தோன்றுகின்றது. 5000 சிறுவர்கள் பாலியல் துஷ்பிரயோகத்திற்கு உள்ளாக்கப்பட்டுள்ளனர். எனவே பெற்றோர் இது குறித்து விழிப்பாக இருக்க வேண்டும்.

வடக்கிலும் கிழக்கிலும் ஓடும் மனித இரத்தம் தெற்கிலும் ஓட இடம் வரலாம். எனவே ஜே.வி.பியை ஆதரிப்பதை விட்டு விடுங்கள்.

நாம் ஒரு மொழியைக் கற்பதால் நட்டம் விளைவதில்லை. சிங்களவர் தமிழ்மொழியைக் கற்கப் பஞ்சிப்பட்டால் அது அவர்களுக்கே எதிர்காலத்தில் பாதிப்பை ஏற்படுத்தும். 50 வருட சுதந்திரத்தின் பின்னர் எமது நாட்டில் இன்றைய நிலையைப் பாருங்கள். இன்றைய சூழ்நிலையில் நாட்டைக் கட்டிக் காக்கப் பிறந்தவர்தான் ஜனாதிபதி சந்திரிக்கா. எனவே அவரது கையைப் பலப்படுத்த வேண்டும். இதற்கு முன்னேற்பாடாகவே நாட்டின் கல்விக் கொள்கை மாற்றப்பட வேண்டும்."

## மின்வெட்டு அபாயம்

(கண்டி நிருபர்)

மலையகத்தில் உள்ள நீரேந்து நிலையங்கள் பலவற்றின் நீர்மட்டம் குறைந்துள்ளது. மின்வெட்டு அபாயம் ஏற்படலாம் எனத் தெரிவிக்கப்படுகின்றது.

லக்ஷபான, விக்டோரியா போன்ற நீரேந்து நிலையங்களில் நீர்மட்டம் வெகுவாகக் குறைவதற்குக் காரணம் கடந்த பல மாதங்களாக மலையகப் பிரதேசங்களில் நிலவும் கடும்வரட்சியாகும். இப் பிரதேசங்களில் மலைக்காடுகள் தானாகவே தீப்பற்றி எரிகின்றன. வரட்சியின் கொடுமையினால் மலையக விவசாயிகள் பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளனர். மரக்கறி வகைகளின் விலையும் பெருமளவில் அதிகரித்துவிட்டது.

## "நம் மீது குற்றம் இல்லை"

### மட்டக்களப்பு ரெலிகொம்

பெப்.02-08.1997 அன்றைய தினமுரசில் கிழக்கில் தொ(ல்)லைத் தொடர்பு எனும் தலையங்கத்தின் கீழ் தரப்பட்டிருந்த செய்தியானது மட்டக்களப்பு ரெலிகொம் நிலையத்தினருக்கு- விசேடமாக மட்டக்களப்பு ரெலிகொம் நிலையத்தின் பொறியியல் பிரிவினர்க்குக் களங்கத்தை ஏற்படுத்தும் வகையில் அமைந்திருந்தது, எமக்கு மிகவும் மன வேதனையை அளிக்கிறது.

எம்மைப் பொறுத்தவரையில் நாங்கள் மக்களின் தேவையை முதன்மைப்படுத்திய எமது சேவையை எப்போதும் செய்து வருகின்றோம். இதற்கு கடந்த காலங்களில் மட்டக்களப்பு ரெலிகொம் நிலையத்தால் வழங்கப்பட்ட சேவைகளைச் சற்று உற்று நோக்கினாலே போதும். உதாரணமாக; கடந்த மாதத்தில் மட்டும் மட்டக்களப்பு ரெலிகொம் நிலையத்தால் சுமார் இரு நூற்றுக்கு மேற்பட்ட புதியதொலைபேசி இணைப்புகள் வழங்கப் பட்டதையும் இது ரெலிகொம் வட்டாரத்தில் ஒரு சாதனையாக நோக்கப்பட்டு வருவதையும் கூறலாம்.

இதற்கு ரெலிகொம் நிலைய ஊழியர்களின் அயராத உழைப்பும் ஒதுக்கப்பட்ட மேலதிக நேரத்திற்கு மேல் ஊதியம் பெற முடியாதெனத் தெரிந்திருந்தும் பல ஊழியர்கள் அவ்வாறான மேலதிக நேரங்களிற் செய்த தன்னலமற்ற சேவையுமேதான் காரணம் என்பதும் கண்கூடு.

நிலைமை இவ்வாறிருக்க மட்டக்களப்பு ரெலிகொம் ஊழியர்களை வீணே குறை சொல்வதில் எவ்வித பயனுமில்லை. அண்மையில் மட்டக்களப்பிற்கும் வெளியிடங்களுக்குமான தொலைத் தொடர்புகள் சீர் குலைந்தமைக்கான காரணம் லக்கல- பரிவர்த்தனையில் ஏற்பட்ட கோளாறே தவிர இங்கு மட்டக்களப்பில் எமது பரிவர்த்தனையில் எந்தப் பிரச்சனைகளும் இருக்கவில்லை என்பதை ஆணித்தரமாக அறிவிக்கிறோம்.

மழை கடுமையாகப் பெய்யும் காலங்களில் மட்டக்களப்பு-கொழும்பு போக்குவரத்துப் பாதையில் மன்னம்பிட்டிப் பகுதியில் வெள்ளம் வருவது அனைவரும் அறிந்ததே. அவ்வாறான ஒரு சந்தர்ப்பத்தில் போக்குவரத்துச் சேவைகள் சீர் குலைந்தால் அதற்காக போக்குவரத்துச் சபையையோ அன்றி அவ்வாறான சேவையை வழங்கும் ஒரு நிறுவனத்தையோ குற்றம் சொல்வது எவ்வகையிற் பொருந்தும்?

லக்கல பரிவர்த்தனை நிலையத்தில் உள்ள உபகரணங்களில் ஏற்பட்ட கோளாறுகளுக்கு மட்டக்களப்பு ரெலிகொம் ஊழியர்களைக் குறை சொல்வது சரியல்ல என்பதை தெரிவித்துக் கொள்கிறேன்.

ச. தங்கராசா, தொலைத்தொடர்பு,
மாவட்டபரிசோதகர், மட்டக்களப்பு.

## தாக்கப்பட்ட படகும் தவறான செய்தியும்

* திருக்கோணமலை குச்சவெளிப் பிரதேசத்திலிருந்து இடம் பெயர்ந்துபோன தமிழ்-முஸ்லிம் மக்கள் தற்போது தத்தம் வீடுகளில் வந்து குடியிருக்கிறார்கள்.

11.02.1997ம் திகதி குச்சவெளியை அண்டிய கடல் வலயத்தில் காலை முதல் இரவு வரை ரோந்திடும் இராணுவ ஹெலிக்கொப்டர்கள் வட்டமடித்த வண்ணம் இருந்தன. இரவு 10 மணியளவில் பெருமளவு வானிலிருந்து வீசும் குண்டுகளை கடலில் மீன் பிடித்தலில் ஈடுபட்டிருந்த படகுகள் மீது வீசின. ஆனால் எவருக்கும் சேதம் ஏற்படவில்லை.

* திருமலையை அண்டிய கடல் பகுதியில் மீன் பிடித்துக்கொண்டிருந்த 'காந்தரூபன்' எனப் பெயர் பொறித்த படகை நோக்கி, ரோந்தில் இருந்த கடற்படையினர் திடீரென சரமாரியாக வேட்டுக்களைத் தீர்க்கத் தொடங்கியதில் படகு பலத்த சேதத்திற்குள்ளாகி கடலில் மூழ்கியது. அதில் மீன்பிடித்துக்கொண்டிருந்த அப்பாவி மீனவர்கள் மூவர் ஸ்தலத்திலேயே கொல்லப்பட்டனர். இருவர் சுழியோடி கரையை வந்து சேர்ந்தனர். இராணுவ தரப்பில் 'காந்தரூபன்' என்ற புலிகளின் வள்ளம் தாக்கியழிக்கப்பட்டதாக செய்தி வெளியிடப்பட்டுள்ளது.

கடற்றொழில் செய்பவர்கள் தமது படகுகளுக்குப் பெயர் சூட்டுவது பொதுவானதாகும். இதில் சிங்களவர்களும் தத்தமக்கு விருப்பமான பெயர்களை படகுகளில் எழுதியிருப்பதனைக் காணலாம்.

* கொழும்பு-திருமலை பஸ் போக்குவரத்துப் பாதையில் இப்பொழுது பொலிஸாரின் சோதனைச் சாவடிகள் ஆறில் இருந்து மூன்றாகக் குறைக்கப்பட்டுள்ளன.

* திருமலை உவர்மலைப் பக்கமாக அடிக்கடி சுற்றிவளைத்து தேடுதல் நடத்தும் இராணுவத்தினர் கணிசமான அளவு இளைஞர்களையும் விசாரணைக்கென அழைத்துச் செல்கின்றனர்.

## அகதி முகாம் தீக்கிரை!

(ஏறாவூர் நிருபர்)

அண்மையிலட வாழைச்சேனை- பேய்த்தாழையில் அகதி முகாம் தற்செயலாகத் தீப்பற்றிக் கொண்டதில் சுமார் 400குடும்பங்கள் மீள அகதிகளாகினர். வாழைச்சேனையில் தமிழ்-முஸ்லிம் பதற்ற நிலை நிலவிய வேளையிலேயே இந்த அகதி முகாமிலும் தீப்பற்றியது. முகாம் வேண்டுமென்றே தீவைக்கப்படுவதாக வதந்திகளும் பரவியிருந்தன. இதனால் எவரும் தீயை அணைக்க முயற்சிக்காது அச்சம் காரணமாக ஓடித் தப்பலாயினர்.

இதன்பின்னர் வாழைச்சேனை பிரிகேடியரிடம் உதவி கேட்டுக்கொண்டதையடுத்து தீயணைப்புப் படையினரும் கல்குடா இராணுவப் படையினரும் வந்து சேர்ந்தார்கள். எனினும் அவர்கள் வந்து சேர்வதற்கு முன்னதாகவே முகாம் கொட்டில்கள் அனைத்தும் தீப்பற்றி எரிந்துவிட்டன என்று பிரதேச செயலாளர் திரு. கதிர்காமநாதன் தெரிவித்தார்.

நிர்க்கதிக்குள்ளான இக்குடும்பங்கள் வாழைச்சேனை விபுலாநந்தா வித்தியாலயத்தில் தங்க வைக்கப்பட்டிருப்பதாகவும் இவர்களுக்குத் தொண்டர் நிறுவனங்களும், பிரதேச செயலகமும் விசேட நிவாரண உதவிகளை வழங்கி வருவதாகவும் அவர் சொன்னார்.

## இருவருடகால கொடுப்பனவு தாமதம்

### முறைப்பாட்டால் அதிகாரிகள் சுறுசுறுப்பு

(திருமலை நிருபர்)

இரண்டு வருடங்களுக்கு மேலாக மேலதிகநேரக் கொடுப்பனவுக்கான பணி ஆற்றியும் கொடுப்பனவு வழங்கப்படாமை, ஐந்து சம்பள ஏற்றங்களைப் பெற்றிருந்தும் சேவையில் உறுதிப்படுத்தப்படாமை, இரண்டாவது நியமனக் கடிதம் ஒன்று வழங்கி முதலாவது நியமனக் கடிதத்தை வலுவற்றதாக்க நடவடிக்கை எடுத்தமை போன்றவற்றுக்கு எதிராக வடகிழக்கு மாகாணசபை ஊழியர் ஒருவரால் நிருவாகத்துக்கான பாராளுமன்ற ஆணையாளர் (குறைகேள் அதிகாரி) அவர்களிடம் செய்யப்பட்ட முறைப்பாட்டையடுத்து மாகாணசபை அதிகாரிகள் சுறுசுறுப்பாகச்செயல்பட ஆரம்பித்துள்ளனர்.

கால்நடை அபிவிருத்திப் பணிப்பாளரால் தனக்கு இழைக்கப்பட்ட அநீதிகள் குறித்து இ.மணிவண்ணன் என்ற திணைக்களத் தொழிலாளியே இத்தகைய முறைப்பாடு ஒன்றைச் செய்துள்ளார்.

மாகாணசபையின் உயர்மட்டம்வரை சென்றும் பலமாதங்களாக நடவடிக்கை எதுவும் எடுக்கப்படாத நிலையில், இந்தத் தொழிலாளி மேற்படி குற்றச்சாட்டுக்களை குறைகேள் அதிகாரி மட்டத்துக்குக் கொண்டு சென்றதையடுத்து, விசாரணைகள் மேற்கொள்ளப்பட்டன.

விசாரணைகளையடுத்து மேலதிக நேரக் கொடுப்பனவு வழங்கவும், இரண்டாவது நியமனக் கடிதம் சம்பந்தமாக விசாரணைகள் மேற்கொள்ளவும், மே மாதமளவில் சேவையில் உறுதிப்படுத்தவும் தலைமைச் செயலாளர் ஜி.கிருஷ்ணமூர்த்தி இணங்கியுள்ளதாக நிர்வாகத்துக்கான பாராளுமன்ற ஆணையாளருக்கும் கடிதம்மூலம் அறிவித்துள்ளனர்.


## விளம்பரப் பகுதி

உங்களுக்கு ஓர் அரிய சந்தர்ப்பம்
+
எப்பேர்ப்பட்ட வியாதியாயினும் சரி உடனே என்னை சந்தியுங்கள்



**K. சிவசுப்பிரமணியம்**
**M.I.H. Ind. S.M.P.**

எவ்வளவு நாள்பட்ட வியாதியானாலும் சரி. காலதாமதம் செய்யாமல் கீழ்கண்ட வியாதிகளுக்கு நேரில் கண்டு ஆலோசியுங்கள். நேரில் வர முடியாது போனால் கடிதம் மூலம் தெரிவித்துக் கொள்ளுங்கள்.

ஆஸ்மா, க்ஷயம், இளைப்பு, பீனிசம், தலைவலி, மலேரியா, கண்டமாலை, சொறி, சிரங்கு, பாண்டு, ரோகை, காக்கை வலிப்பு, வாதம், நீரிழிவு, மூலரோகங்கள், இருதய நோய்கள், இடுப்புவலி, நெஞ்சு எரிவு, குடல்வாய்வு, நரம்புத் தளர்ச்சி, வீரியக் குறைவு, இரத்தமின்மை, சொப்பன ஸ்கலிதம், பெண்களுக்கு ஏற்படும் சூதக வாய்வு, மாசம் முன், பின் காணுதல், சூதகவலி, பிள்ளை இல்லாமலிருத்தல் மற்றும் குழந்தைகளுக்கு ஏற்படும் சகல வியாதிகளுக்கும் உத்தரவாத சிகிச்சை அளிக்கப்படும்.

வார நாட்களில் காலை 9 மணி முதல் மாலை 6 மணி வரையிலும் விடுமுறை தினங்களில் காலை 9 மணி முதல் பகல் 12 மணி வரை வைத்தியரை சந்திக்கலாம்.

**முருகானந்தா வைத்தியசாலை**

No. G/02, கொழும்பு மத்திய சுப்பர் மார்க்கெட், (நிலமாடி) மீன்கடை மேல், கொழும்பு - 11.

---

**றெறாசோ ஷிப்ஸ்**
(TERRAZZO CHIPS)
★ கலர்பவுடர் (Pigments) (Holland, Germany)
★ வெள்ளை சீமெந்து (Asano)
ரூபா 9/- க்கு மேல்

**றம்சன்ஸ்**
443, பழைய சோனகத் தெரு,
கொழும்பு - 12.
தொலைபேசி - 431511, 434411

---



33 வருடமாக நற்பெயரைத் தன்னகத்தே கொண்டுள்ளது எமது நிறுவனம். வாடிக்கையாளர்களிடம் அவர்களது குறைகளைக் கண்ட மாத்திரமே எடுத்துக்கூறி அவர்களின் நம்பிக்கைக்குப் பாத்திரமாகவே செயல்படுகிறோம்.

**மலையாள மாந்திரீகம்**

எந்த மாதக் கடைசியிலும் கொழும்பில் ஸ்ரீ துர்க்கை அம்மன் பூஜையில் கலந்து நிவர்த்தி பெறலாம். காலை 09 மணி முதல் மாலை 6 மணி வரை.

தொடர்புகளுக்கு:-
P.K.SAMY ASSOCIATE (PVT) LTD.
ஸ்ரீ துர்கா தேவி ஆலயம் (மாந்திரீக பிரிவு)
உலக மாந்திரீக ஜோதிட சக்கரவர்த்தி
பி.கே. சாமி (J.D.G.A.N.)JP
NO.162, MAY FIELD ROAD
KOTAHENA, COLOMBO-13
தொலைபேசி வரிசைகள்:
342463-344831-344832-431137-07841571
பக்ஸ் இல- 342464
பேஜர் சென்டர் இல- 588407
தொடர்பு கொண்டு இல- 972
இனைக் கேட்கவும்.

வெளிநாட்டில் உள்ளவர்கள்
COMPUTER INTERNET.NO.....
E/MAIL/SAMY 1.2 @ SLT.LK,
WWW LGO SLT.LK.

நேரில் சந்திக்க-
காலை 9 முதல் 12 வரை
மாலை 3 முதல் 6.30 வரை
அப்பாயின்ட்மெண்ட் பெற்று வரவும்.
வெள்ளிக்கிழமை விடுமுறை.

---

**ரிஷி அஜமாமிச லேகியம்**
(முஸ்லிம் முறைப்படி தயாரிக்கப்பட்டது)



இளமையின் விளைவுகளை அறியாமல் தவறு செய்ததினால் ஏற்படும் இடுப்பு வலி, அசதி, இரத்தக் கொதிப்பு, உஷ்ணம், ஊறல், இருதயத் துடிப்பு, பசியின்மை, திரேக வரட்சி, தூக்கமின்மை, நெஞ்சு நோவு, துடிப்பு, முதுகு வலி, வயிற்று நோவு, உடம்பு, கால் கை வலி, நாட்பட்ட வாய்வு, மறதி, மயக்கம், மூளை பலவீனம், நரம்பு பலவீனம் முதலிய சகல வியாதிகளையும் தீர்த்து, திரேக வலிமையையும் தேஜஸ்சையும் கொடுக்கும். ஒரே பாட்டிலில் குணம் அறியலாம்.

விலை ரூபாய் 225/=,125/=
தங்க பஸ்பம் கலந்தது 1025/=
வெள்ளி பஸ்பம் கலந்தது 925=

**ஞான சுந்தர வைத்தியசாலை**
187, செட்டியார் தெரு,
கொழும்பு 11,
போன்: 421398

---

தலைநகரில் பிரபல நிறுவனம் ஒன்றிற்கு எழுதுவினைஞர்கள் தேவைப்படுகிறார்கள்.
கணக்கியல் அறிவு அவசியம்.
மும்மொழியாற்றல் கவனிக்கப்படும். முன்னனுபவம் அவசியமில்லை. இருபாலாரும் விண்ணப்பிக்கலாம்
C.A.D-2
C/O - THINAMURASU
P.O. BOX - 1772
COLOMBO.
(Advt)

---

**காண்டம்**

முனிவர் அருளிய ஏடுகளில் அமைந்த காண்டம் எனும் நாடி ஜோதிடத்தில் உங்கள் பலன்களை

**ரிஷி. S.மணி**

மூலம் அறிய வாருங்கள்
வெளிநாட்டிலுள்ளவர்களும் தொலைபேசி மூலம் தொடர்பு கொண்டு பார்க்கலாம்.

சந்திரன்
144 2/1, காலிவீதி, வெள்ளவத்தை,
கொழும்பு-06.
T.P: 586218, 078-63611
Fax: 503030

---

**BRIGHT SPOKEN ENGLISH**
(தபால் மூலம் கல்வி)

ஆங்கிலம் பேச, எழுத, வாசிக்க மிகச் சிறந்த பாடநூல்களுடன் கூடிய பாடத்திட்டம். விபரங்களுக்கு முத்திரை ஒட்டிய தபாலுறையுடன் தொடர்பு கொள்க.

**BRIGHT BOOK CENTRE (PVT) LTD.**
S-27, FIRST FLOOR, P.O.BOX- 162
COLOMBO CENTRAL SUPER MARKET COMPLEX
COLOMBO-11. T.P. : 434770


---

**பிறந்தநாள் வாழ்த்து**

**செல்வி வர்ஷினி**
—27.02.97—



திருகோணமலையை சேர்ந்த ஈசன் (கனடா) உதயா தம்பதியின் செல்வப் புதல்வி வர்ஷினி தனது 1வது பிறந்த தினத்தை 27.02.97ல் இல-3 கோணேசபுரம், உவர்மலையில் உள்ள தனது இல்லத்தில் மிகச் சிறப்பாக கொண்டாடுகிறார்.

இவரை அம்மா, கனடாவில் இருக்கும் அப்பா, பெரியமாமா (குமார்) மற்றும் மாமாமார், அப்பப்பா, அம்மம்மா, அன்ரிமார், மாமா, அத்தை (பிரான்ஸ்), மாமா, அத்தை (டென்மார்க்), மச்சாள் (கதலின்), திருகோணமலை அப்பப்பா, அப்பம்மா, அம்மப்பா, அம்மம்மா, மாமாமார், அத்தைமார், தம்பிமார், தங்கைமார், அத்தான் சஞ்சித், சித்தப்பாமார் ஆகியோர் திருமலை பத்திரகாளி அம்பாள் அருளுடன் பல்லாண்டு காலம் வாழ வாழ்த்துகின்றார்கள்.



படிப்பகம்

www.padippakam.com

# தரைப்பாதை திறப்பும் புலிகளின் தள நிலவரமும்

## எக்ஸ்ரே ரிப்போர்ட்

வவுனியா-மன்னார் தரைப்பாதை படையினரால் திறக்கப்பட்டுள்ளது.

'ஒப்பரேஷன் எடிபல' இராணுவ நடவடிக்கையை தேர்தல் பிரசாரத்திற்காக பயன்படுத்தப்போவதில்லை என்று பிரதி பாதுகாப்பு அமைச்சர் தெரிவித்திருந்தார்.

தெற்கில் நடைபெறும் தேர்தல் பிரசாரக் கூட்டங்களில் ஜனாதிபதி ஆற்றும் உரைகள் பிரதி பாதுகாப்பு அமைச்சரின் கூற்றுக்கு நேர்மாறாக இருக்கிறது.

வவுனியா-மன்னார் தரைப்பாதை திறப்பைச் சுட்டிக்காட்டி, யுத்தத்தில் அரசாங்கம் விரைவில் வெற்றிபெறும் என்று வாக்காளர்களுக்கு வாக்குறுதி வழங்கிவருகிறார் ஜனாதிபதி.

**கடந்த ஜனாதிபதித் தேர்தலிலும், பொதுத் தேர்தலிலும் புலிகளுடன் பேச வேண்டிய அவசியத்தையும், புலிகள் தரப்பு நியாயத்தையும் தேர்தல் பிரசாரக் கூட்டங்களில் அடுக்கடுக்கான வாதங்களுடன் முன்வைத்தவர் இன்றைய ஜனாதிபதி.**

**இம்முறை புலிகளுடன் போர் நடத்துவதில் அரசாங்கம் பெற்றுள்ள பெறுபேறுகளை விளக்கிப் பிரசாரம் செய்து வருகிறார்.**

கடந்த இரு தேர்தல்களிலும் சரி, இம்முறை நடைபெறும் உள்ளூராட்சி தேர்தல்களிலும் சரி, பொதுஜன முன்னணிக்கும், அதன் தலைவியார் சந்திரிக்காவுக்கும் தேர்தல் பிரசார ஆயுதங்களை புலிகள்தான் வழங்கிக் கொண்டிருக்கிறார்கள். அந்த ஆயுதங்களின் உதவியுடன் பொது ஜன முன்னணி தன் எதிரிகளை ஒரு கை பார்த்துக் கொண்டிருக்கிறது.

இனப்பிரச்சனைக்கு புலிகள் இல்லாமல் தீர்வு காணமுடியும் என்று அரசாங்கம் சொல்லிக் கொண்டிருக்கிறது. ஆனால், இனப்பிரச்சனைத் தீர்வில் மட்டுமல்லாமல், தென்னிலங்கை அரசியல் மாற்றங்களுக்கும் முக்கிய பங்காளிகளாக புலிகள் மாறியுள்ளார்கள் என்பதுதான் நிலவரம்.

பேச்சுவார்த்தை மேசைக்கு புலிகளை அழைக்கத் தேவையில்லை என்பது வீறாப்பான பேச்சாக ஒலிக்கிறது. அதேவேளையில் தேர்தலில் வெற்றிபெற ஆளும் தரப்பும், எதிர்த்தரப்பும் புலிகளின் பெயரை பிரசார மேடைக்கு இழுத்தேயாக வேண்டும்.

எனவே-புலிகள் வடக்கு-கிழக்கு விவகாரத்தில் மட்டுமல்லாமல், நாடு தழுவிய ரீதியில் தீர்க்கமான பாத்திரம் வகிக்கும் ஒரு அமைப்பாகவே உள்ளனர்.

**தென்னிலங்கையில் உள்ள ஒவ்வொரு அரசியல் தலைவர்களும் தெரிந்தோ தெரியாமலோ புலிகளின் தலைவர் பிரபாகரனின் நடவடிக்கைகளால் பலன் அடைந்துள்ளனர்.**

அரசியலில் தனக்கு கடும் சவாலாக விளங்கியிருக்கக்கூடிய காமினி போன்ற அரசியல் தலைவர்களை ஒழித்துக் கட்டியதற்காகப் புலிகளுக்கு ஜனாதிபதி சந்திரிக்காகூட நன்றி சொல்ல வேண்டியவராகிறார்.

கடந்த ஜனாதிபதித் தேர்தலில் காமினி கொல்லப்படவேண்டும் என்றோ, கொல்லப்படுவார் என்றோ ஜனாதிபதி சந்திரிகா எதிர்பார்த்திருக்க மாட்டார். அவ்வாறு விரும்பியிருக்கவும் மாட்டார். ஆனால், ஆயுத முனையில் அல்லாமல் அரசியல் ரீதியில் காமினியின் கழுத்தை இறுக்கப் புலிகளின் உதவியை நாடியது அரசாங்கம்.

**யாழ் நூலக எரிப்புக்கு விசாரணைக் கமிஷன் வேண்டும் என்று புலிகள் கேட்டனர். புலிகள் எத்தனையோ கோரிக்கைகள் முன்வைத்தும்கூட குறிப்பிட்ட கோரிக்கைதான் அரசாங்கத்திற்கு இனிப்பாக இருந்தது.**

வானொலியிலும், தொலைக் காட்சிகளிலும் புலிகளின் கோரிக்கை தொடர்பாக முக்கியத்துவம் கொடுத்து செய்திகள் வெளியாகின. விசாரணைக்கமிஷன் அமைக்கப்படும் என்றும் அறிவிக்கப்பட்டது.

அரச வானொலியும், தொலைக்காட்சியும், அரச பத்திரிகைகளும் புலிகளைப் போராளிகள் என்று குறிப்பிட்டே செய்திகளை வெளியிட்டுக் கொண்டிருந்தன.

கடந்த பாராளுமன்றத் தேர்தல், ஜனாதிபதித் தேர்தல் இரண்டிலும் பொது ஜன முன்னணியின் தேர்தல் வியூகம் இதுதான்; ஐக்கிய தேசியக் கட்சியுடன் அரசியல் போர். புலிகளுடன் சமாதானம். எதிரிக்கு எதிரி நண்பன் என்று புலிகளுடன் கைகோர்த்துக் கொண்டது பொது ஜன முன்னணி.

ஆனால் இம்முறை ஐ.தே.கட்சியும் எதிரி. புலிகளும் எதிரி. இரண்டு எதிரிகளை ஒன்றாக சந்திக்கிறது பொது ஜன முன்னணி.

இதில் பொது ஜன முன்னணிக்கு உள்ள சாதகம் என்னவென்றால், புலிகளுக்கு விழும் அடி ஐக்கிய தேசியக் கட்சியையும் அரசியல் ரீதியில் சேதப்படுத்த உதவும் என்பதுதான்.

புலிகள்மீது தாம் பெறும் வெற்றி என்று அரசாங்கம் பிரசாரப்படுத்தும் ஒவ்வொரு நடவடிக்கையும் ஐ.தே.கட்சிக்கும் பாதகமான அம்சம்தான் .

போரில் அரசாங்கம் வெல்ல முடியாது என்று ஐக்கிய தேசியக் கட்சி செய்யும் பிரசாரம் பலவீனமான குரலில்தான் கேட்கிறது.

ஏனெனில், 'புலிகளுடன் போர் வேண்டாம் சமாதானமே தேவை' என்று சொல்லக்கூடிய துணிச்சல் ஐ.தே.கட்சியிடம் இல்லை.

கடந்த பாராளுமன்ற தேர்தலிலும், ஜனாதிபதித் தேர்தலிலும் பொது ஜன முன்னணியும், சந்திரிக்காவும் "புலிகளுடன் பேச்சு மூலம் சமாதானத்தை கொண்டுவர முடியும்" என்றார்கள். "போருக்கு ஐ.தே.கட்சிதான் காரணம். பேசித்தீர்க்க முடியாத ஆட்சிதான் காரணம்" என்றும் குற்றம் சாட்டினார்கள்.

**பொது ஜன முன்னணியும், ஐ.தே.கட்சியும் எதிரும் புதிருமான நிலைப்பாட்டை முன்வைத்தன. "சமாதானமா? போரா?" எனவே இரண்டில் ஒன்றைத் தெரிவு செய்யக்கூடிய தேர்தல்களமாக அவை அமைந்தன.**

ஆனால் இம்முறை ஒரே குழப்பம். பொது ஜன முன்னணி போர் மூலம் சமாதானம் என்கிறது. ஐக்கிய தேசியக் கட்சி என்ன சொல்கிறது? அக் கட்சியும் வேறு வார்த்தைப் பிரயோகங்கள் மூலம் அதனைத்தான் சொல்கிறது.

போரே வேண்டாம், பேசித் தீர்க்கலாம் என்று ஐ.தே.கட்சி சொல்லவில்லை. பொது ஜன முன்னணி அரசுக்கு போரை சரியாக நடத்தத் தெரியவில்லை என்பதுதான் ஐ.தே.கட்சியின் குற்றச்சாட்டு.

## வவுனியா-மன்னார் தரைப்பாதை பிரசார தந்திர ரீதியில் உபயோகம். வவுனியா-கிளிநொச்சி தரைப்பாதை போர்த்தந்திர ரீதியில் சாதகம்.

புலிகளுடன் பேசியோ, அல்லது போர் மூலமோ யுத்தத்துக்கு முடிவு கட்ட வேண்டும். அதனைச் செய்ய பொது ஜன முன்னணிக்கு திறமை போதாது என்பதே ஐ.தே.கட்சியின் விமர்சன விளாசல்.

**இந்நிலையில் வாக்காளர்கள் முன்பாக இம்முறை உள்ள கேள்வி இதுதான்;**

**போரை நடத்துவதில் திறமையான அரசாங்கம் எது? ஐ.தே.கட்சி அரசாங்கமா? இன்றுள்ள பொ.ஜ.முன்னணி அரசாங்கமா?**

வாக்காளரின் பதில் நிச்சயமாக ஐ.தே. கட்சிக்கு சாதகமாக அமையாது. ஏனெனில் கடந்த 17 வருட காலமாக ஐக்கிய தேசியக் கட்சியால் யாழ்ப்பாணத்தைக் கைப்பற்ற முடியவில்லை, நாம் கைப்பற்றியிருக்கிறோம் என்று பொ.ஜ.முன்னணி சொல்வது எடுபடும்.

"கிழக்கை நாம் கட்டுப்பாட்டில் வைத்திருந்தோம். பொ.ஜ.முன்னணி அரசாங்கம் புலிகளிடம் பறிகொடுத்துவிட்டது" என்று ஐ.தே. கட்சி சொல்லுகிறது.

ஆனால், தென்பகுதியில் உள்ள சாதாரண சிங்கள வாக்காளருக்கு புலிகள் என்றதும் உடனே நினைவுக்கு வருவது புலிகளின் கோட்டை யாழ்ப்பாணம் என்பதுதான். இந்த மனப்போக்கு ஐ.தே.கட்சியின் கிழக்கு போர் நிலை பற்றிய பிரசாரத்தை எடுபடாமல் செய்துவிடுகிறது.

உள்ளூராட்சித் தேர்தல் நேரத்தில் வடக்கில் இராணுவ நடவடிக்கையை ஆரம்பித்தது மூலம் கச்சிதமான பிரசார வியூகம் வகுத்திருக்கிறது அரசாங்கம்.

**தென்னிலங்கையில் இருந்து வடபகுதியைக் கற்பனை செய்யும் ஒரு மனிதனுக்கு அங்கு ஒவ்வொரு அங்குல மண்ணிலும் புலிகள் நிலை கொண்டிருப்பது போலவே தெரியும்.**

எனவே-வடபகுதியில் வவுனியா முதல் மன்னார் வரை தரைப்பாதை திறக்கப்பட்டது என்று செய்தி தென்னிலங்கையில் அரசாங்கத்தின் திறமைக்கு சான்றான விஷயமாகவே கருதப்படும்.

அதற்கேற்ப தனது கட்டுப்பாட்டில் உள்ள வெகு ஜன தொடர்பு சாதனங்களைத் திறம்படப் பயன்படுத்தி பிரசாரம் செய்கிறது அரசாங்கம்.

ஆக, நாம் முன்னரே பெயர் சூட்டியபடி **'ஒப்பரேஷன் எடிபல'** இராணுவ நடவடிக்கைக்கு **'ஒப்பரேஷன் எலெக்ஷன் றூட்'** என்பதுதான் பொருத்தமான பெயர்.

உண்மையில் இந்த தரைப்பாதை திறப்பு நடவடிக்கை பற்றிய செய்திகளில் மிகைப்படுத்தல்கள் நிறையவே உள்ளன.

வவுனியாவில் இருந்து மும்முனைகள் வழியாக படையினர் முன்னேறத் தொடங்கிய போது இரண்டு கேள்விகள் எழுந்தன.

படையினரின் நோக்கம் என்ன?

வவுனியா கிளிநொச்சி இடையேயான தரைப்பாதையைத் திறப்பதா? அல்லது வவுனியா மன்னார் இடையேயான தரைப்பாதையைத் திறப்பதா என்பதே அந்த இரண்டு கேள்விகளாகும்.

போர்த்தந்திர ரீதியில் நோக்கினால் வவுனியா-கிளிநொச்சி இடையேயான தரைப்பாதைத் திறப்புத்தான் படையினருக்கு நன்கு உபயோகமானது.

ஆனால் அதில் பல சிக்கல்கள் சிரமங்களை படையினர் எதிர்நோக்க வேண்டிய நிலை ஏற்படும்.

**வவுனியா-கிளிநொச்சி தரைப்பாதையை திறப்பதற்கான நடவடிக்கையில் ஈடுபட வேண்டுமானால் புலிகளின் பிரதான தளப் பகுதிகள் ஊடாக செல்ல வேண்டியிருக்கும்.**

குறிப்பாக காடும், காடுசார்ந்த பகுதிகளில் போரிட வேண்டியிருக்கும். உள்ளே இழுத்து தாக்கக்கூடிய வாய்ப்புக்கள் புலிகளுக்குத்தான் கைகொடுக்கும்.

சுருக்கமாக சொல்வதானால் புலிகளின் தளப்பகுதியை ஊடறுத்துக் கொண்டுதான் கிளிநொச்சிக்கான தரைப்பாதையைப் திறக்க வேண்டும்.

அதனால்தான் அப்பாதைத் திறப்புக்கு



முயற்சிக்காமல் மன்னார் வரையான தரைப்பாதையை திறந்துள்ளனர் படையினர்.

**வவுனியாவில் இருந்து மன்னார் வரையான தூரம் 75 கிலோ மீட்டர்.**

**வவுனியாவில் இருந்து கிளிநொச்சி வரையான தூரம் 70 கிலோ மீட்டர்.**

அதாவது படையினர் தற்போது திறந்துள்ள தரைப்பாதைத் தூரத்தைவிட, கிளிநொச்சி தரைப்பாதைக்கான தூரம் கிட்டத்தட்ட 5 கிலோ மீட்டர் குறைவானது.

அவ்வாறு இருந்தும் அந்தப் பாதையைத் திறக்காமல் மன்னார் வரையான பாதையைத் திறந்தது ஏன்?

காரணம் தெளிவானது? வவுனியாவில் இருந்து கிளிநொச்சிக்கு செல்லும் பாதையை விட, மன்னாருக்குச் செல்லும் பாதை படையினருக்கு சுலபமானது.

வழக்கமாக இப் பாதையில் சன நடமாட்டம் குறைவாகவே இருக்கும். புலிகளின் பிரதான தளங்களும் இப் பாதையில் கிடையாது. பாதையின் இரு மருங்கிலும் இடைக்கிடையே காட்டுப்பகுதிகளும், பெரு வெளிகளும் இருக்கின்றன. குறிப்பாக உயிலங்குளம் பகுதி வயல்வெளிகளைக் கொண்டது. அவ் வெளிகள் ஊடாக புலிகள் முன்னேறி வந்து தாக்குவது கடினம். அது தவிர படையினர் ஷெல் தாக்குதல்களை நடத்துவது மூலம் வெளிப்பகுதிகள் ஊடாக புலிகள் வராமல் தடுத்தும் கொண்டிருக்கலாம்.

குடிசன அடர்த்தி குறைவான பகுதியாகவே வவுனியா முதல் மன்னார் வரையான பாதை காணப்படுகிறது. மன்னார் இராணுவ முகாமில் இருந்தும், தள்ளாடி இராணுவ முகாமில் இருந்தும் படையினர் இப் பாதையின் குறிப்பிட்ட சில தூரம்வரை முன்னேறி விட்டு திரும்பிச் செல்வதும் வழக்கம்.

**வவுனியா-மன்னார் தரைப்பாதையை கைப்பற்றுவதால் ஏற்படும் உபயோகத்தைவிட, அதனை தக்கவைக்கச் செலவிடும் சக்திதான் பெரிதாக இருக்கும் என்பதால் கடந்த காலத்தில் இப்பாதை ஊடான இராணுவ நடவடிக்கைகளில் கவனம் செலுத்தப்படவில்லை.**

**ஆனால், வவுனியா-கிளிநொச்சி தரைப்பாதை அப்படியானதல்ல. அப்பாதையை திறப்பது மூலம் யாழ்ப்பாணக் குடாநாட்டுக்கான தரைப் பாதை திறப்பும் சாத்தியமாகும். வடபகுதியின் பிரதான தள முகாமான ஆனையிறவு முகாம் போன்றவற்றுக்கு தரை மூலமான விநியோகமும் மேற்கொள்ள முடியும்.**

மன்னார் தரைப்பாதையுடன் ஒப்பிடும் போது, கிளிநொச்சி தரைப்பாதை போர்த்தந்திர ரீதியில் படையினருக்கு பல மடங்கு சாதகமானது.

ஆனால் குறைந்தது 25 ஆயிரம் படையினராவது கிளிநொச்சி வரையான தரைப்பாதைத் திறப்புக்கு தேவைப்படுவர். அது தவிர, புலிகளின் பொறிக்குள் எங்காவது எக்கச்சக்கமாக மாட்டிக் கொண்டு பாரிய இழப்பை படைத்தரப்புச் சந்தித்தால், அரசாங்கத்தின் பாடு தர்மசங்கடமாகிவிடும்.

உள்ளூராட்சித் தேர்தல் வெற்றியைக்கூட அது பாதித்துவிடும்.

உண்மையில் ஒப்பரேஷன் எடிபலவின் நோக்கம் மினித் தேர்தலுக்கான வெற்றிப் பாதையைத் திறப்பதுதான். போரில் வெல்வதற்கான பாதையைத் திறப்பது என்பதல்ல.

**எனவேதான் போர்த்தந்திர ரீதியில் சாதகமானதும், அதேசமயம் கடினமானதுமான தரைப்பாதைத் திறப்பில் ஈடுபட அரசாங்கம் துணியவில்லை.**

**போர்த்தந்திரரீதியில் அதிக சாதகமில்லாவிட்டாலும் புலிகளின் பொறிக்குள் உடனடியாக சிக்கிக் கொள்ளக்கூடிய ரிஸ்க் இல்லாததும், பிரசார தந்திரரீதியில் உபயோகமானது மான தரைப்பாதைத் திறப்புத்தான் தற்போது நடைபெற்றுள்ளது.**

இதேவேளை வவுனியா பூவரசங்குளத்தில் இருந்து முன்னேறிய படையினர் மடுறோட்டில் முகாம் அமைத்துள்ளனர். அங்கிருந்து தொடர்ந்து வடக்குநோக்கி முன்னேறினால் புலிகளின் வன்னிக் காட்டுப்பகுதி தளங்களுக்குள் சிக்கிக் கொள்ள நேரிடலாம்.

மடுறோட்டில் தற்போது படையினர் நிலைகொண்டுள்ள பகுதி அடர்ந்த காட்டுப்புறம் சார்ந்த பகுதியல்ல. அங்கிருந்து படையினர் முன்னேறி மேலும் உள்ளே சென்றால்தான் புலிகள் தாக்குதலில் ஈடுபடுவர்.

எனினும் மடுறோட்டில் நிலைகொண்டுள்ள படையினர் புலிகளின் தள முகாம்களை நோக்கி கடுமையான ஷெல் தாக்குதல்களை மேற்கொள்ளுகின்றனர்.

இதன் காரணமாக பெரும் தொகையான மக்கள் இடம்பெயர்ந்து சென்று அவதிப்பட்டுக் கொண்டிருக்கின்றனர். இரவு நேரமானால் மடுறோட்டில் இருந்து படையினர் ஷெல் மழை பொழிவதாகச் செய்திகள் தெரிவிக்கின்றன.

இதேவேளை மடுறோட்டில் படையினர் நிலை கொண்டிருப்பதாலும், மன்னார் தரைப்பாதை படையினர் வசம் வந்திருப்பதாலும் வில்பத்துக் காட்டுக்குள் புலிகளின் அணிகள் சிக்கிக் கொண்டிருக்கலாம் என்று ஒரு தகவல் வெளியாகியுள்ளது.

ஆனால் மன்னார் தரைப்பாதை படையினரின் கட்டுப்பாட்டில் வந்திருந்தாலும் கூட, அங்கு அங்குலத்திற்கு அங்குலம் படையினர் நிற்க முடியாது. அதனால் குறிப்பிட்ட சில பாதைகள் ஊடாக இரவோடு இரவாக ஊடறுத்துக் கொண்டு வில்பத்துக் காட்டில் உள்ள புலிகள் வன்னித் தளத்துக்கு செல்ல முடியும். அதுதவிர கடற்பாறை மூலமாகவும் புலிகள் தமது போக்குவரத்தை நடத்திக் கொண்டிருப்பர்.

புத்தளம், கற்பிட்டி ஆகியவற்றுக்கு வடபகுதியாக உள்ளதே வில்பத்துக் காடாகும். அக்காடு சார்ந்த பகுதியில் கடலோரத்தில் கடற்புலிகளின் தளம் ஒன்று இருக்கிறது. அந்த இடத்தின் பெயர் குதிரைமலை முனை. கடற்படையினருக்கும் அது தெரியும்.

**நாரதர்**

ஆனாலும் கடற்புலிகளின் நடமாட்டத்தை ஒரு வரையறைக்குமேல் கட்டுப்படுத்த முடியாத நிலைதான் இருக்கிறது.

அதனால் வில்பத்துக் காட்டுப் பகுதியை இனிமேல் புலிகள் பயன்படுத்த முடியாது என்றோ, அங்கிருந்து தமது வன்னித் தளத்துக்கு புலிகள் சென்று வர முடியாது என்றோ கருத இடமில்லை.

ஒப்பரேஷன் எடிபல நடவடிக்கைக்கு புலிகள் பலத்த எதிர்ப்புக் காட்டவில்லை. படையினர் நிலைகொண்ட பின்னர் உளவுத் தகவல்கள் மூலம் விபரங்களைத் திரட்டிக் கொண்டு திடீர் தாக்குதல்களில் ஈடுபடப் புலிகள் திட்டமிட்டிருக்கலாம்.

எப்படியிருந்தபோதும் படையினர் தமது தளப்பகுதியை முற்றுகையிடும் நிலைக்கு துணிந்துவிடாமல் இருக்கக் கூடிய தாக்குதல்களை நடத்தியாக வேண்டிய கட்டாயம் புலிகளுக்கு ஏற்பட்டுள்ளது. அதனால் இரு தரப்புக்கும் பாரிய இழப்புக்களை உருவாக்கும் விதமான கள நிலவரம் வடக்கில் விரியப்போகிறது. அதுமட்டும்தான் உண்மை.

## அதிரடி அய்யாத்துரை



திருவான மலையின் தங்கமான பிரநிதி பாடசாலை அதிபர் ஒருவர் மீது பாய்ந்து கிழித்துப் போட்டாராம். விஷயம் வேறொன்றுமில்லை. ஜனநாயகக் கட்சியின் வெகுஜனப் பிரதிநிதியை பாடசாலை விழாவுக்கு அந்த அதிபர் அழைத்ததுதான் தங்கமானவருக்கு கடுப்பாகிவிட்டதாம். நான் எத்தனைகால அனுபவஸ்தன். சபையில் பத்தாம் இடத்திலுள்ள சீனியர். நான் இருக்க அவரை ஏன் கூப்பிட்டனீங்கள்?" என்று துள்ளிப்போட்டாராம். போனிலும் துள்ளி, பின்னர் நேரிலும் அழைத்துத் துள்ளினாராம். துள்ளுவது இருக்கட்டும், தனது பகுதிக்கு செய்யவேண்டியதை உவர் செய்தால் உற்சாகமாக வரவேற்போம் அல்லோ. மருந்து செய்யாமல் விருந்துக்கு வரமட்டும் முந்தலாமோ எண்டு கேட்கினம் விஷயம் தெரிஞ்சவை.

**வி**சாரணைச் செய்தி ஒன்று சமீபத்தில் பத்திரிகைகள் வாயிலாகப் படித்தனான். முன்னாள் பச்சை சீருடை அதிகாரிகள் யாழில் பலியானது பற்றிய ஆராய்வுதான் அது. எதையும் தீர ஆராய்வது சிறந்ததுதான். ஆனால் ஒரு உறுத்தலான விஷயம் யாதெனில், "ரெண்டு எழுத்தார்தான் சம்பவத்துக்கு காரணமெனில் செய்தவர்களுக்கு தலைவர் பரிசு கொடுத்திருப்பார்" எண்டு சொல்லப்பட்டிருக்கிறது. ரெண்டு எழுத்தாரின் தலைவர் பரிசு கொடுத்ததும், அது படத்தோடு ரெண்டு எழுத்தாரின் பத்திரிகைகளில் வந்ததும், அரச ஆங்கிலப் பத்திரிகையில் அப்போது அது பிரசுரமானதும் எப்படித் தெரியாமல் போச்சுது? தீர ஆராயும்போது இப்படியான விஷயங்கள் தெரியாமல் போகலாமோ?

**வ**டக்கில் எழுபத்தைந்து சதவீதமான பகுதி கட்டுப்பாட்டில் வந்துவிட்டதாக அதிகாரமுள்ள சக்தியானவர் தெற்கில் பேசியிருக்கிறார். வருட இறுதிக்குள் சண்டை முடிஞ்சுவிடும் எண்டும் சொல்லியிருக்கிறார். 25 சதவீத இடத்தை பிடிக்க இன்னும் ஒன்பது மாசம் தேவை எண்டால் ரெண்டு எழுத்தார் பயங்கரமான பலத்தில் இருப்பதாகவும் அர்த்தப்படுமல்லோ! வடபகுதி பூகோளப்படி நிலப்பரப்பில் பெரும் பகுதி ரெண்டு எழுத்தாரிடம்தான் இருக்குது. அப்படியெண்டால் எத்தனை வருசம் தேவைப்படும்? எனக்கென்னவோ சண்டை முடியுறமாதிரித் தெரியேல்லை.

**பி**றநாட்டுக் கப்பலைப் பிடிச்ச செய்தி எவ்வளவு பரபரப்பாகச் சொல்லப்பட்டது தெரியும்தானே! பிறகு சத்தமே இல்லாமல் விவகாரம் அடங்கிப் போச்சு. ரெண்டு எழுத்தார் எண்டு தாக்கப்பட்டு பலியான மீனவர்கள் பற்றியும் யாரும் மூச்சுவிடேல்லை. (முரசு மட்டும்தான் செய்தி வெளியிட்டது) நல்ல காலம், பலியான மீனவர்கள் ரெண்டு எழுத்தாரின் கட்டுப்பாட்டுப் பகுதியைச் சேர்ந்தவையாக இருந்திருந்தால் அந்தப் பட்டியலில்தான் சேர்ந்திருப்பினமோ?

**யா**ழில் 'வெள்ளைக்கொலர்' அதிகாரிகளின் தொல்லைகள் தாங்க முடியேல்லையாம். சொல்லிச் சொல்லி அடிச்சுச் சுருட்டுகினமாம். நிவாரணப் பணத்திலும் அமோக சுருட்டலாம். நல்லூர் பிரதேசத்தை சேர்ந்த சபையில் ஏகப்பட்ட சுருட்டல் நடந்திருக்குதாம். "ரெண்டு எழுத்தார் இருந்தபோது உழைக்க விட்டவையோ? இனியாவது கையில் நாலு காசு பார்க்க வேண்டாமோ?" எண்டு வாய்த்துடுக்கான அதிகாரிகள் பகிரங்கமாகவே பேசிக்கொள்ளுகினமாம். தகவல் ரெண்டு எழுத்துத் தலைவருக்கும் எட்டியிருப்பதாக ஒரு பட்சி சொல்லுகுது. எங்கை போய் முடியுதோ?

**வ**டக்கில் உள்ள பச்சை உடையினருக்கு தமிழ் கற்றுக் கொடுப்பதில் அதிகாரிகள் சிலர் ஆர்வம் காட்டுகிறார்களாம். சனத்துடன் சச்சரவு இல்லாமல் சகஜநிலை தோன்ற அது உதவும் எண்டது அவர்களின் அபிப்பிராயமாம். தே மதுர தமிழோசை உலகமெல்லாம் பரவாவிட்டாலும் படையினர்வரை பரவும் போல கிடக்கு!

**மி**னித் தேர்தலில் வாக்குகளை சேதப்படுத்தினாலும், இரத்தினபுரி சம்பவத்தால் பச்சைக் கட்சித் தலைவருக்கு ஒரு பக்கம் இலாபமும் இருக்கிறதாம். கட்சிக்குள் அவருடன் முரண்டுபிடிக்கக் கூடிய பழைய பெருச்சாளிகளை ஓரம்கட்டி முடிய சந்தர்ப்பம் கிடைத்திருக்கிறதாம்.

**ப**ச்சை அணியின் வெகுஜனப் பிரதிநிதி வீட்டில் பச்சை சீருடை முன்னாள் பொறுப்பாளர் இருந்தாராம். அதனைப் பெரிய செய்தியாக அரச செய்தி நிறுவனங்கள் வெளியிட்டன. எனக்கெண்டா ஒண்டும் விளங்கேல்லை. பச்சை அணிப் பிரதிநிதிகளுடன் முன்னாள், இந்நாள் அதிகாரிகள் நட்பாக இருப்பது தப்போ? ரெண்டு எழுத்தாருடன் நட்பாக இருப்பது தப்போ? ரெண்டு எழுத்தாருடன் நட்புக் கொண்டதை கண்டுபிடிச்ச மாதிரியல்லோ செய்திபோடுகினம். இதுதானுங்கோ அரசியல்.

நகைச்சுவையான கடுகுக் கவிதை ஒன்று

**பேருந்து**

"மக்களுக்காக
மக்களால் நடத்தப்படும்
மலிவு விலை
மசாஜ் கிளப்"



படிப்பகம்

www.padippakam.com

118

# அல்பிரட் துரையப்பா முதல் காமினி வரை

அரசியல் தொடர் **அற்புதன்** எழுதுவது

### விஷமப் பிரசாரம்

நல்லூர் கந்தசாமி கோவில் அகதி முகாமுக்குள் பிரபாகரன் இருப்பதாக இலங்கை அரசு தனது வானொலி மூலம் அறிவித்தது.

நல்லூர் கந்தசாமி கோவில் அகதிமுகாமுக்குள் இந்தியப் படை புகுந்து தேடுதல் நடத்தினாலோ அல்லது அங்கிருந்து மக்களைத் தாக்கினாலோ இலங்கை அரசுக்கு அது மகிழ்ச்சியான செய்திதான்.

இந்தியப்படை-புலிகள் மோதல் ஆரம்பித்தபின்னர் இந்தியப் படையினர் மேற்கொண்ட ஈவிரக்கமற்ற நடவடிக்கைகள் இலங்கை அரசுக்கு திருப்தியளித்தன.

அவ்வாறான ஒரு சந்தர்ப்பத்தைத்தான் ஜே.ஆர். எதிர்பார்த்திருந்தார். தனது இராஜதந்திரம் பலிக்கத் தொடங்கிவிட்டதென்பதை அறிந்தபோது ஜே.ஆர்.மனம் மகிழ்ச்சியில் திளைத்திருக்கும்.

# வானொலியில் 'அன்பு வழி'

நல்லூர் கந்தசாமிக் கோவிலுக்குள் பிரபாகரன் இருப்பதாக செய்யப்பட்ட பிரசாரம் விஷமத்தனமானது. தங்களுக்கு ஆபத்தை ஏற்படுத்தக்கூடியது என்பதை செய்தி கேட்ட அகதிகள் உணர்ந்தனர்.

அதனால் சில குடும்பங்கள் அகதி முகாமைவிட்டு பயத்தோடு வெளியேறிச் சென்றன.

என்ன நடந்தாலும் சரி, இங்குதான் இருப்பது. இந்தியப் படை வந்தால் அவர்களிடம் தங்கள் நிலையை எடுத்துச் சொல்வது என்று நினைத்துக்கொண்டு பெரும்பாலான அகதிகள் நல்லூர் கந்தசாமி கோவிலுக்குள்ளேயே அடைந்து கிடந்தனர்.

### புலிகளுக்கு வேண்டுகோள்

1987 அக்டோபர் 28ல் இந்தியப் படையினர் நல்லூர் பகுதிக்குள் புகுந்தனர்.

நல்லூரில் வைத்து அவர்கள்மீது பாரிய தாக்குதல் எதுவும் நடக்கவில்லை. ஆயினும் புலிகள் இயக்க உறுப்பினர்கள் சிலர் ரொக்கட் லோஞ்சர்களுடன் நல்லூர் கந்தசாமி கோவில் அருகே ஒன்றுதிரண்டனர்.

அவர்களைக் கண்டதும் அகதிகள் பயந்துபோனார்கள். நல்லூர் கோவில் பகுதியில் இருந்து அவர்கள் இந்தியப்படைமீது தாக்கினால் தங்கள் கதி என்னாகும் என்று நினைத்து பீதியடைந்தார்கள்.

பெண்களும், தாய்மாரும் முகாமிலிருந்த முதியவர்களும் கோவில் வீதியில் நின்ற புலிகள் இயக்க உறுப்பினர்களிடம் சென்று மன்றாடினார்கள்.

"தயவு செய்து இவ்விடத்தை விட்டுப் போய் விடுங்கள்" என்று கெஞ்சினார்கள்.

முகாமிலிருந்த சிலர் புலிகள்மீது ஆத்திரப்பட்டுக் கதைக்கவும் செய்தனர்.

"நீங்கள் எதற்காகச் சண்டை செய்கிறீர்கள். அவர்களை உங்களால் எதிர்த்து போரிட முடியுமா? வீணாக சண்டைபிடித்து நீங்களும் அழிந்து எங்களையும் அழிக்காதீர்கள். இந்த இடத்தைவிட்டுப் போங்கோ" என்று சத்தம் போட்டனர்.

அவர்களின் பேச்சைக் கேட்ட புலிகள் இயக்க உறுப்பினர்களுக்கு கோபம் வந்துவிட்டது.

"இங்கிருந்துதான் தாக்கவேண்டும் என்று மேலிருந்து உத்தரவு வந்தால் தாக்குவோம். நாங்கள் உங்களுக்காக சண்டை செய்கிறோம். நீங்கள் உங்களைப் பற்றி மட்டுமே யோசிக்கிறீர்கள்" என்று சொல்லிவிட்டு அங்கேயே நின்று கொண்டனர்.

வேறு சில அகதிகள் அவர்களைச் சமாதானப்படுத்த ஆரம்பித்தனர். தங்களிடம் இருந்த உணவில் ஒரு பகுதியை அவர்களுக்குக் கொடுத்துச் சாப்பிடச் சொன்னார்கள்.

புலிகள் இயக்க உறுப்பினர்களும் கடும் பசியுடன்தான் இருந்தனர். முகாம்களை விட்டு வெளியேறி அலைந்து திரிந்த களைப்பு ஒருபுறமும், மக்கள் தம் வீடுகளை விட்டு வெளியேறியதால் எங்கும் சென்று உணவு பெறமுடியாமலும் அவர்கள் பசியுடன்தான் திரிந்தனர்.

அகதிகள் கொடுத்த உணவையும் மற்றும் பிஸ்கெட் போன்றவற்றையும் சாப்பிட்டுவிட்டு கொஞ்ச நேரம் இருந்து பார்த்துவிட்டு புலிகள் இயக்க உறுப்பினர்கள் சென்றுவிட்டனர்.

அவர்கள் அவ்விடத்தைவிட்டு சென்ற பின்னர்தான் அகதிகள் பலர் நிம்மதிப் பெருமூச்சு விட்டுக்கொண்டனர்.

யாழ்ப்பாணத்தை **ஆண்ட** கடைசித் தமிழ் **மன்னன்** சங்கிலியனின் தலைநகரம் நல்லூர்.

நல்லூரைக் கைப்பற்றப் புகுந்த இந்தியப் படைக்கு கல்வியங்காட்டுச் சந்தியில் மட்டும் புலிகள் எதிர்ப்பைக் காட்டினார்கள். பின்னர் பாரிய எதிர்ப்புகள் எதுவும் இல்லாமலேயே நல்லூர் பகுதியை கைப்பற்றிக்கொண்டது இந்தியப்படை.

புலிகள் பாரிய எதிர்ப்பைக் காட்டாவிட்டாலும் இந்தியப் படையினர் வீதிகளிலும், வீடுகளிலும் கண்ணில் பட்டவர்களைச் சுட்டுக்கொன்றுதான் சென்றனர்.

குறுக்குப் பாதைகள் வழியாக முன்னேறிய இந்தியப் படையினர் அப்பகுதிகளில் காணப்பட்ட சில பொதுமக்களை பணயக் கைதிகளாகப் பிடித்துக் கொண்டனர்.

பாதையைக் காட்டுமாறு அவர்களை முன்னால் நடக்கச் சொல்வார்கள். அப்படிச் சென்று கொண்டிருக்கும்போது புலிகள் தாக்கினால் முன்னால் சென்று கொண்டிருப்பவர்களின் கதி அதோ கதிதான்.

புலிகள் தாக்காத சந்தர்ப்பங்களிலும் பாதை காட்டிச் சென்ற பொதுமக்கள் சிலரை இந்தியப் படையினர் சுட்டுவிட்டுப் போனார்கள். தமக்குப் பாதை காட்டியவர்களுக்கு இந்தியப் படை காட்டிய நன்றி அதுதான் (?!)

### கூர்க்காப் படை

யாழ் நகரை கைப்பற்றிய இந்தியப் படைப் பிரிவில் அதிகமாக இருந்தவர்கள் கூர்க்காப் படையினர். சப்பை மூக்கு. குள்ளமாக இருப்பார்கள். எல்லோரும் கத்தி வைத்திருப்பார்கள். மீசை வைத்திருக்கமாட்டார்கள்.

மிக மோசமானவர்கள் என்று யாழ்ப்பாணத்தில் பின்னர் பெயர் எடுத்தவர்களும் கூர்க்காப் படையினர்தான்.

யாழ்ப்பாணத்தை கைப்பற்றுவதற்கு முன்பாக கொழும்புத்துறை மணியம் தோட்டப் பகுதிக்குள் இந்தியப் படையினரால் ஆறு பெண்கள் பாலியல் வல்லுறவுக்கு உள்ளாக்கப் பட்டனர்.

பெண்கள் இருக்கும் வீடுகளுக்குள் சென்று கதவை மூடிக் கொள்வார்கள். சோதனை என்ற பெயரில் உடைகளைக் களையச் சொல்வார்கள். மறுத்தால் அடி உதை. மிரட்டல்.

தாயின் முன்னிலையில் மகள்; சில இடங்களில் தாய், மகள் இருவருமே பாலியல் வல்லுறவுக்கு உள்ளாக்கப்பட்ட கொடுமைகளும் நடைபெற்றன.

# வீதிகளில் மனித வேட்டை



கோடுபோட்ட சட்டையுடன் கையில் வோக்கியுடன் நிற்பவர்தான் நிரஞ்சன். இவர்தான் தற்போது கனடாவில் சிறைத்தண்டனை பெற்றுள்ளார். கொக்குவில் மோதலில் எடுக்கப்பட்ட படம் இது.

**சிலர் வெட்கத்தில் வெளியே சொல்லவில்லை. பாலியல் வல்லுறவை கற்பழிப்பு என்று அழைக்கும் பழமையான வார்த்தை காரணமாக, தமக்கு நடக்கும் கோரங்களை வெளியே சொல்லப் பெண்கள் தயங்கினார்கள். ஏனெனில் பாலியல் வல்லுறவுக்கு உள்ளான பெண் 'கற்பிழந்த ஒருத்தியாக தான் கருதப்படுவேனோ' என்று பயந்து போகிறாள்.**

**அதனால்தான் இந்தியப்படைக்கால பாலியல் வல்லுறவு பலாத்காரச் சம்பவங்கள் பல வெளியே தெரியாமல் மறைக்கப்பட்டன.**

கூர்க்காப் படையினர் குள்ளமாக இருப்பார்கள் என்று சொன்னேன் அல்லவா. கூர்க்காப் படையினர் யாழ்ப்பாணம் வந்த பின்னர் சற்றுக் குள்ளமாக இருப்போரை 'கூர்க்காஸ்' என்று கிண்டலாக அழைக்கும் பழக்கமும் யாழ்ப்பாணத்தில் பரவலாகியிருந்தது.

யாழ்ப்பாணத்தை கைப்பற்றிய சூட்டோடு சூடாக கூர்க்காப் படையினர் மூர்க்கத்தனமாக நடந்து கொண்டனர். பெண்களைக் கண்டால் சேட்டைகள் செய்வதும் அதிகமாக இருந்தது. பின்னர் அந்த மூர்க்கம் சற்றுக் குறைந்திருந்தது.

யாழ்ப்பாணத்தில் முக்கியமான சந்திகளில் உள்ள வீடுகளில் இந்தியப் படையினர் முகாம்களை அமைத்திருந்தனர்.

கிட்டத்தட்ட இரண்டு கிலோமீற்றருக்கு ஒரு இராணுவ முகாம் என்ற ரீதியில் முகாம்கள் அமைக்கப்பட்டன.

முகாம் ஒன்று புலிகளால் தாக்கப்பட்டால், அப்பகுதியை சுற்றிவளைக்கக்கூடிய முறையில் முகாம்கள் அமைக்கப்பட்டன.

ஒவ்வொரு முகாம்களுக்கு இடையிலும் அடிக்கடி ரோந்து செல்வது இந்தியப் படையினரின் வழக்கமாக இருந்தது. எஸ்.எல்.ஆர். துப்பாக்கிகளைத் தோளில் சுமந்தபடி முகாம்களுக்கிடையே கால் நடையாகவே ரோந்தில் ஈடுபடுவர்.

### 'அன்புவழி'

இந்தியப் படையினர் யாழ்ப்பாணத்துக்கு வந்த பின்னர் அவர்களுக்காகவும், யாழ்ப்பாண மக்களுக்காகவும் இந்திய வானொலியில் விசேஷ ஒலிபரப்புக்கள் ஆரம்பிக்கப்பட்டன.

அதில் ஒரு நிகழ்ச்சியின் பெயர் 'அன்புவழி'. மதியம் 1.30 மணியளவில் அந்த நிகழ்ச்சி ஒலிபரப்பாகும்.

'அன்புவழி' என்ற பெயரில் நிகழ்ச்சி நடத்திய இந்திய அரசு, தனது படையினரை அன்புவழியில் செல்லுமாறு போதிக்கத் தவறிவிட்டது.

இலங்கையில் அமைதி திரும்பும்வரை இந்தியப்படை திரும்பமாட்டாது என்று வானொலியில் அடிக்கடி சொல்லப்பட்டது.

புலிகள் இயக்க உறுப்பினர்கள் சரணடைந்தால் மன்னிப்பு வழங்கப்படும் என்றும் வானொலியில் அறிவிக்கப்பட்டது.

அகதி முகாம்களுக்குள் புலிகள் இயக்கத்தினர் பதுங்கி இருக்கலாம் என்று சந்தேகம் இந்தியப் படையினருக்கு இருந்தது.

'அகதிகள், யார் புலிகள் யார்?' என்று கண்டறிவதுதான் கடினம் என்பதை படை அதிகாரிகள் உணர்ந்தனர்.

அதனால் அகதி முகாம்களுக்குள் தமக்குத் தகவல் கொடுப்போரை உருவாக்கத் திட்டமிட்டனர்.

கொக்குவில் இந்துக்கல்லூரி அகதி முகாம்மீது நடைபெற்ற ஷெல் தாக்குதல்கள், அதனால் பலியானவர்கள் பற்றி முன்னர் விபரிக்கப்பட்டுவிட்டது.

# தூதர் திக்ஷித் சொன்ன விளக்கம்

அந்த முகாமில் நடைபெற்ற மற்றொரு சம்பவம் இது:

முகாம் பொறுப்பாளர்களில் ஒருவரான ஆனந்த் பாலகிட்ணர் மெலிந்த உடல்வாகு கொண்டவர். ஈழநாடு பத்திரிகை ஆசிரியர் குழுவைச் சேர்ந்தவர்.

முகாம் தேவைகள் தொடர்பாக இந்தியப் படை அதிகாரிகளுடன் பேசச் செல்பவர்களில் ஆனந்த் பாலகிட்ணரும் ஒருவர்.

கொக்குவில் இந்துக் கல்லூரி முகாமுக்குள் புலிகள் இருப்பதாக படையினர் சொல்லிக் கொண்டிருந்தார்கள். முகாமுக்குள் டாக்டர், எஞ்சினியர், ஆசிரியர்கள் என்று பலர் இருந்தனர். அவர்கள் அனைவரையும் கூட்டிச் சென்று இந்தியப் படை அதிகாரிக்கு அறிமுகம் செய்தால் ஒரு கௌரவமாக இருக்கும்.

கௌரவமானவர்கள் தங்கியிருக்கும் முகாம் என்று கருதி இந்தியப்படையினரின் சந்தேகப் பார்வைகள், தொல்லைகள் என்பவற்றில் இருந்து தப்பிக்கலாம் என்று நினைத்தார் ஆனந்த் பாலகிட்ணர்.

"இவர் டாக்டர்!, இவர் எஞ்சினியர், இவர் ஹெட் மாஸ்டர்" என்று ஒவ்வொருத்தராக அறிமுகம் செய்யப்பட்டனர்.

அறிமுகம் செய்து முடிந்ததும் அந்த இந்தியப்படை அதிகாரி ஆனந்த் பாலகிட்ணரிடம் கேட்ட கேள்வி இது:

"இவர்கள் எல்லோரும் டாக்டர்கள். எஞ்சினியர்கள் என்றால் நான் என்ன ஒரு விசரன் பைத்தியக்காரன் அல்லது முட்டாள் என்றோ நினைக்கிறீர்?"

ஆனந்த் பாலகிட்ணருக்கு பதில் சொல்ல நா எழவில்லை.

### "சுட்டுவிடுவேன்"

பாலகிட்ணர் பத்திரிகையாளர் என்று தெரிந்ததும் அடுத்த கேள்வியை வீசினார் அந்த அதிகாரி.

"நீர் ஒரு பத்திரிகையாளர். புலிகள் எங்கே இருக்கிறார்கள் என்று உமக்குத் தெரியும். அந்தத் தகவலை எங்களுக்குத் தாரும். உங்களுக்கு நான் உதவுகிறேன்".

"நான் ஒரு பத்திரிகையாளன்தான். ஆனால் புலிகளைப் பற்றிய செய்திகளை எழுதுவதால் அவர்கள் எங்கே இருக்கிறார்கள் என்பதெல்லாம் எனக்குத் தெரியும் என்று நினைக்க வேண்டாம்". என்றார் பத்திரிகையாளர்.

அதிகாரிக்கு வந்தது கோபம். தன் முன்பாக நின்ற அந்த மெல்லிய உருவத்தைப் பார்த்தார். "ஏய் பன்றி, உன்னைச் சுட்டுக் கொல்ல என்னால் முடியும். ஒரு தோட்டாவை உனக்காக வீணாக்க விரும்பவில்லை!" என்று சீறினார் அதிகாரி.

**சாதாரண படை வீரர்கள் மட்டுமல்ல, படை அதிகாரிகள் பலர்கூட யாருக்கும் மதிப்பளிக்காமல் அதிகாரத் தோரணையோடும் திமிரோடும் நடந்து கொண்டனர் என்பதற்கு மேற்கண்ட சம்பவமும் ஒரு சிறு உதாரணம்.**

**ஏனெனில் கீழ்மட்ட படைவீரர்கள் மட்டுமே கட்டுப்பாடு இல்லாமல் நடந்துகொண்டனர், இந்தியப் படை அதிகாரிகள் எல்லோரும் நல்லவர்கள் என்று ஒரு அபிப்பிராயம் பொது மக்கள் சிலரிடம் இருந்தது.**

**பொதுமக்களுடன் சுமுகமாகவும், நட்பாகவும் நடந்துகொண்ட அதிகாரிகளும் படைவீரர்களும் இல்லாமல் இல்லை. ஆனால் அவர்கள் விதிவிலக்குகள் என்றே சொல்ல வேண்டும்.**

இந்தியப் படைக்குள் இருந்த தமிழ் பேசும் படையினர், குறிப்பாக தமிழ் நாட்டுக்காரர்கள் அனுதாபத்தோடு நடந்து கொண்டனர்.

அதனால் அவர்கள் புலிகளுக்கும் உதவக்கூடும் என்ற சந்தேகத்தில் மேலதிகாரிகளால் நோக்கப்பட்டனர். குறைந்த அளவிலேயே பணிகளில் ஈடுபடுத்தப்பட்டனர்.

### திக்ஷித் உடன் சந்திப்பு

உரும்பிராயில் இந்தியப்படையின் வேட்டையில் இருந்து தப்பிய சிவப்பிரகாசம் என்பவர் தொடர்பாக முன்னர் குறிப்பிடப்பட்டது அல்லவா.

சிவப்பிரகாசம் உரும்பிராயில் இருந்து சாவகச்சேரிக்கு தப்பி ஓடி அங்கிருந்து ஒரு வாகனத்தில் கேரதீவுக்குச் சென்றார். பின்னர் ஒரு வள்ளம் மூலமாக சங்குப்பிட்டிக்குச் சென்றார்.

சிவப்பிரகாசத்தின் கெட்ட நேரம், சங்குப்பிட்டியிலும் இந்தியப்படை ஹெலிமூலம் குண்டுத்தாக்குதல் நடத்தியது. ஒரு கொங்கிறீட் கட்டிடத்தின் கீழ் மறைந்து கொண்டார்.

ஒரு லொறியில் இருந்த டீசல், மண்ணெண்ணை பீப்பாய்கள் ஹெலி தாக்குதலில் பற்றி எரிவதை சிவப்பிரகாசம் கண்டார்.

எப்படியோ உயிர்தப்பி கொழும்பு வந்து சேர்ந்தார் சிவப்பிரகாசம். இந்தியப் படையிடம் இருந்து உயிர்தப்பிய ஒருவர் கொழும்பு வந்து சேர்ந்தார் என்ற தகவல் ஒரு நிருபருக்கு எட்டியது.

அந்த நிருபர் வேறு யாருமல்ல. இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனத்தில் பணி புரிந்தவரும், 'சன்டே ரைம்ஸ்', நிருபராகவும் இருந்த ரிச்சர்ட் டீ சொய்ஸாதான் அவர். பின்னர் இனம்தெரியாதோரால் கொல்லப்பட்டவரும் அவர்தான். (பிரேமதாசாவின் உத்தரவுப்படி ரிச்சர்ட் டீ சொய்ஸா கொல்லப் பட்டதாக ஒரு கருத்து நிலவுகிறது.)

ரிச்சர்ட் டீ சொய்ஸா சிவப்பிரகாசத்தை பேட்டி கண்டு, நவம்பர் முதலாம் திகதி (1987) சன்டே ரைம்ஸ் பத்திரிகையில் வெளியிட்டார். தனது சொந்தப் பெயரை வெளியிட வேண்டாமென்று சிவப்பிரகாசம் கேட்டுக் கொண்டதால், வேறு பெயரில் அவரது பயங்கர அனுபவம் வெளியிடப்பட்டது.

இந்தியப் படையின் நடவடிக்கையை வெளியே தெரிவிக்க அப்பேட்டியும் உதவியது.

சிவப்பிரகாசமும் மேலும் எட்டுப்பேரும் சேர்ந்து இந்தியத் தூதர் திக்ஷித்தைச் சந்திக்க அனுமதி கேட்டனர். அனுமதி கிடைத்தது.

நவம்பர் 2ம் திகதி இந்தியத்தூதரை அவர்கள் சென்று சந்தித்தனர். காலம் சென்ற நீதியரசர் மாணிக்கவாசகர், சட்டத்தரணி காராளசிங்கம் ஆகியோரும் அக்குழுவில் இருந்தனர்.

அனைவரையும் புன்னகையோடு வரவேற்றார் திக்ஷித். உரும்பிராயில் நடைபெற்ற படுகொலைகள், அழிவுகள், அனர்த்தங்கள், சங்குப்பிட்டியில் நடைபெற்ற சம்பவங்கள் அனைத்தையும் விபரித்து ஆங்கிலத்தில் 'டைப்' செய்து திக்ஷித்திடம் கையளித்தார் சிவப்பிரகாசம்.

சிவப்பிரகாசத்தின் முகவரியைப் பார்த்தார் திக்ஷித். அதில் உரும்பிராய் என்று இருந்தது. உடனே திக்ஷித் வாயில் இருந்து வந்த வார்த்தைகள் இவை;

"ஓ.. உரும்பிராயா? அது அல்லவா?"

### 'ஏன் ஓடினார்கள்?'

பின்னர் சிவப்பிரகாசத்தின் கடிதத்தில் விபரிக்கப்பட்டிருந்த சம்பவங்களைப் படித்துப் பார்த்தார் திக்ஷித்.

நாலு பெண்கள் சுட்டுக் கொல்லப்பட்ட சம்பவம் ஒன்றை குறிப்பிட்டுக் காட்டிய திக்ஷித் கேட்டது இது: "இந்தப் பெண்கள் ஏன் ஓடினார்கள்? இவர்கள் வீட்டில் இளம் பையன்கள் இருந்துவிட்டு தப்பிச் சென்றிருக்கலாம். ஓடியதால்தான் சூடு நடந்திருக்கலாம்" என்றார் திக்ஷித்.

அப்போது குறுக்கிட்ட சிவப்பிரகாசம்; "பலியானவர்களில் 93 வயது மூதாட்டியும், 65 வயது விதவையும் அடக்கம். அவர்கள் ஓடவில்லை. வீட்டுக்குள் புகுந்துதான் சுட்டனர்" என்று விளக்கினார்.

ஆனாலும் திக்ஷித் அதையெல்லாம் பெரிய விஷயமாக எடுத்துக் கொண்டதாகக் காட்டிக் கொள்ளவில்லை.

"விரைவில் போர் நிறுத்தம் வரும்" என்று சொன்னார். "விசாரித்துப் பார்க்கிறேன்" என்றார்.

அப்பாவி மக்கள் படுகொலை தொடர்பாக இந்தியத் தூதராக இருந்த திக்ஷித்கூட எந்தளவுக்கு அனுதாபம் கொண்டிருந்தார் என்பது மேற்படி சந்திப்பில் ஓரளவு ஊகிக்கக்கூடியதாக இருக்கிறதல்லவா.

### புலிகள் நடமாட்டம்

புலிகள் இயக்க முக்கிய தலைவர்கள் யாழ் குடாநாட்டைவிட்டு பாதுகாப்பான வன்னிக்காட்டுப் பகுதிக்கு பின்வாங்கிச் சென்றிருந்தனர்.

யாழ் குடாநாட்டை விட்டு புலிகளின் தலைவர்களையும், முக்கிய படையணிகளையும் வெளியேறவிடாமல் தடுக்க இந்தியப் படையினர் முயன்றனர்.

ஆயினும் பிரபாகரன் உட்பட புலிகள் இயக்க முக்கிய பிரமுகர்களும், படையணிகளும் தப்பிச் செல்வதை இந்தியப் படையினரால் தடுத்து நிறுத்த முடியவில்லை.

கடல் வழியாகத் தப்பிச் செல்லலாம் என்று கருதி நூற்றுக்கணக்கான படகுகள் குண்டுவீசி அழிக்கப்பட்டன.

கடற்கரையோரங்களில் படையினர் காவல் புரிந்தனர்.

ஆனால் இந்தியப்படை விமானங்களும், ஹெலிகளும் குண்டுவீசி அழித்தது புலிகளின் படகுகளையல்ல. மீனவர்களின் படகுகளைத்தான்.

ஆயினும் புலிகளின் சில படைப் பிரிவுகள் யாழ்நகருக்குள் மாட்டிக் கொண்டன.

தலைமையோடு உடனடியாக அவர்களால் தொடர்பு கொள்ளவும் முடியவில்லை. யாழ் சுண்டிக்குளிப் பகுதியில் புலிகளின் முக்கிய தளபதி ஒருவரும் அவரது குழுவினரும் ஒரு வீட்டில் தங்கி இருப்பதாக இந்தியப் படையினருக்கு இரகசியத் தகவல் கிடைத்தது.

"யார் அந்தத் தளபதி?" என்று கேட்டார்கள். பெயரைக் கேட்டதும் உடனடியாகப் புறப்பட்டது இந்தியப் படை.

(தொடர்ந்து வரும்)



படிப்பகம்

www.padippakam.com

# முடியாமல் தொடரும் இயலாத யுத்தம்!

## நேரடிப் பேச்சில் அக்கறை வெளியிடும் கதிர்காமர்

அலசுவது- இராஜதந்திரி



வெளிநாட்டமைச்சர் லக்ஷ்மன் கதிர்காமர் தமிழீழ விடுதலைப் புலிகள் குறித்து நீண்ட நாட்களின் பின்னர் கடந்தவாரம் மீண்டும் குறிப்பிட்டிருந்தார்.

இரத்தினபுரி எம்.பி. நாலந்த எல்லாவல கொலையையடுத்து, அவரைக் கொன்றவர்களெனச் சந்தேகிக்கப்படும் இரத்தினபுரி மாவட்ட ஐ.தே.க. எம்.பி. சுசந்த புஞ்சிநிலமே, முன்னாள் இரத்தினபுரி மேயர் மஹிந்த ரத்னதிலக்க ஆகியோரைத் தேடும் படலம் இடம்பெற்றது.

அப்போது எல்.ரி.ரி.ஈ. தலைவர் வே. பிரபாகரனைவிட மிகவும் வேண்டப்படுபவர்களாக ஐ.தே.க. எம்.பி. புஞ்சிநிலமேயும், அவரது சகா மஹிந்த ரத்னதிலக்கவும் விளங்கியிருந்தனர்.

நாடு முழுவதும் இந்த இரு கொலைச்சந்தேக நபர்களைத் தேடி வலைவிரிக்கப்பட்டது. பொலிஸாரில் ஒருசாரார் ஒத்துழைப்பு வழங்குகிறார்களில்லை எனத் தெரிவித்து இரத்தினபுரி பொலிஸ் நிலையத்தைச் சேர்ந்த சுமார் 60 பொலிஸ்காரர்கள் தண்டனை இடமாற்றம்கூடப்பெற்றார்கள்.

**நாட்டிலுள்ள பொலிஸ் நிலையங்கள் அனைத்தையும் உஷார்ப்படுத்தி, இலட்சக்கணக்கில் சன்மானத் தொகையை வழங்குவதாக அரசு அறிவித்தபோதிலும் தேடப்பட்ட கொலைச்சந்தேக நபர்களை மடக்கிப் பிடிக்க முடியாமல் போயிருந்தது.**

இந்நிலையில் இந்த நாட்டின் பலம் மிக்க ஆயுதப்போராட்ட சக்தியாகவிளங்கும் எல்.ரி.ரி.ஈ. அமைப்பின் தலைவர் வே.பிரபாகரனை பிடித்துவிட முயற்சிக்கும் எண்ணத்தை ஆட்சியாளர்கள் கைவிட்டுவிட வேண்டுமெனவும் நாட்டு மக்களில் சிலசாரார் பேசிக்கொண்டதையும் கேட்கமுடிந்தது.

பொலிஸ் தேடுதல்கள் பலனளிக்காது போகவே சந்தேக நபர்களான சுசந்த புஞ்சிநிலமேயும், மஹிந்த ரத்னதிலக்கவும் தாமாகவே வந்து கொழும்பு மாஜிஸ்திரேட் முன்பாக சரணடைந்தனர்.

இச் சரணாகதியையடுத்து மீண்டும் புலிகளின் பக்கம் அரசின் கவனம் திரும்பியுள்ளது. அதனையே ராய்ட்டர் செய்திச் சேவைக்கு அமைச்சர் லக்ஷ்மன் கதிர்காமர் வழங்கிய புலிகள் பற்றிய பேட்டியும் வெளிக்காட்டியுள்ளது.

அமைச்சர் கதிர்காமர் எல்.ரி.ரி.ஈ. பற்றிக் கூறியுள்ள அதேசமயம் வடக்கே வன்னிப் பகுதியில் எல்.ரி.ரி.ஈ. உறுப்பினர்களுக்கு வலைவிரிக்கும் வேலையை இராணுவம் மேற்கொண்டுள்ளது.

எடிபல (துணிச்சல் படை) இராணுவ நடவடிக்கையில் ஈடுபட்டுள்ள துருப்புகள், தாம் வசப்படுத்தியுள்ள இடங்களில் நிலைகொள்ள ஆரம்பித்துள்ளன.

புலிகளும், மறுபுறத்தே நீண்டதொரு கெரில்லா யுத்தத்தை எதிர்நோக்கித் தாம் தயாராக இருப்பதாகக் கூறியுள்ளனர்.

இருசாராரினதும் வன்னி யுத்த முஸ்தீபு முனைப்படைந்துள்ள இத் தருணத்திலேயே புலிகளுடனான பேச்சுப்பற்றி லக்ஷ்மன் கதிர்காமர் குறிப்பிட்டுள்ளார்.

தமிழீழ விடுதலைப் புலிகளுடன் நேரடியாகப் பேசுவதற்கு அரசு தயாராக இருக்கின்றது எனத் தெரிவித்துள்ள அதேவேளை, மூன்றாந்தரப்பு மத்தியஸ்தமொன்று இடம்பெறுவதை ஏற்கமுடியாது என அமைச்சர் கதிர்காமர் தெரிவித்துள்ளார்.

மூன்றாம் தரப்பு மத்தியஸ்தமொன்று ஏற்படுமானால் அந்நியத்தலையீட்டுக்கு அது வழியமைக்குமென்பதே அமைச்சர் கதிர்காமரின் கருத்தாக இருந்தது.

அரசியல் தீர்வொன்று தொடர்பாக அந்நியத் தலையீட்டை ஆட்சியாளர்கள் நிராகரிக்கிறார்கள். ஆனால் இராணுவ நடவடிக்கைகளுக்கென அந்நிய ஆலோசனைகளையும், அந்நிய ஆயுதத் தளபாடங்களையும் வாங்குவதில் அரசாங்கம் ஆர்வமாக இருக்கின்றது.

எது எப்படியிருந்தபோதிலும் இந்த நாட்டின் இனப்பிரச்சினைக்கு நிரந்தரமான தீர்வொன்று உறுதியான முறையில் ஏற்படுவதற்கு புலிகளுடனான பேச்சுக்கள் இன்றியமையாதவையாகும்.

இதனை அரசாங்கமும், அதன் முக்கிய உறுப்பினரான அமைச்சர் கதிர்காமரும் கூட நன்குணர்ந்துள்ளனர். இதன் காரணமாகவே புலிகளுடன் நேரடிப் பேச்சை நடத்துவதில் அரசு அக்கறை கொண்டுள்ளதென திரு. கதிர்காமர் கூறியுள்ளார்.

**ஆயினும் நடுநிலையான மத்தியஸ்தமொன்றை ஏற்பதை ஒரு கௌரவப்பிரச்சினையாகவே ஆட்சியாளர்கள் கருதுவதைக் காணமுடிகின்றது.**

இலங்கையில் புலிகளைப் பயங்கரவாதிகள் என்று அரசாங்கம் கூறுகின்றது. அரசாங்கத்தை இன ஒடுக்குமுறையாளர்கள் என்று புலிகள் கூறுகின்றனர். இருதரப்பினருமே தத்தமது பிரசார இயந்திரங்கள் மூலமாக ஒருவரையொருவர் கடுமையாகச் சாடி வருகின்றனர்.

ஆனால் இலங்கையில் இனப்பிரச்சினை நிலவுவதையும், அப்பிரச்சினை தொடர்பாக அரசாங்கமும், தமிழீழ விடுதலைப் புலிகளும் எதிரும் புதிருமாக நிற்பதை மட்டுமே வெளி உலகம் அறிந்துவைத்துள்ளது.

ஏற்கனவே தமிழீழ விடுதலைப்புலிகளுடன் பேச்சுக்கள் நடத்தப்பட்டனவென்றும் அப்பேச்சுக்களை புலிகளே ஒருதலைப்பட்சமாக முறித்துக்கொண்டனர் எனவும் திரு. கதிர்காமர் தெரிவித்துள்ளார்.

புலிகளுக்கும் கொழும்பிலுள்ள ஆட்சியாளர்களுக்குமிடையே இடம்பெற்ற சந்திப்பை எவ்விதத்திலும் ஓர் ஆரோக்கியமான அரசியல் அணுகுமுறை என்று குறிப்பிட்டுவிடமுடியாது.

காலஞ்சென்ற ஜனாதிபதி ரணசிங்க பிரேமதாஸா காலத்திலேயே இலங்கை அரசாங்கமொன்றுடன் புலிகள் முதன் முதலாகப் பேச்சுக்களுக்கு முன்வந்தனர்.

ஆனால் அப்பேச்சுக்களில் அரசியல் ரீதியாக எதுவுமே நன்கு ஆராயப்படவில்லை. இதனையடுத்து ஜனாதிபதி சந்திரிகாவின் அரசு புலிகளுடன் பேசுவதற்கு முன்வந்தது.

அப்பேச்சுக்கள் கூட ஓரிரு சுற்றுக்களுடன் இருந்த நிலையில் முறிவடைந்து போர் மூண்டது.

"தமிழீழ விடுதலைப் புலிகளே பேச்சுக்களை ஒரு தலைப்பட்சமாக முறித்துக்கொண்டார்கள்," என்று சந்திரிகா அரசு கூறுகின்றது.

"பேச்சுக்கள் என்று கூறிவந்தார்களே தவிர எதனையும் விரிவாகப்பேசவில்லை; காலதாமதத்தை ஏற்படுத்தி சந்தேகத்துக்கிடமளித்தார்கள். ஆகையால் நாம் மோதலைத் தொடுத்தோம்!" என்று புலிகள் தெரிவித்தனர்.

புலிகளுடன் பேச்சுக்கள் நடத்தப்பட்டதும், பின்னர் அப்பேச்சுக்கள் முறிந்ததும் இறந்தகால நிகழ்வுகள். மோதல்கள் இடம்பெற்று உயிரழிவும் பொருள் அழிவும் ஏற்பட்டுக்கொண்டிருப்பது நிகழ்காலம்.

எனவே இந்த அழிவுகள், அவலங்களை முடிவுக்குக் கொண்டுவந்து சமாதானத்தை ஏற்படுத்த வேண்டியதே எதிர்காலமாக இருக்கவேண்டியுள்ளது.

**பழையவற்றையே அசைபோட்டு, பழைய குரோதங்களையே அலசி ஆராய்வதால் ஆரோக்கியமான அணுகுமுறைகளை ஏற்படுத்திவிட முடியாது.**

நீண்டதொரு போருக்காக ஆயுதப்படையினரும், விடுதலைப் புலிகளும் வன்னி வனாந்தரத்தில் களம் அமைத்துள்ளனர்.

இதுவோர் பயங்கர யுத்தத்துக்கான ஆரம்பநிலையாகவே இருக்கின்றது. இத்தகைய அபாயகரமான நிலையைத் தடுத்து நிறுத்தி அழிவுகள் பெருகுவதைத் தடுப்பது பற்றியே ஆட்சியாளர்கள் சிந்திக்க வேண்டும்.

இந்நிலையில் நீண்ட யுத்தமொன்றைத் தவிர்ப்பதற்கும் புலிகளுடனான பேச்சுக்கள் மிகவும் அவசியமானவையாகின்றன.

உள்ளூராட்சித் தேர்தல் கூட்டங்கள் நாலந்த எல்லாவல மரணம் காரணமாக முடக்கமடைந்திருந்தது. ஆனால் எதிர்வரும் வாரங்களில் பிரசாரங்கள் மீண்டும் சூடுபிடிக்க ஆரம்பிக்கும்.

ஐ.தே.க.வினரை அரசியல் மேடைகளில் சாடும் அதேவேளை, புலிகளை யுத்தகளத்தில் எதிர்கொண்டு இரு வேறு விதத்திலான பிரசாரங்களை ஆட்சியாளர்கள் மேற்கொள்வார்கள்.

எது எவ்வாறான போதிலும் இனப்பிரச்சினைக்கான அரசியல் தீர்வைக் காலந்தள்ளுவதும், புலிகளுடனான பேச்சுக்களைப் புறக்கணிப்பதும் எதிர்வரும் காலங்களை சிக்கல் நிறைந்தவையாகவே மாற்றிவிடும்.

அரசியல், பொருளாதார விடயங்கள் மேலும் சிக்கலடையும்போது பிரச்சினைகளின் தன்மைகள் அவற்றின் ஆரம்பம், முடிவு என்பவற்றை இனங்காணுவது கூட பெரும் சிக்கலாகவே மாறிவிடும்.

இயலாத நிலையிலேயே அரசு யுத்தமொன்றை நடத்திவருகின்றது. இதற்கு கடந்தவாரம் இரத்மலானையில் மேலெழும்போது கீழே தவறி விழுந்த 'அன்டநோவ்-32' ரக விமானத்தின் விபத்தும் ஒரு நல்ல உதாரணமாகும்.


இலங்கை, ரஷ்யாவின் உக்ரேயின் விமானக் கம்பனியிடமிருந்து யுத்தத்துக்காகப்பெற்ற அன்டநோவ் விமானங்களில் ஏறத்தாழ அனைத்துமே நாசமாகியிருப்பதையே அவதானிக்க முடிகின்றது.

எனவே அமைச்சர் கதிர்காமர் குறிப்பிட்டதுபோல வெளிநாட்டு மத்தியஸ்தம் புலிகளுடனான பேச்சுக்களில் தேவையற்றிருக்கலாம்; ஆனால் நேரடிப் பேச்சுக்கள் இருதரப்பினருக்குமிடையே இடம் பெறுவது அவசியமானதாகின்றது.

**இருதரப்புமே தம்மால் இயலாத ஒரு யுத்தத்தை நடத்திக் கொண்டிருப்பதை விட, தீவிரமாக முயற்சித்தால் இயலக்கூடியதான அரசியல் அணுகுமுறைகளையே முன்னெடுப்பதற்கு முன்வரவேண்டும்.**

புதிய பேச்சுவார்த்தைகளுக்கான முயற்சிகளில் இறங்குவதற்கு- விடுதலைப் புலிகளுடன் நேரடியாகப் பேசுவதற்கு அரசு அக்கறையாக இருக்கின்றது, என்று திரு. கதிர்காமர் கூறியிருக்கும் வார்த்தைப் பிரயோகம் ஓர் உந்து சக்தியாகவே அமைய வேண்டும்!

# சர்ச்சை கச்ச தீவு




**செ**ல்வி ஜெயலலிதா தமிழக முதலமைச்சராக இருந்தபோது "கச்ச தீவை மீட்போம் என்று சபதம் செய்தார். இலங்கை கடற்படையினரால் தாங்கள் சுடப்பட்டு வருவதாக தற்போது தமிழக மீனவர்கள் குமுறத் தொடங்கியுள்ளனர். இந் நிலையில் இலங்கையிடம் இருந்து கச்சதீவை மீட்க வேண்டும் என்ற கோஷம் அரசியல் கட்சிகளால் எழுப்பப்பட்டுவருகிறது. தமிழக பத்திரிகைகளும் எழுதத் தொடங்கியுள்ளன.

கச்சதீவு விவகாரம் தமிழ்நாட்டில் சூடு பிடித்தால், இந்திய மத்திய அரசுக்கு அது ஒரு தர்மசங்கடமாகிவிடும். இலங்கை- இந்திய உறவிலும் ஒரு உறுத்தலாக மாறிவிடும்.

இலங்கைக் கடற்படைக்கும் தமிழக மீனவர்களுக்கும் இடையிலான பிணக்குகள் கச்சதீவை மீட்கவேண்டும் என்ற கோஷம் பெரியதாக வியாபிக்கக் காரணமாகக்கூடும்.

**தமிழக சஞ்சிகையான 'ஜுனியர் விகடனில்' கச்சதீவு தொடர்பாக வெளியான கட்டுரை இங்கே தரப்படுகிறது:**

இலங்கைக்கும் இந்தியாவுக்கும் இடையே உள்ள கடல்பகுதியில் தொடர்ந்து நடக்கும் இலங்கை கடற்படையின் அட்டகாசத்துக்கு முடிவுதான் என்ன? தமிழக மீனவர்கள் தங்களது மீன்பிடிக்கும் தொழிலை நடத்த முடியாமல் அச்சமும் பீதியும் கலந்த முகத்துடன் வலைகளை எடுத்து உலர்த்தி வருவது தொடர வேண்டுமா?

'கச்சதீவு' என்ற ஒரு சிறுநிலப் பகுதியை எல்லையாகப் பாவித்து இலங்கை அரசு நடத்தும் அராஜகத்துக்கு முற்றுப் புள்ளி வைப்பது யார்? இந்தியாவின் தென்கோடியில் உள்ள கிழக்குக் கடற்கரையில் உள்ள மீனவ கிராமங்களில் ஏழ்மையும் வறுமையும் தொடர்கதையாகவே இருக்க வேண்டுமா?

1948ம் ஆண்டுக்குப் பிறகு, இலங்கை அரசுக்கு கச்சதீவுமீது ஒரு கண் விழுந்தது. கச்சதீவு மனிதர்கள் வாழாத நிலப்பகுதி தான். ஆண்டுக்கு ஒரு முறை கத்தோலிக்க மதத்தினரின் திருவிழா ஒன்று நடக்கும். தமிழ்நாட்டு மீனவர்கள் தங்கள் வலைகளை உலர்த்துவதற்கும் இந்த நிலப்பகுதி பயன்பட்டது.

இந்தியா, இலங்கை ஆகிய இரண்டு நாடுகளுக்கும் இடையே உள்ள கடல் பகுதியின் நீளம் மிகக் குறைவானது. சர்வ தேசச் சட்டப்படி பன்னிரண்டு மைல்களை எல்லைகளாக வைத்து இரண்டு நாடுகளும் ஒரு கோடு போட்டால், இரண்டு கோடுகளும் எல்லை தாண்டி நிற்கும் நிலைதான்.

1974ம் ஆண்டு அந்த நிலப்பகுதியை இலங்கைக்குத் தந்துவிட இந்திய அரசு முடிவு செய்தது. இந்திரா காந்திதான் அப்போது இந்தியப் பிரதமர். இதற்கான ஒப்பந்த நகல் ஒன்று தயாரானதும் அந்த நகலைத் தமிழக முதல்வர் கலைஞரிடம் காட்டி விவாதிக்கும்படி வெளியுறவுத் துறை அதிகாரிகளைப் பிரதமர் கேட்டுக் கொண்டார்.

அப்போது வெளியுறவுத்துறை செயலாளராக இருந்த கேவல்சிங், கலைஞரை இரண்டுமுறை டெல்லி தமிழ்நாடு இல்லத்தில் சந்தித்தார். இந்த ஒப்பந்தத்தை கலைஞர் முதலில் முற்றிலும் எதிர்த்தார். இதனால் தமிழக மீனவர்களின் நலன் பாதிக்கப்படும் என்ற தனது அச்சத்தைத் தெரிவித்தார். பின்புதான் கச்சதீவில் அந்தோனியார் திருவிழாவைத் தொடர்ந்து நடத்தும் உரிமையையும் மீனவர்கள் தொன்றுதொட்டு உபயோகிக்கும் உரிமையையும் தொடர வேண்டும் என்ற சட்ட ஷரத்து இணைக்கப்பட்டது.

இந்த ஷரத்துடன் கேவல்சிங் மூன்றாவது முறையாக சென்னையில் தலைமைச் செயலகத்தில் கலைஞரைச் சந்தித்தார். கலைஞருக்கு தமிழக மீனவர்கள் உரிமையும் கத்தோலிக்க மத்தினரின் உரிமையும் காப்பாற்றப்பட்டதில் மகிழ்ச்சிதான். என்றாலும், கொள்கை அளவில் இந்த ஒப்பந்தத்தை தி.மு.க. எதிர்க்கும் என்பதைப் பிரதமருக்கு கேவல்சிங் மூலம் தெளிவுபடுத்தினார். இந்த ஒப்பந்தம் ஏற்பட்டபோது தமிழகம் முழுவதும் முழு வேலைநிறுத்தம் நடந்தது.

1975ல் இந்தியாவில் நெருக்கடி நிலை பிரகடனம் வந்தது. தி.மு.க.- காங்கிரஸ் உறவில் விரிசல் விழுந்தது. 1976ல் தி.மு.க. அரசு கலைக்கப்பட்டு ஜனாதிபதி ஆட்சி வந்தது. இந்தக் காலகட்டத்தில்தான் கச்சதீவு ஒப்பந்தம் நாடாளுமன்றத்தில் சட்டமானது. அரசியல் சட்டப்படி, மூன்றில் இரண்டு பங்கு சட்டசபைகள் இந்த ஒப்பந்தத்தை ஆதரிக்கவேண்டும். இந்த ஒப்பந்தத்தைப் பற்றிப் பரிசீலிக்க அப்போது தமிழ்நாடு சட்டசபை கிடையாது. காரணம், அது கலைக்கப்பட்டுவிட்டது.

உயிரோடு இருந்த சட்டசபைகள் இந்த சட்ட வடிவுக்கு ஆதரவு தெரிவித்தன. நாடாளுமன்றம் ஏற்றுக்கொண்டது. கச்ச தீவு ஒப்பந்தம் சட்ட வடிவுபெற்றபோது, தமிழக மீனவர்கள் உரிமையைப் பாதுகாக்கும் சட்டப்பகுதியைக் காணவில்லை. இலங்கை அரசின் நிர்ப்பந்தமும் வேண்டுகோளும் இந்திய அரசால் ஏற்றுக்கொள்ளப்பட்டு தமிழக மீனவர்கள் உரிமையைப் பறிகொடுத்தனர்.

அப்போது நாடாளுமன்றத்தில் அங்கம் வகித்த தமிழ்நாடு உறுப்பினர்கள் சர்க்காரியா கமிஷன் பற்றிய அரசியல் ஆராய்ச்சியில் மூழ்கிக் கிடந்தார்கள். ஐந்து நட்சத்திர ஓட்டல்களில் நடந்த விருந்துகளில் பங்கேற்ற மயக்கத்தில், தமிழக மீனவர்கள் உரிமைகளை மறந்துவிட்டார்கள். இதுதான் சரித்திர உண்மை. சரித்திரத்தை மறைத்து விட்டு பிரச்னைகளை அரசியலாக்குவது தான் சங்கடம்!

அண்மையில் இலங்கைக்கு விஜயம் செய்த குஜ்ரால், தமிழக மீனவர் பிரச்னை பற்றி மிகவும் பற்றுள்ளவர் போலக் காணப்பட்டார். கொழும்பு நகரத்தில் பேச்சு வார்த்தைகள் நடந்தன. மரபுக்குப் பிறம்பாக, சந்திரிகாவே இந்திய வெளி உறவு அமைச்சருக்கு விருந்து உபசாரம் செய்தார். தமிழக உரிமையைக் காப்பாற்றவே தான் இலங்கை வந்ததாக குஜ்ரால் தெரிவித்தார். ஆனால், மறுபடியும் ராமேஸ்வரத்தைச் சேர்ந்த முனுசாமி என்ற 21 வயது மீனவர், ஜனவரி 20ம் தேதி இலங்கைக் கடற்படையினரால் சுடப்பட்டார். குஜ்ரால் பேசவில்லை!

பாக் ஜலசந்தி என்பது இந்தியா இலங்கை ஆகிய இரண்டு நாடுகளுக்கும் இடையே உள்ள கடல் பகுதியா அல்லது இலங்கையிலும் தமிழ்நாட்டிலும் வாழும் தமிழர்களின் பலிபீடமா என்பதுதான் கேள்வி!



படிப்பகம்

www.padippakam.com

# கொள்ளை ராணி பூலான் தேவி

ரசிகன்

33


பூலான்

புதிய சீருடை எனக்கு பொருத்தமான அளவாக இருந்தது. அழகாகவும் இருந்தது. புதிய சீருடையை அணிந்தபோது, அதற்கு அளவெடுக்க வந்து என்னிடம் வாங்கிக் கட்டிக் கொண்டவனை நினைத்துக் கொண்டேன். சிரிப்பாக இருந்தது.

மறுநாள் காலையில் பயிற்சிக்காக என்னை அழைத்துச் சென்றான் விக்கிரம் மல்லா. அவனுடன் தனியாக இருக்கக் கிடைத்த வாய்ப்பை நினைக்க சந்தோசமாக இருந்தது.

துப்பாக்கியை எப்படிப் பிடித்துக் கொள்ளவேண்டும்; துப்பாக்கிக்குள் தோட்டாவை எப்படி போடவேண்டும்; துப்பாக்கி வெடித்துவிடாமல் அதனை எப்படி ஜாக்கிரதையாக வைத்துக்கொள்ள வேண்டும் என்றெல்லாம் பொறுமையாக சொல்லித் தந்தான் மல்லா.

பள்ளிக்கூடத்தில் வாத்தியார் பாடம் சொல்லிக் கொடுப்பாராம்; நான்தான் பள்ளிக்கூடம் போனதில்லையே! அந்த வாத்தியார்களும் மல்லா போலத்தான் பொறுமையாகப் பாடம் சொல்லிக் கொடுப்பார்களோ என்று நினைத்தேன்.

"என்ன யோசனை?" என்றான் மல்லா. "ஒன்றும் இல்லையே!" என்றேன்.

துப்பாக்கியைப் பிடித்து குறிபார்க்கச் சொன்னான் மல்லா. எனக்குச் சரியாகப் பிடிக்கத் தெரியவில்லை. மல்லா சொல்லித்தந்தபோது என் கவனம் பாதிதான் அதில் இருந்தது. மீதி மல்லாவைப் பார்த்து வியப்பதில் போய்விட்டது.

"அப்படிப்பிடிக்கக்கூடாது!" என்று சொல்லியபடியே என் அருகே வந்த மல்லா என் கைகளைப் பிடித்து சரிப்படுத்தினான். என் தோள்களைத் தொட்டு நிமிர்த்தி என்னை நேர்படுத்தினான். கால்களை எப்படி வைத்துக்கொண்டு நிற்கவேண்டும் என்று செய்துகாட்டினான்.

துப்பாக்கியைச் சரியாகப் பிடித்துக் காட்டும்போது மல்லாவின் கை ஒன்று என் முதுகுப் பக்கமாக நீண்டு தோளை அணைத்துக் கொண்டிருந்தது. மல்லாவின் தேகம் என்மீது பட்டுப் பட்டு விலகியது.

மல்லாவிடம் எந்த மாற்றமும் இல்லை. எனக்குச் சொல்லித்தருவதில்தான் அவன் கவனமெல்லாம் இருந்தது.

என்னால்தான் அந்த அனுபவத்தைத் தாங்கமுடியவில்லை. உடம்பெல்லாம் தீயாகக் கனன்று எரிவதுபோல் இருந்தது. பற்றி எரியும் நெருப்பருகே நின்று கொண்டிருந்தால் உடம்பு முழுக்க வெப்பம் பரவுமே! அப்படித்தான் எனக்கும் இருந்தது.

மல்லாவின் உடம்பு என்மீது உரச உரச என் மனம் கட்டை அவிழ்த்துக் கொண்டு ஓடத்தொடங்கியது. அந்த முரட்டு உடல்மீது அப்படியே சாய்ந்து கொண்டுவிட்டால் என்னவென்று ஆசை ஆசையாக இருந்தது.

என்னால் பயிற்சியில் கவனம் செலுத்த முடியவில்லை. மனது தடுமாறும்போது நேர்வழியில் செலுத்துவது எப்படி?

என் கவனம் சரியாக இல்லையென்பதை மல்லா கவனித்துவிட்டான். சட்டென்று மல்லாவின் குரல் கண்டிப்பான தொனியில் எழுந்தது.

"இங்கேபார் பூலான்! உன் எதிரிகளை- அந்தப் பிசாசுகளின் புத்திரர்களை நீ பழிவாங்க வேண்டுமா வேண்டாமா? உன்னை, ஒன்றுமறியாத உன் குடும்பத்தை புரட்டியெடுத்த அந்த நாய்களை துரத்தித் துரத்தி வேட்டையாட வேண்டுமா, வேண்டாமா?"

மல்லாவின் குரலில் இருந்த உணர்ச்சி எனக்கும் தொற்றிக்கொண்டது.

என் நினைவில் இருந்து மல்லா மறைந்தான். என் நினைவில் இருந்து மல்லாமீது எழுந்த ஆசை மறைந்தது.

என் மனக்கண் திறந்தது.

என்னை ஓட ஓட விரட்டிய அந்த நாய்கள் ஒவ்வொன்றும் வரிசையாக இளித்தபடி தோன்றின.

'அடே! வேசிமக்களே விடமாட்டேனடா! விடவே மாட்டேன்!' என் மனம் கூவியது.

என் உடம்பெல்லாம் இப்போது மரத்துவிட்டது. மல்லாவின் உடம்பு பட்டபோது நெகிழ்ந்தும், சிலிர்த்தும், நெருப்பாகக் கொதித்தும் ஜாலம் பல காட்டிய உடம்பல்ல இது.

இப்போது மல்லா என்னைக் கட்டிப் பிடித்தால்கூட எந்த மாற்றமும் இருக்காது. என் உடம்பெங்கும், என் மனமெங்கும் மரத்ததுபோலாகிவிட்டது.

'மல்லா! உனக்கு நன்றி! பயிற்சியின்போது இனி என் கவனம் வேறு எங்கும் செல்லாது,' என்று மனதுக்குள் சொல்லிக்கொண்டேன்.

அதன் பின்னர் மல்லா சொல்லித் தந்ததை எல்லாம் பிசகே இல்லாமல் செய்தேன். மல்லாகூட இடைக்கிடையே ஆச்சரியமாகப் பார்ப்பதாகத் தோன்றியது.

"இப்போது நீ சுடப்போகிறாய்! சுட்டதும் சிறு உதைப்பு ஏற்படும் பயந்துவிடாதே! என்ன?" என்றான் மல்லா.

என் துப்பாக்கியிலிருந்து முதல் வேட்டுத் தீர்க்கப்படப்போகிறது. நான் துப்பாக்கியால் சுடப்போகிறேன். நினைக்கவே நம்பமுடியாமல்தான் இருந்தது.

துப்பாக்கி விசையைக் காட்டினான். எப்படி அழுத்தவேண்டும் என்று சொன்னான். எதிரே இருந்த மரம் ஒன்றைக் காட்டினான்.

"அந்த மரத்தைப் பார்த்துச் சுடு. எங்கே வேண்டுமானாலும் படட்டும். பின்னர் குறிபார்த்து சுட்டுப்பழகலாம்; என்ன, சுடு!"

எதிரே மரம் தெரிந்தது. மல்லா சொல்லித்தந்ததுபோல ஒரு கண்ணை மூடிக் கொண்டு மறுகண்ணால் இலக்கை நோக்கினேன்.

எதிரே இருந்தது மரமாகத் தெரியவில்லை. என்னை மரத்தில் கட்டிவைத்து அவமானப்படுத்தினானே ஷையாதீன்- அந்தப் பிசாசு மாதிரித்தான் தெரிந்தது.

விசையைத் தட்டினேன்.

"டுமீல்!"

"சபாஷ்" என்றான் மல்லா. "பயந்து துப்பாக்கியைப் போட்டுவிட்டு விழுந்து விடுவாயோ என்று நினைத்தேன். நீ கெட்டிக்காரி. மரத்திலும் குண்டு துளைத்திருக்கிறது, வா வந்து பார்!" என்று முன்னால் சென்றான்!

மரத்தில் குண்டு பாய்ந்த அடையாளம் தெரிந்தது. மல்லா காட்டினான்.

அந்த அடையாளத்தை என் கையால் வருடிப்பார்த்தேன்.

என் முதல் சூடு!

அதன்பின்னர் என் துப்பாக்கியில் இருந்து எத்தனையோ குண்டுகள் பாய்ந்திருக்கின்றன. ஆனாலும் அந்த முதல் குண்டு பாய்ந்த அடையாளத்தைக் கண்டபோது ஏற்பட்ட ஒருவிதமான மகிழ்ச்சி இருக்கிறதே அந்த அனுபவம் பின்னர் ஏற்பட்டதேயில்லை.

"இன்று இதுவரை போதும். நாளை தொடரலாம். இது மட்டும்தான் என்று நினைத்துவிடாதே. அதிகாலையில் எழுந்து ஓடவேண்டும். கயிற்றின் உதவியால் உயரமான இடத்துக்கு ஏறிப்பழக வேண்டும். தாக்குவதற்கு மட்டும் தெரிந்தால் போதாது. தப்பிவருவதற்கும் தெரிந்திருக்க வேண்டும். ஏன் தெரியுமா?"

"தெரியும்!"

"ஏன்?"

"அப்போதுதான் எல்லா நாய்களையும் கொன்றுபோடலாம். நாங்கள் மாட்டிக் கொண்டால் நாய்கள் தப்பிக்கொள்ளும்!" அதைச் சொன்னபோது என் குரலில் ஏற்பட்ட மாற்றம் எனக்கே தெரிந்தது.

மல்லாவும் அதனைக் கவனித்து என் முகத்தை உற்று நோக்கினான்.

"நீ சொல்வதும் சரிதான். ஆனால் இன்னொரு காரணமும் இருக்கிறது. அதனால்தான் நாம் விழிப்பாகவும் உஷாராகவும் இருக்க வேண்டியிருக்கிறது!" என்றான் மல்லா.

"என்ன காரணம்?" என்றேன் நான்.

இதற்கு முன்னர் மல்லாவோடு நான் இப்படி பேசியதும் இல்லை. அவன் முகத்தை தைரியமாகப் பார்த்துக் கேள்வி கேட்டதுமில்லை.

மல்லா என் கேள்விக்கு பதில் சொன்னான்:

"எம்மைவிட எம் எதிரிகள் பலசாலிகள். ஆனால் கோழைகள். பலசாலிகளாக இருப்பது அதிகாரம் கையில் இருக்கிறதல்லவா அதனால்தான். ஆட்கள் எண்ணிக்கையும் அதிகமாக இருக்கிறார்கள்."

மல்லா சொன்னதும் சட்டென்று எனக்குள் நம்பிக்கைகள் ஆட்டம் கண்டது மாதிரியாகிவிட்டது.

"அப்படியானால் நம்மால் அவர்களுடன் சண்டையிட முடியாதா?" என்று கேட்டேன். என் குரல் தொய்ந்துவிட்டது.

"சேச்சே.....பயந்துவிட்டாயா என்ன? எறும்பு ரொம்பச் சின்னதுதான், யானை ரொம்பப் பெரியது. யானையின் காதுக்குள் எறும்பு புகுந்துவிட்டால்போதும். யானையின் கதை முடிந்துவிடும். அதுபோலத்தான் நாங்களும்! எப்படித் தாக்குகிறோம் என்பதுதான் முக்கியம். நல்ல தந்திரம் இருக்கிறது என்றுவை, நாம்தான் ராஜாக்கள். புரிகிறதா? நாம்தான் ராஜாக்கள். நாம்தான் ஜெயித்துக்கொண்டும் இருப்போம். பயம் கூடாது. புரிகிறதா? பயம் கூடவே கூடாது. அதுதான் நம் முதல் எதிரி. ஆம்! முதல் எதிரி! வா! போகலாம்!"

முகாமை நோக்கி நடக்க ஆரம்பித்தான். அவன் பின்னால் சென்ற எனக்கு, ஒரு மல்லா நூறு யானைகளுக்குச் சமம் என்று தோன்றியது.

மல்லா இருக்கும்போது யாரை வேண்டுமானாலும் வீழ்த்திக்காட்ட முடியும். இனித்தான் எனக்கும் சுடத்தெரியுமே! பின்னர் என்ன பயம்? என்ற நினைப்பே தெம்பாக இருந்தது.

"மாலையில் பயிற்சி இல்லையா?" என்று கேட்டேன். குறிபார்த்துச் சுட்டுப்பழகிவிட வேண்டும் என்று மனம் பரபரத்தது. அதனால்தான் கேட்டேன்.

முன்னால் சென்றுகொண்டிருந்த மல்லா அப்படியே நின்று கழுத்தைத் திருப்பி என்னை நோக்கினான்.

"உனக்கு களைப்பாக இல்லையா?" என்று கேட்டான்.

"இல்லை. குறி...குறி பார்த்துச் சுட்டுப் பழகவேண்டும் என்று ஆ...ஆசையாக... ஆசையாக இருக்கிறது," என்றேன்.

மல்லாவின் உதட்டில் மெல்லிய கோடு போல ஒரு புன்னகை தோன்றி மறைந்தது.

"சாப்பிட்டுவிட்டு வரலாம்" என்றான்.

பக்கத்துக் கிராமத்தில் இருந்துதான் அன்று சாப்பாடு எடுத்து வந்திருந்தார்கள். பணம் கொடுத்து அனுப்பினால் சமைத்து அனுப்பிவைப்பார்களாம்.

சாப்பாடு நல்ல ருசியாக இருந்தது. மனம் நிறைவாக இருந்ததால் சாப்பாடும் நிறைவாக இருந்ததோ என்னவோ!

"நிறைய வந்திருக்கிறதே. இரவுக்கும்கூட மிஞ்சி மிஞ்சிப் போதும்" என்றேன்.

"இங்கே இருப்பவர்களைவிட இருமடங்கு ஆட்களுக்குத்தான் கணக்குச் சொல்லி சமைக்கச் சொல்லுவோம். அதுதான் அதிகமாக இருக்கிறது," என்றான் மல்லா.

"ஏன் அப்படி?" என்றேன் புரிந்து கொள்ளும் ஆவலில்.

"எத்தனைபேர் இருக்கிறோம் என்று சரியான கணக்கு தெரிந்துவிடக்கூடாது. பொலிசாருக்குத் தெரிந்தால் துணிந்து நம்மைப்பிடிக்க வந்துவிடுவார்கள்." என்றான் மல்லா.

நானும் மல்லாவும் அருகருகே அமர்ந்துதான் சாப்பிட்டோம். அதுவே எனக்கு சந்தோசமாக இருந்தது.

மாலையில் மறுபடி பயிற்சி.

ஆறு, ஏழு தோட்டாக்களை வீணடித்தேன். மரத்தில் பட்டபோதும் குறிமட்டும் சரியாக அமையவில்லை.

மல்லா சுட்டுக்காட்டினான்.

குறிபிசகவில்லை!

எட்டாவது தடவை மனதை ஒன்று குவித்து, மூச்சை இழுத்துப்பிடித்துக் கொண்டு, யாரோ ஒரு நாயை சுடுவதாக நினைத்துக் கொண்டு, சுட்டேன்.

டுமீல்!

மல்லா தன்னை மறந்து கைதட்டினான். எனக்கு வெட்கமாகிவிட்டது.

மல்லா சொன்னான், உணர்ச்சிகரமான குரலில் சொன்னான்:

"பூலான் நீ ஒருநாள் இல்லாவிட்டால் ஒருநாள் தலைவியாகிவிடுவாய்!"

மல்லாவின் பாராட்டு வார்த்தைகளால் நான் மெய்மறந்துபோக வாய்ப்பே இல்லாமல் யாரோ சிலர் ஓடிவரும் சத்தம் கேட்டது.

மாது சிங்கும் இன்னும் இரண்டுபேரும் முகங்களில் திகிலோடு ஓடிவந்து கொண்டிருந்தனர். (தொடர்ந்து வரும்)

**கடந்த வாரம்**

அஸ்டா என்னும் கிராமத்திற்கு கொள்ளைக் கோஷ்டியோடு பூலானும் செல்கிறாள்.
அக் கிராமத்தில் தமக்குக் கிடைக்கும் வரவேற்பைக் கண்டு ஆச்சரியப்படுகிறாள்.
விக்கிரம் மல்லா கிராமவாசிகளுக்கு பணமும், நகையும் கொடுக்கிறான்.
உற்சாகமாகப் பேசுகிறான்.
பூலானுக்கு மல்லாமீது மதிப்பு உயர்கிறது.

இனி......

# பெரும் 'குடிமகள்'


அன்று

1970ம் ஆண்டுக்கு முன்னர் ஹொலிவூட் படங்களில் தூள் கிளப்பிய நடிகை பிரிகிட் பர்தாட். அந்தப் பெயரைவிட பட்டப்பெயர் தான் ரொம்பப் பிரபலம்.

பட்டப் பெயர் என்ன தெரியுமா? 'செக்ஸ் கிட்டிங்'. அதாவப்பட்டது. 'செக்ஸ் பூனைக்குட்டி' என்று அர்த்தம். அப்படித்தான் ரசிகர்கள் செல்லமாக அழைப்பார்கள்.

ஏகப்பட்ட கிசுகிசுக்கள் அவரைப் பற்றி வெளியாகின. ஹொலிவூட் ஹீரோக்கள் பலர் அந்தப் பூனைக்குட்டிக்குப் பின்னால் சுற்றிக் கொண்டிருந்தார்கள்.

பல்லாயிரம் ரசிகர்களின் உறக்கத்தை திருடிய பூனைக்குட்டிக்கு அப்போதெல்லாம் ஓய்வே கிடையாது. அதனால் அலுப்பை விரட்டவும், உற்சாகத்தைத் திரட்டவும் விதம் விதமான மதுவகைகளை நாடினார்.

1970களுக்கு பின்னர் மெல்ல மெல்ல புது நடிகைகள், அதுவும் இளம் நடிகைகள் ஹொலிவூட்டில் நுழையத் தொடங்கினார்கள். பூனைக்குட்டியைப் பார்த்துப் பார்த்து சலித்துப்போன ரசிகர்கள் புது வரவுகளை வரவேற்க ஆரம்பித்தனர்.

புகழேணியில் இருந்துவிட்டு கீழே விழுவது என்றால் மனம் எத்தனை சஞ்சலப்படும்? பூனைக்குட்டிக்கும் எக்கச்சக்கமான சஞ்சலம். சோர்வை நீக்க மதுவை நாடியவர் சோகத்தை விரட்டவும் மதுவை நாடினார். ஆண் நண்பர்களையும் கூட்டிவைத்துக் கொண்டு மதுவும் மயக்கமுமாய் நாட்களைக் கடத்தினார்.

இந்த செக்ஸ் பூனைக்குட்டியின் அந்தரங்க நடவடிக்கைகளை பத்திரிகைகள் பக்கம் பக்கமாக எழுதின. அவற்றுக்கு மக்களிடம் கிளு கிளுப்பான வரவேற்பு கிடைத்ததாம்.

அதனால் செக்ஸ் பூனைக்குட்டி வெட்கப்பட்டிருப்பார் என்றா நினைக்கிறீர்கள். அதுதான் இல்லை. அவருக்கு வித்தியாசமான ஐடியா ஒன்று தோன்றியது.

'நானே என்னைப் பற்றிய கதையை எழுதினால் என்ன? பிறர் என்னைப் பற்றி எழுதுவதற்கு வரவேற்பு இருக்கும்போது, நானே என்னைப் பற்றி எழுதினால் என்ன?' என்று யோசித்தார். உடனே எழுதத் தொடங்கினார். பிரபல புத்தக நிறுவனம் ஒன்று அவரது சுயசரிதையை வாங்கி வெளியிட்டுள்ளது.

'இனிசியல்ஸ் பி.பி.' என்பது அந்த நூலின் பெயர். செக்ஸ் பூனைக்குட்டிக்கு இப்போது 62 வயது. இதுவரை தன் வாழ்க்கையில் ஏற்பட்ட பல சம்பவங்களை வெட்கப்படாமல் சுயசரிதையில் புட்டுப் புட்டுவைத்திருக்கிறாராம்.


இன்று

சுயசரிதையின் ஒரு இடத்தில் 62 வயதிலும் தன் ஆற்றல் மங்கவில்லை என்பதை பின்வருமாறு சொல்கிறார் பூனைக்குட்டி: "என்னுடைய சக்தியை நானே புகழ்ந்து கொள்ள வேண்டியுள்ளது. ஏனென்றால் இன்னும் தினமும் ஆறு புட்டி வையினை குடித்துவிட்டு தெம்பாக இருக்க முடிகிறதே!" என்கிறார். அம்மணி அசத்தலான குடிமகள்தான். பெரும் குடிமகள்.

# வித்தியாச ஆசை

## பெண்களே ஜாக்கிரதை!

ஆசைகள் பலவிதம். ஆசையில்லாத மனிதர் யார் இருக்கிறார்கள்? சிலரது ஆசைகள் விசித்திரமாக இருப்பதும் உண்டு.

அமெரிக்காவைச் சேர்ந்த கணக்கு வாத்தியார் மிஸ்டர் டிக்கில்ஸ் என்பவருக்கு வந்துள்ள ஆசையும் விசித்திரமானதுதான்.

மிஸ்டர் டிச்கில்ஸ்சுக்கு 57 வயது. திருமணமாகி 33 வருடங்களாகிவிட்டன. 2 பிள்ளைகள் இருக்கிறார்கள். அது தவிர எட்டுப் பிள்ளைகளை தத்தெடுத்து வளர்த்து வருகிறார்.


— திரு. டிக்கில்ஸ் —

57 வயதிலும் நல்ல உடற்கட்டோடு கம்பீரமாக காட்சியளிக்கிறார். ஆனால் மனைவியைத் தவிர வேறெந்தப் பெண்ணையும் ஏறெடுத்தும் பார்த்ததில்லையாம்.

இத்தனை இருந்தும் மனதில் ஒரு நீண்டகால ஆசை. அது என்ன ஆசை?

ஒரு பெண்ணாக இவ் உலகில் நடமாட வேண்டும் என்பதுதான் ஆசை. கேட்டதும் சிரிப்பு வருகிறதல்லவா. ஆனால் தனது ஆசையை டிக்கில்ஸ் தன் மனைவியிடமும், பிள்ளைகளிடமும் சொன்னபோது அவர்கள் சிரிக்கவில்லை. ஆழ்ந்து யோசித்தார்கள்.

இத்தனை காலமாக ஏக பத்தினி விரதனாக குடும்பத்துக்காக உழைத்திருக்கிறார். அவரது ஆசையைக் கெடுப்பானேன் என்று சம்மதித்துவிட்டனர்.

அடுத்த பிரச்சனை பாடசாலையில். ஆண் வாத்தியாராக வந்தவர் திடீரென்று பெண் வாத்தியாராக வந்தால் மாணவ, மாணவிகள் கைகொட்டிச் சிரிப்பார்கள் அல்லவா. அதனால் பள்ளி நிர்வாகம் முதலில் முரண்டு பிடித்ததாம். ஆனாலும் மாணவர்களைத் தான் சமாளிப்பதாகக் கூறி பாடசாலை நிர்வாகத்திடமும் அனுமதி வாங்கிவிட்டார். பெயரையும் திருமதி டயோனா என்று மாற்றிக்கொண்டார்.

கணக்குப்பாடத்தில் கில்லாடியான வாத்தியார் என்பதாலும், மாணவர்களின் அபிமானம் பெற்றவர் என்பதாலும் மாணவர்கள் யாரும் அவரைக் கிண்டல் செய்யவில்லையாம்.

மிக முக்கியமான சங்கதி என்ன தெரியுமா? நாமும் அறிந்திருப்பது நல்லது. 'மிஸஸ் டவுட் ஃபயர்' படம் பார்த்த பின்னர்தான் தன் ஆசையை நிறைவேற்றும் உறுதி ஏற்பட்டது என்கிறார் மனிதர். (அவ்வை சண்முகி பார்த்துவிட்டு நம் நாட்டில் யாருக்காவது பெண்ணாக மாறும் ஆசை ஏற்பட்டு இருந்தால் தெரிவிக்கவும்.)

மிஸ்டர் டிக்கில்ஸ் மிஸஸ் டயோனாவாக மாறியதைத் தடுக்காவிட்டாலும், அவரது பத்துப்பிள்ளைகளுக்கும் ஒரு வருத்தம் இருக்கிறது. "எங்கள் வீட்டில் இப்போது இரண்டுபேரும் அம்மாவாகி விட்டனர். அப்பாவைத்தான் பார்க்க முடியவில்லை" என்கின்றனர்.

சரி, இப்படியான ஆசைகளுக்கு என்ன காரணம்? உளவியல் நிபுணர் டாக்டர் ஹோவர்ட் கூறுகிறார் இப்படி: "இதேபோல் ஆசைப்படும் ஆண்கள் பலர் இருக்கிறார்கள். அவர்கள் பெண்களின் உடையில் அலங்காரமாக பவனி வருகின்றனர். அல்லது வீட்டுக்குள் பெண்களின் உடைகளை அணிந்து பார்க்கின்றனர். ஆனாலும் அவர்கள் நல்ல ஆண்களாக நல்ல கணவர்களாகவே இருக்கின்றனர்." என்கிறார்.


இரண்டு அம்மாக்கள்

எதற்கும் பெண்கள் பெண்கள் மீதே சந்தேகப் பார்வை வீசவேண்டிய நிலை வந்துவிட்டது. எந்தப் பெண்ணுக்குள் எந்த ஆண் இருக்கிறாரோ?

# காதலர் பூங்கா

இலண்டனில் ஹைட் பார்க் என்னும் பூங்கா உள்ளது. அந்தப் பூங்காவில் உள்ள பசும்புல் தரையில் காதலர்கள் படுத்துப் புரளுவார்கள்.

பிரிட்டிஷ் வெளிநாட்டு அமைச்சு அலுவலகம் முன்பாகவும் இக் காட்சிகளைக் காணலாம்.

இவற்றைத் தடுக்கவேண்டும் என்று கொமன்ஸ் சபையில் ஒருவர் கேள்வி கேட்டார். கேள்வி கேட்டவர் பழமைவாதி. பதில் சொன்ன அமைச்சர் புதுமைப் பிரியர். எனவே அமைச்சர் பின்வருமாறு பதில் சொன்னார்:

"சோசலிச அரசியலில் ஆண்களுக்கும் பெண்களுக்கும் தங்களை மகிழ்வித்துக் கொள்ள உரிமை இருக்கிறது."





படிப்பகம்

www.padippakam.com



## வாட்டசாட்டமான காதலர்கள்

உலகில் உண்டு களித்துக் குண்டான பலர் இருக்கலாம். அவர்களில் பலரை 'முரசு' அட்டகாசமாக அவ்வப்போது அறிமுகப்படுத்தியும் வந்திருக்கிறது. ஆனால் இங்கு 'போஸ்' கொடுக்கும் இருவரும் வித்தியாசமான ஜோடிகள். எடைக்கு எடை வெள்ளி தேடலாம், தங்கம் தேடலாம், காதல் ஜோடி தேடுவதுதான் கஷ்டம். ஆனால் இந்த இரண்டுபேரும் கொடுத்துவைத்தவர்கள்.

காதலர் பெயர்: ரோட்னி. எடை 600 கிலோ. காதலியின் பெயர்: கமால்ஸ்கி. எடை 430 கிலோ. இருவரும் அமெரிக்காவில் உள்ள லொஸ்ஏஞ்சலைச் சேர்ந்தவர்கள். காதலி கமால்ஸ்கியின் வருத்தம் என்ன தெரியுமா? "நான் அவர் மடியில் அமர்ந்து கொள்ள முடிகிறது. அவர்தான் பாவம், என் மடியில் அமர்ந்து கொள்ள முடியாது. அத்தனை பாரம். கண்ணுக்கு நிறைவான இக் காதலர்கள் நீடூழி வாழ்க. யாரும் கண்போட்டுவிடாதீர்கள் திருஷ்டி பட்டால் அவர்கள் உடம்பு என்னத்துக்காகும்!

## அதிசயப் பொம்மை

➡ படத்தில் இருப்பது பொம்மைதான். ஆனால் விளையாட்டுப் பொம்மையல்ல. உலகிலேயே மிக மிக விலை உயர்ந்த பொம்மை இதுதான். கடற்கன்னி போல் இதனைக் கச்சிதமாக வடிவமைத்துள்ளனர்.

வைரம், மரகதம் போன்ற விலை உயர்ந்த இரத்தினக் கற்களால் இழைக்கப்பட்ட தங்க நகைகள்தான் பொம்மையை அலங்கரிக்கின்றன.

சிங்கப்பூரில் உள்ள தக்ஷிமாயா சூப்பர் மார்க்கெட்டில் இதனை ஏலத்தில் விடுவதற்காக போடப்பட்ட ஆரம்ப மதிப்பு எவ்வளவு தெரியுமா? 18 ஆயிரம் அமெரிக்க டொலர்கள். நம் நாட்டு பணமதிப்பின்படி 9 இலட்சத்து 90 ஆயிரம் ரூபாய்கள்! இப்போது சொல்லுங்கள் இந்தப் பொம்மையோடு விளையாட முடியுமா?!






## ஆயுள் கெட்டியான இரட்டையர்

"நூறாண்டுகாலம் வாழ்க. நோய் நொடியில்லாமல் வாழ்க" என்று இவர்களை வாயார வாழ்த்தியது யார்? அவர்கள் வாயில் கலப்படமில்லாத சர்க்கரை போடவேண்டும்.

தேங்காய்ப் பூ போல காணப்படும் இந்த இரண்டு ஆச்சிகளும்தான் உலகில் மிக வயதான இரட்டையர்கள். எத்தனை வயது தெரியுமா? 104! ஜப்பான் டோக்கியோவில் உள்ள ஹகியோதீவைச் சேர்ந்தவர்கள்.

ஒருவரது பெயர் கின் நறிட்டா. மற்றவர் பெயர்: ஜின் கானி. ஜப்பான் மொழியில் கின் என்றால் தங்கம் என்றும், ஜின் என்றால் வெள்ளி என்றும் அர்த்தம். ஆக, இருவரும் தங்க வெள்ளி இரட்டையர்கள். பெயர் வைத்தவர்களையும் பாராட்டலாம். அதுசரி, நூற்றாண்டு கண்ட சந்தோசத்தில் என்ன பூரிப்பாக கேக் வெட்டுகிறார்கள் பாருங்கள். மேலும் குறைந்த பட்சம் 50 வருடமாவது வாழ நாமும் வாழ்த்துவோம்.

## தகவல் பெட்டி



## ஏலத்தில் போன படம்

படத்தில் இளமை ததும்பக் காட்சிதரும் இத் தம்பதி யார் தெரியுமா? உலகின் தலைசிறந்த விஞ்ஞானி அயன்ஸ்ரீனும் அவரது மனைவி மலிவா மாரிக்கும்தான். (அயன்ஸ்ரீன் பற்றிய தகவல் இவ்வார பாப்பாமுரசில் இருக்கிறது. பாருங்கள்)

விஞ்ஞானத்தில் மூழ்கிக் கிடந்தாலும் தன் இதயத்தை காதலிலும் தோயவிட்டவர் அயன்ஸ்ரீன். மாலிக்குக்கு அடிக்கடி அவர் எழுதிய காதல் ரசம் சொட்டும் கடிதங்களில் 43 கடிதங்கள் ஒருவரிடம் இருந்தன. அவற்றையும் இந்தப் படத்தையும் நியூயோர்க்கில் ஏலத்தில் விட்டனர். ஒரு செல்வந்தர் அதனை ஏலத்தில் எடுத்தார். எவ்வளவு தொகைக்கு? நாலு இலட்சத்து 42 ஆயிரம் அமெரிக்க டொலர்கள்! அதாவது 2 கோடியே 43 இலட்சத்து 10 ஆயிரம் ரூபாய்கள்.

## பாதணியில் தூங்கலாம்

⬇ பின்லாந்து நாட்டில் படகு செய்யப் பயன்படும் மரப்பட்டைகளைக் கொண்டு பழங்காலத்தில் பாதணிகள் அதாவது செருப்புக்கள் செய்தார்களாம்.

பழமையை நினைவூட்ட நினைத்தார் தென் பின்லாந்தைச் சேர்ந்த எர்ச்சி பெக்கா. அதன் விளைவுதான் படத்தில் காணும் பிரமாண்டமான பாதணி. 60 சதுர மீட்டர் அளவுள்ள மரப்பட்டைகளைக் கொண்டு இதனை உருவாக்கியுள்ளார். இந்தப் பாதணியை காலில் அணிய முடியுமா என்ன, அதனால்தான் பாதணிக்குள் படு சொகுசாகப் படுத்திருக்கிறார் எர்ச்சி பெக்கா. தாராளமாக இரண்டுபேர் இதற்குள் படுத்திருக்கலாமாம். பாதணியா? படுக்கையறையா?!





## பிரிவினை

ஒற்றுமையே பலம் என்பது ஒட்டிப் பிறக்கும் இரட்டையர் விடயத்தில் பொருந்தாது. அதாவது உடல்ரீதியில் பொருந்தாது. ஒட்டிப் பிறக்கும் இரட்டையரை 'சயமீஸ் இரட்டையர்' என்றழைப்பர். இரட்டையர் பிறந்தவுடனேயே டாக்டர்களுக்கு பிரிவினை செய்யும் எண்ணம் தோன்றிவிடும். (அதற்காக பிரிவினைவாதிகள் என்று உள்ளே பிடித்து போடமுடியாது) இருவரையும் பிரித்தால்தான் நல்லது.

படத்தில் ஒட்டிப் பிறந்த நிலையில் காணப்படும் 'சயமீஸ்' இரட்டையர்கள் பிறந்தது அமெரிக்க கலிபோர்னியாவில். கடந்த ஆண்டு மே மாதம் முதலாம் திகதிதான் பிறந்தனர். சமீபத்தில்தான் இருவரையும் ஒப்பரேஷன் செய்து பிரித்தனர். கலிபோர்னியாவில் உள்ள லிண்டா மருத்துவமனையில் நடைபெற்றது. ஒப்பரேஷன் சக்ஸஸ். இரட்டையர். நலமோடு உள்ளனர்.



படிப்பகம்

www.padippakam.com

## 'இருவர்' தோல்வி

மணிரத்னம் படங்களில் 'இருவர்' படமும் தோல்விப் படமாகிவிட்டது. சென்னை நகரில் மட்டும்தான் ஒரு மாதிரி ஒடியிருக்கிறது. ஏனைய பகுதிகளில் படுதோல்வி.

தமிழக சஞ்சிகைகள் சில மணிரத்னத்தின் பேட்டியை வெளியிட்டு பரபரப்பை ஏற்படுத்தின. அப்படி இருந்தும் படம் டப்பாவுக்குள் சுருண்டுவிட்டது. சுயமரியாதைத் திருமணம், திராவிடர் இயக்கம் என்பவற்றை பிராமணியரான மணிரத்னம் கிண்டல் செய்திருக்கிறார். இது கண்டிக்கப்படத்தக்கது என்று பிரபல எழுத்தாளர் அறிவுமதி கண்டித்துள்ளார். பிராமணப் பத்திரிகைகள்தான் மணிரத்னத்தை தூக்கிப் பிடிக்கின்றன என்றும் அவர் சாடியிருக்கிறார்.

## விடுகதை — பிரகாஷ்ராஜ்

'காதல் கோட்டை' சூப்பர் சூப்பர் ஹிட். 'கோகுலத்தில் சீதை'யும் சூப்பர் ஹிட். இயக்குநர் அகத்தியன் தலைமறைவாக இருக்கிறார். காரணம்: தயாரிப்பாளர்கள் அவரைத் துரத்தோ துரத்தென்று துரத்தித் திரிகிறார்கள்.

இயக்குநர் கே. பாலசந்தர் தனது கவிதாலயா பட நிறுவனத்திற்காக அகத்தியனைப் பிடித்துக்கொண்டார். இச் செய்தியை முன்னரே சினிவிசிட் தந்துவிட்டது.

கவிதாலயாவுக்காக அகத்தியன் இயக்கும் 'விடுகதை' படத்தின் ஹீரோ யார் தெரியுமா? பிரகாஷ்ராஜ். அவருக்கு ஜோடியாக புதுமுகம் ஒருவர் நடிக்கப்போகிறார். இசை: தேவா.

'விடுகதை' படம் சூப்பர் ஹிட்டானால் பிரகாஷ்ராஜின் மவுசு மளமளவென்று உயர்ந்துவிடும்.

## ஜெயராம் புலம்பல்

'அருணாச்சலம்' படத்தில் நடிக்க அழைக்கப்பட்டவர் ஜெயராம். ரஜினியோடு நடிக்கக் கிடைத்த சந்தோசத்தில் மனிதர் துள்ளிக்குதித்தார். தனக்கு நடிகர் வேஷம் என்றும் கதையை வாய்தவறி உளறிவிட்டார். அதனால் வந்தது வினை. ஜெயராமை படத்தில் இருந்து தூக்கிவிட்டார் இயக்குநர். இது பழைய செய்தி.

புதிய செய்தி என்ன தெரியுமா? "ஐயோ நான் என்ன வெண்டுமென்றா செய்தேன். சந்தோசத்தில் திக்குமுக்காடிப்போய் உளறிவிட்டேன். வாய்ப்பைப் பறிக்கலாமா?" என்று புலம்பிக் கொண்டிருந்தாராம் ஜெயராம். புலம்பல் ரஜினியின் காதுக்கும் எட்டியதால், மீண்டும் ஜெயராம் நடிக்கக் கூடுமாம்.

## குரு–சிஷ்யன் இணைகிறார்கள் தயாராகிறது 'கபடி கபடி'

பாக்யராஜ்-சுகன்யா நடித்து தீபாவளிக்கு வெளியான 'ஞானப்பழம்' ரசிகர்களுக்கு இனிக்கவில்லை. அதனால் தீபாவளிப் படங்களில் படுதோல்விப்படம் என்று பெயர் எடுத்துவிட்டது.

பாக்யராஜ்-நக்மா ஜோடி சேர்ந்து அடுத்து வரப்போகும் படம் 'வேட்டிய மடிச்சுக்கட்டு'. அப்படமும் பப்படம் ஆகிவிட்டால் என்ன செய்வது என்று யோசிக்கிறார் பாக்யராஜ்.

தனது குருவின் கஷ்டத்தைத் தீர்க்க முன்வந்திருக்கிறார் சிஷ்யன் பாண்டியராஜன். கதை, திரைக்கதை, வசனம், இயக்கம் ஆகிய பொறுப்புக்களை மட்டும் பாக்யராஜ் கவனிக்கட்டும். தான் கதாநாயகனாக நடிக்கலாம் என்பது பாண்டியராஜனின் ஐடியா. அதற்கு ஒகே சொல்லிவிட்டார் பாக்யராஜ்.

பாண்டியராஜன் நடித்து வெளியான கோபாலா கோபாலா அமோகமாக ஓடுகிறது. பாண்டியராஜன் மார்க்கெட் நல்லநிலையில் இருப்பதால் துணிந்து இறங்கியிருக்கிறார் பாக்யராஜ். படத்தை தயாரிப்பதும் பாக்யராஜ்தான்.

படத்திற்கு பெயரும் சூட்டிவிட்டனர். 'கபடி கபடி' அதுதான் பெயர். கதாநாயகி தேர்வு நடக்கிறது.

மணிவண்ணன், கரண், வெண்ணிற ஆடை மூர்த்தி ஆகியோரும் நடிக்கின்றனர். இசை: தேவா. பாடல்கள் வைரமுத்து.

## மதுவும் அவரும்!


நடிகை மதுபாலாவுடன் ஒரு கம்பீர இளைஞர் காணப்படுகிறாராம். வெளிப்புறப் படப்பிடிப்புக்கு மதுபாலா செல்லும்போது அந்த இளைஞரும் கூடவே செல்லுகிறாராம். மதுபாலாவும் அவரும் ஒரே அறையில்தான் தங்கி இருக்கின்றனராம்.

இதனால் மதுபாலாவுடன் அன்போடு நெருங்கிப் பழக முடியவில்லையே என்று ஹிந்தி நடிகர்கள் சிலர் வருத்தப்படுகிறார்களாம்.

அந்த இளைஞர் யார் என்று கேட்டால் சொல்ல மறுக்கிறாராம் மது. சொல்லித்தான் இதெல்லாம் தெரியவேண்டுமாக்கும்.

## நக்மா தயக்கம்

கார்த்திக் ஜோடியாக நக்மா நடித்துவரும் படம் 'பிஸ்தா'. கார்த்திக்மீதுள்ள பிரியம் மற்றும் நன்றி உணர்ச்சி காரணமாகத்தான் நடிக்கச் சம்மதித்தாராம். வேறு புதிய படங்களில் நடிக்கக் கிடைத்த வாய்ப்புக்களை ஒதுக்கியுள்ளார் நக்மா. புதிய படங்களில் நடிக்க நக்மா தயங்குவது ஏன்? திருமணத்துக்கு தயாராகிறார் என்று சொல்கிறது கோடம்பாக்கம் பட்சி.


ரீவா
படம்:-செல்வா


சத்யராஜ்-ரோஜா
படம்:-வள்ளல்

## ரவீனா— அக்ஷய் ஊடலுக்கு டாட்டா

அர்ஜுன் ஜோடியாக 'சாது' படத்தில் நடித்தவர் ரவீனா ராண்டன். அர்ஜுனுடன் இணைந்து கிசுகிசுக்கப்பட்டதால் விவகாரம் விகாரமாகியது. அர்ஜுன் மனைவி பத்திரகாளியாக மாறி ரவீனாவை விரட்டியடித்தார்.

நீண்ட இடைவெளிக்குப் பின்னர் மீண்டும் ரவீனாவை தன்னுடன் நடிக்கவைக்க விரும்பினார் அர்ஜுன். 'தென்னாலிராஜா' படத்தில் ரவீனா ராண்டன் அர்ஜுன் ஜோடியாக நடிப்பதாக முடிவு செய்யப்பட்டது.

'ரவீனா என்ன மாயம் செய்தாரோ அர்ஜுனுக்கு அவரை மறக்க முடியவில்லை. மறுபடி உறவைப் புதுப்பிக்கப்போகிறார்' என்று செய்திகள் வெளியாகின.

செய்திகளைப் படித்த அர்ஜுன் மனைவி பொங்கி எழுந்தாராம். விளைவு: வீட்டில் பூகம்பம். இறுதியில் அர்ஜுன் பணிந்தார். தென்னாலிராஜா படத்தில் இருந்து ரவீனா நீக்கப்பட்டார். இப்போது நிவேதிதா கதாநாயகியாக நடிக்கிறார். தாயின் மணிக்கொடி படத்திலும் அர்ஜுன் ஜோடி நிவேதிதாதான்.

இது ஒருபுறம் இருக்க, ரவீனா ராண்டன் அக்ஷய்குமார் இருவரும் தகமும் சதையுமாக இருந்துவிட்டு இடை நடுவே பிரிந்திருந்தனர். இப்போது மீண்டும் கூடிக்குலவுகின்றனர் என்கின்றன மும்பாய் பத்திரிகைகள்.

மும்பாய் பத்திரிகை ஒன்றுக்காக அக்ஷய் குமாரும் ரவீனாவும் இணைந்து கட்டியணைத்தபடி விசேஷ போஸ் கொடுத்தார்களாம். அதில் ஒரு புகைப்படம் மட்டுமே இங்கு பிரசுரமாகியுள்ளது. ஏனையவற்றை வெளியிட்டால் நீங்கள் கையில் கிடைப்பதை தூக்கிக்கொண்டு வந்துவிடுவீர்கள். அந்தளவு நெருக்கம்.

## மும்பாய் கிளி

மும்பாயில் இருந்து கோடம்பாக்கத்திக்கு பறந்துவந்த கிளி ரீவா. 'செல்வா' படத்தில் விஜய் ஜோடி அவர்தான். படம் ஹிட்டாகாவிட்டாலும் ரீவாவின் கவர்ச்சி தூக்கலோ தூக்கல்.

'செல்வா' படத்தில் ரீவாவின் துணிச்சலைக் கண்டு வியந்து 'ரோஜாமலரே' படத்தில் நடிக்கவைத்துள்ளனர். முரளியின் ஜோடியாக நடிக்கிறார். தன்மீது கொண்ட நம்பிக்கைக்கு பாதகம் இல்லாமல் 'ரோஜா மலரே' படத்தில் கவர்ச்சி காட்டி நடித்துவருகிறாராம் ரீவா.

அதற்கிடையே ரீவா பற்றிய ஒரு கிசுகிசு. ரோஜாமலரே என்று ரீவாவை சுற்றிச்சுற்றி வருகிறாராம் இயக்குநர் ஜெயமுருகன். ரீவாவும் அனுசரித்துப்போவதால் படத்தில் ரீவாவுக்காக ரிச்சான உடைகளை பயன்படுத்துகிறாராம் இயக்குநர். ரிச்சான உடை என்றாலும் அளவு சிக்கனம்தான்.

முகப்பில்
நெப்போலியன்–குஷ்பு
படம்:- 'எட்டுப்பட்டி ராசா'
மீனா
படம்:- வள்ளல்

## மினி மினி

* மணிரத்னத்தின் 'இருவர்' படத்தில் நடித்துள்ள மோகன்லால் அடுத்து நடிக்கும் படத்திற்கு 'ராணுவம்' என்று பெயரிடப்பட்டுள்ளது. இப்படத்தை ஆர்.கே. இன்டர்நஷனல் நிறுவனம் தயாரிக்கிறது.
* படங்களில் நடிப்பதைக் குறைத்துக் கொண்டுள்ள ராதிகா, நீண்ட நாட்களுக்குப் பின்னர் தெலுங்கில் 'குடும்ப கௌரவம்' என்ற படமொன்றில் நடிக்க இருக்கின்றார்.
* சில வருடங்களுக்கு முன்னர் ராமராஜன் கதாநாயகனாக நடிக்க 'காவலன்' என்ற பெயரில் படமொன்றைத் துவக்கினார்கள். பின்னர் அந்தப்படம் நிறுத்தப்பட்டது. இப்போது அதே பெயரில் புதிய படம் ஒன்று தயாராகவுள்ளது. ஆனால் இதில் ராமராஜன் இல்லை.
* கே. பாலச்சந்தரின் 'கல்கி' மூலம் சினிமாவுக்கு அறிமுகமானவர் தமிழக தொலைக்காட்சி செய்தி வாசிப்பாளர் பாத்திமா பாபு. இதைத் தொடர்ந்து 'வி.ஐ.பி' உட்பட மூன்று படங்களில் இவர் நடித்து வருகிறார்.
* இந்தியில் பெரு வெற்றி பெற்ற 'ராஜா ஹிந்துஸ்தானி' படம் தெலுங்கில் மொழிமாற்றப்பட்டு வெளிவர இருக்கிறது. இந்தப் படத்தில் அமீர்கான்-கரிஷ்மா கபூர் ஜோடியாக நடித்துள்ளனர்.
* 'காலமெல்லாம் காதல் வாழ்க' படத்தை அடுத்து சிவசக்தி மூவி மேக்கர்ஸ் நிறுவனம் தயாரிக்கும் படத்திலும் முரளியே கதாநாயகனாக நடிக்கிறார். இப்படத்தை கெளடி என்பவர் இயக்குகிறார்.
* இதுவரை தமிழ் மற்றும் தெலுங்குப் படங்களில் மட்டுமே நடித்து வந்த ரோஜா முதன்முதலாக 'கங்கோத்திரி' என்ற மலையாளப்படத்தில் நடிக்கிறார். இதில் இவருக்கு ஜோடியாக சுரேஷ் கோபி நடிக்கிறார்.
* 'கோபாலா கோபாலா' வெற்றி பெற்றதைத் தொடர்ந்து 'கபடி கபடி' என்ற படத்தில் நடித்து வரும் பாண்டியராஜன். புதிதாக ஒரு படத்திற்கு 'குபேரா குபேரா' என்று பெயர் வைத்துள்ளார்.
* பொங்கலுக்கு வெளியான 'பாரதி கண்ணம்மா' இயக்குநர் சேரனைத் தேடிப் பல படவாய்ப்புக்கள் வந்த வண்ணம் உள்ளன. அவற்றில் பாரதிராஜா தயாரிக்கும் படமும் ஒன்றாகும்.
* 'வேலுச்சாமி' படத்தில் சரத்குமாருக்கு ஜோடியாக அறிமுகமானவர் சுருதி. அந்தப்படத்தின் தோல்வியால் படவாய்ப்புக்கள் இல்லாத சுருதி, இப்போது ராகா என்ற பெயரில் சிறு சிறு வேடங்களில் நடித்து வருகிறார்.


அக்சய்குமார்-ரவீனாராண்டன்

ஜெயர
படம்:-பெரிய இ


படிப்பகம்

www.padippakam.com

## மீனாவுக்கு காதல் தூது!

சரத்-நக்மா காதல் விவகாரம் சூடு பிடித்திருக்கிறது. விரைவில் இருவரும் தமது காதலை பகிரங்கப்படுத்தக்கூடும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

சரத்குமார் சினிமா உலகுக்கு வந்த பின்னர் பல நடிகைகள் அவரது உடல் கண்டு மயங்கினார்களாம். ஆனாலும் சரத் முதலில் காதலித்தது ஹீராவைத்தான். சரத் ஹீரா புராணம் பாடிக் கொண்டிருக்க, ஹீரா மும்பாய்க்கு பறந்து சென்றார். அத்தோடு காதல் 'கட்'டானது.

ஹீராவின் பின்னர் சரத்குமாரின் பார்வை திரும்பியது நக்மாமீதுதான் என்றா நினைக்கிறீர்கள்? அதுதான் இல்லை. சரத் குறிவைத்தது மீனாவை. 'கூலி' படத்தில் சரத்குமார் ஜோடியாக நடித்தார் மீனா. அப்போதுதான் மீனாமீது குறிவைக்க ஆரம்பித்தார் சரத். 'நாட்டாமை', 'நாடோடி மன்னன்' ஆகிய படங்களில் மீனாவுக்கு தொடர்ச்சியான வாய்ப்பும் வாங்கிக் கொடுத்தார். ம்ஹூம் மீனா மசியவில்லை. தனியான சந்திப்புக்களுக்கும் மறுத்துவிட்டாராம்.

தனது காதலை விளக்க ஒரு துணை நடிகையை மீனாவிடம் தூதுவிட்டாராம் சரத். மீனாவும் அவரது தாய்க்குலமும் எகிறிக் குதித்த குதியில் துணைநடிகை தோல்வியோடு திரும்பினாராம்.

அதன் பின்னர்தான் நக்மாமீது சரத் மையல் கொள்ளத் தொடங்கினார். நக்மாவும் சரத் மீது ரொம்ப ஈடுபாடாக நடந்துகொண்டாராம். அதனால் காதல் படு ஸ்ரோங்காகிவிட்டது.

## விவேக் பிஸி

விஜயகாந்த் படம் ஒன்றை நகைச்சுவை நடிகர் விவேக் இயக்கப்போவதாக தமிழகப் பத்திரிகைகள் செய்தி வெளியிட்டனவாம். அது கடைந்தெடுத்த வதந்தி என்று மறுத்திருக்கிறார் விவேக்.

'காதல் மன்னன்' 'பொங்கலோ பொங்கல்', 'பகைவன்', 'சிஷ்யா', 'தினமும் என்னைக் கவனி', 'இனியெல்லாம் சுகமே', கவலைப்படாதே சகோதரா', 'பெரிய இடத்து மாப்பிள்ளை' என்று பல படங்களில் நடித்துவருகிறார் விவேக். பிஸியாக இருக்கும் விவேக் இப்போது இயக்குநராக முடியுமா? நோ. நெவர்.

## கவுதமியின் காதலர்

நடிகை கவுதமி வெளிநாடு செல்லப்போகிறார். படிக்கப்போகிறேன். மறுபடி வருவேன் என்றெல்லாம் சொல்லிக்கொண்டிருக்கிறார். இதற்கிடையே கவுதமி பற்றி ஒரு செய்தி அடிபடுகிறது. 'பெங்களூரில் நடைபெற்ற உலக அழகிப் போட்டியில் கவுதமியுடன் ஒரு வைரவியாபாரி காணப்பட்டாராம். இருவரும் கைகோர்த்தபடி பவனி வந்தார்களாம். குறிப்பிட்ட வைர வியாபாரிக்கு வெளிநாடுகளிலும் பெரிய தொழில்கள் இருக்கிறதாம்.

## அழைப்பில்லை

கடந்த தமிழகத் தேர்தலில் தி.மு.கவுக்கு ஆதரவாகப் பிரசாரம் செய்தவர் சரத்குமார். சமீபத்தில் நடைபெற்ற புதுக்கோட்டை இடைத்தேர்தலில் சரத்குமாரை அழைக்கவில்லையாம். "பிரசாரத்துக்கு வரலாமா?" என்று சரத் கேட்டாராம். "அவசியம் இல்லை. நன்றி" என அன்பாக மறுத்துவிட்டார்கள்.



விக்னேஷ்-ஈஸ்வரிராவ்
படம்:-ராமன் அப்துல்லா

## துணுக் ஜூஸ்

☛ நடிகை ஷில்பா ஷெட்டி இப்போது படப்பிடிப்பு முடிந்ததும் நடிகர்களுடன் அமர்ந்து அறுவைக் கச்சேரி நடத்துவதில்லை. ஏன்? "செக்ஸ் ஜோக்ஸ் அடிப்பார்கள். செக்ஸ் கதை சொல்லுவார்கள். எனக்கு செக்ஸ் அனுபவம் குறைவு. அதுதான் ஒதுங்கி இருக்கிறேன்" என்கிறார் ஷில்பா.

☛ நடிகை ரம்பா கிடு கிடுவென்று உயர என்ன காரணம்? சினிமா உலக நெளிவு சுழிவுகளை தெளிவாக அறிந்து அதற்கேற்ப தந்திரங்களை உபயோகிக்கிறாராம். அதுதான் காரணமாம்.

☛ சாதி ஒடுக்குமுறையைக் கண்டித்த இந்தியத் தலைவர் டாக்டர் அம்பேத்கார். அவரது வேடத்தில் நடிக்கிறார் மம்முட்டி. அதற்காக உடலை மெலியவைத்து, முக அமைப்பை மேக் அப் மூலம் மாற்றிக் கொண்டு கஷ்டப்பட்டு நடித்துள்ளாராம் மம்முட்டி.

☛ முன்னாள் குழந்தை நட்சத்திரம் பேபிஷாலினி இப்போது மொடலிங் செய்து வருகிறார். உடல் அழகை பாதுகாப்பதுதான் முக்கியம். சினிமாவில் நடித்தால் உடல் அழகு கெட்டுவிடும். ஒழுங்காகத் தூங்க முடியாது. உடற்பயிற்சி செய்ய முடியாது என்கிறார் ஷாலினி. ஆனாலும் விரைவில் சினிமாவில் தோன்றுவார் பாருங்கள்.

☛ 'காங்கேயன் காளை' படத்தில் நடிக்க 'சீமைப்பசு' தேவை என்று சர்ச்சை கிளப்பியவர் பார்த்திபன். இப்போது அப்படத்தில் பார்த்திபன் ஜோடியாக நடிப்பவர் ரவளி. 'காந்தி பிறந்த மண்', 'திரு மூர்த்தி' படங்களில் நடித்து விஜயகாந்த் ரசிகையாக தன்னைச் சொல்லிக் கொண்டவர் ரவளி.

## பிரபு தேவா

'மிஸ்டர் ரோமியோ' படுதோல்வி அடைந்ததால் அப்செட்டாகி இருந்தார் பிரபுதேவா. இப்போது 'மின்சார கனவு' சூப்பர் ஹிட். பொங்கல் படங்களில் நம்பர் வன். படு உற்சாகமாக இருக்கிறார் பிரபுதேவா.

இந்தியில் 'காதலன்' ஹிட்டானதால் அங்கும் வரவேற்பாம். 'பிரபுதேவா' என்ற பெயரில் இந்தியில் ஒரு படம் தயாராகி வருகிறதாம்.

## அப்பாவும் - மகளும் பாடல்

அமிதாப்பச்சனின் படநிறுவனம் தமிழில் தயாரிக்கும் படம் 'உல்லாசம்'. அஜித்குமார், மகேஸ்வரி இருவரும் உல்லாசமாக நடித்துவருகிறார்கள்.

'உல்லாசம்' படத்துக்கு இசையமைப்பவர் இளையராஜாவின் மகன் கார்த்திக் ராஜா. படத்தில் 'முத்தே முத்தம்மா' என்று தொடங்கும் பாடலை கமலஹாசன் பாடியிருக்கிறார். கமல் பாடியது முந்திய செய்தி.

'உல்லாசம்' படத்தில் இளையராஜாவும் அவரது மகள் பவதாரிணியும் இணைந்து ஒரு பாடலை பாடியிருப்பது பிந்திய செய்தி. "யாரோ யார் யாரோ..." என்று தொடங்கும் பாடலைத்தான் தந்தையும் மகளும் பாடியுள்ளனர்.

## கார்த்திக்—தேவயாணி

### 'உதவிக்கு வரலாமா'

கார்த்திக்-ரக்ஷனா நடித்த படம் 'பூவரசன்'. அது பெரிய வெற்றிப்படமல்ல. ஆனாலும் தயாரிப்பாளர் மற்றும் விநியோகஸ்தர்களுக்கு நஷ்டம் இல்லை.

'பூவரசன்' படத்தை தயாரித்த அதே பட நிறுவனம் மீண்டும் கார்த்திக்கை கதாநாயகனாக வைத்து படம் எடுக்கிறது. படத்திற்கு 'உதவிக்கு வரலாமா' என்று பெயர் சூட்டியுள்ளனர்.

பெண்களை ஏமாற்றும் பித்தலாட்ட வாலிபனாக நடிக்கிறார் கார்த்திக். அதற்காக இந்து, முஸ்லீம், கிறிஸ்தவர் என்று மூன்று வித்தியாச கெட் அப்புக்களில் தோன்றப் போகிறாராம். மூன்று பெண்கள் அவரிடம் ஏமாந்து போகிறார்கள். மூன்று பேரையும் சமாளிக்க கார்த்திக் பயன்படுத்தும் சுவையான உத்திகள்தான் கதையாம்.

கார்த்திக் நடித்த நகைச்சுவை கலந்த காதல் படங்கள் ஹிட்டாகிவருவதால் 'உதவிக்கு வரலாமா' படத்திலும் நகைச்சுவைக்குத்தான் முக்கியத்துவம்.

கார்த்திக் ஜோடியாக நடிப்பவர் தேவயாணி. ஏனைய இரண்டு நாயகிகள் யார் என்பது இன்னமும் முடிவாகவில்லை.

மணிவண்ணன், கவுண்டமணி இருவரும் முக்கிய வேடத்தில் நடிக்கவுள்ளனர். 'பூவரசன்' படத்தை இயக்கிய கோகுல கிருஷ்ணன்தான் இதனையும் இயக்கப் போகிறார். இசை: சிற்பி.



மந்த்ரா
து மாப்பிள்ளை



ரஞ்சிதா

## ரஞ்சிதாவின் வீச்சு

சத்யராஜின் அன்புக்குப் பாத்திரமான நடிகைகளில் ஒருவர் ரஞ்சிதா. ஆனாலும் சமீபகால சத்யராஜ் படங்களில் ரஞ்சிதாவுக்கு நோ சான்ஸ்.

ஜெயராம் ஜோடியாக மிஸ்டர் தேவராஜ் படத்தில் நடித்துக் கொண்டிருக்கிறார் ரஞ்சிதா. அதைத்தவிர குறிப்பிட்டுச் சொல்லும்படியான படம் எதுவும் தமிழில் இல்லை. மறுபடி சத்யராஜுடன் நடிக்க வாய்ப்புக் கேட்டுப் பார்த்தார். சத்யராஜைச் சந்திக்கவே முடியவில்லையாம்.

அதனால் தெலுங்கு மற்றும் மலையாளப் படவுலகப் பக்கம் சென்று திறமையைக் காட்டப்போகிறாராம். அங்கு எந்த புளியங்கொம்பைப் பிடிக்கலாம் என்று தீவிர வலைவீச்சில் ஈடுபட்டுள்ளாராம்.

## அஜித்மீது புகார்

நடிகர் அஜித்குமார் மீது புகார்கள் கிளம்பத் தொடங்கிவிட்டன. படப்பிடிப்புக்களுக்கு ஒழுங்கான நேரத்தில் ஆஜராவதில்லை. கூட நடிக்கும் நடிகைகளுடன் அரட்டை. ஒரே சமயத்தில் பல படங்களுக்கு ஒப்புக் கொண்டுவிட்டு திண்டாடுகிறார். இப்படிப் பல புகார்கள். அதுமட்டுமல்ல படப்பிடிப்பில் ஆங்கிலத்தில் கெட்ட வார்த்தைகளாலும் திட்டுகிறாராம் அஜித்.

அஜித்குமார் பிஸியாவதற்கு முன்னர் ஒப்பந்தமான படம் வெண்ணிலா. தற்போதைய மார்க்கெட் நிலவரத்துக்கு அப்படம் ஒத்துவராது என்பதால் அதில் நடிக்காமல் இழுத்தடிக்கிறாராம். படப்பிடிப்பு பாதியில் நிற்பதால் தயாரிப்பாளர் அஜித்மீது வழக்குப் போடப்போகிறாராம்.


படிப்பகம்

www.padippakam.com

# கொழு கொழு குழந்தைக்கு ஆசையா?

தன் குழந்தை கொழு கொழுவென்று நன்றாக இருக்க வேண்டும் என்று ஆசைப் படாத பெண்கள் யாராவது உண்டா?

அப்படி ஆசைப்படும் பெண்களுக்கு இதோ அருமையான டிப்ஸ்:

ஒரு குழந்தைக்குத் தாய்ப்பால் என்பது முழு அளவிலான சக்தியை வழங்குவது முதல் 3 மாதத்திற்குத்தான். பிறகு கொஞ்சம், கொஞ்சமாக வேறு உணவுகள் கொடுக்க வேண்டும்.



பிறந்த குழந்தைக்கு ஒரு மாதம் முடிவடைந்து விட்டாலே தாய்ப் பாலோடு கொஞ்சம் அவ்வப்போது வென்னீர் கலந்த கரட் அல்லது அப்பிள் சாறு கொடுப்பது நல்லது.

2-3மாதங்கள் எனில் தோடம்பழம், அப்பிள், உலர்ந்த திராட்சை ஆகிய பழங்களின் சாறுகளைக் கொடுங்கள். தவிரவும் கரட், போஞ்சி, தக்காளி, கீரைவகைகள் ஆகியவற்றின் வடிசாற்றினையும் கொடுக்கலாம்.

4-5மாதங்கள் எனில் புழுங்கல் அரிசி, பார்லி, கேழ்வரகு ஆகியவற்றை வறுத்து மாவாக்கி வைத்துக் கொண்டு கஞ்சியாக்கி, அத்தோடு சிறிது பால் சேர்த்துக் கொடுங்கள்.

5-6மாதங்கள் எனில் காய்கறிச்சாறோடு இறைச்சிச்சாறும் கொடுங்கள். இறைச்சிச் சாறை துணியால் வடிகட்டிக் கொடுக்க வேண்டும்.

6 மாதங்களுக்குப் பிறகு அரிசி, பார்லி, வறுத்த பச்சைப்பயறு, உழுந்து ஆகியவற்றை மாவாக்கி கூழாகக் கிண்டிக் கொடுக்கலாம்.

7 மாதங்கள் ஆகும்போது வேகவைத்து மசித்த உருளைக்கிழங்கு, அப்பிள் மற்றும் பழுத்த வாழைப்பழம் கொடுக்கலாம். ரஸ்க், பிஸ்கட் பாலில் ஊற வைத்துக் கொடுக்கலாம்.

8 மாதங்களில் மெதுவான இட்லி, இடியப்பம், பாலாடைக்கட்டி கொடுக்கலாம்.

9 வது மாதத்திலிருந்து வேக வைத்த முட்டையின் மஞ்சட்கருவை மசித்துக் கூழுடன் கலந்து கொடுக்கலாம்.

10 வது மாதத்தில் சூடான பாலில் பச்சை முட்டையை அடித்துக் கலக்கி வடி கட்டிக் கொடுக்கலாம்.

9-10 மாதங்களில் அரிசிச் சோற்றுடன் வேக வைத்த பருப்பு பிசைந்து கொடுக்கலாம். நன்றாக மசித்த இறைச்சி கொடுக்கலாம்.

18 வது மாதத்தில் இருந்து முள் இல்லாத மீன் சாப்பிடக் கொடுக்கலாம்.

இவற்றோடு ஊட்டச்சத்து மிக டொனிக்குகளை அவ்வப்போது கொடுத்து வரவும்.

குழந்தைகளுக்கு எந்தவொரு உணவைக் கொடுக்கும்போதும் தொடக்கத்தில் அது ஏற்றுக் கொள்கிறதா, இல்லையா என்பதைத் தெரிந்து கொடுக்க வேண்டும். எனவே மிகக் குறைந்த அளவில் கொடுத்து பார்சித்துப் பார்த்து விட்டுப் பிறகு கொஞ்சம் கொஞ்சமாக உணவின் அளவைக் கூட்ட வேண்டும்.

முதலில் கெட்டியான உணவைக் கொடுக்காமல் சிறிது தளர்வான உணவைக் கொடுக்கவேண்டும்.

ஒரே வகையான உணவையே குழந்தைக்கு நீண்ட காலமாகக் கொடுக்கக் கூடாது. உணவின் மீது அதற்கு வெறுப்பு ஏற்பட்டு விடும்.

# டேக் இட் ஈஸி

'பேர்சனாலிட்டி' என்றவுடன் நமது நினைவுக்கு வருவது நல்ல மிடுக்கான தோற்றம், சிவந்த நிறம், எடுப்பான மூக்கு, நல்ல உயரம், அதற்கேற்ற உடல்வாகு- இப்படிப்பட்ட கவர்ச்சி மனிதர்தான்.

மற்றவர்களைக் காந்தம் போல் கவர்ந்திழுக்கும் ஆற்றலை 'பேர்சனாலிட்டி' என்கின்றோம். அப்படி என்றால் உடல் தோற்றத்தை மட்டுமே 'பேர்சனாலிட்டி' என்று கூறமுடியாது.

நடிகர் ரஜினிகாந்தை தோற்றத்தில் ஒப்பிட்டால், எங்கோ போய்விடுவார். ஆனால் அவருக்கு 'பேர்சனாலிட்டி'க்குக் குறைவில்லை. காரணம் அவரது ஸ்டைல் மற்றும் நடவடிக்கை மூலமாக தமிழகத்தில் ஓர் ஆட்சி மாற்றத்திற்கே அவர் காரண கர்த்தாவாக இருந்துள்ளார்.

அன்னை தெரேசா பேரழகியா என்ன? இல்லையே! அல்லது அவர் அறிவாற்றல் அதிகம் கொண்டவரா? உலகின் தலைசிறந்த விருதான நோபல் பரிசு கிடைக்கக் காரணமாக இருந்தது அவரது சுயநலமற்ற சமுதாயத் தொண்டே ஆகும் என்றால் மிகை இல்லை.

கிராமப்புறத்தில் பலருக்கு மற்றவர்களிடம் ஒரு மரியாதை இருக்கும். அவர்கள் பணம் படைத்தவர்களாகவோ, செல்வாக்கு உள்ளவர்களாகவோ இருக்க மாட்டார்கள். நல்ல மனிதர்; கெட்ட பழக்கமில்லை; மற்றவர் வம்பு தும்புக்குப் போக மாட்டார்; அவர் வாயில் பொய்யே வராது. இப்படிப்பட்ட நடத்தைகளால் அவர்கள் 'பேர்சனாலிட்டி' பெற்றுள்ளனர்.

இதிலிருந்து 'பேர்சனாலிட்டி' என்பது வெறும் உடல் தோற்றம் மட்டுமல்ல என்ற முடிவுக்கு நாம் வரலாம்.

'பேர்சனா' என்ற சொல்லுக்கு முகமூடி அல்லது முகத்திரை என்று பொருள். ஒரு குறிப்பிட்ட சூழ்நிலையில் ஒருவன் எப்படி நடந்து கொள்கிறான்- (மிக வெளிப்படையாகக் கூற வேண்டுமானால் எப்படி நடிக்கிறான், வேடம் போடுகிறான்) என்பதை 'பேர்சனாலிட்டி' எனலாம்.



'பேர்சனாலிட்டி' என்பதைத் தமிழில் 'ஆளுமை' என்ற அழகான சொல்லால் குறிப்பிடலாம்.

'ஆளுமை'- பண்பு நலன், குண இயல்பு என்ற மனத்தன்மைகளைக் குறிப்பிடுகின்றது. 'ஆளுமை' எப்படி உருவாகின்றது என்பதில் சிக்மன்ட் ஃபிராய்ட் முதல் இன்றைய உளவியலாளர்கள்வரை பலரும் வேறுபடுகின்றார்கள்.

உடல் பருமனாக இருப்பவர்கள் மகிழ்ச்சியோடும், கலகலப்பாகவும் இருப்பார்கள். உடற்கட்டோடு உள்ளவர்கள் வலிமையுடன் கபடம் கொண்டு திகழ்வார்கள். மெலிந்திருப்பவர்கள் சிடுசிடுவென இருப்பார்கள் என்று கிரிஸ்மர், ஷெல்டன் போன்றவர்கள் கணித்திருக்கிறார்கள்.

தன்னுடைய குணத்தைப் பிறர் கூறக் கேட்டு மகிழும் ஒரே இனம் மனித இனம் தான். யூங் என்ற அறிஞர் மனிதர்களை அகமுகத்தோர் என்றும் புறமுகத்தோர் என்றும் இருவகையாக வகைப்படுத்துகின்றார். குறுகிய எல்லைக்குள் இருப்பவர்கள் அகமுகத்தோர்; கலகலப்பாக உள்ளவர்கள் புறமுகத்தோர் எனப்படுகின்றனர்.

சிக்மன்ட் ஃபிராய்ட், மனநிலை-செக்ஸ் வளர்ச்சியில் உள்ள படிநிலைகளில் குழப்பம் ஏற்பட்டால் ஆளுமையில் மாற்றம் ஏற்படும் என்கிறார்.

ஆளுமை வளர்ச்சிக்குக் குடும்ப சூழ்நிலை, தாயின் அன்பு ஆகியவை முக்கிய காரணிகளாகும். தாய் அன்பு புறக்கணிக்கப் பட்ட ஒரு குழந்தையின் முகம் கொடூர தோற்றம் கொண்டிருப்பதை நாம் நடைமுறை வாழ்க்கையில் காணலாம்.

பொதுவாக ஆளுமைமிக்க மனிதராக ஒருவர் மாற வேண்டும் என்றால் சகிப்புத் தன்மை இல்லத்தில் இருந்தால் போதும். மேலும், நீங்கள் மற்றவர் போன்றும் 'பேர்சனாலிட்டி'யைப் பெறவேண்டும் என்றால் ஏதாவது ஒரு துறையில் ஆர்வம் காட்டிச் சாதனை படையுங்கள்.


## வரும் வார முரசில் அமர்க்களமான ஆரம்பம்



முரசு- அருள் ஜுவலர்ஸ்

இணைந்து வழங்கும்

தங்கமாலைப் பரிசுப் போட்டி

மேலும் பல ஆறுதல் பரிசுகள்

போட்டிக் கூப்பன்களை சேகரிக்கத் தயாராகுங்கள்


## லேடீஸ் ஸ்பெஷல்

# மின்சார சமாச்சாரம்

மாத முடிவில் மின்சாரத்துக்கான பற்றுச்சீட்டைப் பார்த்துவிட்டுத்தான் சிலர் பதறிப்போகிறார்கள். இந்தளவு தொகை எப்படி வந்திருக்கிறது? என்று ஆளாளுக்குக் கேட்டுக் கொண்டிருப்பார்கள்.

மின்சாரத்தை சிக்கனமாகப் பாவிக்கப் பல வழிகள் உள்ளன. அவற்றைக் கடைப்பிடித்தால் பற்றுச்சீட்டைப் பார்த்துப் பயப்பட வேண்டியதில்லை.

மின்சாரத்தைச் சேமிக்கச் சில சிக்கன வழிகள் இதோ உள்ளன:

* லைட், ஃபேன் போன்றவற்றை அவற்றின் தேவை முடிந்ததும் நிறுத்திவிடுங்கள்.
* நன்றாகக் காயாத துணிகளைக் காயவைக்க இஸ்திரிப் பெட்டியைப் பயன்படுத்தாதீர்கள்.
* ஒவ்வொரு துணியாக இஸ்திரி போட்டுக் கொண்டிருப்பதைத் தவிர்க்கவும். ஒரே நேரத்தில் சகல துணிகளையும் இஸ்திரி (அயர்ன்) போடுங்கள்.
* மின்சாரத்தில் இயங்கும் பொருட்களை காலையிலும், இரவு 9 மணிக்கு மேலும் இயக்குவது நல்லது.
* மாலை 6 மணிமுதல் இரவு 9 மணிவரை மின்சார உபயோகம் அதிகமாக இருக்கும். அந்த நேரத்தில் நீங்களும் 'மிக்சி', 'கிரைண்டர்' போன்றவைகளை உபயோகித்தால் அவை பழுதடையும் நிலை ஏற்படலாம்.
* குளிர்சாதனப் பெட்டியை அடிக்கடி திறந்து திறந்து மூடினால் மின்சாரச் செலவு அதிகமாகும்.
* பல்புகளை துடைத்துச் சுத்தம் செய்யுங்கள். பல்புகளுக்குப் பதில் 'டியூப்லைட்' பாவிப்பது மின்சாரச் செலவைச் சிக்கனமாக்கும்.
* இரண்டு அறைகளுக்குச் சேர்த்து ஒரு 'டியூப் லைட்' பயன்படுத்தலாம்
* விடிந்தது முதல் தூங்கும் நேரம் வரை ரீ.வி மற்றும் ரேடியோவை இயக்கிக் கொண்டே இருக்கக்கூடாது.

மின்சாரச் செலவைக் குறைக்க வேண்டுமானால் வீட்டில் உள்ள அனைவருமே முயற்சி செய்ய வேண்டும்.

# பிரசவம்

## டாக்டர் ஷீலா சத்யகுமார்

**கேள்வி:** பிரசவகாலத்தில் அடிக்கடி 'ஸ்கேன்' எடுப்பதால் கருவுற்றிருக்கும் குழந்தையைப் பாதிக்கும் என்று சொல்லப்படுகிறதே?

தவறான கருத்து. ஸ்கேன் எடுப்பதால் குழந்தைக்கு ஒன்றுமே பாதிப்பில்லை. ஏனெனில் அது எக்ஸ்-ரே அலைகள் கிடையாது. எதிரொலி மாதிரி, வெறும் ஒலி அலைகள் தான். ஒலி அலைகள் குழந்தைகளைப் பாதிப்பதில்லை.

எத்தனை முறை எடுத்தாலும், அது குழந்தைக்குப் பாதுகாப்பான ஒரு பரிசோதனைதான்.

ஸ்கேன்- மூன்றாவது மாதமும், ஆறாவது மாதமும், ஒன்பதாவது மாதமும் எடுக்கப் படுகின்றது. ஸ்கேன் எடுப்பது முக்கியம். குழந்தை கர்ப்பப்பையில்தான் தங்கியிருக்கிறதா? (சிலசமயம் குழந்தை கர்ப்பப்பைக்கு வெளியேயும் தங்கியிருக்கலாம்.) அந்த மாதிரி இருந்தது என்றால், குழந்தை நோர்மலாக வளர முடியாது. மூன்று மாதத்திற்குப் பிறகு, அதுவே உள்ளுக்குள் உடைந்து தாயின் உயிருக்கு ஆபத்தாக முடியும். இதை 'எக்டோபிக் ப்ரக்னென்ஸி' என்று சொல்கிறோம்.

இந்தமாதிரிப் பிரச்சனை இருந்தால், மூன்றாவது மாதம் ஸ்கேன் எடுத்துப்பார்க்கும் போது தெரிந்துவிடும். இப்படி இருக்கும் பட்சத்தில் உடனே கருக்கலைப்புச் செய்து விடலாம். சில சமயத்தில் உருவ குறைபாடுகள் உள்ள குழந்தையும் தெரியும். ஆறாவது மாதம் ஸ்கேன் எடுத்துப் பார்க்கும் போது இப்படிப்பட்ட குறைபாடுகள் தெரிந்துவிடும்.

இதைத் தவிர ஸ்கேனில் குழந்தையின் அமைவிடம் மிக முக்கியமாகப் பார்க்கப்படுகின்றது. நஞ்சுக்கொடி எந்த இடத்தில் இருக்கிறது போன்ற விஷயங்களும் மிக உன்னிப்பாகக் கவனிக்கப்படுகின்றது.

நஞ்சுக்கொடி மேலே இருந்தால்தான், பிரசவவலி வரும்பொழுது குழந்தை பிறந்தவுடன், நஞ்சுக்கொடி பிரிந்து இரண்டாவதாக வரும். சில சமயம் நஞ்சுக்கொடி கீழே இறங்கியிருக்கும். குழந்தை மேலே இருக்கும். இப்படி இருந்தால் சாதாரண பிரசவத்திற்கு வாய்ப்புக் கிடையாது. வலி வந்ததுமே நஞ்சுக்கொடி பிரிந்திட்டால், குழந்தை உயிருக்கு ஆபத்தாய் முடியும். அப்படியே தாயின் உயிருக்கும் ஆபத்து. எனவே ஸ்கேன் பண்ணிப்பார்க்கும் பொழுது இந்தமாதிரிப் பிரச்சனைகள் இருந்தால் 'ப்ளஷண்டாப்தீரியா' என்று அழைக்கின்றோம்.

இந்த மாதிரி பிரச்சனை உள்ளவர்களுக்கு சிசேரியன் பண்ணித்தான் ஆக வேண்டும். நாங்களே திகதி முடிவு செய்து, முன்கூட்டியே சிசேரியன் பண்ணிவிடுகிறோம்.

'பிரசவ திகதிக்கு முன்னால் பிரசவ வலி வராமல் இருக்கிறது. ரொம்ப நாள் கடந்து விட்டது.' இப்படிப்பட்டவர்களுக்கு ஸ்கேன் பண்ணிப் பார்த்துவிட்டு, 'இல்லை, இன்னும் கூட நீங்கள் காத்திருக்கலாம். குழந்தையின் நிலைகள் எல்லாம் சரியாக இருக்கின்றன,' என்று சொல்லி விடலாம். இதே போல் தவறான அபிப்பிராயங்களும் இருக்கின்றன.

**"ஸ்கேன் எடுப்பதால் பாதகம் என்பது தவறு"**



'கர்ப்பமாக இருப்பவர்கள் மத்தியானம் தூங்கக் கூடாது. அது நல்லதல்ல,' என்று பெரியவர்கள் சொல்வார்கள். நன்றாக ஓடியாடி வேலை செய்யலாம்; ஓய்வு எடுக்கக் கூடாது; என்றெல்லாம்கூடச் சொல்வார்கள். ஆனால் தேவையான சாதாரண வேலைகளைச் செய்யலாம். இரவு எட்டு மணி நேரம் தூங்க வேண்டும். மதியம் இரண்டு மணி நேரமாவது களைப்பாற வேண்டும்.

மற்றப் பெண்கள் காலையில் இருந்து இரவு வரைக்கும் வேலை செய்வதுபோல, இவர்கள் செய்யக்கூடாது. கடினமான வேலைகள் செய்வதைத் தவிர்த்து விடுவது நல்லது. ஆனால், அன்றாட எளிதான வீட்டு வேலைகள் செய்வது மட்டும் நல்லது.

**கேள்வி:** பெண்கள் உயரத்திற்கும் பிரசவத்திற்கும் ஏதேனும் சம்பந்தமுண்டா?

உயரமான பெண்களுக்குப் பிரசவம் சுலபமானது. ஆனால் குள்ளமானவர்களுக்குத்தான் பிரச்சனை. மிகவும் குள்ளமாக இருக்கின்ற தாய்மார்கள்- 5அடிக்கும் குறைவானவர்கள்- 4'-10", 4'-11" என்கிற அளவில் உயரம் குறைவாய் இருக்கிற தாய்மார்களுக்கு இடுப்பு மிகவும் குறுகலாக இருக்கும். அந்தக் குழந்தை கருவில் வளர வளர தாய்க்குக் குழந்தையைக் கொள்கின்ற அளவிற்கு இடுப்பில் இடமிருக்காது.

அதனால், பின்னால் அந்தத் தாய்க்கு சிசேரியன் செய்யக்கூடிய நிலை ஏற்பட்டு விடுவதால், அதையும் நாங்கள் முன்கூட்டியே பட்டும் படாமலும் சொல்லி விடுகின்றோம். 'பயப்படற மாதிரி இல்லை. உயரம் குறைவாக இருப்பதால் நீங்கள் நல்லா நடக்க வேண்டும். உடற்பயிற்சி செய்ய வேண்டும். கவனமாக இருக்க வேண்டும்' என்று ஆலோசனை கூறுவோம்.

இதேபோல்தான் குண்டாக இருப்பவர்களுக்கும், 'நிறை கூடாமல் இருக்கவேண்டும், ஏனெனில் பிரசவவேளையில் இதனால் கூட பிரச்சனைகள் வருவதற்கு வாய்ப்புக்கள் உள்ளன' என்றும் கூறுவோம்.

**கேள்வி:** பொய்ப் பிரசவ வலி என்றால் என்ன? அதை எப்படித் தெரிந்து கொள்வது?

(பதில் அடுத்த வாரம்)

## பரிசு பெற்றவர்



முரசின் பட்டுச்சேலைப் பரிசுப் போட்டியில் வெற்றி பெற்ற அதிர்ஷ்டசாலிகளில் ஒருவர் இவர்தான்.

விழாசினி அன்பழகன்
6, வைத்தியசாலை வீதி,
கதிரேசன் கோயில் வீதி, தலவாக்கலை.

## இந்த வாரம் யாருக்கு பட்டுச்சேலை? திருகோணமலை வாசகிக்கு அதிஷ்டம்!

இவ்வாரம் பட்டுச்சேலை பரிசுபெறும் வாசகி இவர்தான்.

T.H.நிஹாரா.
முதலாம் வட்டாரம்,
நிலாவெளி. திருகோணமலை.

பரிசுபெற்ற வாசகியை முரசின் பல்லாயிரம் வாசகவாசகியர் சார்பில் வாழ்த்துவோம்.

அடுத்தவாரம் யாருக்கு? ஒருவாரம் பொறுமையாக இருக்கக் கூடாதா?!

இவ்வாரம் பரிசுக்குரியவர் பரிசு பெறும் திகதி பற்றி தபால் மூலம் அறிவிக்கப்படும். தபால் மூலம் அறிவிக்கப்படும் விபரங்களைப் பெற்றபின் எம்முடன் தொடர்பு கொண்டு பரிசினைப் பெறலாம்.

## பட்டுச் சேலை பரிசுத் திட்டம்

மகளிர் மட்டும் மகளிர் மட்டும்



☆ ஒவ்வொரு வாரமும் ஒரு அதிஷ்டசாலி தேர்ந்தெடுக்கப்படுவார். வாரத்தில் ஒருவருக்கு மட்டுமே பட்டுச்சேலை பரிசு வழங்கப்படும்.

☆ கீழேயுள்ள கூப்பனை நிரப்பி தபால் அட்டையில் ஒட்டி அனுப்பினால், போதுமானது.
(பதிவுத் தபால்கள் ஏற்றுக்கொள்ளப்படமாட்டா)

☆ ஒருவர் ஒன்றுக்கு மேற்பட்ட கூப்பன்களையும் அனுப்பலாம்.

**வாரம் ஒரு பட்டுச் சேலை** BF

பெயர்:..............................

முகவரி:..............................

..............................

கையொப்பம்:..............................

உண்மை – நேர்மை – வெளிப்படைத் தன்மை

பி.கு: அதிஷ்டசாலியாக தெரிவு செய்யப்படுகிறவர்கள் தமது புகைப் படங்களை அனுப்பினால் பிரசுரிக்க உதவும்.

கூப்பனை அனுப்பிவைக்க வேண்டிய இறுதித் திகதி: 08-03-1997

அனுப்பவேண்டிய முகவரி- 'வாரம் ஒரு பட்டுச்சேலை', தினமுரசு வாரமலர், த.பெ.இல-1772, கொழும்பு.



படிப்பகம்

## நீ பறித்துவிட்டுப்போன பாதி ரோஜாக்கள்

எத்தனைமுறை
என் கற்பனை
நகங்களால் உன்
இதயத்தில் கீறி
அழகு பார்த்தேன்!
..
உன் உதடுகளை
என் உடம்பில் தொலைத்து
விட்டு நீ தேடிய போது
நான்
குருவிச்சை ஆற்றில்
குளித்துக் கொண்டிருந்தேன்!
..
என் நேசச்சித்திரங்களை
எல்லாம்
உன் ஆசைச் சுவரில்
வர்ணம் ஒழுக ஒழுக
கீறி
அழகு பார்த்தேன்!
..
நீ என்னுள்
ஒளிந்து கொண்டிருந்த
தலை வாசலைத்
தேடித்தேடியே
என் கண்கள்
ஒளியிழந்து போயின!
..
உன் பெயரை
எழுதி வைத்த
கத்தாழை மரங்கள்
எல்லாம்
என்னைக் கண்டவுடன்
கதறுவதைக் கேட்கிறேன்!
..
என்னுள்ளத்தில்
ரோஜா பறித்தவளே!
எங்கே போய்
ஒளிந்து கொண்டாய்?
..
சண்ட மாருதத்தில்
நீ காணாமலாகிப் போன
பூஞ்சிட்டு.
..
முகவரிதொலைந்தவளே!
உன் இருப்பிடம்
பற்றிய தேடலில்
கவியாகி ஒவ்வொரு
மர இடுக்கிலும்,
ஒவ்வொரு வீட்டு
வாசல் படிகளிலும்,
ஒவ்வொரு பயணத்திலும்,
உன்னை
நினைத்துப் பார்க்கிறேன்.
நீ வராவிட்டாலும்
என்
நினைவுகள் உனக்கு
வருமல்லவா?

மானுடபுத்ரன்.

## தேன் கிண்ணம்

### நிகழ்வுகள்

எவரெஸ்ட் சிகரத்தில்
சோகம்....

மரியானா அந்தத்தில்
மானுடம்....

வாழ்வு–சாவு இடையில்
'டாம்' விளையாட்டு....

வான்வெளியில்
காற்றாடியாய்
சுமைதாங்கிய உள்ளங்கள்...

காசே
துலாக்கோலாகிவிட்ட
சமுதாயம்....

இன்னும்
விடியலைத் தேடிய
பிரயாணிகளின்
மேற்கு நோக்கிய பயணம்...

கையில் வெண்ணெய்யுடன்
நெய் தேடும்
மனிதப் படைப்புக்கள்....

பிச்சைக் காரனிடமே
பிச்சை கேட்கும்
கரங்கள்....

அர்த்தமற்றுப்போன
பிரியங்கள்....

அக்குறணை நவ்ரஜி.

### உள்ளிருந்து அழும் ஊமையின் கனவு

பொங்கிவழியும்
பால் நிலவின் ஒளிபோல
உள்ளமெங்கும்
ஒளி சிந்தியவளே!
நாம் தாண்டிவந்த
பௌர்ணமிக் கிரணங்கள்– உன்
நினைவில் இன்னும்
நிலைத்திருக்கிறதா?
–0–
உனக்கு மடல்வரைய
எத்தனிக்கும் பொழுதெல்லாம்
கண்கள் குளமாக,
கரங்கள் நடுநடுங்க,
நெஞ்சம் குமுறியழ
காகிதத்தின் மீது
கண்ணீர்த் துளிகள்
விழுந்து சிதறும்!
–0–
வாழ்வைக் கேட்டு வந்த–எனை
வெற்றுக்கையுடன்
வழியனுப்பி வைத்தாய்!
உன்னிடம் வந்த– அந்த
காலடிச் சுவடுகளை–இன்று
கண்ணீரால்
கழுவிக் கொண்டிருக்கிறேன்!
–0–
நீ என்னைக்
கைவிட்ட அன்று–
காதலைக் கேவலப்படுத்திக்
கண்ணீரில் எனைத்
தள்ளிவிட்ட அன்று–
அன்பின் தளைகளெல்லாம்
அறுபட்டுப் போயினவே!
–0–
உனது அன்பு எனக்கு
உரிமையில்லாத போது
நான் எப்படி உன்னை
நெருங்கி வந்து
நேசத்தை வாழவைப்பேன்?
–0–
உனது பெற்றோர்தான்
உனக்குப் பெரிதானால்,
என்மீது உயிரை வைத்திருப்பதாய்
எதற்காகப் பொய் சொன்னாய்?
–0–
உறவினரின் சம்மதம் தான்
உனது நிம்மதி என்றானால்,
எனது அன்பையாசித்து
எதற்காகப் பின்தொடர்ந்தாய்?
–0–
நீ காட்டிய
அன்பின் வடிவத்தில்
எல்லாச் சாபங்களும்
எனக்காகக் காத்திருந்தன!
–0–
பார்த்தாயா?
உன்னோடு நான் வாழ
ஓராயிரம் கனவுகளுடன்
கட்டிவைத்திருந்த
கூண்டுக்குள்
நான் இன்று சிறையானதை...?
–0–
எனது ஆசைகள் யாவும்
ஊமையின் கனவுகளாகி
உள்ளிருந்து அழுகின்றன!
–0–

செல்வி பஹீமா ஜஹான்–
மெல்சிரிபுர.

### காதலி

இந்த வழியாக
வா!
உயரத்தில் நாம்
உட்காரலாம்.
**
எம்மைச் சுற்றி
முளைத்திருக்கும்
முட்களின் முனைகளை
முடமாக்கி,
ஒளிக் கீற்றுக்களில்
பாதம் பதிப்போம்
வா!
**
வேதனைப் பனிமூட்டங்களின்
முகங்கள் மறைய
சூரியனாக
மறுபிறவி எடுப்போம்;
இந்த
வழியாக வா!
**
இருளின் இறக்கையில்
உதயவரிகள்
எழுதுவோம்!
பழுதுபட்ட மனங்களை
உழுது பண்படுத்த
கண்களில் நீரை
கத்தரிப்போம்!
**
பூக்களின்
அழைப்பில் மயங்கும்
தேனீக்கள் போல
அன்பு மது அருந்தி
துன்பத்தின் வேர்களை
சாய்ப்போம்!
**
வா!
காதலி
வா!
**
பாலையும்
கள்ளையும்
பகுத்தறிய வேண்டும்;
வா!
**
இந்த
உலக அமாவாசையில்
ஒரு
பௌர்ணமியாக
நாம் பிறப்போம்!
**
தாரகைகளுக்கு
தலைமைதாங்கும்
நிலவைப்போல,
அன்புக்கு
தலைமை தாங்குவோம்
வா....!
இந்த வழியாக!
**
நாம்
கிளிகளைப்போல
வாழலாம்;
ஒளிகளோடு
உறவாடலாம்;
இருள் தேசத்திற்கு
ஒளி உடை
கொடுக்கலாம்;
வா....!
காதலி
இந்த வழியாக!

நிந்ததாசன்

---

தூரத்தில்
தோன்றியதும்
துள்ளிச் சிரித்து
தள்ளிப் போனது
பள்ளிக்காலம்.
***
கை கோர்த்து,
கதைபேசி,
கண்ணசைத்து,
கையசைத்து,
கனவு சுமந்தது
காதல் காலம்.
***
மெல்ல கைதொட்டு,
கட்டிலிட்டு,
இதழ்கடித்து,
முயங்கியது
பள்ளியறைக் காலம்.
***
நெஞ்சில் ஏக்கத்தையும்
கையில் 'ஏகே'யையும்
'என் சந்ததி
சுமப்பதை'
எந்தக் காலத்தில்
வகைப்படுத்த...?

சுபா வரன்–கண்டி.

### காலங்கள் மாறாதோ?

காரிருளும் பனிமழையும்
பூத்தூவும் நம் நாட்டில்
காரிகையாள் கண்ணீரால்
கவியெழுதும் நேரமிது!
▫▫
தென்றல் புயலாகி
தேசம் சிவப்பாகி
வசந்தம் வெறுப்பாகி
வாழ்க்கை நெருப்பாகும்
நேரமிது!
▫▫
கொஞ்சும் கிளிமொழியும்
அஞ்சுக மான் மரையும்
நெஞ்சம் களித்திருந்த
காலமெங்கே?
▫▫
காலங்கள் மாறி–நம்
கவலைகள் விலகாதோ?
பாதைகள் மாறா–நம்
பயணங்கள் தொடராதோ?
▫▫
மெல்லிளம் காற்றும்
அல்லி மலரும் அருவிதோறும்
இசைபாடும் இனிய
காலம் இன்று மலராதோ?
▫▫



குண்டு வீசும் இடமெல்லாம்
வெண்டாமரை மலராதோ?
போர் விமானம் சுற்றும்
வெளியெல்லாம்
வெண்புறாக்கள் பறவாதோ???

ப. ராதா–
பல்கலைக்கழகக்
கல்லூரி, வவுனியா.

---

## யார் இவர்கள்?



குழந்தைகளாக உள்ள இருவரும் நன்கு பிரபலமானவர்கள். முதலில் இருப்பவர் விளையாட்டு வீரர். இரண்டாவதாக குழந்தை முகம் காட்டுபவர் அரசியல் தலைவர். மணமாலையுடன் நிற்கும் இளைஞர் ஒரு கலைஞர். கண்டுபிடியுங்கள். விடையை சரிபார்க்க பக்கம் 18ஐ நாடுங்கள்.






---

# இந்த வாரம் உங்கள் பலன்

(02.03.1997 தொடக்கம் 08.03.1997 வரை)

சோதிட மாமணி 'தில்லை'

## நவக்கிரக சஞ்சாரம்

| | |
|---|---|
| கும்பம் | - சூரியன், வெள்ளி. |
| மீனம் | - சனி, புதன், கேது. |
| சிம்மம் | - செவ்வாய் (வக்கரகம்) |
| கன்னி | - இராகு |
| மகரம் | - வியாழன். |

சந்திரன்- விருட்சிகம், தனு, மகரம் ஆகிய இராசிகளில் இவ்வாரம் சஞ்சரிப்பார்.

### மீனம்: சுப நேரம்

(பூரட்டாதி நாலாங்கால், உத்திரட்டாதி, ரேவதி)

| | | | |
|---|---|---|---|
| ஞாயிறு- மனமகிழ்ச்சி, செலவு மிகுதி. | பி.ப. | 2 | மணி |
| திங்கள்- உறவினர் உதவி, பொருள்வரவு. | பகல் | 12 | மணி |
| செவ்வாய்- இனசன நன்மை, காரியானுகூலம். | பி.ப. | 1 | மணி |
| புதன்- வெளியிட வாழ்க்கை, மனக்குறை நீங்கும். | பி.ப. | 2 | மணி |
| வியாழன்- முயற்சி பலிதம், அந்நியர் உதவி. | பி.ப. | 3 | மணி |
| வெள்ளி- உயர்ந்த நிலை, மனமகிழ்ச்சி. | பி.ப. | 1 | மணி |
| சனி- தொழில் சிறப்பு, மனக்குறை நீங்கும். | பகல் | 12 | மணி |

அதிஷ்டநாள்-புதன், அதிஷ்ட இலக்கம்-5

### மேடம்: சுப நேரம்

(அச்சுவினி, பரணி, கார்த்திகை முதற்கால்)

| | | | |
|---|---|---|---|
| ஞாயிறு- பெரியோர் உதவி, கௌரவம். | பி.ப. | 3 | மணி |
| திங்கள்- இனசன நன்மை, தொழில் விருத்தி. | பகல் | 12 | மணி |
| செவ்வாய்- அந்நியர் உதவி, மனக்குறை நீங்கும். | பி.ப. | 2 | மணி |
| புதன்- உயர்ந்த நிலை, பொருள் வரவு. | பகல் | 12 | மணி |
| வியாழன்- கடன் சுமை, வெளியிட வாழ்க்கை. | பி.ப. | 1 | மணி |
| வெள்ளி- மனக்குறை நீங்கும், அந்நியர் நட்பு. | பி.ப. | 2 | மணி |
| சனி- பலவித பேறு, மனமகிழ்ச்சி. | காலை | 7 | மணி |

அதிஷ்டநாள்-புதன், அதிஷ்ட இலக்கம்-5

### இடபம்: சுப நேரம்

(கார்த்திகைப் பின்முக்கால், ரோகிணி,மிருகசீரிடத்துமுன்னரை)

| | | | |
|---|---|---|---|
| ஞாயிறு- தொழில் சிறப்பு, முயற்சி பலிதம். | பி.ப. | 1 | மணி |
| திங்கள்- உயர்ந்த நிலை, மன மகிழ்ச்சி. | பகல் | 12 | மணி |
| செவ்வாய்- வீண் முயற்சி, தொழில் மந்தம். | பி.ப. | 2 | மணி |
| புதன்- கடன் தொல்லை, பணவரவு குன்றும். | பி.ப. | 4 | மணி |
| வியாழன்- வீண் தொல்லை, மனக் கலக்கம். | மு.ப. | 9 | மணி |
| வெள்ளி- தொழில் மந்தம், பணக் கஷ்டம். | பி.ப. | 3 | மணி |
| சனி- மனக் குறைநீங்கும், உயர்ந்த நிலை. | பகல் | 12 | மணி |

அதிஷ்டநாள்-திங்கள், அதிஷ்ட இலக்கம்-2

### மிதுனம்: சுப நேரம்

(மிருகசீரிடத்துப் பின்னரை, திருவாதிரை, புனர்பூசத்து முன் முக்கால்)

| | | | |
|---|---|---|---|
| ஞாயிறு- இனசன நன்மை, மனக்குறை நீங்கும். | பி.ப. | 4 | மணி |
| திங்கள்- உறவினர் உதவி, மன மகிழ்ச்சி. | பகல் | 12 | மணி |
| செவ்வாய்- தொழில் சிறப்பு, கௌரவ நிலை. | பி.ப. | 2 | மணி |
| புதன்- அந்நியர் உதவி, பொருள் வரவு. | பி.ப. | 3 | மணி |
| வியாழன்- தொழில் கஷ்டம், காரியத் தடை. | பி.ப. | 1 | மணி |
| வெள்ளி- தொழில் விருத்தி, பணவரவு. | பகல் | 12 | மணி |
| சனி- மனக் கலக்கம், காரியானுகூலம். | பி.ப. | 2 | மணி |

அதிஷ்டநாள்-வெள்ளி, அதிஷ்ட இலக்கம்-4

### கும்பம்: சுப நேரம்

(அவிட்டத்துப் பின்னரை, சதயம், பூரட்டாதி முன் முக்கால்)

| | | | |
|---|---|---|---|
| ஞாயிறு- பயனுள்ள செயல், மன மகிழ்ச்சி. | பி.ப. | 3 | மணி |
| திங்கள்- உயர்ந்த நிலை, புதிய முயற்சி. | பகல் | 12 | மணி |
| செவ்வாய்- மனக் கலக்கம், செலவு மிகுதி. | பி.ப. | 2 | மணி |
| புதன்- தொழில் சிறப்பு, அந்நியர் உதவி. | பி.ப. | 3 | மணி |
| வியாழன்- வெளியிடப் பயணம், தொழில் சிறப்பு. | பி.ப. | 1 | மணி |
| வெள்ளி- இனசன நன்மை, மன மகிழ்ச்சி. | பி.ப. | 2 | மணி |
| சனி- பொருள் வரவு, காரியானுகூலம். | பி.ப. | 4 | மணி |

அதிஷ்டநாள்-திங்கள், அதிஷ்ட இலக்கம்-4

### கர்க்கடகம்: சுப நேரம்

(புனர்பூசத்து நாலாம் கால், பூசம், ஆயிலியம்)

| | | | |
|---|---|---|---|
| ஞாயிறு- செலவு மிகுதி, ஆடம்பர வாழ்க்கை. | பி.ப. | 1 | மணி |
| திங்கள்- உயர்ந்த நிலை, கௌரவம். | பகல் | 12 | மணி |
| செவ்வாய்- இனசன நன்மை, மன மகிழ்ச்சி. | பகல் | 11 | மணி |
| புதன்- தொழில் மந்தம், காரியத் தடை. | பி.ப. | 4 | மணி |
| வியாழன்- காரியானுகூலம், பொருள் வரவு. | பி.ப. | 2 | மணி |
| வெள்ளி- செய்தொழில் விருத்தி, முயற்சி பலிதம். | பகல் | 11 | மணி |
| சனி- பணக் கஷ்டம், கடன் தொல்லை. | பகல் | 12 | மணி |

அதிஷ்டநாள்-வியாழன், அதிஷ்ட இலக்கம்-1

### மகரம்: சுப நேரம்

(உத்தராடத்துப் பின்முக்கால், திருவோணம், அவிட்டத்து முன்னரை)

| | | | |
|---|---|---|---|
| ஞாயிறு- செலவு மிகுதி, மனக் கலக்கம். | பி.ப. | 2 | மணி |
| திங்கள்- வீண்குறை நீங்கும், மன மகிழ்ச்சி. | பி.ப. | 1 | மணி |
| செவ்வாய்- தொழில் சிறப்பு, காரியசித்தி. | பி.ப. | 3 | மணி |
| புதன் - புதிய முயற்சி, செலவு மிகுதி. | பகல் | 12 | மணி |
| வியாழன்- பணக் கஷ்டம், காரியானுகூலம். | பி.ப. | 1 | மணி |
| வெள்ளி- இனசன நன்மை, மனக் கலக்கம். | பகல் | 12 | மணி |
| சனி- தொழில் உயர்ச்சி, அந்நியர் உதவி. | பி.ப. | 2 | மணி |

அதிஷ்டநாள்-திங்கள், அதிஷ்ட இலக்கம்-2

### சிம்மம்: சுப நேரம்

(மகம், பூரம், உத்தரத்து முதற்கால்)

| | | | |
|---|---|---|---|
| ஞாயிறு- அந்நியர் உதவி, பணவரவு. | பி.ப. | 2 | மணி |
| திங்கள்- தொழில் உயர்ச்சி, மன மகிழ்ச்சி. | பகல் | 12 | மணி |
| செவ்வாய்- இனசன நன்மை, காரியானுகூலம். | பி.ப. | 1 | மணி |
| புதன்- தொழில் மந்தம், பணச் செலவு. | பகல் | 11 | மணி |
| வியாழன்- வீண் முயற்சி, பலவித தடை. | பி.ப. | 2 | மணி |
| வெள்ளி- தொழில் சிறப்பு, அந்நியர் உதவி. | பி.ப. | 3 | மணி |
| சனி- மனக்குறை நீங்கும், உயர்ந்த வாழ்க்கை. | பி.ப. | 1 | மணி |

அதிஷ்டநாள்-புதன், அதிஷ்ட இலக்கம்-3

### தனு: சுப நேரம்

(மூலம், பூராடம், உத்தராடத்து முதற்கால்)

| | | | |
|---|---|---|---|
| ஞாயிறு- ஆடம்பர வாழ்க்கை, செலவு மிகுதி. | பி.ப. | 1 | மணி |
| திங்கள்- முயற்சி பலிதம், பணவரவு. | பி.ப. | 4 | மணி |
| செவ்வாய்- தொழில் விருத்தி, மன மகிழ்ச்சி. | பி.ப. | 2 | மணி |
| புதன்- பெரியோர் உதவி, மனக்குறை நீங்கும். | மு.ப. | 10 | மணி |
| வியாழன்- தொழில் சிறப்பு, உயர்ந்த நட்பு. | பி.ப. | 3 | மணி |
| வெள்ளி- இனசன நன்மை, தேகசுகக் குறைவு. | பகல் | 12 | மணி |
| சனி- உயர்ந்த நிலை, மன மகிழ்ச்சி. | பி.ப. | 2 | மணி |

அதிஷ்டநாள்-செவ்வாய், அதிஷ்ட இலக்கம்-6

### விருட்சிகம்: சுப நேரம்

(விசாகத்து நாலாங்கால், அனுஷம், கேட்டை)

| | | | |
|---|---|---|---|
| ஞாயிறு- இனசன நன்மை, காரிய சித்தி. | பி.ப. | 2 | மணி |
| திங்கள்- தொழில் விருத்தி, பணவரவு. | பகல் | 12 | மணி |
| செவ்வாய்- உயர்ந்த நட்பு, மனமகிழ்ச்சி. | பி.ப. | 1 | மணி |
| புதன்- வெளியிட வாழ்க்கை, தொழில் சிறப்பு. | பி.ப. | 3 | மணி |
| வியாழன்- பெரியோர் உதவி, கௌரவம். | பி.ப. | 2 | மணி |
| வெள்ளி- உறவினர் பகை, மனக் கலக்கம். | பி.ப. | 4 | மணி |
| சனி- கடன் தொல்லை, காரியத் தடை. | பகல் | 12 | மணி |

அதிஷ்டநாள்-திங்கள், அதிஷ்ட இலக்கம்-5

### துலாம்: சுப நேரம்

(சித்திரையின் பின்னரை, சுவாதி, விசாகத்து முன் முக்கால்)

| | | | |
|---|---|---|---|
| ஞாயிறு- மனமகிழ்ச்சி, பொருள் வரவு. | பி.ப. | 3 | மணி |
| திங்கள்- புதிய முயற்சி, செலவு மிகுதி. | மு.ப. | 9 | மணி |
| செவ்வாய்- பலவித பேறு, உயர்ந்த வாழ்க்கை. | பி.ப. | 2 | மணி |
| புதன்- தொழில் உயர்ச்சி, அந்நியர் உதவி. | பகல் | 12 | மணி |
| வியாழன்- மனக் கலக்கம், உறவினர் பகை. | பி.ப. | 1 | மணி |
| வெள்ளி- முயற்சி பலிதம், தொழில் விருத்தி. | பகல் | 12 | மணி |
| சனி- கடன் தொல்லை நீங்கும், பணவரவு. | பி.ப. | 2 | மணி |

அதிஷ்டநாள்-திங்கள், அதிஷ்ட இலக்கம்-7

### கன்னி: சுப நேரம்

(உத்தரத்துப் பின்முக்கால், அத்தம், சித்திரையின் முன்னரை)

| | | | |
|---|---|---|---|
| ஞாயிறு- வீண் செலவு, ஆடம்பர வாழ்க்கை. | பி.ப. | 1 | மணி |
| திங்கள்- காரிய சித்தி, பொருள் வரவு. | பி.ப. | 2 | மணி |
| செவ்வாய்- இனசன நன்மை, மன மகிழ்ச்சி. | பி.ப. | 3 | மணி |
| புதன்- உறவினர் உதவி, மனக்குறை நீங்கும். | பகல் | 12 | மணி |
| வியாழன்- வெளியிடப் பயணம், கௌரவம். | பி.ப. | 4 | மணி |
| வெள்ளி- தொழில் உயர்ச்சி, உயர்ந்த வாழ்க்கை. | பகல் | 12 | மணி |
| சனி- மனக் கலக்கம், தொழில் மந்தம். | பி.ப. | 2 | மணி |

அதிஷ்டநாள்-செவ்வாய், அதிஷ்ட இலக்கம்-4



www.padippakam.com
படிப்பகம்

www.padippakam.com





## எறும்பு

ஊர்ந்து ஊர்ந்து செல்லும்
ஒற்றுமை மிகுந்த எறும்பு
கூர்ந்த அறிவைப் பெற்ற
குட்டிக் குட்டி எறும்பு!

எல்லாப் பண்டம் மீதும்
ஏறி மொய்க்கும் எறும்பு
பள்ளம் மேடு இடுக்கிலும்
படர்ந்து செல்லும் எறும்பு!

வெடுக்கென வாயால் கடித்து
விரைவாய் மறையும் எறும்பு
நெடுநாள் உணவை முன்பே
நிறையச் சேர்க்கும் எறும்பு!

மருந்து போட்டால் உடனே
மடிந்து போகும் எறும்பு
நிலத்தின் நிறத்தில் வடிவில்
நிரம்ப வாழும் எறும்பு!

ஜி. ஜெயச்சந்திரன்.

பட்டங்கள் ஆள்வதும் சட்டங்கள் செய்வதும்
பாரினில் பெண்கள் நடத்த வந்தோம்;
எட்டும் அறிவினில் ஆணுக்கிங்கே பெண்
இளைப்பில்லை காணென்று கும்மியடி!

-சுப்பிரமணிய பாரதியார்.

## பாப்பா முரசு சிறுகதை

# கல் ஜோதிடர்

ஓர் ஊரில் சோதிடர் ஒருவர் இருந்தார். அவர் ஓர் அண்டப் புளுகர். அவர் சோதிடம் பார்க்கும் பொழுது, சோதிடம் பார்ப்பவர்களுக்கு ஒரு கல்லைக் கொடுத்து ஏதாவது சொல்லிவிட்டு வருவார்.

இப்படி மற்றவர்களை ஏமாற்றியே அவர் பிழைப்பு நடத்திவந்தார்.

ஒருநாள் இவர் ஒரு வீட்டிற்குச் சோதிடம் சொல்லப் போயிருந்தார். அந்த வீட்டுப் பையன் ஒருவன் மிகவும் நோய்வாய்ப்பட்டிருந்தான். அவனைப் பார்த்த சோதிடர் அந்த வீட்டுக்காரரிடம் பையிலிருந்து ஒரு கல்லை எடுத்துக் கொடுத்து விட்டு வந்துவிட்டார்.

இவர் வீட்டிற்கு வந்த பொழுது வீட்டில், இவரைப் பார்ப்பதற்காகப் பக்கத்து ஊரில் இருந்து இருவர் வந்திருந்தார்கள்.

பக்கத்து ஊரில் தமது உறவினர் மகன் ஒருவன் நோய்வாய்ப்பட்டு படுக்கையில் இருப்பதாகவும், அவனுக்கு ஏதாவது நிகழ்ந்துவிடுமா என்று பார்த்துச் சொல்லும்படியும் அவர்கள் கூறினார்கள்.

சோதிடரும் அவர்களுடன் பக்கத்து ஊருக்குப் புறப்பட்டுச் சென்றார். அங்கு நோய்வாய்ப்பட்டிருந்த பையனைப் பார்த்தார். பையனின் பெற்றோரிடம் ஒரு கல்லைக் கொடுத்து விட்டு வந்து விட்டார்.

சில வாரங்களுக்குப் பின்னர் முதலில் சோதிடம் சொல்லப்போன வீட்டிற்குச் சென்றார் சோதிடர். சோதிடரைக் கண்டதும் வீட்டுக்காரர்கள் கதறி அழுதனர்.

"ஐயா! எங்கள் பையன் இறந்து போய் விட்டான்," என்று அழுது புலம்பினர்.

உடனே சோதிடர் அவர்களைப் பார்த்து, "உங்கள் தலையில் அவன் கல்லைத் தூக்கிப் போட்டுவிட்டுப் போய்விடுவான் என்பதை மறைமுகமாக உணர்த்துவதற்காக ஒரு கல்லைக் கொடுத்து விட்டுப் போனேன்," என்றார்.

அங்கிருந்தவர் அனைவரும் சோதிடரின் தீர்க்கதரிசனத்தைப் பெரிதும் புகழ்ந்தனர்.

பிறகு சோதிடர் அங்கிருந்து பக்கத்து ஊரில் தான் கல்கொடுத்த வீட்டிற்குச் சென்றார். அந்த வீட்டுக்காரர்கள் சோதிடரைக் கண்டதும் மகிழ்ச்சியுடன் வரவேற்றனர்.

"ஐயா! உங்கள் புண்ணியத்தால் என்மகன் பிழைத்துக்கொண்டான்," என்று கூறினார்கள்.

அதைக்கேட்ட சோதிடர், "எனக்கு முன்பே தெரியும். அவன் ஆயுள் கல்போல் கெட்டியானது, உறுதியானது என்பதை மறைமுகமாக உணர்த்தவே, நான் உங்களிடம் கல்லைக் கொடுத்துவிட்டுப் போனேன். பையனும் கல்போல கெட்டியாக இருக்கிறான் பாருங்கள்", என்றார்.

அவ்வீட்டாரும் சோதிடருக்கு நிறையப் பணம் கொடுத்து அனுப்பினார்கள்.

தனது தந்திர புத்தியால் கிடைத்த பணத்தை எடுத்துக்கொண்டு ஊருக்கு வந்தார் சோதிடர்.



## வாரம் ஒரு நாடு

### தான்சானியா

தலைநகர் - டோடோமா
பரப்பு - 9,45,087 சதுர கிலோமீட்டர்
மக்கள் தொகை- 2.97 கோடி
மொழி - கிஸ்வாஹிலி, ஆங்கிலம்.
எழுத்தறிவு - 90%
சமயம் - கிறிஸ்தவம், இஸ்லாம், பழங்குடி சமயம்.
நாணயம் - ஷில்லிங்.
தனிநபர் வருமானம்- 100 டொலர்.

**அமைவிடம்:**

தான்சானியா கிழக்காபிரிக்காவில் அமைந்துள்ளது.

**வரலாறு:**

தாங்கானியா, சான்சிபார் தீவுகள், பெம்பா போன்ற நாடுகள் ஒன்றிணைந்து 1964ல் தான்சானியா உருவானது. முதலாம் உலகப் போருக்கு முன் இந்நாடுகளை உள்ளடக்கிய கிழக்காபிரிக்கா ஜெர்மனியிடம் இருந்தது. பின்னர் பிரிட்டனும், பெல்ஜியமும் இதைக் கைப்பற்றின.

1964 ஏப்ரலில் குடியரசான தான்சானியாவில் ஒரு கட்சி ஆட்சி. அதிபரே கட்சி மற்றும் இராணுவத் தலைவர்.



**பொருளாதாரம்:**

விவசாயம் முக்கிய தொழில். கராம்பு, பருத்தி, கோதுமை, கரும்பு முக்கிய விளைபொருட்கள். தொழிற்துறையில் முக்கிய வளர்ச்சி இல்லை. அன்னியச் செலாவணியில் 90% கராம்பு ஏற்றுமதி மூலம் கிடைக்கின்றது.

## ஜக்நுமான் ஈ

பார்ப்பதற்கு இலையானைப்போன்று காணப்படும் ஜக்நுமான் ஈ, இலையான் குடும்பத்தைச் சேர்ந்தது அல்ல.


இதற்கு அதிசயமான பழக்கம் ஒன்று உள்ளது.

உயிருள்ள வேறு ஒரு பிராணியின் உடலில்- முக்கியமாக சிலவகைக் கம்பளிப் புழுக்களின் மீது- இது முட்டை இடும். மரங்களுக்குள் இருக்கும் கம்பளிப்புழுக்களை மோப்ப சக்தியால் கண்டறிந்து தேடி வந்து முட்டை இடும்.

கம்பளிப்புழுக்களின்மீது இருக்கும் முட்டைகளில் இருந்து வெளிவரும் சிறிய ஜக்நுமான் ஈக்களுக்கு உணவுப் பஞ்சம் கிடையாது. ஏனென்றால், அவை உணவாக உட்கொள்வது முட்டைகள் இருந்த கம்பளிப் புழுக்களைத்தான்.



## சிறந்த வர்ணத்திற்கு பரிசு தரும் எண்ணம்!



மேலே உள்ள படத்திற்கு வர்ணம் தீட்டி தபாலட்டையில் ஒட்டி அனுப்புங்கள். சிறந்த வர்ணம் ஒன்றுக்கு பரிசு ரூபா 25/= காத்திருக்கிறது. அனுப்பவேண்டிய கடைசித் திகதி 08.03.1997.

வர்ணம் தீட்டும் போட்டி இல: 182
தினமுரசு வாரமலர்
த.பெ.இல.1772
கொழும்பு.

### வர்ணம் தீட்டும் போட்டி இல: 180

பரிசுக்குரியவர்.
செல்வி எ.எம். ஸாமிலா.
எருக்கலம்பிட்டி. மு.ம.வி, பாலாவி.

பாராட்டுக்குரியவர்கள்:

| | |
|---|---|
| டோமிற்றிலா மரியதாஸ், நல்லாயன் அரசினர் தமிழ் மகளிர் வித்தியாலயம், கொழும்பு-13. | எம். முஹம்மட் நிஹாஜான், கந்த/ஜீலான் மதிய கல்லூரி, ஹேனமுல்ல, பாணந்துறை. |
| செல்வி நர்மதா வேல்முருகு, 122/9, ஆஸ்பத்திரி வீதி, மட்டக்களப்பு. | எம். சுஜந்தன், பெரியமுல்லை, நீர்கொழும்பு. |
| வி. ஜெயந்தினி, மாதர் வீதி, நொச்சிமுனை, மட்டக்களப்பு. | அருண் நிஷாந்தன் யோகநாதன், சரஸ்வதி கனிஷ்ட வித்தியாலயம், பதுளை. |
| அ.அ. முஹம்மது அஸாம், சாஹிரா தேசிய கல்லூரி, புத்தளம். | சூ. செந்தூரன், ID-23,வெளிவட்ட வீதி, வவுனியா. |
| யோகினி-திருக்கனேசன், வ/சைவப்பிரகாச மகளிர் கல்லூரி, வவுனியா. | எம்.எஸ்.எம். வாரிஸ், அல்அக்ஸா மகாவித்தியாலயம், கிண்ணியா. |


## அல்பேட் அயன்ஸ்ரீன்

இருபதாம் நூற்றாண்டின் தலை சிறந்த விஞ்ஞானிகளில் ஒருவர் அல்பேட் அயன்ஸ்ரீன். இவர் 1879ம் ஆண்டு மார்ச் 14ம் திகதி ஜெர்மனியில் பிறந்தார். இவர் சார்பியல் தத்துவத்தை **(Theory Of Relativity)** 1905ல் பிரகடனப்படுத்தினார். ஐரோப்பாவிலுள்ள பௌதீகவியலாளர்களிடம் இத்தத்துவம் பிரபலமடையலாயிற்று. அண்டவெளி, காலம் மற்றும் புவியீர்ப்பு ஆகிய கோட்பாடு களில் புதிய ஆய்வுகளுக்கு அயன்ஸ்ரீனின் தத்துவம் வழி வகுத்தது. சுவிற்ஸர்லாந்தின் ஸுறிச் பல்கலைக்கழகத்தில் அயன்ஸ்ரீன் பேராசிரியரானார். ஜெர்மனியைப் பிறப்பிட மாகக் கொண்ட ஒருவர் வேறோர் நாட்டில் பணிபுரிவதை விரும்பாததமையினாலோ என்னமோ, ஜெர்மன் தலைநகரான பேர்லினில் உள்ள புருஷியன் விஞ்ஞான அக்கடமி அவரை வரவழைத்து பெரும் பணியினை ஒப்படைத்தது.

ஜெர்மனியில் 1933ம் ஆண்டில் அடோல்ஃப் ஹிட்லர் தலைமையில் ஆதிக்கம் பெற்ற நாக்சியவாதம் ஐரோப்பிய நாடுகளில் வாழ்ந்த யூத இனமக்களை அழித்தொழிக்க ஆரம்பித்தது. இதன் காரணமாக அயன்ஸ்ரீன் ஜெர்மனியை விட்டு அமெரிக்காவில் புகலிடம் பெற்றார். இவரும் ஒரு யூத இனத்தவர்.

அயன்ஸ்ரீன் ஸுறிச் பல்கலைக்கழகத்தில் கலாநிதிப் பட்டம் பெற்றார். இவருடைய அறிவியல் ஆய்வுகளை இலண்டன் ரோயல் சோஸைட்டி ஏற்று மதிப்பளித்ததைத் தொடர்ந்து இவருக்கு உலகெங்கணும் பெருமதிப்பு ஏற்படலாயிற்று. தன்னுடைய ஆய்வுகளையிட்டு ஐரோப்பிய நாடுகளிலுள்ள ஆய்வாளர்களுக்கு விளக்கமளிப்பதற்கான சுற்றுப் பயணத்தை மேற்கொண்டார்.

பௌதீகவியலுக்கான நோபல் பரிசு இவருக்கு 1921ல் வழங்கப்பட்டது. உலக அமைதிக்காக அயன்ஸ்ரீன் பாடுபட்டார். இவர் அமெரிக்காவிலுள்ள பிரின்ஸ்டனில் 1955 ஏப்ரல் 18ல்- தனது 76வது வயதில் காலமானார்.



## விடுகதைகளும் விடைகளும்

1. பச்சைப் பசேலென்றிருக்கும்
பாகற்காயுமல்ல:
பற்கள் போல் முள்ளிருக்கும்
பலாப்பழமும் அல்ல;
உள்ளே வெளுத்திருக்கும்
தேங்காயும் அல்ல.
அது என்ன?

2. கால் இல்லாத கள்வன் ஒருவன்
கால் உள்ளவனைப் பிடித்தான்.
தலையில்லாதவன் அதைப் பார்த்துக்
கலகலவெனச் சிரித்தான்.
இவர்கள் யார்?

3. தண்டைச் சலங்கைக்காரி
தலைவாசல் வீட்டுக்காரி
அவளைத் தொடுவானேன்
அவதிப்படுவானேன்!
அவள் யார்?

4. மூவருக்கும் ஒரே முகம்.
மூத்தவர் ஆற்றிலே.
இரண்டாமவர் காட்டிலே,
இளையவர் வீட்டிலே.
யார் இவர்கள்?

5. கொண்டையில் பூ உண்டு
எடுக்க வழியில்லை.
குதிகாலில் முள் உண்டு
பிடுங்கவும் வழியில்லை.
அது என்ன?

### விடைகள்

1. ஆமணக்கு
2. பாம்பு, தவளை, நண்டு.
3. தேள் 4. முதலை, உடும்பு, பல்லி
5. சேவல்.

தொகுப்பு: எஸ். பரமேஸ்வரி,
களுவாஞ்சிக்குடி.

## கல்வியும் பல்கலைக்கழகமும்


* முதன்முதலில் கட்டாயக் கல்விமுறை அறிமுகப்படுத்தப்பட்டது 1819ம் ஆண்டில் 'பிரஸ்யா' நாட்டில்தான். பிரித்தானியாவில் 1870ல் அறிமுகப்படுத்தப்பட்டது.
* சுமேரியர்களால்தான் முதன் முதலில் பாடசாலை ஆரம்பிக்கப்பட்டுள்ளது. ஸ்கிரைபல் ஸ்கூல்ஸ் அல்லது "ஈ-டப்-பா" என்று அழைக்கப்பட்டது. கி.மு.3500ம் ஆண்டில் இப்பாடசாலைகள் ஆரம்பிக்கப்பட்டன.
* மிகப் பழைய பல்கலைக்கழகம் மொரொக்கோ நாட்டில் உள்ளது. இது கி.பி.859ல் நிர்மாணிக்கப்பட்டது. யுனிவர்சிட்டி ஒவ் கரூயின் என்கின்ற இப்பல்கலைக்கழகம் இப்போதும் இயங்கிவருகின்றது.
* பிரித்தானியாவில் பழம்பெரும் பல்கலைக்கழகம் ஒக்ஸ்போர்ட். இங்கு 1167ல் இருந்து விரிவுரைகள் ஆரம்பிக்கப்படுகின்றன.
* 1303ம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்ட, இத்தாலியிலுள்ள 'றோம் பல்கலைக்கழகத்'தில் 1987ல் கல்வியயின்ற மாணவர்களின் தொகை 1 இலட்சத்து 80 ஆயிரம். இது ஓர் உலக சாதனையாகும்.

## கோள்களும் குணங்களும்

* மிகக் குளிர்ச்சியான கோள் - புளூட்டோ
* மிக இலேசான கோள் - புதன்.
* மிகக் கனமான கோள் - வியாழன்
* மிக உஷ்ணமான கோள் - சுக்கிரன்
* சிவப்புக் கோள் எனப்படுவது- செவ்வாய்.

தொகுப்பு:- ஏ. சுதர்ஸன்,
திருகோணமலை.

## குதிரைச் சக்தி (HORSE POWER)



- 550 இறாத்தல் நிறையை ஒரு செக்கனில் ஒரு அடிக்கு தூக்கும் சக்தி ஒரு குதிரை வலு அல்லது குதிரைச் சக்தி (H.P) என்று அழைக்கப்படும்.
- நீராவி இயந்திரத்தைக் கண்டுபிடித்த ஜேம்ஸ் வாட் என்பவர்தான், குதிரை ஒரு நிமிடத்தில் 150 இறாத்தல் எடையை 220 அடிக்குத் தூக்கக் கூடியது என்பதையும் கண்டுபிடித்தார்.
- மின்சக்தியுடன், குதிரைச் சக்தியை ஒப்பிடலாம். ஒரு குதிரை சக்தி 745.2 வாட். மின்சக்திக்கு சமமானதாகும்.



படிப்பகம்

www.padippakam.com

### சென்றவாரம்

படுக்கைக்குத் தயாரானபோது டெலிஃபோன் மணி அடிக்கிறது. ரிசீவரை எடுத்து கணேஷிடம் தருகிறாள் மோனிக்கா.

'உடனே மதறாஸுக்குப் போய் விடுமாறு' எதிர் முனையிலிருந்து மிரட்டல் வருகிறது. மிரட்டியவன் யாரென்று புரியவில்லை.

மறுநாள் எழுந்தபோது மோனிக்கா உறங்கிக் கொண்டிருந்தாள்.

ஷாத்ரா சென்று விளம்பர வீட்டைப் பற்றி விசாரித்துவரப் புறப்பட்டு, வழியில் பொலிஸ் நிலையம் போய் கிளார்க் ஒருவருக்கு இலஞ்சம் கொடுத்து ஷர்மாவின் போஸ்ட்மார்ட்டன் ரிப்போர்ட்டைப் பார்க்கிறான்.

அவன் விரும்பிய விஷயங்கள் எதுவும் அதில் இல்லை. ஏமாற்றத்துடன் திரும்பி, இன்ஸ்பெக்டர் ராஜேஷிடம் ஷாத்ரா போய் வர அனுமதி பெற்று அங்கே செல்கிறான்.

அங்கே...

16

# அனிதா இளம் மனைவி

நாவல் உலகின் நவீன எழுத்து வேந்தன் சுஜாதா

கணேஷ் ஓர் எஸ்ஸோ பெட்ரோல் நிலையத்தில் தன் காரை நிறுத்தினான். சற்று நேரம் கழித்து காரை எடுத்துச் செல்வதாகச் சொல்லிவிட்டு நடக்க ஆரம்பித்தான். அப்ஸரா தியேட்டர் தெரிந்தது. அதைக் கடந்து இடது பக்கம் திரும்பினான். மேலும் நடந்தான். கரும்பு வயல்கள் தெரிந்தன. கரும்பு முடிந்ததும் காலி மனைகள் தெரிந்தன. வெள்ளைக் கற்கள், கட்டப்பட வேண்டிய வீடுகளுக்கு ஞாபகங்களாக நின்றன.

அந்த ஒரு வீடு மட்டும் சூரிய வெளிச்சத்தில் டிஸ்டெம்பர் பளபளப்பில் மிகத் தடையாக நின்றது. திடீரென்று அலாவுதீன் விளக்கைத் தேய்த்து ஏற்பட்டது போல்.

பெரிய வீடுதான். வாயிலில் குட்டையான கம்பிகேட். சப்தமில்லாமல் அதைத் திறந்து நடந்தான். அமைதி என்றால் இப்படியா? மரமில்லாத, பட்சிகளின் குரல் இல்லாத, நிழலில்லாத, பாலைவன அமைதி. மெதுவாக வாயிற் கதவின் முன்னிருந்த கான்க்ரீட் நிழலை நோக்கி நடந்த கணேஷுக்குத் தன் காலணியின் ஒலிகூட உறுத்தியது. எவ்வளவு நடை!

அந்த நிழலுக்கு வந்தான். வீட்டு வாயிற் கதவு மூடியிருந்தது. பூட்டப்பட்டிருக்கவில்லை. சுவரில் வெண்ணிறத்தில் ஒரு ஸ்விட்ச் இருந்தது. அந்த ஸ்விட்சின் மேல் சிவப்பில் ஒரு சிறிய மணியின் படம் செதுக்கியிருந்தது. கணேஷின் விரல் இந்த ஸ்விட்சைநாட, கடைசி வினாடியில் பின்வாங்கிக் கொண்டான்.

கணேஷ் வீட்டின் அமைப்பைப் பார்த்தான். கராஜ் பூட்டியிருந்தது. உள்ளே கார் இருக்கிறதா? தெரிந்த ஜன்னல்கள் எல்லாம் மூடி இருந்தன. கணேஷ் மெதுவாக வீட்டைச் சுற்றி வந்தான். கான்க்ரீட்டின் மேல் நடக்காமல் புல் தரையில் நடந்தான். அவன் விவேகம் அவன் செய்வது தப்பு என்று தெரிவித்தது. அவன் ஆர்வம் அவனைச் செலுத்தியது. வீட்டின் மூலையைத் திரும்பும்போது தயங்கினான். எட்டிப் பார்த்தான். சுற்றி வருவதைத் தொடர்ந்தான். காம்பவுண்ட் சுவர் ஓரமாகப் பூந்தொட்டிகள் இருந்தன. செடிகள் கருகி இருந்தன. குட்டையான நிழல்கள், காற்று அசையவில்லை.

கணேஷினுள் அமானுஷ்யமான பயம் மெதுவாகப் புறப்பட்டது. எதையோ எதிர்பார்த்தான்! எதை?

வீட்டின் மூன்றாவது பக்கத்தில் ஒரு ஜன்னல் திறந்திருந்தது. கணேஷின் இதயம் ஒரு துடிப்பை விட்டுவிட்டது. யாரோ இருக்கிறார்கள். மெதுவாக எட்டிப் பார்த்தான்; மெதுவாக என்றால்,

அவ்வளவு மெதுவாக......

உள்ளே ஒரு சமையலறை தெரிந்தது. ஒரு காஸ் அடுப்பு தெரிந்தது. மிகச் சில பாத்திரங்கள் தெரிந்தன. அருகே ஒரு ஃப்ரிஜிடையர் தெரிந்தது. அது திறந்திருந்தது. அதில் உள்ளே அடுக்கியிருந்த கொக்கோ கோலா பாட்டில்களில் ஒன்றை அவள் எடுத்துக் கொண்டிருந்தாள்.

அனிதாதான்!

கணேஷ் சட்டென்று விலகிக் கொண்டான். திரும்பின அனிதா அவனைப் பார்த்திருக்க முடியாது!

இங்கேதான் இருக்கிறாள்! உயிருடன் இருக்கிறாள்! உயிருடன் இருக்கிறாள்.

கணேஷ் உடனே முன்பக்கம் ஓடிப் போய்க் கதவைத் தட்டி அனுமதி கேட்க நினைத்தான். வேண்டாம். வேண்டாம் சற்று கவனிக்கலாம்.

கணேஷ் சுவரோடு சுவராக ஒட்டிக் கொண்டு கேட்டான்.

கொக்கோ கோலா உடைக்கும் சப்தம்; கிளாஸில் கொட்டப்படும் சப்தம்.

சற்று நேரம் மௌனம். அடிக்கோடிட்ட மௌனம். அப்புறம் உள்ளேயிருந்து ஆழமான ஆண்குரல் கேட்டது:

"அனிதா!"

மௌனம்.

"அனிதா!"

"ம்"

"வா!" வா என்றால் வெறும் வா இல்லை, வெறி கலந்த வா.

மறுபடி மௌனம்.

"அனிதா, நான் சொல்வது உனக்குக் கேட்கவில்லை?"

'எங்கோ கேட்டிருக்கிறேன். இந்தக் குரலை? எங்கே எங்கே?'

"அனிதா!"

குரல் அருகில் ஒலித்தது. உள்ளே வந்திருக்க வேண்டும்.

'அந்தக்குரல். ஆம். அதுதான் நேற்று டெலிஃபோனில் என்னைக் கூப்பிட்ட குரல். பாஸ்கருக்கு நிகழ்ந்தது எனக்கும் நிகழும் என்று எச்சரித்த குரல். அதே குரல்.

எட்டிப் பார்க்கலாமா?

வேண்டாம்.'

"லீவ் மி அலோன்! ப்ளீஸ். ப்ளீஸ்! தயவு செய்து கெஞ்சிக் கேட்கிறேன், விட்டு விடுங்கள்!"

அனிதாவின் வளையல்கள் குலுங்கும் சப்தம் கேட்டது. கணேஷின் ரத்தம் கொதித்தது. யார் அவன்?

"ஒரு தடவை அனிதா, ஒரு தடவை!"

"ப்ளீஸ், ப்ளீஸ்!"

கண்ணாடி டம்ளர் விழுந்து நொறுங்கும் சப்தம்.

குரல்கள் அறையை விட்டு வெளியே சென்ற சப்தம் கேட்டது. இனித் தாமதிக்கக் கூடாது என்று தீர்மானித்தான் கணேஷ். உடனே வாயிற் பக்கம் சென்று கதவை உடைத்து அவளைக் காப்பாற்ற வேண்டும் என்று கிளம்பியவன் ஜன்னலைக் கடக்கும்போது சற்று எட்டிப்பார்த்தான்.

சமையல் அறை காலியாகத்தான் இருந்தது. ஆனால் அறைக்கு வெளியே ஒரு வார்ட்ரோபில் ஒரு கண்ணாடி தெரிந்தது. அந்தக் கண்ணாடியின் பிம்பத்தில் அடுத்த அறையில் இருந்த அவர்கள் இருவரும் தெரிந்தார்கள். அனிதாவும் அந்தக் குரலுக்கு உரிய மற்றொரு–

அனிதா படுக்கையின் மேல் தலை குனிந்து உட்கார்ந்து கொண்டிருந்தது தெரிந்தது. அவள் எதிரே நின்று கொண்டு கைகளைத் தீவிரமாக ஆட்டிக்கொண்டு பேசிக்கொண்டிருந்த அந்த ஆளின் அடையாளம் கணேஷை மிகவும் பிரமிக்க வைத்தது.

யாவற்றையும் விட்டு விட்டு அந்த வீட்டைத் துறந்துவிட்டு, மிக விரைவாகத் தன் காரை நோக்கி ஓடினான் கணேஷ்.

☎☎☎

கணேஷ் ஓடினான். வேகம் முக்கியம். வேறு யோசனை இல்லா வேகம். மெயின் ரோடை அடைந்து ஷாத்ரா டெலிஃபோன் எக்ஸ்சேஞ்சைக் கடக்கையில் நின்றான். மூச்சு வாங்கிக் கொண்டான். சுற்றும் முற்றும் பார்த்தான். டெலிஃபோன் எக்ஸ்சேஞ்சின் முகப்பில் ஒரு பப்ளிக் கால் டெலிஃபோன் இருந்தது. அதை அடைந்து காசு தேடி டயல் சுழற்றி, "ஹலோ!" என்றான்.

சற்று நேரம். 'நான் சரியான முட்டாள். இதை எப்பொழுதோ சுலபமாகத் தெரிந்து கொண்டிருக்கலாம். சே!'

"ராஜேஷ் ஸ்பீக்கிங்."

"கணேஷ் பேசுகிறேன். ஒரு மிக முக்கியமான விஷயம், ஷர்மா கேஸில். நீங்கள் உடனே ஜீப் எடுத்துக் கொண்டு ஷாத்ரா வரமுடியுமா?"

"என்ன விஷயம்?"

"கேஸ் முடிந்துவிட்டது இன்ஸ்பெக்டர் ஸாப்."

"எந்தக் கேஸ்? ஷர்மா, பாஸ்கர் இரண்டு கொலை இருக்கிறதே?"

"இரண்டும்."

"கோவிந்த் அகப்பட்டு விட்டானா?"

"அவனைப் பற்றித் தகவல் தெரிந்து விட்டது. உடனே வாருங்கள். நாலைந்து ஆட்களுடன். எல்லாம் தீர்ந்துவிடும். டெலிஃபோனில் சொல்லமுடியாதபடி சிக்கலானது. மற்றொரு விஷயம். என் வீட்டுக்குச் சென்று–ஷர்மாவின் டாட்டர் மோனிக்கா





எடுங்கள். கரும்புக் காட்டுக்குப் பிறகு காலி மனைகளில் நடுவில் ஒரே ஒரு புதிதாகக் கட்டிய வீடு இருக்கிறது. யூ காண்ட் மிஸ் இட். ஆனால் உடனே வர வேண்டும்!"

அங்கே இருக்கிறாள் அவளையும் உடன் அழைத்து வரவேண்டும். நான் அவளுக்குப் ஃபோன் செய்கிறேன். உடனே வாருங்கள். என்வீட்டு விலாசம் தெரியுமில்லை?"

"தெரியும். நேற்று எழுதிக் கொண்டோமே கணேஷ். இன்னும் கொஞ்சம் விவரமாகச் சொல்லலாம். ஒன்றும் புரியவில்லை."

"நான் எதுவும் ப்ளஃப் பண்ணவில்லை. ஆதியோடந்தமாகச் சொல்கிறேன். அவசரப்படாதீர்கள். இப்போது சமயமில்லை."

"ஷாத்ராவில் எங்கே?"

"மெயின் ரோடில் அப்ஸரா தியேட்டர் இருக்கிறது. அதை ஒட்டி லெஃப்ட்டர்ன் டெலிஃபோனை வைத்தான்.

மறுபடி பையில் காசு தேடினான். சில்லறை இல்லாததால் எதிரே ஒரு கடைக்குச் சென்று சில்லறை மாற்றிக் கொண்டு வந்து தன் வீட்டு டெலிஃபோனின் நம்பரைச் சுழற்றினான்.

"மோனிக்கா! எழுந்து விட்டாயா?"

"கணேஷ் வேர் ஆர் யூ?"

"ஷாத்ரா."

"வேர் த ஹெல் இஸ் ஷாத்ரா?"

"சொல்கிறேன். மோ, கவனி! சற்று நேரத்தில் அங்கே இன்ஸ்பெக்டர் ராஜேஷ் வருவார். அவருடன் நீ இங்கே வரவேண்டும். நான் உனக்காகக் காத்திருக்கிறேன். நிச்சயம் வரவேண்டும்."

"வாட் ஹாப்பண்ட்?"

"உன் அப்பா கேஸ் முடிந்துவிட்டது."

"கண்டு பிடித்து விட்டாயா யார்?"

"நீ தான் வந்து பாரேன்!"

"கணேஷ்! அனிதாதானே?"

"சே!"

"பின்னே யார்?"

"டெலிஃபோனில் சொல்லக் கூடாது. நீ வரவேண்டும். நீ வர வேண்டியது முக்கியம். தெரிகிறதா? நீ வர வேண்டியது மிக முக்கியம். நீ தேவை. எனக்குச் சமயமில்லை. மன்னித்துக் கொள்," என்று டெலிஃபோனை அதன் கொக்கியின் கழுத்தில் மாட்டினான்.

ஏதோ கோளாறினால் டெலிஃபோன் இருபது பைசாவைத் துப்பியது. "இன்று என் அதிஷ்ட தினம் போலும்."

கணேஷ் நடந்தான். எதிரே ஒரு தேர்தல் அலுவலகம். சின்னச் சின்னப் பையன்கள் துல்லியமான எதுகை மோனையில் (பஸ்தி, சஸ்தி) இந்திராவுக்கு எதிராகப் பாடிக் கொண்டிருந்தார்கள்.

"எது சோஷலிசம்?" என்ற ஒலி பெருக்கி அதட்டிக் கேட்டது. ஒரு பசுமாடு சந்தேகத்துடன் திரும்பிப் பார்த்தது.

கணேஷ் யோசித்தான். தீர்மானித்தான். அந்தக் கடைக்குச் சென்று 'கிளிப்' வைத்த அட்டை ஒன்று, பென்ஸில் ஒன்று (சீவிக் கொடுங்கள்.) சில வெள்ளைக் காகிதங்கள் வாங்கிக் கொண்டான்! தேர்தல் அலுவலகத்துக்குச் சென்று அந்தக் கட்சிக்காரர்கள் விநியோகித்துக் கொண்டிருந்த விளக்குப்படம் அச்சிட்ட வட்ட அட்டை ஒன்று வாங்கிக் கொண்டான். அதைத் தன் மார்புச் சட்டையில் பொருத்திக் கொண்டான்.

மிக வேகமாக அந்த வீட்டைநோக்கி நடந்தான். பத்து நிமிஷம் நடந்தபிறகு மறுபடி அந்தத் தனி வீட்டு வாசலுக்கு வந்து கேட்டைத் திறக்கையில் முன் தடவைபோல் எச்சரிக்கையாய் இல்லை. நேராகச் சென்று 'காலிங் பெல்லை' அழுத்தினான். மூடியிருந்த கதவில் கண்ணாடிகள் பொருத்தி இருந்தது– வெளியே நிற்பவர்களை உள்ளேயிருந்து பூதம் பார்க்க கணேஷ் அதற்கு முதுகைக் காட்டிக் கொண்டு திரும்பிக் கொண்டான்.

சற்று நேரமாயிற்று. மறுபடி அழுத்தினான்.

இன்னும் சற்று நேரமாயிற்று. கதவு திறந்தது– பொதுவாக ஒரு கோட்டின் அளவுக்கு "யார் அது?" அனிதாவின் குரல்? கோடு விரிந்தது. அனிதா தெரிந்தாள். கலைந்திருந்தாள்.

கணேஷ் தன் வாயில் சுட்டுவிரலை வைத்து, "பேசாதே!" என்று சைகை காட்டினான். அனிதாவின் கண்களில் ஆச்சரியம், திகில், ஓரத்தில் கொஞ்சம் சந்தோஷம் எல்லாவற்றையும் காட்டின.

அவள் சைகை செய்தாள். போய்விடு. உடனே போய் விடு.

'ஏன்?' என்று கையைக் காட்டினான்.

அவள் விரல்களைத் துப்பாக்கிபோல் காட்டி அந்த விரல் துப்பாக்கியை அவன் மார்புக்கு நேர் சுட்டாள். உயிருக்கு ஆபத்து என்று காட்டினாள்.

கணேஷ் தன் இரண்டு கைகளையும் இரண்டு துப்பாக்கிகளாக்கி இரண்டு தடவை சுட்டு, பயப்படாதே என்றான்.

எதிரே இடது பக்கத்தில் தொங்கிய திரைக்குப் பின்னாலிருந்து, "ஹு இஸ் இட்?" என்று ஆண் குரல் கேட்டது. கணேஷ் அந்தக் குரலை அறிந்து கொண்டான்.

"எலக்ஷன் சார். வோட் கேட்க வந்திருக்கிறேன்," என்றான் கணேஷ்.

'போய்விடு, போய்விடு,' என்று அனிதா அபிநயித்தாள்.

"இங்கே ஒருவருக்கும் ஓட் இல்லை என்று சொல்."

"அதுதான் சொல்லிப்..."

"மன்னிக்கணும் சார். பட்டியலில் இங்கே இரண்டு ஓட்டு இருக்கிறது. மிஸ்டர் மதன் கோபால். அப்புறம் மிஸஸ் ஷீஷ்மா யாதவ். நீங்கள் தானே திருமதி யாதவ்?"

அனிதா 'ப்ளீஸ்!' என்று தலையை ஆட்டினாள். அவனைச் சேவித்தாள்; தவித்தாள்.

"அப்படி ஒருவரும் இல்லை, தப்பு விலாசம் அவனைப் போகச் சொல்." என்று குரல் வந்தது.

ஆனால் திரையை விட்டு வெளியே வரவில்லை.

"இல்லை சார். விலாசம் சரியாகத்தான் வந்திருக்கிறேன். சார், கொஞ்சம் வருகிறீர்களா?"

"அனிதா, அவனைப் போகச்சொல்!"

"மாட்டேன் என்கிறான்!"

"கழுத்தைப் பிடித்துத் தள்ளுவோம் என்று சொல்."

"அப்படிச் சொல்லாதீர்கள். நான்வோட் கேட்க வந்தேன். அவ்வளவுதான். நான் உள்ளே வரலாமா?"

"வரக்கூடாது!" என்றது திரை.

"வருகிறான்!"

"உள்ளே வந்தால் அவன் எலும்பு முறிந்துவிடும் என்று சொல்! வோட்டும் கிடையாது. ஒன்றும் கிடையாது. படிக்கு வெளியே நிற்கச் சொல். நாம் இங்கே புதிது, எங்களுக்கு இந்த ஏரியாவில் வோட்டுக் கிடையாது."

"நீங்கள் மிஸ்டர் யாதவ் இல்லையா ஸார்!"

"கெட் அவுட்!"

"கொஞ்சம் வருகிறீர்களா? காட்டமாகப் பேசுகிறீர்களே?"

"ப்ளீஸ். வேண்டாம் வேண்டாம் ஆபத்து," என்றாள் அனிதா சப்தமில்லாமல்.

"இரு" என்றான்.

"போகிறானா இல்லையா?"

"இல்லை ஸார்!"

"ஐ வில் டீச் ஹிம் எ லெஸன்."

திரை சலசலத்தது. அந்த ஆசாமி தெரிந்தார். மெல்லிய உதடுகள், அடர்த்தியான புருவங்கள். பெரிய நெற்றி, சில தினங்களாக ஷேவ் செய்யாத முகம்.

(தொடர்ந்து வரும்)

## அரங்கம்








பெயர்: எம். முஸம்மில்.
வயது: 22
முகவரி: இலாஹியா வீதி, அறக்கியால, கெகுணகொல்ல,
பொழுதுபோக்கு: பத்திரிகை, பேனாநட்பு.

பெயர்: எஸ்.புஸ்பராஜ்.
வயது: 19
முகவரி: 266,காலி வீதி, பம்பலப்பிட்டி, கொழும்பு-4.
பொழுது போக்கு: ஓவியம் வரைதல்.

பெயர்: எம்.றியாஸ்.
வயது: 21
முகவரி: 35,3ம் குறுக்குத் தெரு, கொழும்பு-11.
பொழுதுபோக்கு: பத்திகை, வானொலி.

பெயர்: வி.பிரதீப்.
வயது: 29
முகவரி: P.O.BOX-140, CAMP NO-02, DOMATAL JANDAL. AL-JOUF, K.S.A.
பொழுது போக்கு: வழமையானவை.

பெயர்: தேவபிரியா.
வயது: 23
முகவரி: ஆர்.கே.எம்.வீதி, காரைதீவு.
பொழுது போக்கு: பத்திகை, பேனாநட்பு.

பெயர்: எல்.சலீம்.
வயது: 21
முகவரி: பிரதான வீதி, அட்டாளைச்சேனை-2.
பொழுது போக்கு: தொலைக்காட்சி, வானொலி.

பெயர்: ஏ.ராஸிக்.
வயது: 25
முகவரி: P.O.BOX-100016, DOHA. QATAR.
பொழுதுபோக்கு: பத்திரிகை, கிரிக்கெட்.

பெயர்: எம். இஷ்பாக்.
வயது: 17
முகவரி: ஜாகுவப்பள்ளி வீதி, கிண்ணியா-7.
பொழுதுபோக்கு: வானொலி, பத்திரிகை.

பெயர்: பி.இளங்கோ.
வயது: 24
முகவரி: BAARER STR-43, 6300 ZUG, SWITZERLAND.
பொழுது போக்கு: வழமையானவை.

பெயர்: எஸ்.அமிர்தலிங்கம்.
வயது: 21
முகவரி: பெல்மதுல்ல எஸ்டேட், 5ம் பிரிவு, நீலகாமம், காவத்தை.
பொழுது போக்கு: வானொலி.

பெயர்: ஆர்.ரவிச்சந்திரன்.
வயது: 18
முகவரி: 220,காலி வீதி, வெள்ளவத்தை, கொழும்பு-6.
பொழுது போக்கு: வானொலி, பத்திரிகை.

பெயர்: ஏ.அமீர்.
வயது: 27
முகவரி: P.O.BOX-26154, CODE NO-13122, SAFAT, KUWAIT.
பொழுது போக்கு: பத்திரிகை, பேனாநட்பு.



படிப்பகம்

www.padippakam.com

உணர்வோடு கலக்கும் உண்மைக் கதை

# தூக்கு மேடைக் குறிப்பு 18

இராணுவச் சட்டம் அமுலுக்கு வந்தது. நாளுக்கு நாள் பெருகும் நம்முடைய தீவிரமான எதிர்ப்பை, அதன் முதல் கட்டத்தில் அவர்களால் உடைக்க முடியவில்லை. எனினும் நம் எதிர்ப்பை மட்டுப்படுத்தினார்கள். கட்சிக்குப் புதிய காயங்களை உண்டு பண்ணினார்கள். படுமோசமாக அடிபட்டது பிரேக் பகுதியும், இளைஞர் கழகமும் ஆகும்.

நம் தலைவர்களில் இன்னும் பலர்–ஜான்கிரேசி, ஸ்டன்ஜவல், மிலோஷ் கிராஸ்கி இன்னும் பலர்–கட்சியின் பொக்கிஷங்கள் உயிர் இழந்தனர்.

ஒவ்வொரு அடிக்குப் பிறகும், இயக்கம் எந்த அளவுக்கு அழிக்க முடியா

## இதுவரை

ஹிட்லரின் படைகளின் கொடும் ஆக்கிரமிப்பை எதிர்த்துப் போராடிய புரட்சியாளர் ஜூலிஸ் பூசிக். செக்கோஸ்லாவாக்கிய நாட்டின் கம்யூனிஸ்ட் கட்சியின் தலைவர்களில் ஒருவர்.

ஹிட்லரின் படைகளால் கைதாகி சித்திர வதையில் உழன்றவர். தூக்கு மேடைக்கு செல்லக் காத்திருந்த போதும் – மனம் தளராமல் அவர் எழுதிய குறிப்புக்களே இவை.

சிறைக் காவலர் ஒருவர் மூலமாக வெளியே கடத்தப்பட்டு ஹிட்லர் வீழ்ந்த பின்னர் இது வெளியிடப்பட்டது. இக் குறிப்புக்கள் எழுதப் பட்டபின் **1943 செப்டம்பர் 8 ம் திகதி ஜூலிஸ் பூசிக் தூக்கிலிடப்பட்டார்.**

ஜூலிஸ் பூசிக்கின் மனைவியும் கைதாகி–மரணவாசலில் நின்றார். அவரைக் கொல்ல பாசிசப் படைகளுக்கு அவகாசம் கிடைக்கவில்லை.

பூசிக்கின் மனைவிதான் இக் குறிப்புக்களை திரட்டி வெளியிட்டார். இந்த மகத்தான குறிப்புக்களை தொடர்ச்சியாக வெளியிட்டதில் முரசு பெருமை கொள்கிறது.

இனி....

ததாக இருந்திருக்கிறதென்பதே தெளிவாயிற்று. அடிபட்டு விழுந்த தோழர்கள் மிகமிக முக்கியமானவர்களாக இருந்த போதிலும், அவர்களுடைய நஷ்டத்தை ஈடுசெய்ய முடியாது என்று தோன்றிய போதிலும், அப்படி வீழ்ந்த ஒவ்வொருவருக்கும் பதிலாக இரண்டு அல்லது மூன்று புதிய தோழர்கள் வந்து சேர்ந்தனர்.

புதுவருடம் பிறப்பதற்குள், நாம் திரும்பவும் ஒரு வலுவான அமைப்பைக் கட்டிவிட்டோம்.

1941 பெப்ரவரியில் நேர்ந்த பெரு நஷ்டம்போல் நஷ்டமேற்பட்டிருக்காவிட்டால், அந்த ஸ்தாபனம் இன்னும் கடுமையான தாக்குதலையும் சமாளிக்கக் கூடியதாக இருந்திருக்கும்.

புனர் அமைப்பு வேலையில் நாங்கள் எல்லோரும் பங்கு கொண்ட போதிலும், முக்கியமான பெருமை தோழர் ஹொன்ஸா ஜிகாவையே சேரும்.

நாங்கள் செய்த பிரச்சார வேலைகளுக்கு ஆதாரங்களை, வீட்டு நிலவறைகளிலும், பரணிகளிலும், ஒளிக்கப்பட்ட 'பைல்'களிலும் காணலாம். ஆனால் அதைப்பற்றி இங்கு பேச வேண்டிய அவசியமில்லை.

எங்களுடைய பத்திரிகைகள் மிகவும் விரிவாக விநியோகிக்கப்பட்டன. படிக்கப் பட்டன.

கட்சி அங்கத்தினர்களால் மட்டுமல்ல; தேசம் முழுவதிலும்கூட, அவை எல்லாம் அநேக 'டெக்னிக்கல் சென்டர்'களில், ஒன்றுக்கொன்று சம்பந்தமில்லாத அநேக இரகசிய இடங்களில், அச்சிடப்பட்டன அல்லது கையால் எழுதி நகல் எடுக்கப் பட்டன.

பிரசுர கோஷ்டியில் எவருக்கும், மற்ற கோஷ்டியில் இருப்பவர்கள் யார், அதன் இருப்பிடம் எது என்பது தெரியாது. கட்டுரைகள் யாரிடமிருந்து வந்தன என்பதும் யாருக்கும் தெரியாது. அவர்கள் எல்லோரும் மனித சக்தியால் முடிந்த அளவுக்கு வேகமாக வேலை செய்தார்கள்.

யுத்தத்தின் வேகத்திற்குத் தகுந்தபடி அவர்கள் கைகள் விரைந்தன. உதாரணமாக, 1942, பெப்ரவரி 23-ம் தேதியன்று தோழர் ஸ்டாலின் வெளியிட்ட இராணுவப் பிரகடனத்தை, 24-ம் தேதி மாலைக்குள் வாசகர்களின் கையில் கிடைக்கும்படி நாங்கள் அச்சிட்டு வெளியிட்டோம்.

அச்சுத் தொழிலாளர் குழு அபூர்வமாக வேலை செய்தது. டாக்டர்கள் குழுவும் ஒரு தனிப் பத்திரிகை நடத்திற்று. 'பூக்ஸ்-லாரன்ஸ்' என்று அழைக்கப்பட்ட குழு, 'ஹிட்லருக்கு எதிரி உலகம்,' என்ற ஒரு பத்திரிக்கை நடத்திற்று.

மற்ற பத்திரிகைகளில் வெளியான பெரும்பாலான விஷயங்களை நானே எழுதினேன். பலரை எழுதச் சொல்லி, ஆபத்துக்கு இடமளிக்கக்கூடாது அல்லவா? நான் கைதானால், எனக்குப் பதிலாக வேலை பார்க்க, வெகு நாட்களுக்கு முன்பே வேறு ஒருவரைத் தயாரித்து ஆயத்தமாக வைத்திருந்தோம்.

நான் கைதானவுடன் அவர் என் வேலையை மேற்கொண்டார். தற்போது தன் வேலையைச் செய்து வருகிறார்.

நாங்கள் ஒரு குறிப்பிட்ட வேலையில் எவ்வளவு குறைந்த நபர்களை ஈடுபடுத்த முடியுமோ, அவ்வளவு குறைந்த நபர்களை மட்டும் ஈடுபடுத்துவதற்கு ஏற்ற முறையில், முடிந்த அளவுக்குச் சுலபமான ஸ்தாபனத்தைக் கட்டினோம்.

செய்திகளை ஒரு இடத்திற்குச் சேர்ப்பிப்பதற்கு முன், அவற்றைப் பலகைகளில் மாற்றி வடிகட்டிய ஒரு சிக்கலான முறையை நாங்கள் கைவிட்டோம். அந்த வடிகட்டும் முறையினால் 1941, பெப்ரவரியில் மத்திய கமிட்டியைக் காப்பாற்ற முடியவில்லை.

உண்மையில் பார்க்கப்போனால், அந்த முறை, துரோகிகள் இடையில் புகுவதற்கு இடமளித்து அபாயத்தை அதிகமாக்கிற்று. எங்களுடைய புதிய முறை, ஒவ்வொருவரையும் தனிப்பட்ட முறையில் முன்னைவிடப் பாதுகாப்பற்ற நிலையில் வைத்த போதிலும் பொதுவாக இயக்கம் முழுவதையும் பாதுகாப்பான நிலையில் வைத்தது.

பெப்ரவரியில் நடந்ததுபோல், வருங்காலத்தில் எந்தத் தாக்குதலாலும் இயக்கத்தை முடமாக்கிவிட முடியாது.

இவ்விதம் நான் கைது செய்யப்பட்ட போது மத்தியகமிட்டி ஒழுங்கான முறையில் தொடர்ந்து வேலை செய்து கொண்டிருந்தது.

என் காலி ஸ்தானத்தை எனக்குப் பதிலாகப் பொறுக்கப்பட்டிருந்த தோழர் பூர்த்தி செய்தார். மிகவும் நெருங்கியவர்கள் கூட இந்த மாறுதலில் ஒரு வித்தியாசத்தையும் பார்க்க முடியவில்லை.

1945, மே 27-ந் தேதி இரவு ஹொன்ஸாஜிகா கைது செய்யப்பட்டார். அதுவும் கூடத் தற்செயலாக நிகழ்ந்த சம்பவமே.

அது ஹைட்ரிச் கொலைக்கு மறுநாள் இரவு அன்று எதிரியின் படை பூராவும் பிரேக்கின் மூலைமுடுக்குகளில் எல்லாம் நுழைந்து சோதனை நடத்திக் கொண்டிருந்தன.

ஜிகா இரகசியமாக வசித்த வீட்டின் மாடி அறைக்குள் அவர்கள் நுழைந்தார்கள்.

அவருடைய கள்ள ஆடையாள அட்டை சரியாகவே இருந்தது. அவர் அமைதியாக நிதானத்துடன் நடந்து கொண்டிருந்தால், அவரை அவர்களால் யார் என்று கண்டு பிடித்திருக்கவே முடியாது.

ஆனால் தனக்கு இடமளித்த நண்பர்களுடைய உயிருக்கு ஆபத்து விளைவிக்க அவர் விரும்பவில்லை. இந்த எண்ணத்தினால் உந்தப்படவே அவர் இரண்டாவது மாடி ஜன்னல் வழியாகத் தப்பி ஓட முயற்சித்தார்.

படுகாயப்பட்டுக் கீழே விழுந்தார். பிறகு சிறை ஆஸ்பத்திரிக்கு இழுத்துச் செல்லப் பட்டார்.

யாரைப் பிடித்திருக்கிறோம் என்பது அவர்களுக்குத் துளிகூடத் தெரியவில்லை. பதினெட்டு நாட்கள் பல புகைப்படங்களை ஒத்திட்டுப் பார்த்தார்கள். பைல்களை புரட்டிப் பார்த்தார்கள். பதினெட்டாம் நாள் யார் என்று கண்டுபிடித்தனர்.

'விசாரணை'க்காகப் பெட்செக் கட்டிடத்திற்குச் சாகும் நிலையில் தள்ளிப் போனார்கள். கடைசித் தடவையாக நாங்கள் அங்கு சந்தித்தோம்.

என்னை அவரிடம் அழைத்துப் போனார்கள். நாங்கள் கை குலுக்கினோம். அவர் தன் புன்முறுவலை என் பேரில் வீசிச் சொன்னார்:

"ஜூலோ! கவனமாக இரு!" அது ஒன்றுதான் அவரிடமிருந்து அவர்கள் அறிந்த விஷயம். வேறு ஒரு வார்த்தையைக்கூட அவர்களிடம் அவர் பேசவில்லை.

சில மணி நேரத்தில், முகத்தில் விழுந்த குத்துக்களைப் பொறுக்க முடியாது அவர் சுருண்டு விழுந்து உயிர் துறந்தார்.

அவர் கைதியான செய்தி, மே 29ம் தேதி எனக்குக் கிட்டிற்று. எங்கள் இருவருக்குமிடையே போய்வந்த நபர்கள் மிகவும் நல்ல முறையில் வேலை செய்தார்கள், அவர்கள் மூலம் அடுத்தபடி நாங்கள் எப்படி நடந்து கொள்வது என்பதுபற்றி ஒரு முடிவுக்கு வந்தோம். ஹொன்ஸா செர்னி அம்முடிவை ஆமோதித்தார். அதுதான் நாங்கள் ஒன்று சேர்ந்து எடுத்த கடைசி முடிவு.

1942 கோடையில், ஹொன்ஸா செர்னி கைது செய்யப்பட்டார். இந்தத் தடவை தற்செயலாக அது சம்பவிக்கவில்லை; அவருடன் நேரடித் தொடர்பு வைத்திருந்த ஜான் பொகொர்னி, கட்டுப்பாட்டை மீறியதனால் அது சம்பவித்தது.

பொகொர்னி பொறுப்புள்ள குழுத்தலைவராக நடந்து கொள்ளவில்லை. சில மணி நேரம் 'விசாரிக்கப்பட்ட' பிறகு-மிகவும் கொடூரமான சித்ரவதைக்கு ஆளான பிறகு-வேறு எப்படிப்பட்டதை அவர் எதிர்பார்க்க முடியும்?

சிலமணிநேரம் அவதிப்பட்ட பிறகு, அவர் பயந்து நடுங்கி விட்டார். உடனே செர்னியைச் சந்தித்த இடத்தை விலாசத்துடன் தெரிவித்துவிட்டார்.

அங்கிருந்து அவர்கள் ஹொன்ஸாவைப் பின்தொடர ஆரம்பித்தனர். சில நாட்களில் அவரைக் கெஸ்டாபோ கைது செய்தது.

அவரைப் பிடித்து வந்த உடனேயே, அவரை அடையாளம் காட்டுவதற்காக என்னை இழுத்துச் சென்றார்கள்.

"இவனை உனக்குத் தெரியுமா?"

"தெரியாது"


அவரும் என்னைத் தெரிந்திருந்ததாகக் காட்டிக்கொள்ளவில்லை. அவர் ஒரு கேள்விக்கும் பதில் கூற முடியாதென்றார். பழைய காயம், புதிய சித்ரவதைக்கு ஆளாகாமல் அவரைக் காப்பாற்றிற்று.

சிறிது நேரத்திற்குள் அவர் பிரக்ஞையிழந்து சாய்ந்தார். அடுத்த 'விசாரணை'க்கு அவர் லாயக்காகி இழுத்துப் போகப்படுவதற்குள், நிலைமையை நாங்கள் அவருக்குத் தெரிவித்துவிட்டோம். அதன் பிறகு நிலைமைக்கு ஏற்றபடி அவர் நடந்து கொண்டார்.

அவர் வாயிலிருந்தும், ஒன்றையும் கக்க வைக்க முடியவில்லை, வெகுநாட்கள் அவரைச் சிறையில் அடைத்து வைத்திருந்தனர். ஏதாவது ஒரு புதிய உத்தி அவருடைய மௌனத்தைக் கலைக்கும் என்று எதிர்பார்த்தனர். ஆனால் ஹொன்ஸா செர்னியின் உறுதியை அவர்களால் உடைக்க முடியவில்லை.

சிறைவாசம் அவரை மாற்றவில்லை.

> நாங்கள் ஒரு குறிப்பிட்ட வேலையில் எவ்வளவு குறைந்த நபர்களை ஈடுபடுத்த முடியுமோ, அவ்வளவு குறைந்த நபர்களை மட்டும் ஈடுபடுத்துவதற்கு ஏற்ற முறையில், முடிந்த அளவுக்குச் சுலபமான ஸ்தாபனத்தைக் கட்டினோம்.



அவர் எப்போதுமே தைரியசாலியாக உற்சாகத்துடன் இருந்தார். அவருடைய சொந்த எதிர்காலம் சாவைச் சுட்டிக்காட்டிய போது அவர் மற்றவர்களுக்குச் சுபிட்ச எதிர்காலத்தைச் சுட்டிக்காட்டிக் கொண்டிருந்தார்.

ஏப்ரல் மாத முடிவில், திடீரென்று ஒருநாள் அவரை எங்கேயோ பான்கிராப்ட்லிலிருந்து இழுத்துப் போனார்கள். எங்கே என்று எனக்குத் தெரியாது. இப்படிப்பட்ட திடீர் மறைவு, கெட்ட சகுனமேயாகும்.

நான் நினைப்பது தவறாக இருக்கலாம். ஆனால் அவரை மீண்டும் சந்திக்க முடியும் என்று நான் நினைக்கவில்லை.

நாங்கள் எப்போதுமே சாவின் முகத்தில் விழித்துக்கொண்டிருந்தோம். கெஸ்டாபோ கையில் சிக்குவதென்றால் ஆயுள் முடிந்ததென்றே அர்த்தம். அதற்கு ஏற்ப நாங்கள் பிடிபட்ட பிறகும்கூட, எங்கள் ஆத்மாக்களிடத்திலும் மற்றவர்கள் விஷயத்திலும் நடந்து கொண்டோம்.

என் சொந்த நாடகம் முடிவுபெறப் போகிறது. அந்த முடிவை என்னால் எழுத முடியாது. ஏனெனில், அது எப்படி இருக்கும் என்பது எனக்கே தெரியாது. இது இனிமேல் நாடகம் அல்ல; இது வாழ்க்கை.

கடைசிக் காட்சி–திரை உயர்கிறது.

என் நாட்டு மக்களே! உங்கள் எல்லோரையும் நான் நேசித்தேன். வணக்கம். உஷாராக இருங்கள்.

**ஜூலிஸ் பூசிக்,**
**ஜூன் 6,1943.**

முற்றும்


வரும் வார முரசில்
அட்டகாசத் தொடர்
புதிய
ஆரம்பம்
அறிய ஆவலா?
ஒரு வாரம் தானே
பொறுத்திருங்கள்!
வரும் வாரம் புரட்டுங்கள்!!


# சங்கிலித் தொடர்...

வானமே இடிந்து வீழ்ந்ததைப் போலிருந்தது அந்தப் பெருஞ் சத்தம். நிலக்கண்ணி வெடியின் சத்தம் அப்படித்தான் கேட்கும்.

தொடர்ந்து கேட்டவையெல்லாம் துப்பாக்கிகளில் இருந்து வெளிவந்த படபட...பட்...பட்...வேட்டுச் சத்தங்கள்.

வீட்டின் ஜன்னல் வழியாக எட்டிப்பார்த்த தீபனுக்கு ஊர்ச்சனங்கள்–சிறுவர், பெரியவர், ஆண், பெண், என்ற பேதமில்லாமல் சிதறி ஓடுவது இனந்தெரியாத பதட்டப் பீதியை உருவாக்கிவிட்டது.

இராப்பிச்சைக்கார செல்லமும் ஓடிக் கொண்டிருந்தாள்.

இத்தனைக்கும் மத்தியில் வைத்தியர் வாமதேவனிடம் மார்புவலியால் அவதிப் பட்ட தன் தந்தையைக் கொண்டு சோதித்து விட்டு மருந்தும் எடுத்துக்கொண்டு வந்து இப்பொழுதுதான் வீட்டுக்குத் திரும்பியிருந்தான் அவன்.

'தந்தையைப் பார்ப்பதா, இல்லை தானும் ஊரோடு சேர்ந்து ஒத்து ஓடுவதா?' என்ற நிலை. ஏற்றிய ஊசியின் வேலையும், அவர் விழுங்கிய குளிசையின் லீலையும் அவரை உறக்க மேகத்துக்குள் அழைத்துச் சென்றிருந்தன.

"நிற்காதே, ஓடிப்போ, வீடுவீடா கதவை உடைச்சி சுட்டுவாறாங்க, ஓடு? ஓடு..." என்று தீபனிடம் சொல்லிவிட்டு ஓடிக்கொண்டிருந்தாள்; தன் மூன்று நாள் பிறந்த குழந்தையுடன், முருகரின் மகள் முத்துமணி.

'இனியும் நிற்பது சரியில்லை' என்று முடிவெடுத்துவிட்டான் தீபன். நோயாளி என்ற தடயத்திற்காக காரணங்காட்ட தன் தந்தையின் அருகில் வைத்தியரிடம் எடுத்து வந்த மருந்தையெல்லாம் வளைத்து வைத்து விட்டு அவரை ஒரு துணியால் மூடிவிட்டு வீட்டுக்கதவையும் இழுத்து அடைத்துவிட்டு வெளியில் ஓடத்தொடங்கினான் அவன்.

ஊரவர்களின் அலறலைப் போல்; வேட்டுச்சத்தங்களும் ஓயவில்லை.

சுமார் இரண்டு மணித்தியாலங்களின் பின் வெடிச்சத்தங்கள் ஓய்ந்தன. ஆனால் ஊருக்குள் மக்களின் அலறல் ஓயவில்லை.

கிராம மக்கள் காடுகளிலும் அடுத்த ஊர்களிலுமிருந்து ஒவ்வொருவராக தங்கள் வீடுகளுக்கு வந்துகொண்டிருந்தார்கள்.

அழுகைச் சத்தம் பெரும் அலறலும் கூக்குரலுமாக அதிகரித்துக் கேட்டது.



தீபனின் வீட்டுக் கதவு அவன் வீட்டுக்குத் திரும்பியபோது திறந்தே கிடந்தது.

தன் தந்தையின் அருகே சென்று பார்த்தான். அவர் போர்வைச் சேலைக்குள் அப்படியே உறங்கிக்கொண்டிருந்தார்.

போர்வையை மெதுவாக விலக்கி "அப்பா...அப்பா..." என்றான் தீபன், தன் மெல்லிய குரலில். பாயின் கீழ்ப்பாகத்தில் சிறிதளவு இரத்தம் பீச்சியவாறு கிடந்தது.

நடந்துமுடிந்ததைப் புரிந்தவனாய் "அப்பா....அப்பா" என்றான். இறுதியில் ஓ....வென்றே கத்திவிட்டான்.

இனியென்ன? திடீரென எவர் எப்படி இறந்தாலும் சட்டம் தன் கண்களை இறுகமூடிக்கொண்டிராது என்பதற்கிணங்க பிரேத பரிசோதனை, மரண விசாரணை எல்லாம் அமர்க்களமாய் நடைபெற்றன. சாட்சியங்களும் நெறிப் படுத்தப்பட்டன. 'இருதரப்பு மோதலின் போது இடையில் சிக்குண்டதால் துப்பாக்கியால் சுடப்பட்டு அதிக இரத்தப் போக்கினால் மரணம்' சம்பவித்திருப்பதாக தீர்ப்புக்கிடைத்தது.

பிரேத அடக்கச் செலவுக்கு இரண்டாயிரம் ரூபாவும் புனர்வாழ்வு நஷ்டஈடாக இருபத்தி ஐயாயிரம் ரூபாவும் தீபனுக்கு விரைவில் கிடைக்கவிருக்கின்றன.

**கல்வியூர்ச் சந்திரன்**

கடந்த வருடமும் இதேபோன்று தன் தாய் இறந்தபோது, தன் தந்தையார் மரணக்கொடுப்பனவுக்கும் புனர்வாழ்வுக் கொடுப்பனவுக்கும் விண்ணப்பித்திருந்தார்.

தலையில் ஒரு முட்டியையும், எரிந்த விறகுக்கட்டையையும் சுமந்து சவக்குழியை மூன்றுதடவைகள் வலம்வரும்போதுதான்; தானும் இப்படி இறக்கும்போது தன் மரணத்துக்காகப் புனர்வாழ்வு, மரணக் கிரியைக் கொடுப்பனவு எல்லாம் கோரி விண்ணப்பிக்க; இனி யார் இருக்கின்றார்? என்ற சிந்தனையும் அவன் மனக்கண்ணில் வலம் வந்தது.



படிப்பகம்

www.padippakam.com

# சிதறிய கனவுகள்

மார்கழி மாதக் குளிர் என் உடலில் ஊசி ஏத்துகிறது. அம்மய்யா விற்குப் பின்னால் நான் நடந்து கொண்டிருக்கிறேன். அப்போது எனக்கு வயது எட்டு. எங்களின் ஊரிலோ அல்லது எங்களின் முல்லைத்தீவு மாவட்டத்திலோ அம்மய்யாவைப் போல வேறு யாரும் கிடையாது. அவர் குடுமி கட்டியிருப்பார். உழைப்பாளி, காலையிலிருந்து மாலைவரை தனது வயல் காணியும் தோட்டமும் என்று கண்ணும் கருத்துமாக இருப்பார். பாடுபடுவார்.

அம்மாவின் தந்தையை எங்கள் கிராமத் தில் நாங்கள் மட்டும் தான் அம்மய்யா என்று கூப்பிடுவோம். எனது அம்மாவுக்கு நானும் தங்கச்சியும் தான் பிள்ளைகள்.

அந்த ஐந்தேக்கரைச் சுற்றிக் காண்பிக்க வென்றே நினைத்திருப்பாரோ அம்மய்யா. காலையில் கால்முகம் கழுவிவிட்டு தேத் தண்ணியை மூக்குப் பேணியில் அம்மா வார்த்துக் கொடுக்க குடித்துவிட்டு, முதலை மார்க் மண் வெட்டி ஒன்றை வலது தோளில் தூக்கி வைத்தவர் என்னைக் கூப்பிட்டார்.

கால்கள் வலிக்கவில்லை. எனது தாய்மண், என் மனம்மகிழ அந்த வயல் வரப்புகளில் நடந்து கொண்டிருந்தேன். என் மனக் கண் முன் இன்பம் மத்தாப்பிடுகிறது. அம்மய்யா சொன்னார் "என்ரை கண் மூடினதுக்குப் பிறகு உனக்குத்தான் மோனை இந்தக் காணியெல்லாம்." மனதுக்குள் தைப் பொங்கல்.

"கவனமாய்ப் பாத்து உதிலை இருந்து பிரயோசம் எடுக்கவேணும். ஓ....."

'அம்மய்யா.... உங்கள் எண்ணங்களின் பிரகாரமே நான் நடந்து கொள்வேன். பிரயோசனம் எடுப்பேன். பாடுபடுவேன். உங்களைப்போலவே....' மனதினுள் சம்மதம் தெரிவித்தேன். என் முக ஜாடையையும் முக ஒளிர்வையும் புன் சிரிப்பையும் வைத்து அந்த எழுபத்தொன்பது வயதுப் பழம் என் மீது நம்பிக்கை கொண்டதற்கான அறிகுறியாய் என் நெற்றிமீது அன்பு பதித்தது.

நான் கருவேலன் கண்டல் பள்ளிக்கூடம் போகும் போது குமாரசுவாமி வாத்தியார்தான் தமிழ் எடுப்பார். எட்டு வயதில் நாலாம் வகுப்புப் படித்தேன். அப்போதெல்லாம் ஐந்து வயதில் முதலாம் வகுப்பில் சேர்த்து விடுவார்கள். நான்தான் முதலாம்பிள்ளை. ஒருநாள் கடிதம் எழுதிவரச் சொல்லி தில்லையம்பலம் வாத்தியார் சொன்னார். நான் எழுதிக் கொண்டு போனேன். வலு ஒழுங்காக. அதில் 50/=ரூபா என்பதோடு அதற்குப் பக்கத்தில் (ஐம்பது ரூபா) என்று அடைப்புக்குள் போட்டுவிட்டேன். தில்லையம்பலத்தார் நம்பவில்லை. அவர் கேட்டார்: "நீயோ கொம்மாவோ படிக்கிறது?" என்று. நான் இவ்வளவு புத்தியாய் செய்ய மாட்டேனாம்; அவ்வளவு புத்தி எனக்கு!

அந்தக் காலத்தில் எழுவத்துமூன்றில் அம்மய்யாவுக்குக் கண்புகைச்சல். ஆனால் ஒவ்வொரு நாளும் ஒட்டுசுட்டான் போய் பேப்பர் எடுத்துக்கொண்டு வருவார். சாய்மனைக் கதிரையை இழுத்து கறுத்தக் கொழும்பானுக்குக் கீழே போட்டுக் கொண்டு அவர் சாய்ந்திருக்க பனை ஓலைப் பாயில் இருந்து கொண்டு ஆரம்பம் முதல் கடைசி வரை வாசித்துக் காட்டவேண்டும். நான் வாசிப்பேன். அவர் கேட்பார். பிறகு புளிய மரத்துக்குக் கீழ அவரது கூட்டாளிமாருடன் அரசியல் பேசுவார்.

**அவர் சாய்ந்திருக்க, பனை ஓலைப் பாயில் இருந்து வாசித்துக்காட்ட வேணும். பிறகு புளியமரத்துக்கு கீழே கூட்டாளிகளுடன் அரசியல் பேசுவார்.**

"அம்மய்யா இந்த வயல் காணியெல்லாம் உங்களுக்குத் தானே?" மாமா ஒன்றும் எங்களுக்கு இருக்கிறார். அதனால் சந்தேகத் தோடு கேட்டேன். "ஓம் குஞ்சு. வேறை ஆருக்குமில்லை; இது முழுக்க உனக்குத்தான்".



பழுத்த பனம் பழம் ஒன்று காலடியில் "தொப்"பென்று விழுந்தது. வேலிமுழுக்க 'மில்க் வைற்' கனகராசரின் உபயத்தால் பனைகள் செழித்து நீளமாய் வளர்ந்திருந்தன.

★★★

மனம்முழுக்க நெருடல். அகதி முகாமின் அந்தரம். என்னைத் தாங்க இந்த முகாமிற்கு முடியுமா? மனிசி முகாம் மூலையில் பச்சை விறகு களோடு மாரடிப்பது தெரிந்தது. முகாமுக்கு முன்னால் பெரிய பழைய புளியமரம் ஒன்று வியாபித்து நிழல்க் குளிர்வை வழங் கிக் கொண்டிருந்தது. போய் பனை ஓலைப் பாயோடு அமர்ந்தால் சுகமாய்க் கிடக்கும். ஆனால் புளியமரம் கரியமில வாயுவை வெளியாக்கிறது; மனிசருக்குச் சரியில்லை எண்டு சொல்லுவினம். ஆனால் நான் உதுக்குக் கீழை ஆறேழு வருஷமாப் படுத்திருக்கிறேன். ஒண்டுமில்லை. நான் நல்லாத்தானே இருக்கிறன்? எப்படி மறக்கிறது.

இப்ப நான் அங்கை ஒட்டுசுட்டான்- புளியங்குளத்திலை இருந்திருந்தால் என்ரை வயல் எல்லாம் எப்பிடி இருந்திருக்கும்? மனதுக்குள் குறுகுறு என்றது.

இந்தியன் ஆமி இருக்கேக்குள்ளையே எல்லாம் முடிஞ்சு போச்சுது. இரிக்கேலன் கந்தோர்- கதிர் ஸ்டோர்- ஆனந்தா ஸ்டோர் என்று ஆமிதான் இருந்தவன்கள். அப்பவே பத்தை மண்டிப்போட்டுது.

என்ரை வயல் வெளிகளெல்லாம் முள்ளுக் காடாய் போயிருக்கும். அம்மய்யா இப்ப உயிரோடை இருந்திருந்தால் எவ்வளவு கவ லைப்பட்டிருப்பார். அவரின்ரை கனவுகளை அழிச்சுப் போட்டுது யுத்தம். ம்ஹூ.....ம்....; இனி எப்பை போறது? ஆற்றேக்கை வாழுறது..? மனம் வேதனையில் இறுகிறது.

"அப்பா....அப்பா...அம்மா வரட்டாம்...." மனிசி பாவம். ஊரிலை கல் வீட்டிலை இருக்கேக்குள்ளை வலு வடிவும் நிறமும் தான். இஞ்சை வந்தாப் பிறகு வாடிக் கருவாடாய்ப் போச்சுது.

## -மானுடபுத்ரன்-

"என்ன கமலம்?"

"இஞ்சை வாங்கோ! ஒரு காப்பாதி தேங்காய்ப் பொல்லம் கிடந்தது. உங்களுக்கு ரொட்டி விருப்பமெல்லோ? அதுதான் சுட்டனான்."

என்ரை மனமறிஞ்சு பணிவிடை செய்ப வள் என்ரை கமலம்.

"ரொட்டியிலை சக்கு மணக்குது கமலம்."

"ஓ இப்ப என்ன செய்யுறது. உதுதானே நிவாரணத்திலை தாறான்கள். எக்கணம் கழிவு கட்டையளைத்தான் எங்களுக்குத் தாறாங் களோ....?"

"ஓமோம்...அங்காலை எல்லாம் குண்டைப் போட்டு எரிக்கிறான்கள். இஞ்ச எண்டால் சக்குப்புடிச்சு புழுக்கூடு கட்டின அரிசி, மா என்ன அநியாயம் செய்தமோ....!"

இருக்கிறதை சாப்பிட்டுவிட்டு காலம் கழிக்கும் ஒரு அவலம்...... வாழ்க்கைச் சுமைகள் கனமானவை.

✢ ✿ ○

"கமலம்... இஞ்சாலை வா...போதும் தண்ணி ஊத்தினது. நீ போ இடுப்பு வலிக்கும். உப்பிடி வேலை செய்தால் ஆர் சமைக்கிறது? ஆர் புள்ளை குட்டியளைக் கவனிக்கிறது...?"

மிளகாய்க் கன்றுத் தோட்டம் செல்வச் செழிப்பாய் காணப்பட்டது. எந்தப் பக்கம் திரும்பினாலும் பச்சைச் பசேல் என்ற காட்சி. மனம் முழுக்க நிறைவு. உழன்ற துன்பத்தில் இருந்து விடுதலை கிடைத்த மகிழ்ச்சி எல்லோருடைய கண்களிலும். எங்களை விட்டால் போதும்; நாங்கள் எங்கள் பூமியை பொன் கொழிக்கச்செய்வோம் என்பது போல ஊருக்கு வந்தது தான் தாமதம். முயற்சி திருவினை ஆகிவிட்டது. ஊரே கோலாகலமாய்....

"செல்லையாண்ணை வாங்கோ இருங்கோ..."

பெரிய வெண்கல மூக்குப் பேணி நிறைய தேத்தண்ணி கொண்டு வந்து கொடுத்தாள்.

"எங்கடை கஷ்ட துன்பங்களெல்லாம் துலைஞ்சு போச்சுது எல்லே கமலம்."

"ஓமண்ணை ஒண்டா ரெண்டா எத்தினை வருஷம்."

"புள்ளை குட்டியளின்ரை படிப்பு அதுகளின்ரை அறிவு இதையெல்லாத்தையும் திரும்பவும் முந்திமாதிரி ஆக்க வேணும்."

'புளியங்குளம் வயல் வெளிகள் எங்கு பார்த்தாலும் சனம் தான். முத்தையன் கட்டு குளத்தை துப்புரவாக்க வேணும் என்று முந்தநாள் ஒட்டுச்சுட்டான் இரிகேஷன் டிப்பாட் மென்டிலை ஒரு கூட்டம் வைத்தார்கள். எல்லோருக்கும் சந்தோஷம். சிரமதானம் மூலம் எங்களை நாங்கள் மீளவும் புதுப் பொலிவு பெறச் செய்வோம்.' மனதினில் வரித்துக் கொண்டார்கள்.

சந்தோஷம். மழைக்காலம் ஆரம்பிக்கப் போகிறது. பெரும் போகம் செய்ய வேணும். இப்ப "எக்ஸ் ஃபோர்" விதைக்கேலாது. வீ.சீ. லெவன்தான் விதைக்கவேணும். புழுதியிலை அடிக்கிறதா சேத்து விதைப்பு விதைக்கலாம். நல்லா மழை பெய்தா பரவாயில்லை. எக்கணம் போதாட்டில்....

முத்தையன் கட்டு பெருங்குளத்தில் இருந்து வலதுகரை வழியாக கற்சிலைமடு, புளியங்குளம் என்று சுமார் பன்னிரண்டு மைல் நீளத்திற்கு வளைந்து நெளிந்து போகும் வாய்க்கால் நிறையத் தண்ணீர். பார்க்க என்ன சந்தோஷம்! என்ன குதூகலம்! போர் ஓய்ஞ்சு போச்சு. இனி விடிவுதான். நாங்களும் மனிசர்தான்....

ச்சீ...என்ன சனியன்...புளியமரத்துக் கொப்பில், இருந்து ஒரு காகம் பீச்சிவிட்டது. என்ரை தலைதான் அதுக்குக் கிடைச்சுதே? மனதினில் அருவருப்பு. என்ரை நினைவுகள் பொய்யே...அப்ப இவ்வளவு நேரமும் கனவே கண்டனான். ம்...ஹூம்......எப்ப இந்த முகாம் வாழ்வைத் துறக்கிறது? நிம்மதியாய்ப் போய் ஊரோடை கிடக்கிறது? என்ரை காணியைச் செய்யுறது? அதிலை இருந்து பிரயோசனம்? எடுத்து என்ரை அம்மய்யாவின்ரை கனவுகளை நனவாக்கிறது? சலிப்பு வருகிறது. ■

---

# பாரதி முனியம்மா!

## எம். சுரேஷ்

முனியம்மா உயர் பணக்காரப் பெண். பாரதி வசதி குறைந்த ஏழை ஆண்.

பாரதி, முனியம்மா வீட்டில் நீண்ட காலமாகப் பணி புரிகிறான்.

இருவருக்கும் இளமை மலர்கின்றது. முனியம்மாவிற்கு பாரதிமேல் ஒரே 'லவ்'.

ஆனால் முனியம்மாவின் தந்தை ராசப்பா ஜாதிவித்தியாசம் பார்க்கும், மிகக் கண்டிப்பான மனிதர்.

இருப்பினும் 'லவ்ஸ்' வேகமாய் வளர்ந்து,

ஒருநாள் இருவரும் ஊரை விட்டே ஓடிப்போகிறார்கள்.

விசயம் ராசப்பாவின் காதில் விழ..

'என்ன தைரியம் இருந்தா இந்தக் கீழ் ஜாதிப்பய எம் பொண்ணையே கூட்டிக் கிட்டுப் போயிருப்பான்? அவன எங்கிருந் தாலும் கண்டுபிடிச்சுக், கண்ட துண்டமா



வெட்டாம விடமாட்டேண்டா....!'

பயங்கரமாய்க் கத்துவார் என எதிர் பார்த்த அனைவருக்கும் ஆச்சரியம்.

ராசப்பா இப்பொழுதும் மிக நிதானமாக இருந்தார்.

பக்கத்தில் சோகமாய் நின்ற மனைவி யைப் பார்த்து மென்மையான- ஆனால் அழுத்தமான குரலில் சொன்னார்:

"சொல்லித் திருந்தாத கழுதைகள் பட்டுத்தான் திருந்தணும்!

ஓடிப்போன கழுதைகளைத் தேடிப் பிடித்துவந்து தண்டனை குடுக்கிறதெல்லாம் பழைய பாஷன்!!". ■

---

# கரை சேரா காகிதங்கள்

## யாழ். ஞானகணேசன்

கடலலை கரையை முத்தமிட்டுக் கொண்டிருந்தது. முத்தத்தில் திளைத்திருந்த கரையின் உதட் டோரத்தில் எச்சில் நுரை அகலாமல் இருந்தது. இவற்றைக் கண்வெட்டாது பார்த் துக்கொண்டிருந்த ராசய்யாவை திடுக்கிடச் செய்தது அந்தக்குரல்.

"மச்சான், வோட்டை (படகு) இறக்கடா கடலுக்கை." திரும்பிப் பார்த்தான் ராசய்யா. குமாரசாமி அருகில் நின்றான்.

"டேய்; நாளைக்கு மாப்பிள்ளையாய் மணமேடையிலை இருக்கப்போறனி. இன் டைக்குத் தொழிலுக்குப் போறது நல்ல தில்லை. நான் மட்டும் போட்டுவாறேன்," என்றான் ராசய்யா.

"ஒன்பது மணிக் குத்தான் தாலிகட்டு, நேரம். நாங்கள் வெள்ளி காயிறதுக் குள்ளை வந்திடலாம்," என்றான் குமாரசாமி.

"விசர்க்கதை கதைக்கிறாய். எத் தினை வேலை இருக் கும்!" ராசய்யா முடிக் குமுன் குமாரசாமி தொடங்கினான்.

"அம்மாவும் மறிச்சவ, எண்டாலும் ஒரு நாள் தொழிலுக்குப் போகாட்டிலும் எனக்கு ஒரு மாதிரி இருக்கு. மச்சான், கதையை விட்டுட்டு தள்ளடா வோட்டை."

ராசய்யாவும் குமாரசாமியும் சிறுவயதி லிருந்தே நண்பர்கள். ஏழைக் குடும்பத்தில் பிறந்தவர்களாயினும் முயற்சியின் பயனாக முன்னேறிக்கொண்டுவருபவர்கள். கட லன்னையின் மைந்தர்களான இவர்கள் தங்கள் பரம்பரைத்தொழிலான கடற் தொழிலையே மேற்கொண்டுவருபவர்கள்.

படகு ஆழ்கடலை அண்மித்துக்கொண்டி ருந்தது. இரவு ஒன்பது மணியைத் தாண்டி யிருக்கும் என்பதை வானத்தைப் பார்த்துக் கணித்துக்கொண்டான் ராசய்யா. வெள்ளி தன் வெளிப்பாட்டைக் காட்டுவதற்கு வெட் கப்பட்டுக் கொண்டிருந்தது. அதனை இரசித்துக்கொண்டிருந்த குமாரசாமியின் முகத்திலும் வெள்ளியின் வெளிப்பாடு காணப்பட்டது.

"சுகந்தி, நாளைக்கு இதே நேரம் நானும் நீயும்..." மனம் மகிழ்ச்சியுற உதடு துடித்துக் கொண்டது. கண்களை இறுக மூடிக்கொண்டு கைகளை பிசைந்து கொண்டேயிருந்தான்.

"மச்சான், வலையில் நல்லாப் பட்டிருக் குது. இன்டைக்கு அதிஷ்டம் தான்," என்ற வாறு குமாரசாமியைப் பார்த்தான் ராசய்யா. புரிந்து கொண்டான். இன்னமும் குமாரசாமி கனவிலிருந்து மீளவில்லை.

**"சுகந்தி நாளைக்கு இதே நேரம் நானும், நீயும்..." மனம் மகிழ்ச்சியுற –உதடு துடித்தது.**



★★★

சுகந்தி, குமாரசாமியின் மாமன் மகள். சிறுவயதிலிருந்தே ஒருவரை ஒருவர் புரிந்து கொண்டதால், அவர்களிடையே காதல் சுடர் இலகுவாக ஒளிவிட்டுக்கொண்டது. அந்த சுடரை அணைத்துவிட சுகந்தியின் தகப்பனார் எவ்வளவோ முறை முயற்சி செய்து பார்த்துவிட்டார்; முடியவேயில்லை. இறுதி யில் அவருக்குக் கிடைத்த ஆயுதம் பணம் எனும் தராசு. அந்த நிறுவையில் குமாரசாமி யின் பக்கத்தில் நிறை மிகக் குறைவாகவே காணப்பட்டது. குமாரசாமி முயற்சித்தான். கடல் அன்னை கைகொடுத்தாள். இப்போ தராசின் நிறை இரு பக்கமும் சம அளவில் நிற்கிறது. நாளை இருவரும் மணக் கோலத்தில்.

⟶ ✗

குமாரசாமியின்! கண்களில் இப்போ சுகந்தியின் மீனான கண்கள் தெரிந்ததே தவிர, கடல் மீன்தெரியவில்லை. அவன் அவளின் குழந்தை உள்ளத்தையும் குறும்புப் பேச்சையும் மீள அசைப்போட்டவாறே சிந்தித் துக் கொண்டிருந்தான். ராசய்யா தொழிலில் மூழ்கியிருந்தான்.

திடீரென அலையைக் கிழித்தபடி பேரிரைச்சலுடன் ஏதோ வருவது தெரிந்தது. ராசய்யா திடுக்கிட்டான்.

"குமாரசாமி வந்திட்டாங்கள். வேகத்தைக் கூட்டு." குமாரசாமி வழமைக்குத் திரும்புமுன் மிக அண்மித்துவிட்டது அந்தக் கடற்படைப் பீரங்கிப் படகு. இருவரும் இயன்ற மட்டும் தங்கள் வலுவைக் காட்டி படகின் வேகத்தைக் கூட்டினார்கள்.

ஆனால், முடிவு? இவர்கள் கரையை அண்மிக்க முன்னரே பீரங்கிப் படகில் இருந்து வந்த குண்டுகள் இருவரின் உயிரை யும் குடித்துக் கொண்டது. அவர்களின் படகு நடுக்கடலில் தத்தளித்தது.

✆ ⊕ ☗

சுகந்தி அந்த நடுநிசியில் பாயில் உருண்டு கொண்டிருந்தாள். தலையணையை கையால் இறுகப் பிடித்தவாறே உதட் டோரங்களால் உரசிக்கொண்டிருந்தாள்.

"நாளை..."

என்று அவள் வாய் முனக, வெட்கத்தில் தன் தாவணியின் தொங்கல் கரையால் முகத்தை மூடிக்கொண்டாள்.

நாளை அவள் மணக்கோலத்துடன் வருவாள். ஆனால் பிணக்கோலம் காண; யாருக்காக யார் அழுவது? கடலன்னை தன் மைந்தர்களை இன்னமும் தாலாட்டிக் கொண்டிருக்கிறாள். ▭

---

# 'டோண்ட் வொறி முஸ்தபா....'

## — கிண்ணியா அமீரலி —

டாக்டர். நூருல் இர்பானா யூஸுப் அவர்களிடம் அந்த ஆங்கில மருத்துவ சஞ்சிகையைக் கொடுத்துவிட்டு, நிஸார்நானாவின் கடையில் சைக்கிளை நிறுத்தினான் முஸ்தபா.

"ஒரு பிளேன் டீ..."

கையிலிருந்த கடிதங்களை ஓடராக அடுக்கியபடி ஓடர் கொடுத்தான்.

இந்த ஒரு மாத காலமாக 'ஏழாம் வட்டாரம்' இவனுக்கு.

"...ஒலிபரப்பில் கடமையாற்றிய வி.சுப்பிரமணியத்தோடு விடைபெறுவது ராஜேஸ்வரி சண்முகம். வணக்கம் நேயர்களே.."

"திருமாங்கல்யம் கொள்ளும் முறையில் லையோ... உள்ளம் அறியாத மாங்கல்யம் தவறில்லையோ...

கண்ணை மூடிக் கட்டும் தாலி சதமா...

விடுமுறை விருப்ப நிறைவுப் பாடலோடு வீதிக்கு வந்தான் முஸ்தபா.

இனி-எகுத்தார் ஹாஜியார் வீதி.

வீடு- கடை-வங்கி- பாடசாலை- என்று மணியடித்துக்கொண்டிருந்தான்.

ஜெனிரா ஹைருல் அமான்' வீட்டில் 'ஊர்க்குருவி'ப் பத்திரிகை யைக் கொடுத்து விட்டு.. பக்கத்து ஒழுங்கையால்-

'கவிஞர். சபருள்ளா'வைத் தேடி ஓடினான் 'கவிதைச்சர'ப் பார்சலோடு. அந்த வீதியில் கடைசி யாக ஒரேயொரு கடிதம் பாக்கி.

அவனுக்கு ஞாயிற்றுக்கிழமை மாத்திரம் தான் கடிதம் வராது. யாரவன்..?

சாதாரணமானவன். சாதாரண தர மாணவன்.

இவனது வீட்டுக்கு முன் வந்து நின்று மணியடிக்கும் போதெல்லாம் முன் வீட்டில் வாழும் முழுநிலவொன்று முஸ்தபாவின்- முகம் பார்த்துச் சிரிப்பது வாடிக்கையாகி விட்டது. அவனிடம் கடிதத்தைக் கொடுத்து விட்டுத் திரும்பினான் முஸ்தபா.

கையசைத்து விட்டு வீட்டிற்குள் ஓடி மறைந்தாள் அவள். நாகலிங்கம் அண்ணாச்சி யும், எஹியார் நானாவும், லத்தீப் மாமாவும், பாரூக், றவூப், ஹன்பா நானாக்களும்.... கொஞ்ச காலத்திற்கு 'ஏழாம் வட்டாரத்திற்கு' வந்துவிடக் கூடாது நாயனே...

முஸ்தபா இப்போதெல்லாம்-

மூன்று முறை பல்துலக்குகிறான்!

அவனுக்கு உலகம் அழகாகத் தெரிய ஆரம்பித்துவிட்டது.

அவனைச் சுற்றி ஒளிவட்டம் தோன்றி யது...

கையெழுத்து அழகாகியது.

"என்னப்பா... ஆளே அடையாளம் தெரியாம மாறிப் போய்ட்டே... புதுப்புது ஸ்டைல்ல வர்ற..."

"என்ன எவளாவது சிரிச்சிட்டாளா...?"

பொது நூலகக் கலீல் நானா 'ஆனந்த விகடன்'களை அடுக்கியபடி கேட்டார்.

இங்கேயும் ஓர் 'ஊர்க்குருவி'யைக் கொடுத்து விட்டு, 'அரசியல் அரங்கில் இரகசிய சதிகள்' என்று பத்திரிகைத் தலைப் பொன்றை சப்தமாக வாசித்து...

"கலீல் நானா.. அப்ப.. நான் வரவா.." என்றான். வந்தான். போனான்.

முஸ்தபா ஒரு முடிவுக்கு வந்தான்.

அடுத்தநாள்.. அவளுக்கொரு கடிதத் தோடு வந்தான்.

அதோ.. அவள் சிரித்தபடி நிற்கிறாள்!



"ஒங்களோட ஒரு விஷயம் பேசணும்..."

பூ பேசியது.

முஸ்தபா வானத்தில் பறந்தான்.

விழப்போன சைக்கிளை அவள்தான் பிடித்து நிறுத்தினாள்.

"தேங்க்ஸ்..."

"நான்தான் ஒங்களுக்குத் தேங்க்ஸ் சொல்லணும் நானா... நான் அந்த முன் வீட்டு... அவரை... ம்... என்ட லெட்டரை யெல்லாம் ஒவ்வொரு நாளும் பத்திரமாக் கொண்டு போய்க் கொடுத்திங்க... ரொம்பத் தேங்க்ஸ் நானா...."

பாவம் முஸ்தபா!

'ஒருவர் மனதை ஒருவர் அறிய உதவும் சேவை இது.' என்று ஆறுதல் அடைந்தான் உதட்டளவில்..! ஊருக்கெல்லாம் கடிதம் கொடுத்து அவனுக்கு- அவள் ஒருத்திக்கு மட்டும்... கடிதம் கொடுக்க முடியவில்லை.

அடுத்தநாள்.

தபாலதிபர் சஹாப்தீன் அவர்களிடம் தன்னுடைய இராஜினாமாக் கடிதத்தை நீட்டினான் முஸ்தபா.



படிப்பகம்



# இலக்கிய நயம்

தருவது **ரசிகன்**

## கனவோடு பேசுதல்

கன்னிமாட இருளை
நிலவு கழுவி சலவை செய்துகொண்டிருந்தது.
ஆடவர் நுழைய அனுமதி இல்லை.
கன்னிமாடக் கட்டுப்பாடு அதுதான்!

கட்டுப்பாடு போட்டாலும்
காற்றும்–காதலும்
எங்கும் துரிதகதியில் புகுந்துவிடும்.

காற்றுக்கும்– காதலுக்கும்
இதுவரை யாரும்
வேலி கண்டுபிடிக்க முடியவில்லை.
ஆற்றைக்கூட அணைபோட்டு தடுக்கலாம்
காற்றைத் தடுக்க
எந்தக் கருவியாலும் முடியாது!

காற்றைத் தடுத்தால்
உயிர் கூட்டைவிட்டுப் போய்விடும்.
காதலைத் தடுத்தால்
வாழ்க்கை பட்டுப் போய்விடும்!

காதலர்கள் சுவாசிக்கும்
காற்றிலும் காதல் கலந்திருக்கும்!
காதலரின் இதயத் துடிப்பிலும்
காதல் ஓசை கேட்டுக் கொண்டிருக்கும்!

கடலுக்குள் அலையடிப்பதுமாதிரி
காதலர் நெஞ்சுக்குள்
காதல் அலை வீசியடித்துக் கொண்டிருக்கும்!

கோவில் மணியோசை ஒலித்தால்
ஊருக்கே அது கேட்கும்
காதல் மணியோசை ஒலித்தால்
இருவர் மனதுக்குள் மட்டுமே எதிரொலிக்கும்!

ஊசித் துளைவழியாக
ஒட்டகம் நுழைய முடியாது!
ஒரு துளையும் இல்லாதுபோனாலும்
காதலர் தங்களுக்குள் தாங்கள்
நுழைந்து கொள்ள முடியும்!

கன்னிமாடத்தில்
மஞ்சத்தில் மலர்ந்து கிடந்தாள் சொர்ணா.
அவள் மனதில் பரவிக் கிடந்தான் செழியன்!

கன்னிமாடக் கட்டுப்பாடு கடந்து
காளை புகுந்து கிடந்தான் இதயத்தில்!

நேரில் கிடைக்காத யோகம்
சில நேரங்களில் நினைப்பில் கிடைக்கிறது!
நினைப்புக்கு வெட்கமும் இல்லை;
வேறெந்த விவஸ்தையும் இல்லை!
கற்பனைக்கு சிறகு முளைக்க
நினைப்புகள் நெடும் பனையாக வளரும்!

விழித்திருக்கும்போது
நெஞ்சில் நிரம்பிவழியும் நினைப்புக்கள்
விழிகளை மூடிக்கொள்ளும்போது
கருவாகி உருவாகிக் கனவாகின்றன!

கனவு பொல்லாதது! கனவு
யார் தடுத்தாலும் நில்லாதது!

"சொர்ணா! என் கண்ணே!
மஞ்சத்தில் நீ புரளும்போது– என்
நெஞ்சத்தில் ஆசை புரள்கிறதேயடி கண்ணே!
உன் பட்டுடலும், எழும் மொட்டுக்களும்
விரல் அளவும் இல்லாத இடைக் கட்டழகும்
கட்டுக்குழல் அழகும், சுட்டுவிழி எழிலும்
பட்டுப் பட்டுப் பிரிகின்ற செவ்விதழ் அழகும்
முத்தைப் பழிக்கின்ற கொத்துப் பல் அழகும்
பித்தைத் தருகிறதே என் முத்து நகைக்காரி!
கட்டியணைக்கட்டுமா? முத்துக் குளிக்கட்டுமா?
சொல்லிவிடு கண்ணே! அள்ளியணை பெண்ணே!"

மன்றாட்டமா? திண்டாட்டமா?
சம்மதம் சொல்ல வெட்கம் வரும்
மன்மத பாணங்கள் மனதில் எழும்!
உச்சியில் ஆசை தாவிவிட
தலை தாங்காது குனியும்– தரை நோக்கும்!

"வெட்கத்தை மூட்டை கட்டிவிடு
வெப்பத்தை விரட்டக் கொட்டிக்கொடு
வெல்லத்தைப் பழிக்கும் இதழ் சுவையை
வெள்ளமென நீ விரைந்து கொடு!"

வேண்டினான்– விரைந்தான்– விழுந்து போனான்.
கை வீசினான்– பற்றினான்– கவிழ்ந்து போனான்
தடுத்தாள்– மறுத்து நடித்தாள்– மகிழ்ந்து போனாள்
சிணுங்கினாள்– சிரித்தாள்– சிலிர்த்துப் போனாள்!

விரல் பற்றினான்– பற்றினாள்
விரல்களை மோதவிட்டாள்.
கன்னமும் கன்னமும் சேர்ந்து கொள்ள
எண்ணத்தால் சம்மதம் பகிர்ந்து கொண்டாள்.
காதருகே காதல் மொழி பூசினான்;
தேனருவி என நெஞ்சினில் வாங்கினாள்!

தோள் பற்றினான்– துவண்டாள்
மடியினில் சரிந்தவள் புரண்டாள்!
மங்கிய நிலவினில் மடியினில்
மலர்க் கொடி!
பொங்கிய காளை
வண்டெனத் தாவினான்!

"வாழ்க்கையில் மட்டுமா
மேடும் பள்ளமும்,
பாதையில் மட்டுமா
ஏற்றமும்– இறக்கமும்?"
பட்டுடல் மீது தாவிய கரத்தால்
பட்டறிந்த தத்துவம் உளறினான்!

மலர் முகம் சிவந்தது;
மடியினில் அசைந்தது!
அவன் கரமோ அலைந்தது
பூந்தளிர்மேனி தீயில் தோய்ந்தது!
தீயினைத் தணிக்க
காளையை வளைத்தது
தேவியின் திருக்கரம்!

காற்றும் வெட்கத்தில் கடந்து போனது
விண்ணில் நிலாவும்
முகம் மறைக்க திரை தேடிற்று!

விண்ணிலா திரை தேட– இங்கே
மண்ணிலாவோ திரை இழந்து போனது!

தடையும் இல்லை– எல்லையும் இல்லை
விரியும் விரியும் இந்திர போகம்
முடியும் முடியும் சொர்க்கம் வசப்படும்
அடியும் முடியும் காணாத பயணம்
விடியும் வரையும் தரிப்பிடம் இல்லை
விளக்கில் எண்ணெய்தீர்ந்து போயினும்
மனதில் ஆசை தீர்ந்து போகாது!

வியர்வை நெற்றியில் முத்துக்கோர்க்கும்
விடிந்ததை நினைத்து வெறுப்புச் சேரும்
சின்னதா இரவு? சினம் கூடும்
மன்மத நினைவோடு யாகம் முடியும்!

"போகாதே நில்!
தனித்திருந்தால் வெந்து போவேன்
தாகத்தில் நான் காய்ந்து போவேன்
போகாதே நில்! போகாதே நில்!
மூழ்கிப் படித்த புத்தகத்தை
விடியலின் கரம் மூடிவிட்டதே!
மீதிக் கதையை படிக்க வேண்டாமா
போகாதே நில்! போகாதே நில்!"

களுக்கென்று நகைத்தாள்
கண்மணி சொர்ணா.

கண்டது கனவு
கண்ணுக்குள் வந்தவர் காதலர்!

"கனவே நன்றி! கனவே வாழி!
மனதைக் கவர்ந்தவர்
மனதில் உள்ளதை
தூதெனச் சுமந்து வந்தாய் வாழி!

வீட்டுக்கு வந்தவர்
யாரெவர் எனினும்
விருந்து கொடுப்பது நம் குணமாகும்!
கனவே நீயோ
நெஞ்சுக் கூட்டுக்குள் வந்தாய்
உனக்கென்ன விருந்து செய்யப்போகிறேன்?
கனவே உனக்கென்ன
கைமாறு செய்யப்போகிறேன்?!"

கனவோடு பேசினாள்
கன்னிமாட அழகி!

ஆம்! காதலர் மனம் கனிவானது
அது காதலுக்கு உதவும் புல்லையும்
வாழ்த்தும்
பூவையும் போற்றும்!

இதோ திருவள்ளுவர் காட்டும் காதலியும்
கனவோடு பேசுகிறாள் கேளுங்கள்.

"காதலர் தூதொடு வந்த கனவினுக்கு
யாது செய் வேன்கொல் விருந்து"

அதிகாரம்:– 122, குறள்:–1211

(ஸ்போர்ட்ஸ்)

## சுதந்திரதின கிண்ணம்

### நான்கு நாடுகள் கிரிக்கெட்

இந்தியா சுதந்திரம் பெற்று 50 ஆண்டுகள் ஆனதையொட்டி வருகின்ற மே மாதம் 'சுதந்திரதின கோப்பை' கிரிக்கெட் போட்டியை நடத்த இந்தியக் கிரிக்கெட் சபை தீர்மானித்துள்ளது.

இந்தப் போட்டியில் பாகிஸ்தான், இலங்கை, நியூஸிலாந்து, இந்தியா ஆகிய நான்கு அணிகள் பங்குபற்றுகின்றன. இந்த நான்கு நாடுகள் போட்டித் தொடர் மே 9ம் திகதி தொடங்கி 28ம் திகதிவரை நடைபெறும்.

ஒவ்வொரு அணியும் மற்ற அணிகளுடன் ஒவ்வொரு போட்டிகளில் விளையாடும் வகையில் முதலில் லீக் போட்டிகள் நடத்தப்படும். முடிவில் முதல் இரு இடங்களைப் பிடிக்கும் அணிகள் 3 போட்டிகள் அடங்கிய இறுதிப் போட்டியில் பங்கேற்று வெற்றி தோல்வியை நிர்ணயிக்கும்.

இந்தப் போட்டித் தொடரின் ஆட்ட விபரங்கள் வருமாறு:

| | | |
|---|---|---|
| மே 9 | பாகிஸ்தான் எதிர் நியூஸிலாந்து | (டெல்லி அல்லது கொச்சின்) |
| மே 13 | பாகிஸ்தான் எதிர் இலங்கை | (குவாலியர்) |
| மே 14 | இந்தியா எதிர் நியூஸிலாந்து | (பெங்களூர்) |
| மே 17 | இந்தியா எதிர் இலங்கை | (மும்பை) |
| மே 20 | இலங்கை எதிர் நியூஸிலாந்து | (ஹைதராபாத்) |
| மே 21 | இந்தியா எதிர் பாகிஸ்தான் | (சென்னை) |
| மே 24 | முதலாவது இறுதிப் போட்டி | (சண்டிகார்) |
| மே 27 | 2வது இறுதிப் போட்டி | (கல்கத்தா) |
| மே 28 | 3வது இறுதிப்போட்டி (தேவைப்படின் கல்கத்தாவில் நடைபெறும்) | |

## மறுபடியும் சித்து

மேற்கிந்தியத் தீவிற்கு சுற்றுப்பயணம் செய்யும் இந்திய அணியில் நவ்ஜோத் சிங் சித்து மீண்டும் சேர்க்கப்பட்டுள்ளார். இவருடன் மும்பையைச் சேர்ந்த அபே குருவில்லா என்ற புதிய வீரரும் அணியில் இடம்பெறுகிறார்.

தென்னாபிரிக்கா சுற்றுப்பயணத்தின்போது இந்திய அணியில் இடம்பெற்றிருந்த பங்கஜ் தர்மனி, டேவிட் ஜோன்சன், சலீல் அங்கோலா, வெங்கடபதிராஜு, விக்ரம் ரதோர், டபிள்யூ.வி. ராமன் ஆகிய அறுவரும் அணியில் இருந்து நீக்கப்பட்டுள்ளனர்.

இறுதியாக திலீப் வெங்சர்க்கர் தலைமையில் 1989ல் மேற்கிந்தியத் தீவுக்குச் சுற்றுப் பயணம் செய்த இந்திய அணி, இம்முறை அங்கு 5 டெஸ்ட், 4 ஒரு நாள் சர்வதேசப் போட்டிகளில் விளையாடுகின்றது. ●



அபே குருவில்லா

## இவர்கள்தான் அவர்கள்



பிரையன் லாரா



அமரர் ராஜீவ் காந்தி



இசையமைப்பாளர் தேவா

## சிந்தியா பதில்கள்

✉ டியர் சிந்தியா! அரசு தற்போது மேற்கொண்டுவரும் தீர்வுத்திட்டம் பற்றி தங்கள் கருத்து என்ன?

எஸ்.எஸ். கொழும்பு.

✍ கேள்வி தப்பு! தற்போது தேர்தல் திட்டத்தையல்லவா அரசாங்கம் மேற்கொண்டுவருகிறது!

✳○

✉ இனிப் புதிய பிறப்பும் இல்லை, பூமியில் உள்ளவர்களுக்கு இறப்பும் இல்லை என்றால் உலகம் எப்படி இருக்கும்?

ஏ.ஏ.எம். இக்பால், கல்ஹின்ன.

✍ இறப்பு நிச்சயம் என்று தெரிந்தும் கறப்பு நடத்துகிறார்கள். காதற்ற ஊசியும் கடைவழிக்கு வராது என்று தெரிந்தும் தோதற்ற வழிகளில் துட்டுச் சேர்க்கிறார்கள். இறப்பும் இல்லையென்று தெரிந்துவிட்டால்... சும்மா கற்பனை பண்ணிப் பாருங்கள் இக்பால்! கதி கலங்கும்!

✳○

✉ சமீபத்தில் உமக்கு ஏற்பட்ட அடேங்கப்பா நிகழ்ச்சி எதுவோ?

யா. பாமினி, கண்டி.

✍ பதினாறு வயது இனிய இளம்புயல் மார்ட்டினா ஹிங்சிஸ் பெற்ற வெற்றிக் கிண்ணம்! டென்னிஸ் உலக முடிசூடா ராணிகள் பலரை வீழ்த்தி, இந்த வருடத்தில் தொடராக 18 தடவை வாகைசூடி, அவுஸ்திரேலிய ஓபன் டென்னிஸிலும் அசத்திப்புட்டாரே குட்டித் தங்கச்சி! விளையாட்டு வீராங்கனைகளில் மிக இளவயதில் கோடி கோடியாக சம்பாதித்திருப்பவரும் அவர்தான். 15 நாட்களில் தங்கச்சி சம்பாதித்தது கிட்டத்தட்ட 70 கோடி ரூபாய்கள்!

✳○

✉ தாம் வளரமுன்னர் பிற பத்திரிகைகளை விமர்சிக்கும் பத்திரிகைகள் பற்றி....?

ஐ.எம். பௌஸ், மருதமுனை–03.

✍ 'போற்றுவோர் போற்றட்டும், புழுதி வாரித் தூற்றுவோர் தூற்றட்டும்' என்று நினைத்தபடி முன்நோக்கிச் செல்பவர்களும் இருக்கிறார்கள். பிறரைப் போற்றியும், தூற்றியும் தாம் வளர நினைத்து வழுக்கி வழுக்கி விழுபவர்களும் இருக்கிறார்கள். இதில் நீர் குறிப்பிடும் பத்திரிகைகள் எந்த ரகம் என்று நீரே தீர்மானித்துக்கொள்ளும்!

✳○

✉ மனைவியை சந்தேகிக்கும் கணவர்மார் பற்றி என்ன நினைக்கிறீர்?

மா. ஜெயந்தி, அன்புவழிபுரம்.

✍ தன்னம்பிக்கை இல்லாதவர்கள் பிறரை நம்பமாட்டார்கள் ஜெயந்தி!

✳○

✉ டியர் சிந்தியா! ஒரு பரபரப்பான பொய் சொல்லுங்க பார்க்கலாம்?

கே. எஸ். குமார், அநுராதபுரம்.

✍ ஏதோ ஒரு ஒலி அல்லது ஒளிரப்பு நிலைய முகவரிக்குப் பதிலாக நம் முகவரியை எழுதிவிட்டீர்கள் போல் இருக்கிறது. பரவாயில்லை, அவர்கள் கேட்காமலேயே தருவார்கள்.

✳○

✉ டியர் சிந்தியா! ஐம்பதிலும் ஆசை வரும் என்கிறார்களே அது உண்மையா?

க. சுதர்சன், செங்கலடி.

✍ ஆம், அல்லது இல்லையென்று பதில் சொன்னால் நாம் ஐ.மு.வரா அல்லது ஐ.பி.வரா? என்று அறியலாம் எனப் பார்த்தீராக்கும். அதுதான் நடக்காது.

✳○

✉ நடந்துவந்த பாதையை மறப்பவர்கள் பற்றி என்ன சொல்கிறீர் சிந்தியா!

சி. வசீகரன், கொழும்பு–09.

✍ மீண்டும் அந்தப் பாதையில் நடக்க நேர்ந்தால் தள்ளாடவேண்டியிருக்கும் என்பதையும் அவர்கள் நினைவில் கொள்ள வேண்டும்.

ஹொலிவூட் படவுலகின் பிரபல நடிகர் மார்லன் பிராண்டோ. அவருக்கு ஹொலிவூட்டில் ஒரு விருது ஏற்பாடாகி இருந்தது.

அவரைவரவேற்கப் பலர் கூடியிருந்தனர். பிரமாண்டமான ஆடம்பரக் காரில் வருவார் என்று எதிர்பார்த்திருந்தனர்.

ஆனால் மார்லன் பிராண்டோ விருது கொடுக்கும் விழாவுக்கு நடந்தே வந்தார். அவர் நடந்து வந்தது அனைவருக்கும் ஆச்சரியம்.

"அமெரிக்காவின் பெரிய நடிகர் நீங்கள். பெரும் பணக்காரர் நீங்கள். அப்படியிருந்தும் ஏன் நடந்துவந்தீர்கள்?" என்று கேட்டார்கள்.

அதற்கு மார்லன் பிராண்டோ சொன்ன பதில்: "ஹொலிவூட்டில் சான்ஸ் தேடி நான் நடந்து வந்தேனே தவிர காரில் வரவில்லை. பணம் இருக்கிறது என்பதற்காக கார்ச் சவாரியில் பழகிவிட்டு, பின்னர் பெற்றோல் வாங்கக்கூட பணம் இல்லாத நிலை வருமானால் அதை என்னால் தாங்க முடியாது. அதுதான் இப்படி நடந்து பழகுகிறேன்!"

✳○

✉ அப்பாசின் முகவரியைத் தரமுடியுமா?

கு.ற. முஸம்மில், கிண்ணியா–01.

✍ தரமுடியாது. ஏனென்றால் அவர் முகத்தில் வரி கிடையாது. (நம்ம கடி எப்படி?)

✳○

✉ டியர் சிந்தியா! பெண்களின் பலம் எது? பலவீனம் எது?

இரா. விஷ்ணுராஜா, பள்ளக்கெட்டுவ.

✍ பெண்ணாக இருப்பது பலம். பெண் என்றால் தன்னை ஒரு பேதையாக நினைப்பது பலவீனம். பெண்களின் நியாயமான விருப்பங்களையும் கிண்டல் செய்யும் ஜோக்குகளை இரசிப்பதும் பெண்கள்தானே!

✳○

✉ தென்னாபிரிக்காவிடம் ஒருநாள் போட்டியின் இறுதியில் தோல்வி கண்டுவிட்டதே இந்தியா?

என். நிர்மலன், திருமலை.

✍ தோல்விதான்! ஆனால் கௌரவமான தோல்வி. மழை வந்து குறுக்கிட்டதால் சறுக்கினாலும் விளாசித்தள்ளி இரசிகர்கள் மனதில் இடம்பிடித்தது இந்திய அணிதான்.

✳○

✉ எமது நாட்டில் ஆட்சி மாறுவதுபோலக் கனவு கண்டேன் பலிக்குமா?

மனோகோபாலன், ஹப்புத்தளை.

✍ ம்ஹூம்.

✳○

✉ ஸிம்பாப்வே கிரிக்கெட் அணி பற்றி என்ன நினைக்கிறீர்?

எல். தீபவதனன், தெகிவளை.

✍ காலூன்றிவிட்டது! இனிப்புகுந்து விளையாட வேண்டியதுதான்.

✳○

✉ ஜெயலலிதாவுக்கு மறுபடி மக்கள் ஆதரவு கிடைக்குமா சிந்தியா?

எம்.ஐ. இமாம்தீன், கெகுனகொல்ல.

✍ 'நடக்குமென்பார் நடக்காது, நடக்காதென்பார் நடந்துவிடும்.' அதுதான் அரசியல்.

✳○

✉ சொர்க்கத்துக்குச் செல்ல வேண்டும் என்று மனிதர்கள் துடிப்பது ஏன்?

திருமதி பத்மினி வேந்தன், மட்டக்களப்பு.

✍ ஒரு ஞானியிடம் சென்று ஒரு குடும்பஸ்தன் விளக்கம் கேட்டான்.

"சொர்க்கம் என்றால் என்ன? நரகம் என்றால் என்ன?" என்று கேட்டான்.

"அப்படி எதுவுமே கிடையாது!" என்று பதில் சொல்லிவிட்டார் ஞானி.

குடும்பஸ்தனுக்கு அப்படியும் சந்தேகம் தீரவில்லை. தன் ஊரிலுள்ள ஒரு பெரியவரிடம் சென்றான்.

"சொர்க்கம், நரகம் என்று இருப்பது உண்மைதானா?" என்றான்.

"ஆம்!" என்றார் பெரியவர்.

"ஞானியிடம் கேட்டேன், அப்படி எதுவும் இல்லை என்கிறாரே?" என்றான் அவன்.

"உனக்கு திருமணமாகிவிட்டதா?"

"ஆம் ஐயா! இரண்டு பிள்ளைகளும் இருக்கிறார்கள்!"



"அந்த ஞானிக்கு?"

"அவருக்கு ஏது குடும்பம், பிள்ளை குட்டி?" என்றான் குடும்பஸ்தன்.

உடனே அந்தப் பெரியவர் சொன்னார்:

"அதனால்தான் அவருக்கு சொர்க்கமும் இல்லை. நரகமும் இல்லை. உனக்கு இரண்டும் இருக்கிறது!"

பூமியிலே சொர்க்கம் காணத் தெரியாதவர்கள்தான் எங்கோ தேடித் துடிப்பார்கள்.

✳○

✉ குறுக்கு வழியில் சம்பாதித்தால் நிலைக்குமா?

எஸ். வேணுகோபால், மட்டக்களப்பு.

✍ ஒரு நீக்ரோ முதுமொழி இது:

"நீண்ட பாதை
வியர்வையை வழியச் செய்யும்.
குறுக்குப் பாதை
இரத்தத்தை வழியச் செய்யும்!"

✳○



படிப்பகம்

www.padippakam.com

# இராமாயணம் அங்கம் 72

'இராமபிரானின் தூதுவன் நான் என்பதை இராவணனிடம் தெரிவித்து, அவனை எவ்வாறாவது அறத்தின் வழியில் திருப்பி விடவேண்டும்!' என்ற நல்லெண்ணத்துடன் அனுமன் அரக்கர்கோனின் அரண்மனை வந்து சேர்ந்தார். ஒரு தூதுவனுக்குரிய மரியாதை கிடைக்கும் என்று எதிர்பார்த்தார். அத்தகைய மரியாதை அந்த அரசவையில் கிடைக்கவில்லை; ஓர் ஆசனம் கூடத் தரப்படவில்லை. இதனால் இராவணனுடைய அரியாசனம் இருந்த அதே உயரத்தைவிடச் சற்றுக் கூடுதலான உயரத்தில்



# இராம தூதன் வாலில் இராவணன் மூட்டிய தீ

தன் வாலினால் ஆசனம் அமைத்து அதன்மீது தாவி ஏறிக்கொண்டார்.

இச்செய்கை இராவணனையே துணுக்குற வைத்துவிட்டது. தன் முன்னே இருக்கும் வானரம் சாதாரணமானதல்ல என்பதை இராவணன் புரிந்துகொண்டான். இருப்பினும் அகிலம் புகழும் அந்தஸ்தையுடைய தன் முன்னாலேயே ஓர் அற்பப் பிராணி தகாத முறையில் நடக்கலாமா, என்று சினமடைந்தான். ஏற்கனவே வானர மன்னனான வாலியிடம் பட்ட துன்பத்தையும் நினைவு கூர்ந்தான். எது எவ்வாறானாலும் இந்த வானரத்துடன் சற்று எச்சரிக்கையாகவே நடந்து கொள்ள வேண்டும் என்று தீர்மானித்தான்.

"உன்னைப் பார்த்தால், உன் வருகைக்கு ஏதோ ஒரு காரணம் இருக்கிறது என்று தெரிகிறது. சூலாயுதம் ஏந்தும் உருத்திரனோ? சக்கரதாரியான திருமாலோ? அல்லது தாமரை மலரில் உறையும் பிரம்மதேவனோ? அன்றேல் தேவேந்திரனோ? அவ்வாறில்லாமல், இந்தப் பூமியைத் தாங்கும் ஆதிசேடனோ? இவர்களில் எவருமே இல்லாவிட்டால் பாசக்கயிற்றை வீசி உயிர்களைப் பறிக்கும் எமதர்மனாக இருப்பாயோ? வேலாயுதம் ஏந்தும் முருகனோ? இவர்களில் ஒருவனோ- இல்லாவிட்டால் அழிவதற்காகவே என் முன்னே மாறு வேடம் பூண்டு வந்த ஒரு மாயாவியோ? உண்மையைக் கூறிவிடு!" இவ்வாறு இராவணன் வினாக்கணைகளைத் தொடுத்தான்.

இக் கேள்விகளுக்கு விடையை உரிய முறையில் அளிப்பதன் மூலம் இராவணனை நல்வழிப் படுத்திவிடலாம் என்று ஆஞ்சநேயர் தீர்மானித்தார். எனவே இவ்வாறு பதிலிறுக்கின்றார்:

**சொல்லிய அனைவரும் அல்லென்**
**சொன்ன அப்**
**புல்லிய வலியினோர் ஏவல் பூண்டிலென்**
**அல்லி அம் கமலமே அனையசெங்கண் ஓர்**
**வில்லி தன் தூதன் யான்**
**இலங்கை மேவினேன்!**
(சுந்தரகாண்டம்-1118)

பொருள்:

"நான் உம்மால் குறிப்பிடப்பட்டவர்கள் எவருமல்ல; அத்தகையோர் எவரினதும் கட்டளையை மேற்கொண்டு வந்தவனுமல்ல; இலங்கைக்கு வந்துள்ள நான், செந்தாமரையினை ஒத்த கண்களை உடைய இணையற்ற வில்வீரனுடைய தூதன்!"

அனுமன் இவ்வாறு கூறியதாக கம்பர் பெருமான் கூறுகிறார்.

## ஆதிமூலத்தின் அவதாரம்

அனுமன் தொடர்ந்து கூறுகையில், "மும் மூர்த்திகளும், தேவர்களும், முனிவர்களும் மற்றுமுள்ளோரும் நினைக்கவே முடியாத அருஞ்செயல் ஒன்றினை நிகழ்த்துவதற்காக அவதரித்த ஒரு வீரன்; நீர் முற்காலத்தில் தவமியற்றிப் பெற்ற வரங்கள், உங்கள் தேக பலம், உமது படைகள், சேர்த்து வைத்துள்ள பொருட்கள், உங்கள் புகழுடன் கூடிய சிறந்த வாழ்க்கை அத்தனையையும் தனது ஒரே கணையினால் நிர்மூலமாக்கும் வல்லமை படைத்தவன்; அவன் மூவருமல்லன்; தேவனுமல்லன்; முனிவனும் அல்லன்; இந்தப் பூவுலகின் ஒரு பெரும் பகுதியை தன் ஆட்சிக்குட்படுத்தி ஆட்சிபுரிந்த ஒரு மாமன்னரின் மைந்தன். மேலும் அந்த மா வீரனையிட்டுக் கூறுவதானால், அவன் பரம்பொருளான- ஆதிமூலத்தின் அவதாரம். அயோத்தியின் அதிபதியாக இருந்த தசரதச் சக்கரவர்த்தியின் தலைமகன்- இராமன் அவன் பெயர். அந்த இராமச்சந்திரனுடைய தூதுவனாக இங்கு வந்துள்ளேன்!

இராமபிரானுடைய பேரன்புக்குப் பாத்திரமான அவரது பாரியார் சீதாப்பிராட்டியாரைத் தேடி நான்கு திசைகளுக்கும் எமது மன்னர்-சூரியனின் புதல்வரான சுக்கிரீவன், வானர வீரர்களை அனுப்பினார். தென் திசை நோக்கி வந்த படைக்கு வாலிமன்னனின் மகன் அங்கதன் தலைமை வகித்துவந்தான். அக்குழுவில் நானும் சேர்ந்து வந்தேன். இந்த இலங்கை மாநகரில் அந்தக் கற்பின் கனலைக் கண்டேன்!"

இவ்வாறு அனுமன் கூறிமுடித்ததும் இராவணனின் முகங்களில் ஒரு வகையான கிலேசம் படர்வதை ஆஞ்சநேயர் அவதானித்தார். தன்னை ஒருவாறு சமாளித்துக் கொண்ட இராவணன், "அப்படியா? வாலியின் மகன் தலைமையில் தான் வந்தாயோ? வாலி தலை சிறந்த வீரனாயிற்றே! நலமாக இருக்கிறாரா? அவருடைய அரசாங்கம் எவ்வாறு நடைபெறுகிறது?" என்று வினவினான்.

வாலியைப்பற்றி விசாரிக்க இராவணன் முன்வந்ததும் ஆஞ்சநேயர் ஏளனமாகச் சிரித்தார். "அரக்கர்கோனான இராவணனே! வாலி இப்பொழுது இந்த உலகிலில்லை. எமது

## இராஜகாரன்

தலைவரான இராமச்சந்திரமூர்த்தியின் கூர்மையான ஒரே பாணத்தில் விழுந்து வீர சுவர்க்கம் சென்றுவிட்டார். வாலி மன்னன் இறந்தபின் அவர் தம்பியான சுக்கிரீவன் கிட்கிந்தை அரியாசனத்தில் அமர்ந்திருக்கிறார். அம்மன்னனின் அமைச்சனாகப் பணியாற்றுகிறவன் யான்!"

அனுமனின் கூற்றைக் கேட்டதும் இராவணன், "என்ன...! மாவீரன் வாலியை இராமன் கொன்று விட்டானா? இராமனுக்கும், வாலிக்குமுண்டான விரோதம் என்னவோ?"

## அனுமனின் அறிவுரை

பஞ்சமா பாதகங்களில் ஒன்றான, 'பிறன்மனை கவர்ந்தமை' தான் முழுமுதற் குற்றமாகும்! தம்பி சுக்கிரீவனின் மனைவியை அண்ணன் வாலி கவர்ந்தான். அத்துடன் சுக்கிரீவனையும் கொடுமைப்படுத்தினான். சுக்கிரீவன் இராமபிரானின் உதவியை நாடினார். இருவரும் இணையற்ற நட்பின் சின்னமாயினர். வாலியை வீழ்த்தி தம்பிக்கு நாட்டையும் மனைவியையும் மீட்டுக் கொடுத்தார் எமது தலைவரான இராமபிரான். அந்தப் பெருந்தகையின் துணைவியாரை, நீதி நெறிகளை உணர்ந்தவனான நீர் கவர்ந்தது மிகக் கொடுஞ் செயலாகும். சிவபக்தனான உமக்கு இது அடுக்காத செயல். உம்முடைய தவவலிமையினாலும் பராக்கிரமத்தாலும் செயற்கரிய காரியங்களைச் செய்து சிறப்புடன் வாழும் உமது மேலான வாழ்க்கைக்குக் களங்கம் தேடிக் கொண்டுவிட்டாய். உன்னை உன் அழிவுப்பாதையிலிருந்து காத்துக்கொள்ள ஒரே வழிதான் உண்டு. உன் தவறை உணர்ந்து, உடனே சீதாப்பிராட்டியாரை விட்டுவிடு! இராமபிரானிடம் உன் தவறுக்காக மன்னிப்புக் கேட்டுக்கொள்! இல்லையேல் உம்முடைய அழிவு மட்டுமல்ல, உமது இனமே அழிந்தொழிந்துபோவது திண்ணம்!" என்று ஆஞ்சநேயர் இராவணனை எச்சரித்தார்.

சர்வசாதாரண தொனியுடன் ஆரம்பித்து படிப்படியாக உச்சஸ்தாயிலில் தன் குரலை உயர்த்தி அனுமன் விடுத்த எச்சரிக்கை, இராவணனை சினமடையவைத்தது. அவனுடைய இருபது கண்களிலும் தீப்பொறி பறந்தது. பற்களை நறநறவென்று கடித்தான். அவனுடைய மீசைகளும் துடித்தன.

"அற்ப வானரமே! எண்திசையும் போற்றும் என் முன்னே வந்து, எனக்கே எச்சரிக்கை விடுக்கத் துணிந்துவிட்டாயா? தேவலோக வாசிகளே என்முன்னே கைகட்டி வாய் பொத்தி, என் குற்றேவல்களைக் கேட்டு கீழ்ப்படிந்து நடக்கின்றனர். நீயோ என் சிம்மாசன உயரத்துக்கு ஒரு இருக்கையை அமைத்து என்னையே ஏளனம் செய்யத் துணிந்துவிட்டாய்! உனக்கு இதற்கு உரிய தண்டனை தராவிட்டால்..." இவ்வாறு அனலாய்க் கொதித்த இராவணன், "யாரங்கே! இந்தக் குரங்கைக் கொண்டு போய்க் கொலைக் களத்தில் கொன்று விடுங்கள். இவன் உடலைத் துண்டு துண்டுகளாக வெட்டி கழுகுகளுக்கு இரைபோடுங்கள்!" என்று கர்ஜித்தான்.

இதனைக் கேட்ட ஆஞ்சநேயர் இராவணனின் இரைச்சலுக்கு மேலாக இடியோசை போல் சிரிக்கலானார்.

## தூதனைக் கொல்லலாகாது

இந்த நேரத்தில் இராவணனுக்குத் தம்பியான விபீடணன் எழுந்து, "பெருமைக்குரிய அரசனே! என் அருமை அண்ணனே! அரசர்க்குரிய அறங்கள் அத்தனையும் கற்றுணர்ந்தவனே! தூதனாக வந்த எவரையும் கொல்லுவது கேவலமான செயலாகும். வேறு மன்னரிடமிருந்து செய்தி கொண்டு வந்த தூதனிடம், வந்த காரியத்தை வினவி அறிந்து பின்னர் விடுவித்தால்தான் எமது கருத்தை, அவனைத் தூதனுப்பியவர்களிடம் சென்று உரைப்பான். ஆகவே, அனுமனை விட்டு விடுவதே அறத்தின் பாற்பட்டது. அவன் கூறியவற்றுக்கு நமது பதில் என்ன என்பதனைக் கூறி அனுப்பி விடுங்கள்!" என்றார்.

கோபத்தால் கருத்தழிந்த இராவணனுக்கு அப்போது உண்மை புலப்பட்டது. "இவனுடைய வாலினால் தானே என்னை அவமதிக்க முற்பட்டான். இவனுடைய வாலில் தீயினை மூட்டி தெருக்களில் இழுத்துச் சென்று, நமது நகரின் எல்லைக்கப்பால் துரத்தி விடுங்கள்!" என்று கட்டளையிட்டபின், அனுமனைப்பார்த்து, "ஏ வானரமே! உன்னைத் தூதனாக அனுப்பியவர்களை, வாளோடும் வில்லோடும் அரக்க வீரர்கள் வரவேற்க ஆயத்தமாகக் காத்து நிற்கிறார்கள்" என்று கூறி, "எம்முடன் போரிடத் துணிவிருந்தால் எத்தகைய படையுடனும் வரச்சொல்!" என்று வீராவேசத்தோடு முழங்கினான் அரக்கர்கோன்.

கம்பராமாயணத்தின்படி இக்கட்டம் வரை அனுமன், மேகநாதனான இந்திரசித்து ஏவிய பிரம்மாஸ்திரத்தினால் கட்டுப்பட்டிருந்தார். இதன் பின்னரே வேறு பல உறுதிவாய்ந்த கயிறுகளால் ஆஞ்சநேயர் கட்டப்பட்டார். வேறு கயிறுகளால் கட்டப்பட்டதும் பிரம்மாஸ்திரம் தானாக அவிழ்ந்து விடுகிறது.

இராவணன் கட்டளைப்படி அனுமன் அரண்மனைக்கு வெளியே கொண்டுவரப்பட்டார். அவருடைய வாலில் ஏராளமான துணிகள் சுற்றப்பட்டன. நெய் தோய்க்கப்பட்டது. தீயும் மூட்டப்பட்டு அரக்க வீரர்கள் புடைசூழ இலங்காபுரியின் வீதிகளினூடாக அழைத்துச் செல்லப்பட்டார். நகரின் எல்லையைத் தாண்டியதும் அவரை விட்டுவிட்டனர். அனுமன் தீப்பற்றிய தனது வாலுடன் ஒரு பெரிய மாளிகையின் மீது தாவி ஏறினார். உடனே அந்த மாளிகையில் தீ பிடித்துக்கொண்டது. மற்றொரு மாளிகையின் மீதும் தாவினார். அங்கும் தீ பற்றிக் கொண்டது. இவ்வாறு பல கட்டடங்கள் நெருப்புக் கோளங்களாயின. அரக்க மக்கள் செய்வதறியாமல்-திக்குத் திசை தெரியாமல் சிதறி ஓடத் தொடங்கினர்.

(தொடர்ந்து வரும்)

## இராமாயணப் போட்டி: 70

### சரியானவிடை:- சர்ப்ப வடிவில்

1. சூ.பெனிராஜ், 50:சினேக் லேன், திருகோணமலை.
2. எல்.ஹேமமாலினி. 147/15, மனோஜ்வாசா, கலகா.
3. கா. சுபாஷ். திருவள்ளுவர் புரம், தரவலை, டிக்கோயா.
4. திருமதி.காஞ்சனா உதயபாலன். 14/25, பாரதி ஒழுங்கை, மட்டக்களப்பு.
5. இ.சந்திரவதனி, வள்ளுவர் மேடு, பழுகாமம்-1, பெரியபோர்தீவு.

**போட்டி இல. 72** கேள்வி:- **அனுமனைக் கொல்ல வேண்டாம் என்று கூறியவர் யார்?**

மார்ச் 08 க்கு முன்பாக விடைகளை அனுப்பிவைக்க வேண்டிய முகவரி:

**இராமாயணப் போட்டி – இல.72, தினமுரசு வாரமலர், த.பெ.இல – 1772, கொழும்பு.**

---

**புதுக்கோட்டை இடைத்தேர்தலின்பின் கலைஞரும், செல்வியும் எப்படி இருக்கிறார்கள் என்று எட்டிப்பார்க்கிறார் காதிலை பூ கந்தசாமியார்.**

**கா.பூ.க:** கலைஞர் அவர்களே! புதுக்கோட்டை தேர்தல் முடிவு பற்றி தாங்கள் என்ன நினைக்கிறீர்கள்?

**கலைஞர்:** நான் என்ன நினைப்பது. நம் தமிழர்கள் நம்மைத்தான் நினைத்துக் கொண்டிருக்கிறார்கள் என்பதற்கு எடுத்துக்காட்டு! கழக ஆட்சிக்கு மக்கள் வழங்கிய நற்சான்று முத்திரை! ஆட்சி தொடர மக்கள் வழங்கிய ஆசிர்வாதம்! செல்விக்கு மக்கள் வழங்கிய சாட்டையடி!

**கா.பூ.க:** முதுகுவலி என்று செல்வி பிரசாரம் செய்ய வரவில்லை. அவர் வந்திருந்தால் என்னாவாயிருக்கும்?

**கலைஞர்:** புறமுதுகிட்டு ஓடுவதற்கு புதிய பெயர் கண்டுபிடித்திருக்கிறார் செல்வி. அதுதான் முதுகுவலி! கடந்த பொதுத் தேர்தலில் புறமுதுகிட்டு ஓடியதால் ஏற்பட்ட வலி இன்னமும் தீரவில்லை என்று நான் நினைக்காவிட்டாலும் நாடு நினைக்கிறது என்றாலும், நான் அதை நாகரீகம் கருதிச் சொல்லவிரும்பவில்லை.

**கா.பூ.க:** கள்ளவோட்டுக்கள் போட்டீர்களாமே?

**கலைஞர்:** குள்ளத்தனமான குற்றச்சாட்டு. வாக்களித்த மக்களை வம்புக்கிழுக்கிறார் செல்வி. விழுந்தது கள்ள வாக்குகள் என்றால் வாக்களித்த மக்கள் எல்லாம் கள்ளர்கள் என்றுதானே பொருள்! அந்த அம்மா வரம்புமீறி பேசுகிறார் சும்மா!

**கா.பூ.க:** கடந்த தேர்தலைவிட இம்முறை குறைந்த வாக்குவித்தியாசத்தில்தானே வெற்றி பெற்றிருக்கிறீர்கள்?

**கலைஞர்:** வெற்றி பெற்றோமா இல்லையா என்பதுதான் முக்கியமே தவிர, கடந்த தேர்தலையும் தற்போது நடந்து முடிந்த தேர்தலையும் ஒப்பிட்டுக்கொண்டிருப்பது உகந்த முறையல்ல. கடந்த தேர்தலில் வாக்களித்த பலர் நடந்துள்ள தேர்தலில் வாக்களிக்கவரவில்லை.

**கா.பூ.க:** அவர்கள் ஏன் வரவில்லை?

**கலைஞர்:** தி.மு.க. உறுதியாக வெற்றிபெறும் என்று முன்கூட்டியே தெரிந்துவிட்ட காரணத்தால் வெளியே வராமல் வீட்டில் இருந்துவிட்டார்கள்.

**கா.பூ.க:** தேர்தலில் தார்மீக வெற்றி தமக்குத்தான் என்று செல்வி செப்பியுள்ளாரே? இப்போது உங்கள் கொள்கை என்னவோ?

**கலைஞர்:** மத்திய அரசின் கொள்கைதான் மாநில அரசின் கொள்கையும்.

**கா.பூ.க:** மத்திய அரசின் கொள்கை என்ன?

**கலைஞர்:** மாநில அரசின் கொள்கைதான் மத்திய அரசின் கொள்கையும்.

**கா.பூ.க:** மாநில அரசின் கொள்கை என்ன?

**கலைஞர்:** மத்திய அரசின் கொள்கைதான் மாநில அரசின் கொள்கை.

**கா.பூ.க:** சற்று வீளக்கமாகச் சொல்ல முடியுமா?

**கலைஞர்:** பூரணமாக சொல்வது முறையல்ல என்பதால் பூடகமாகச் சொல்கிறேன்; ஈழத்தமிழர்கள்மீது பரிவும் பாசமும் கொண்ட பார்வையை செலுத்துகின்ற அதேநேரத்தில், அந்தப் பரிவும் பாசமும் உள்நாட்டுப் பிரச்சனையில் தலையிடுவதாக அமைந்துவிடாத வகையில், தலையிடாமல் இருந்துகொண்டு, அதே வேளையில் பரிவும் பாசமும் மாறாமல் ஈழத்தமிழர் படும் துயரத்தை இரண்டு கண்களாலும் கவனித்துக்கொண்டிருக்கும் கரிசனை உணர்வுடன், அந்தக் கரிசனை தலையீடாக கருதப்படாத வகையில் தலையிடாமல் இருந்துகொண்டு, ஈழத்தமிழர்கள் இன்னல் தீரவேண்டும் என்கின்ற இணையற்ற விருப்பம் நம் இதயத்தில் இருந்தாலும், அதனை தலையீடாக கருதும் வகையில் வெளிப்படுத்தாமல் இராஜதந்திரரீதியில் அமைதியான போக்கை கடைப்பிடிப்பதுதான் மத்திய அரசின் கொள்கை என்றாலும், ஈழத் தமிழர்களின் கண்ணீரைக் கண்டு கலங்கிக் கொண்டிருந்தாலும்...

*(காதிலை பூ கந்தசாமியார் காணாமல் போய்விடுகிறார்)*

**கா.பூ.க:** வணக்கம் செல்வி அவர்களே! முதுகு வலி என்று புறமுதுகிட்டு வந்துவிட்டீர்களாமே?

**செல்வி:** நோய் என்று படுத்தால்கூட கேலி செய்யும் பேய் ஆட்சிக்கு புதுக்கோட்டையில் மக்கள் பாடம் புகட்டிவிட்டார்கள்,

**கா.பூ.க:** என்றாலும் உங்களுக்குத் தோல்விதானே?

## யாருக்கு வெற்றி?



**கலைஞர்:** தோல்வியெல்லாம் வெற்றி என்றால், வெற்றியெல்லாம் தோல்வி என்றுதானே அர்த்தம். இனிமேல் வெற்றி பெறப்போவதில்லை என்ற நம்பிக்கையில் அகராதியையே மாற்றிவிட்டார் அம்மணி.

**கா.பூ.க:** மருந்து கொண்டுபோக வந்ததாகக் கூறி இலங்கைத் தமிழர்களை கைது செய்துள்ளீர்கள். மனிதாபிமானமே இல்லாமல் நீங்கள் நடந்து கொள்வதாக குற்றம் சாட்டுகிறார்களே?

**கலைஞர்:** வந்தாரை வரவேற்போம்; தலைவாழை இலை போட்டு விருந்துவைப்போம் என்றுதான், என்றும்நான் கூறிவந்தேனே தவிர, இங்கிருந்து விருந்து அனுப்புவோம் என்றோ, மருந்து கொடுப்போம் என்றோ நான் கூறியதில்லை. எனவே கொள்கை முரண்பாடு என்று யாரும் இதை நினைக்கத் தேவையில்லை.

**கா.பூ.க:** தமிழீழம் அமைந்தால் வரவேற்பேன் என்று கூறினீர்களே?

**கலைஞர்:** யார்தான் இங்கே வரவேற்க மாட்டார்கள்? எல்லோருமே வரவேற்பார்கள் என்று தெரிந்த காரணத்தால்தான், முதல்வர் என்ற முறையில் வரவேற்பதில் முதல் ஆளாக இருப்பேன் என்று கூறினேனே தவிர, யாருமே வரவேற்காத ஒன்றை நான் மட்டும் வரவேற்பேன் என்று கூறும் அளவுக்கு ஜனநாயக உணர்வு ஒரு துளியும் இல்லாதவனல்ல நான். அதுமட்டுமல்லாமல், அமைந்தால் வரவேற்பேன் என்று சொன்னேனே அல்லாமல், அமைய வழியமைப்போம் என்று ஒருபோதும் சொன்னதில்லை.

**கா.பூ.க:** இலங்கைத் தமிழர் பிரச்சனையில்

### காதிலை பூ கந்தசாமி

**செல்வி:** ஹட்டப்! கருணாநிதி கட்சி எத்தனை வாக்குகளால் வெற்றி பெற்றிருக்கிறது தெரியுமா?

**கா.பூ.க:** ஏறக்குறைய 12 ஆயிரம் வாக்குகள்,

**செல்வி:** யெஸ்! 20 ஆயிரத்தி 432 கள்ள வாக்குகள் போட்டிருக்கிறார்கள். எனவே கள்ள வாக்குகளை நல்ல வாக்குகளில் இருந்து கழித்துப் பார்த்தால் நாம்தான் எட்டாயிரம் அதிகப்படியான வாக்குகளால் ஜெயித்திருக்கிறோம். சோ.. வெற்றி எமக்குத்தான்!

**கா.பூ.க:** நீங்கள் வெற்றி பெற்றால்தான் கள்ள வாக்குகள் போடப்படவில்லை என்று அர்த்தமா?

**செல்வி:** நல்ல வாக்குகள் அதிகம் போடப்பட்டன என்று அர்த்தம். கள்ள வாக்குகள் போட்டும் கருணாநிதி கட்சியால் ஜெயிக்க முடியவில்லை என்று அர்த்தம் அர்த்தம்.

**கா.பூ.க:** உங்கள் வளர்ப்பு மகன் அரசியலில் ஈடுபடுவாரா?

**செல்வி:** வளர்ப்பதையே விட்டுவிட்டேன், பிறகென்ன வளர்ப்பு மகன்? ஸ்ருப்பிட்!

**கா.பூ.க:** சசி சிறையை விட்டு வெளியே வந்தால் சேர்த்துக் கொள்வீர்களா?

**செல்வி:** யார் மேன் நீ? நான் யாரை வேண்டுமானாலும் சேர்த்துக் கொள்ளுவேன், கோர்த்துக் கொள்ளுவேன். உனக்கென்ன மேன்? கருணாநிதிக்கு என்ன மேன்? யாருக்கு என்ன மேன்? கெட் அவுட் மேன் கெட் அவுட்!

*(காதிலை பூ கந்தசாமியார் வெளியே தாவுகிறார்)*

**செல்வி:** (பாடுகிறார்)

"நாளை இந்த வேளை பார்த்து
ஓடிவா! நிலா!
இன்று எந்தன் தோழி இல்லை
சென்று வா! நிலா!
தென்றலே என் தனிமை கண்டு
நின்று போய் விடு!

வண்ண விழியின் வாசலில்-என்
தோழி தோன்றினாள்!
தேகம் என்னும் மேடையில்-பொன்
நகைகள் சூடினாள்!
பொன் நகையழகை காட்டவோ-அவள்
நகைக் கடையுமாகினாள்!
தோழியே! உன் சொத்தையெல்லாம்
ஊழலாக்கினான்!

(நாளை)



படிப்பகம்

அருள் ஜுவலர்ஸ்
ARUL JEWELLERS

580230
பல வாடிக்கையாளர்களின் பெரு விருப்பத்தின் பேரில் வெள்ளவத்தையில் எமது புதிய கிளை:-
105 GALLE ROAD, COLOMBO 06
காலி வீதி, வெள்ளவத்தை, கொழு-06


# ஹொலிவூட் சண்முகி





ஸ்ரீ கல்யாணி ஜுவல்ஸ்
SRI KALYANY JEWELLS
323657
புன்னகை சிந்தும் பெண்ணுக்கு மின்னிடும் பொன்னகை பேரழகு
5 SEA STREET, COLOMBO 11
செட்டியார் தெரு, கொழும்பு 11


➡ படத்தில் கமல் மாமி அருகில் காணப்படும் மாமியும் ஆண்மாமிதான். அவரது பெயர்தான் ரொபின் வில்லியம்ஸ். கமலின் அவ்வை சண்முகி படம் மிஸஸ் டவுட் ஃபயரின் தழுவல் என்பது தெரியுமல்லவா. மிஸஸ் டவுட் ஃபயரில் ரொபின் வில்லியம் ஆயாவாக தோன்றிய அசத்தல் மேக்-அப்தான் இது. உண்மையான ரொபின் வில்லியம்ஸ் கீழே சிறு படத்தில் இருக்கிறார் பாருங்கள். மேக்-அப்பில்தான் எத்தனை மாற்றம் பார்த்தீர்களா?

எந்த மேக்-அப் அசத்தல்? கமல் போட்டுள்ள மேக்-அப்பா அல்லது ரொபின் வில்லியம்ஸ் போட்டுள்ள மேக்-அப்பா? நீங்களே முடிவு செய்யுங்கள். இரண்டுமே ஹொலிவூட் மேக்-அப்புக்கள்தான்.

ரொபின் வில்லியம்ஸ் பற்றி மேலும் சில தகவல்கள்: ஹொலிவூட் திரையுலகுக்கு இவர் வந்தது 1980ம் ஆண்டில்தான். அதற்கு முன்னர் தொலைக்காட்சிப் படங்களில்தான் நடித்துக் கொண்டிருந்தார். முதலில் வெளியான படத்தின் பெயர்: 'பொப்பிஜி'. ஹொலிவூட் திரையுலகின் இன்றைய வசூல் மன்னர்களில் முதலிடத்தில் இருக்கிறார். 'மிஸஸ் டவுட் ஃபயர்' பரபரப்பை ஏற்படுத்தியது. 'த பேர்ட் கேஜ்', 'ஜுமான்ஜி' ஆகிய இரு படங்களும் தனித்தனியாக அமெரிக்காவில் மட்டும் குவித்த வசூல் எவ்வளவு தெரியுமா? (மூக்கில் விரல் வைக்கத் தயாராகவும்) 10 கோடி அமெரிக்க டொலர்கள். நம்நாட்டு மதிப்பில் 550 கோடி ரூபாய்கள்!



புதிய வசூல் மன்னன் என்றழைக்கப்படுகிறார் ரொபின் வில்லியம்ஸ்.

1986 முதல் இன்று வரை ரொபின் வில்லியம்ஸ் நடித்த ஏழு படங்கள் தலா 550 கோடி ரூபாய்கள் வசூல் அறுவடை செய்துள்ளன என்பது உலக சாதனைச் செய்தி. ஹொலிவூட்டில் மட்டுமல்ல உலகில் வேறெந்த நடிகரும் இச்சாதனையைச் செய்ததில்லை.

# சிறகு பெரிசு



↑ உலகிலேயே மிக நீண்ட இறக்கைகள் கொண்ட விமானம் இதுதான். இதன் இரண்டு இறக்கைகளுக்கும் இடைப்பட்ட நீளம் 97.51 மீட்டர் (319 அடி 11 அங்குலம்).

இந்த விமானத்தின் பெயர்: ஹர் செல் ஏச் 4 ஹேர்குலிஸ் ஃபிளையிங்போட் (பெயரும் நீளம்தான்) அதன் அர்த்தம் பறக்கும் படகு. இந்த விமானத்தின் பெறுமதி 40 மில்லியன் அமெரிக்க டொலர்கள். அதாவது 220 கோடி ரூபாய்கள். காற்றாடி விசையால் உந்தப்பட்டு பறந்து செல்லும்.

தற்போது இதனை பராமரிக்க முடியாமல் கலிபோர்னியாவில் பத்திரமாக மூடிவைத்திருக்கிறார்கள். சரியாக பராமரிக்காமல் பறக்கவிட்டு விமானம் தொபுக்கடீர் என்று விழுந்து போனால் என்ன செய்வது?!

# கல்வியா செல்வமா?



↑ நம் நாட்டில் அரச பாடசாலைகளும் இருக்கின்றன. தனியார் பாடசாலைகளும் இருக்கின்றன. இலவசக் கல்வி என்று சொல்லப்பட்டாலும் அரச பாடசாலைகளிலும் பண வசூல்கள் நடக்கவே செய்கின்றன. தனியார் பாடசாலைகளில் கன்னியாகப் பணம் கட்டினால்தான் படிக்க முடியும்.

ஆனாலும் நம்நாட்டு தனியார் பாடசாலைகள் முதல் உலகெங்கும் உள்ள தனியார் பாடசாலைகள் எல்லாம் சுவிற்சர்லாந்திலுள்ள ஒரு பாடசாலையிடம் பிச்சை வாங்கவேண்டும். அந்தளவுக்கு பணக்காரப் பாடசாலை அது. அதன் பெயர்: 'க்ஸ்ராட் இன்டர் நாஷனல் ஸ்கூல்'. சுவிற்சர்லாந்தில் உள்ள 'க்ஸ்ராட்' என்னுமிடத்தில் உள்ளது. 1974ம் ஆண்டு நிறுவப்பட்டது.

பணம் இருந்தால் மட்டும் போதாது. பணம் கட்டுக் கட்டாக இருந்தால்தான் அந்தப் பாடசாலையில் துணிந்து சேர்ந்து கொள்ள முடியும். அதாவது செல்வம் இருந்தால்தான் அங்கு கல்வி தரப்படும்.

ஒரு மாணவரிடம் வசூலிக்கப்படும் ஆண்டுக் கட்டணம் எவ்வளவு தெரியுமா? (மூச்சைப் பிடித்துக்கொள்க) 21 ஆயிரத்தி 600 ஸ்ரேர்லிங் பவுண்சுகள்! நம்நாட்டுப் பெறுமதிப்படி 20 இலட்சத்து 14 ஆயிரத்தி 380 ரூபாய்கள்! யப்பா!

இரு பாலாரும் கல்வி பயிலும் இப்பாடசாலையில் வாங்கிய காசுக்கு வஞ்சகம் பண்ணாமல் மதிய உணவும், இராப்போசனமும் வெகு தடபுடலாக கொடுக்கப்படுமாம். மதிய விருந்தின்போது ஒரு வகுப்பு மாணவர்கள் என்ன ஜாலியாகப் போஸ் கொடுக்கிறார்கள் பாருங்கள். இப்பாடசாலைக்கு என்ன பட்டப் பெயர் தெரியுமா? 'கனவான்களின் பாடசாலை!'

# பங்காளி



⬅அவுஸ்திரேலிய அணி சமீபகாலமாக சற்றுத் திணறிக் கொண்டிருக்கிறது. ஒருநாள் போட்டிகளில் பல தோல்விகளைச் சந்தித்திருக்கிறது.

ஆயினும் அணியின் தரம் வீழ்ந்துவிட்டதாகச் சொல்லமுடியாது. புதுமுகங்களும் களத்தில் அசத்தத் தொடங்கியுள்ளனர்.

அவுஸ்திரேலியா அணிக்கும் மேற்கிந்தியதீவு அணிக்கும் இடையில் நடைபெற்ற டெஸ்ட் போட்டித் தொடரில் வெற்றிபெற்றது அவுஸ்திரேலிய அணி. அவுஸ்திரேலியாவிடம் 2-3 என்ற கணக்கில் டெஸ்ட் தொடரை மேற்கிந்திய தீவு அணி இழந்துள்ளது.

கடந்த ஜனவரிமாதம் 25 முதல் 28வரை நான்காவது டெஸ்ட் போட்டி நடைபெற்றது. அப் போட்டியின் கதாநாயகன் மைக்கல் பேவன்.

அவுஸ்திரேலிய அணியின் சகலதுறை ஆட்டக்காரரான மைக்கல் பேவனின் அதிரடியான பந்து வீச்சால் மேற்கிந்திய அணி சுருண்டுபோனது.

முதல் இன்னிங்ஸில் 42 ஓட்டங்களைக் கொடுத்து 4 விக்கட்டுக்களைச் சரித்தார் மைக்கல் பேவன். இரண்டாவது இன்னிங்ஸில் 82 ஓட்டங்களைக் கொடுத்து ஆறு விக்கட்டுக்களை கைப்பற்றினார். 182 ஓட்டங்களால் அவுஸ்திரேலிய அணி வெற்றிக் கனி சுவைத்தது. அன்றைய போட்டியின் கதாநாயகன் மைக்கல் பேவன். 'மேன் ஒஃப் த மேட்ச்' ஆக தெரிவு செய்யப்பட்டார். அன்று ஆட்டமிழக்காமல் 85 ஓட்டங்களையும் குவித்தார் மைக்கல் பேவன்.

ஷேன்வோன், அனில் கும்ப்ளே, முஷ்டாக் அஹமட், போல் ஸ்ராங், மற்றும் போல் அடம்ஸ் ஆகியோரின் வரிசையில் மைக்கல் பேவனும் அதிரடி சுழற்பந்து வீச்சாளராகச் சேர்க்கப்பட்டுவிட்டார்.

# பிறந்த நாள் வாழ்த்து



## நாருஸ் ஷப்னா

கொழும்பு-12, சில்வா ஸ்மித் லேன், 80/6, 'நாருஸ் ஷப்னா' என்ற முகவரியைச் சேர்ந்த நஜ்முல் ஹுஸைன், நாருல் அமின் தம்பதிகளின் செல்வப் புதல்வி-நாருஸ் ஷப்னா நஜ்முல் ஹுஸைன் தனது பத்தாவது பிறந்தநாளைக் கொண்டாடினார். நாருஸ் ஷப்னாவை கொழும்பு-பீர்சாஹிபு வீதி, மொஹிதீன் அப்பா குடும்பத்தினர், ஆதிலா ஆன்டி, இக்ரம் குடும்பத்தினர், உடுதெனிய றவூட் அப்பா குடும்பத்தினர், சிபா ஆன்டி, மாபொல இமாஸ்-இனாஸ் குடும்பத்தினர், வத்தேகெதர ரிஸ்லா ரபீக் குடும்பத்தினர் உட்பட பெற்றார், உற்றார் உறவினர், நண்பர்கள் எல்லாம் வல்ல அல்லாஹ்வின் நல்லருளால் பல்கலையும் பெற்று பல்லாண்டு காலம் நீடூழி வாழ வாழ்த்துகின்றனர்.




இப்பத்திரிகை, கொழும்பு [illegible] தினமுரசு பதிப்பகத்தாரால் [illegible] உள்ள சமால அச்சகத்தில் மார்ச் மாதம் 02 ஆம் திகதி அச்சிட்டு வெளியிடப்படுகிறது.